# பதிப்புரை

நல்ல உள்ளத்திலிருந்து மலர்ந்த நற்கருத்துக்களைத் தொகுத்து நாட்டு மக்களுக்குப் பயன்படும் புத்தகமாக்கித் தரவேண்டும் என்ற எண்ணத்தில் தலைவர் திரு. காமராஜ் அவர்களின் உவமைகளை வெளியிடுவதை மிகப் பெருமையாகக் கருதுகிறேன். அநுபவ அறிஞரான தலைவர் திரு.காமராஜ் அவர்களின் உவமைகள், படித்து ரசிப்பதற்கும், பயன் பல பெறுவதற்கும் உரிய மிகச் சிறந்த புத்தகம். உற்சாக உள்ளத்தோடு உவமைகளைத் தொகுத்துத் தந்த திரு. மு. நமசிவாயம் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இந்நூலுக்குத் தமிழ்ச் சங்கத்தின் முத்திரை பெற்றது போல் அமைந்திருக்கிறது, டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்களின் அரிய முன்னுரை. அவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றி. இந்த நாட்டுக்கு மட்டு மல்ல; இந்த நூலுக்கும் நாயகனான உயர் திரு. காமராஜ் அவர்களுக்கு என் வணக்கத்தோடு கூடிய நன்றி. நற்கருத்துக்கள் நிரம்பிய இச்சொற்செல்வம் நாடு முழுதும் பரவத் தமிழ் மக்கள் பெரிதும் உதவுவார்கள் என்ற நம்பிக்கையோடு இந்நூலினை வெளியிடுகிறேன்.

சென்னை,<br>27-5-65

ஏ. திருநாவுக்கரசு.

# முன்னுரை

[டாக்டர் அ. சிதம்பரநாதன் எம். ஏ., எம். எல். சி., தலைமைப் பதிப்பாசிரியர் : ஆங்கிலம்—தமிழ்ச் சொற்களஞ்சியம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.]

— : —

"காமராஜ் உவமைகள்" என்னுந் தலைப்பில் எழுத்தாளர் திரு. மு. நமசிவாயம் தொகுத்து வெளியிடும் நூலினைப் படித்துப் பார்த்தேன். தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சரும் இந்நாள் அனைத்திந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவருமாகிய திரு. காமராசருடைய பல்வேறு அனுபவ முதிர்ச்சியால் அவருக்கே இயல்பாக அமைந்திருக்கிற நேர்முகப் பேச்சு இப் புத்தகத்திற் காணப்படுகிறது. பொதுமக்களிடையே நேருறவு கொண்டு, அவர்களுக்குப் புரியக் கூடிய சாதாரண தமிழிற் பேசவல்லவராக உள்ள திரு. காமராசர், மக்களின் உளங் கொள்ளுமாறு விளக்குதற்காக வழங்கியுள்ள உவமைகளை எடுத்து ஆங்காங்கே இப்புத்தகம் அழகாகக் காட்டுகிறது. எனினும், அவர் கையாண்டுள்ள உவமைகளும் உவமைகளின் விளக்கங்களும் மாத்திரம் இப்புத்தகத்தில் உள்ளன என்று சொல்லுதல் இயலாது. இத்தொகுப்பாசிரியர் திரு. மு. நமசிவாயம் ஒவ்வொரு செய்தியையும் பல்வேறு சிறு சிறு தலைப்புத் தந்து வெளியிட்டுள்ளார். அத்தலைப்புக்களில் சிலவே உவமைகள்; மற்றவையெல்லாம் கொள்கை விளக்க உள் தலைப்புக்கள்.

எழுத்தாளர் திரு. நமசிவாயத்தின் திறமை இந்த நூலினால் நன்றாக வெளியாகியுள்ளது. இவர் பல்லாண்டுகளாகப் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்; சிறந்த எழுத்தாளராக விளங்கும் ஆற்றலுடையவர். அதனால், திரு. காமராசர், திரு. சி. சுப்பிரமணியம், திரு. எம். பக்தவத்சலனார் போன்றவர்களுடைய பேச்சுக்களை ஆங்காங்கே கேட்ட பிற்பாடு,



உடனுக்குடன் நினைவு கூர்ந்து தொகுத்து, அழகுபடுத்தி வெளியிட்டுக் கொண்டு வருகிறார். சுருக்கெழுத்தாளர்கள் பேசப்பட்டதை எழுத்து மாறாமல் அவ்வாறே எழுதித் தருங் கடமையுடையவர் அல்லர். சிறந்த சுருக்கெழுத்தாளர்கள், பேசுவோருடைய கருத்தினை மாற்றிவிடாமல் சொற்களைப் பெரும்பாலும் கூறியவாறே வைத்துக்கொண்டு, அவசியமுள்ள இடங்களிற் சொல்முடிபுகளையும் வினைமுடிபுகளையும் மாற்றி விடுவார்கள். அவ்வாறு மாறுதல் செய்யும் பொழுது பேசுவோருடைய கருத்திற்கு எந்தவிதத்திலும் ஊறுபாடு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமையுடையவர் அவர். இவ்வரன் முறைகளை நன்றாகக் கடைப்பிடித்துள்ளார் இத்தொகுப்பாசிரியர். தோழர் நமசிவாயத்திடம் நான் காணுஞ் சிறப்பு என்னவென்றால், கருத்தினை மாற்றாமலுஞ் சொற்களைப் பெரும்பாலும் மாற்றாமலும் இருக்கிறார் என்பது மாத்திரமன்று; இன்னார் இன்னாருடைய பேச்சின் போக்கு, இன்னார் இன்னாருடைய பேச்சின் உயிரோட்டம் இது இது என்பதை நன்றாகக் கண்டறிந்து தமது தொகுப்பில் எதிரொலிக்கும் வண்ணம் காட்டிவிடுகிறார் என்பது. திரு. காமராசரோடு அமைந்த பல்லாண்டு கேண்மையாலும், அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அவரது வாழ்க்கை வரலாற்றினை வடித்தெடுத்துக் கொடுத்திருக்கிற அனுபவத்தாலும் இதைப் போன்ற தொகுப்பு நூல்களை எழுதி வெளியிடுவதற்கு மிகுதியுந் தகுதியுடையவராக இவ்வாசிரியர் விளங்குகின்றார். பல இடங்களைப் படிக்கும் பொழுது நேரே திரு. காமராசர் பேச்சைக் கேட்பதுபோன்ற எண்ணமே உண்டாகிறது.

திரு. காமராசர் உவமைகளிற் சில பழைய இலக்கியங்களிற் காணப்படும் உவமைகள் போன்றவை; வேறு சில நாட்டு மக்களது அன்றாட வாழ்க்கையை ஒட்டியன; இன்னுஞ் சில அரசியல் ஞானிகள் பலர் கூறிச்சென்ற உவமைகளைப் போன்றவை. யானைக்குக் கொடுக்கும் கவளங்களில் ஒரு சோற்றுக் கவளம் கீழே தப்பி வீழ்ந்தால் ஆயிரக்கணக்கான எறும்புகளுக்கு உணவாகும் என்று உவமையில் வைத்துப்

புறநானூற்றுப் பாடலில் புலவர் ஒருவர் பேசினார். திரு. காமராசர் யானைக்குக் கொடுக்கிற சாப்பாட்டில் ஒரு கவளம் குறைந்தால் அது கவலைப்பட வேண்டியதில்லை என்பது போலப் பணக்காரன் கொஞ்சம் வரிப்பணம் கொடுத்தால் ஒன்றும் குறைவு நேர்ந்துவிடாது எனக் கூறியுள்ளார் (பக்கம் 34). ஆற்றில் அணைபோட்டு வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி, வேண்டும் போது கொஞ்சங் கொஞ்சம் நீரினை நிலத்திற்குப் பாய்ச்சுவதைப் போலச் செல்வத்திற்கும் வரையறை செய்கிறோம் என்று இவர் கூறியுள்ளார். புளியமரம் நட்டால் காய்ப்பதற்கு இருபது வருடம் ஆகிறது என்று கவலைப்படுவதில்லை. அதைப்போலக் குழந்தைகளை இப்பொழுது பள்ளிக் கூடத்திற் சேர்த்துப் பதினைந்து ஆண்டு படிக்க வைத்தால் அவர்கள் குடும்பத்திற்கும் நாட்டிற்கும் பிறகு எவ்வளவோ உதவுவார்கள் என்பதை அடிக்கடி எடுத்துக் காட்டியுள்ளார்.

வயலே பார்க்காத ஒருவன் நெல் விதைப்பதைப் பார்த்து இவ்வளவு நெல்லையும் சகதியில் போட்டு வீணாக்குகிறார்களே என்று கூறியதைப் போல ஐந்தாண்டு திட்டத்திற்குச் செலவு செய்யும் பணம் பின்னால் பயன்தரும் என்பதை உணராமல் பலர் பேசுகிறார்களே என வருத்தப்படும் இடங்களும் இங்கு உண்டு. பள்ளிக்குச் செல்லும் சிறு பையனைப் பார்த்து, வயதான ஒருவன் வேலை செய்வதைப் போல நீ ஏன் வேலை செய்யவில்லை எனக்கேட்பது எவ்வளவு பொருந்தாதோ அவ்வளவு பொருந்தாது பல தலைமுறைகளாக முன்னேறியுள்ள அமெரிக்கா ரஷ்யா போன்ற நாடுகளைப் பார்த்து அவ்விடங்களைப் போல ஏன் இந்தியா முன்னேறவில்லை எனக் கேட்பது என்று சொல்லியுள்ள இடமும் நோக்கத்தக்கது. நடுத்தரக் குடும்பத்திலுள்ள ஒரு பெண்மகள் தன் கணவனது சம்பளத்திற்கேற்பத் திட்டமிட்டுக் குடும்பத் தேவைகளை நிரப்பி வருகிற மாதிரி அரசாங்கமும் இன்றைய தினம் திட்டம் வகுத்துச் செயற்படுத்துகிறது என்று இன்னோரிடத்திற் குறிப்பிட்டிருப்பது காட்டப்பட்டிருக்கிறது.



"ஒரு டீக்கடைக்காரன் லாபங் கிடைக்கும்வரை ஒரு ஊரில் கடை போட்டுவிட்டு அப்பால் போய் விடுவதைப்போல வெள்ளையர்கள் நம்மைச் சுரண்டி விட்டுப் போய் விட்டார்கள்."

"அணையிலிருந்து வாய்க்கால் வெட்டித் தண்ணீர் எடுப்பதுபோல் பணத்தை வரிபோட்டு வசூலிக்க வேண்டும்."

"மொட்டைமரத்தில் யாரும் கல்லெறிய மாட்டார்கள்; பூ, காய், பழம் ஆகியவை இருக்கும் மரத்தில் தான் கல்லெறிவார்கள். அது போல் நல்லன பல செய்துவரும் காங்கிரசின்மீது தவறு எடுத்துக் காட்டத்தான் செய்வார்கள்."

"கலியாணம், திருவிழா, பண்டிகை என்றெல்லாம் வைத்து உறவினர்கள் எல்லோரையும் ஒன்றுசேர வாய்ப்பு அளிப்பதைப் போல மகா நாடுகள் போட்டுப் பழகுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்."

"மழைத் தண்ணீர் எப்படி அனைவருக்குஞ் சொந்தமோ அப்படி நாட்டின் செல்வமும் எல்லோருக்கும்சொந்தமாகப் பயன்பட வேண்டும்."

இவ்வாறு அமைந்த அழகிய உவமைகள் பல இந்நூலகத்தே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

திரு. காமராசர் பல்வேறு இடங்களிற் பேசிய பேச்சுக்களின் தொகுப்பாக இந்நூல் அமைந்திருக்கிறது. இத் தொகுப்பில் சோசலிசத்தைப் பற்றிய அவருடைய விளக்கங்கள் தெளிவாகக் காணப்படுகின்றன. *(பக். 35—36; 139.)*

பழையனவற்றில் நல்லனவற்றைக் கொள்ள வேண்டுமென்றும் புதியனவற்றை வெறுக்கக் கூடாதென்றும் வற்புறுத்துபவர் திரு. காமராசர்.

"புதியவற்றில் உள்ள நல்லதையும், பழைய முறையில் உள்ள நல்லதையும் ஏற்றுக்கொண்டு நடப்பதே காலத்திற்கு ஏற்றதாகும்." *(பக். 57)*

"பழைய வழியிலேயே போக வேண்டியதில்லை; பழையது என்பதற்காக முழுமையாக அதைத் தள்ளி விடவும் வேண்டியதில்லை. நல்லது அதிலும் இருக்கிறது. அதை ஏற்றுக் கொள்ளலாம். தள்ள வேண்டியதைத் தள்ள வேண்டும். புதுமையை முழுவதும் ஏற்றுக்கொள்ள வேண்டியதுமில்லை, தள்ள வேண்டியதும் இல்லை. அது மாதிரிப் போக்கில் போனால்தான் புதிய சமுதாயம் உருவாகுமே தவிர, நல்லதையும் ஏற்க மாட்டேன், கெட்டதையும் விடமாட்டேன் என்றிருக்கக்கூடாது" (பக். 147—148)

என்பவற்றைக் கூறலாம்.

நம் தேச மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்பதைப் பல இடங்களில் அவர் வற்புறுத்தியுள்ளார். எடுத்துக்காட்டாக,

"இந்து, முஸ்லிம், கிறிஸ்தவன், நாடார், தேவர், பிள்ளை என்று மத, இன, சாதி பேதம் பாராட்டுதல் கூடாது. பேதம் கற்பிப்பதற்காக ஊர் ஊருக்குச் சிலர் இருப்பார்கள். இவர்களிடத்திலும் நாம் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும்" (பக்கம் 82)

என்பதைக் காட்டலாம்.

வாக்காளர்களோடு நேர்த் தொடர்புகொண்டு வாக்களிப்பதனுடைய நோக்கத்தையும் பெருமையினையும் அவர் பல இடங்களில் விளக்கியுள்ளார். நோட்டுக்களை வைத்துக் கொண்டு சாப்பிட்டுவிட முடியாது என்றும் பண்டங்களை வேகமாகவும் நிரம்பவும் உற்பத்தி செய்ய வேண்டுமென்றும் அவர் வற்புறுத்தியுள்ளார். ஆற்றலும் அறிவும் உள்ளவர்களுக்கு வசதியில்லையானால் வசதிகள் செய்து கொடுக்கின்றன கூட்டுறவு சங்கங்கள் என்று கூறிவிட்டு, கூட்டுறவு இயக்கத்தின் மேன்மையையும் அவசியத்தையும் பல இடங்களில் வற்புறுத்தியிருக்கிறார். இன்னோரிடத்தில்,

"வசதி படைத்த சிறுபான்மையோர், வசதி இல்லாத பெரும்பான்மையோரின் உழைப்பைப் பயன்படுத்திக் கொழுத்து வந்தார்கள். உழைத்து உணவை உற்பத்தி செய்த ஏழைகள் பட்டினி கிடக்க வேண்டி வந்தது. உழைக்கும் இந்த ஏழைகளுக்கு நன்மை செய்யவே உழவர்களுக்கு 60 பங்கு, நிலச் சொந்தக்காரர்களுக்கு 40 பங்கு என்று சட்டம் கொண்டு வந்தோம்." (பக்கம் 184)



என்று எடுத்து இயம்பியுள்ளார்.

மூடத்தனத்தைக் கண்டிப்பவர் திரு. காமராசர். இதற்கு ஓர் எடுத்துக்காட்டு பக்கம் 136-இல் வரும் வாக்கியங்கள் :—

"அர்த்தமில்லாத - நியாயமில்லாத மூடப்பழக்கத்தை ஒப்புக் கொள்ள முடியுமா? பிறப்பால் தாழ்ந்தவர்கள் செருப்பு போடக்கூடாது; பெண்கள் சைக்கிளில் போகக் கூடாது என்று சொல்லும் மூடத்தனத்துக்கு முடிவு கட்ட வேண்டாமா?"

நாட்டில், மக்கள் தீண்டாமை ஒழிப்பை நெஞ்சார மேற்கொள்ளாமல் இருக்கிறார்களே என அவர் வருந்தியுரைக்கும் இடங்கள் கவனிக்கத்தக்கவை (பக்கம் 142).

சிறுவயது முதலே குழந்தைகளிடத்தில் ஜாதியினால் உயர்வு தாழ்வு இல்லை என்ற மனப்பான்மையை ஏற்படுத்தி வளர்க்க வேண்டுமென்று திரு. காமராசர் விரும்புகிறார். அதனால்,

"பிறவியால் யாரும் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று கிடையாது. செய்கையால் தாழலாம், உயரலாம். செய்கையால் தாழ்ந்தவர்களை ஒதுக்க வேண்டும். மனித சமுதாயம் நல்ல முறையில் வாழ ஒற்றுமை அவசியம். இந்த மனப்பான்மை குழந்தைகளுக்கு ஏற்பட வேண்டும். அரிஜனங்களுக்குள்ள தொல்லைகளுக்கு மூல காரணம் ஏழ்மைதான். அவர்களுக்குக் கல்வியளிப்பதன் மூலம் ஏழ்மையை ஒழிக்க முடியும்."

என்று விளம்பியுள்ளார்.

பஞ்சாயத்துத் தலைவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டு மென்று சுட்டிக்காட்டியுள்ளார். "மரியாதையாகப் பழகுவதற்கு எல்லோரும் பழகிக் கொள்ள வேண்டும். பொறுமையோடு நடந்து கொள்வதற்கும் பழகிக் கொள்ள வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர் என்று சொன்னால் இந்தக் குணங்கள் எல்லாம் இருக்க வேண்டும்." (பக்கம் 156).

தமிழ்மொழியின் பெருமையைப் பற்றியும் அவர் பேசாமலில்லை. "தமிழ்மொழி உலகமெல்லாம் பரவ வேண்டுமானால் குறுகிய எல்லை நோக்கம் எப்படி உதவ முடியும்? பல அறிஞர்கள் அந்நிய மொழிகளில் உள்ள நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து வருகின்றனர். நிறைய நூல்கள் தற்போது வெளி வருகின்றன. அது மட்டும் போதாது. மொழி பெயர்ப் பின்றித் தமிழிலேயே சிந்தித்து நூல்களை எழுத வேண்டும். தமிழ்மொழிக்கு அத்தகுதி இல்லையா? நாம் மாத்திரம் பிற மொழிகளிலிருந்து கடன் வாங்க வேண்டுமா? பிறர் நம் மொழியிலிருந்து கடன் வாங்கிக் கொள்ளட்டுமே!" (பக்கம் 214). "ஆங்கிலம் கற்றவர்கள் மட்டும் அறிவு வளர்ச்சி பெற்றால் ஒருநாளும் போதாது. பொது மக்கள் அறிவு வளர்ச்சியடைய வேண்டுமானால், கல்லூரிகளிலே படிக்கக் கூடிய மாணவர்களுக்கு மட்டும் இல்லை; எல்லாருக்கும் உபயோகப்படக்கூடிய முறையில் தமிழ் மொழியில் புத்தகங்கள் வெளியிட வேண்டும்." (பக்கம் 219) இப்பகுதிகள் அவர் உள்ளத்தினை எடுத்துக் காட்டுவனவாகும்.

எனினும், ஆங்கில மொழிப் பயிற்சி தமிழ் நாட்டிற்கு வேண்டுமென்பதை அவர் வற்புறுத்தி உள்ளமையும் அறியப் படும். "ஆங்கிலத்திற்கு இருக்கக் கூடிய உயர்வைக் குறைத் துக்கொள்ள முடியாது. எல்லாக் குழந்தைகளுக்கும் நல்ல முறையில் ஆங்கிலத்தைக் கற்றுக் கொடுப்பதன் மூலம்தான் தமிழ்மொழிக்கு ஆக்கம் வரும். அவ்வளவு சுலபமாக ஆங் கிலத்தைத் தள்ளிவிட முடியாது. தள்ளவே முடியாது என்பது என் கருத்து." (பக்கம் 224)

திரு. காமராசர் முனிவர் ஒருவரைப் போலப் பேசும் இடங்களும் உண்டு. அதற்கு ஓர் எடுத்துக் காட்டு:—



"மனிதனின் மிருக உணர்ச்சியானது வெறியாக மாறி மனித னுடைய மனத்தை ஆட்டிப் படைக்கும்படியான நிலையில் விட்டு வைக்கக் கூடாது. இந்த மிருக உணர்ச்சி மெள்ள மெள்ளவாவது நம்மிடமிருந்து அடியோடு ஒழிக்கப்பட வேண் டும். ஏனென்றால், இதனால் சுயநல மனப்பான்மையும், தன் னல உணர்ச்சியும், பிறர் உழைப்பைச் சுரண்டி வாழ்கிற கேவல மனப்பண்புந்தான் மனிதர்களிடையே வளருகின்றன." (பக்கம் 243).

இவ்வாறு திரு. காமராசருடைய உள்ளக்கிடக்கைகளை நன்கறிந்து கொள்வதற்குச் சிறந்த வாயிலாக இந்தப் புத்தகம் இருக்கிறது. இதனைத் தொகுத்துள்ள திரு. மு. நமசிவாயத் தையும், இதனை அழகாக அச்சியற்றி வெளியிட்டுள்ள வானதி பதிப்பகத்தாரையும் பாராட்டுகின்றேன்.

சென்னை,
10—5—'65

அ. சிதம்பரநாதன்.

# இதனுள்ளே...


| | | பக்கம் |
|---|---|---|
| காலாகாலத்தில் கல்வி | ... | 9 |
| எப்படிப் பொருந்தும்? | ... | 11 |
| கள்ளனுக்கு வக்காலத்தா? | ... | 12 |
| பணத்தின் சுழற்சி | ... | 14 |
| சமதர்மக் கொள்கை | ... | 16 |
| குடும்பக் கடமை போல... | ... | 17 |
| காங்கிரசைக் கலைப்பதா? | ... | 19 |
| கல்யாணப் பைத்தியம் | ... | 20 |
| கிணறு தோண்டியதும்......! | ... | 22 |
| விதையின் பயன்... | ... | 23 |
| நல்ல தண்ணீர்க் கிணறு | ... | 24 |
| நிழல் தரும் மரம் | ... | 25 |
| சாதக பாதகம்! | ... | 27 |
| சில்லரைத்தனம் | ... | 28 |
| காத்திருக்கத் தேவையில்லை | ... | 29 |
| லாப நோக்கம் | ... | 29 |
| வளம் பெருக... | ... | 30 |
| பூச்சாண்டி மிரட்டல் | ... | 31 |
| சாக்கடையில் ஊறிக் குளித்து... | ... | 32 |
| யாருக்குச் சொந்தம்? | ... | 32 |
| வரையறை வேண்டாமா? | ... | 34 |
| யானைக் கவளம் | ... | 34 |
| கொலு மாதிரி... | ... | 35 |
| சுதந்திரம் எதற்கு? | ... | 36 |
| புளிய மரம் நட்டால்...! | ... | 37 |
| நல்வாழ்வுத் திட்டம் | ... | 38 |
| பாகப் பிரிவினையா? | ... | 39 |
| பொம்மையை உடைப்பது போல... | ... | 41 |
| பயிரும் களையும் | ... | 42 |
| கையைக் கட்டி... | ... | 43 |
| நமது எண்ணம் | ... | 45 |
| அனுபவிக்க முடியாத அவதி | ... | 45 |
| தர்மம் கெட்டதா? | ... | 46 |
| பழகிவிட்ட பாரம் | ... | 48 |

| | | பக்கம் |
|---|---|---|
| வேடிக்கைப் பேச்சு | ... | 50 |
| ஒரே நாளில் காய்க்குமா? | ... | 51 |
| நிலம், கூடப் போகிறதா! | ... | 52 |
| ஜோடிக் காளை | ... | 53 |
| அழுந் தெரியாமல்... | ... | 54 |
| சரியான மனப்பான்மை | ... | 55 |
| தடுமாற்றம் கண்டு... | ... | 56 |
| காலத்திற்கு ஏற்றது | ... | 57 |
| எதிர்காலப் பலன் | ... | 58 |
| மனித இயந்திரம் | ... | 59 |
| குருட்டு நம்பிக்கை | ... | 60 |
| வழி செய்வோம் | ... | 60 |
| சண்டைக் குணம் | ... | 62 |
| நமது இலட்சியம் | ... | 62 |
| உணர்ச்சி வெறி | ... | 63 |
| எஜமானர் யார்? | ... | 64 |
| திருவிழா, சினிமாவா? | ... | 66 |
| நாமே பெற்ற உரிமை | ... | 67 |
| ஓங்கும் குரல் | ... | 69 |
| திரளும் சக்தி | ... | 69 |
| நிலையான அரசாங்கம் | ... | 70 |
| அனைவருக்கும் அக்கறை | ... | 71 |
| சமுதாய அந்தஸ்து | ... | 73 |
| கதை கட்டும் போக்கு | ... | 73 |
| பத்திரிகைகளின் பொறுப்பு | ... | 74 |
| மிருகங்களாக ஆகவேண்டுமா? | ... | 75 |
| வரலாறு தரும் பாடம் | ... | 77 |
| ஒற்றுமையின் விளைவு | ... | 78 |
| விஷப் பரிட்சையா? | ... | 80 |
| தேவையற்ற பேத உணர்ச்சி | ... | 82 |
| அருமையை எண்ணினால்... | ... | 82 |
| அடித்துக் கொண்டு சாவதா? | ... | 83 |
| தைரியமில்லை | ... | 84 |
| அட்டை மாதிரி... | ... | 85 |
| பொது மக்கள் கவலை | ... | 87 |
| செய்ய வேண்டியதை விட்டு... | ... | 88 |
| பதவிப் பாட்டு | ... | 89 |
| நட்டாற்றில் கைவிடுவதா? | ... | 90 |
| கவனத்திற்குரிய கட்டம் | ... | 91 |

பக்கம்

தேவைப் பெருக்கம் ... 92
ஜனநாயகத்திற்கு ஆபத்து ... 93
அந்த ஜீவசக்தி ... 94
சகவாழ்வுத் திட்டம் ... 95
வசதிக்காரன் கோபம் ... 96
தலையாய கடமை ... 98
நாடெங்கும் தெரிந்தது ... 99
நடவாத காரியம் ... 99
வியாதிக்கு மருந்து ... 100
இணைப்புச் சக்தி ... 101
பழிபோட்டு ஓடுவதா? ... 101
இருக்கும் வசதியைக் கொண்டு... ... 102
எதை எதிர்க்கின்றனர்? ... 103
போனால் போகட்டும்! ... 104
கெடுதல் என்ன? ... 105
ஆதரவு இருக்கும் வரையில் ... 106
சாமர்த்தியம் செல்லுமா? ... 107
ஓய்வு அவசியமா? ... 108
மக்கள் பொறுப்பு ... 109
பணமும் பண்டமும் ... 111
தோண்டும் குழியில் ... 112
ஊமை பேசினால்... ... 113
நீயும் படிக்க வா! ... 114
சொந்தக் காலில் ... 115
யாருக்குச் சொந்தம்? ... 116
நாலு காசு இருந்தால்... ... 117
உச்சிப் படியில் ... 118
அதற்குத் தயார் இல்லை ... 119
கேலியும் கிண்டலும் ... 120
சிவப்பும் கருப்பும் ... 121
கடன் வாங்கியும் பட்டினியா? ... 122
சுரண்டல் வாழ்வு ... 122
சண்டை போட்டுச் சாவதா? ... 124
படிப்பும் பணமும் ... 125
வாய்க்கால் மூலம்... ... 126
அந்தப் பரம்பரை ... 126
சுயராஜ்யம் மட்டுமே... ... 127
எனக்குப் புரியும் கோபம் ... 128
உழைப்பின் உயர்வு ... 128





பக்கம்

மனிதனால் ஆகாதது ... 129
மறக்கடிக்கப் பார்ப்பதா? ... 130
தேவைக்கு உச்ச வரம்பு ... 131
வெகுதூரம் ஆனாலும்...! ... 132
தலைநிமிரக் கூடாதா? ... 132
தாத்தாவைக் கேட்டால்... ... 134
அர்த்தமற்ற மூடத்தனம் ... 135
ஏழை மீது பொறாமை ... 136
பாதிக்கும் சூழ்நிலை ... 136
அவர் வழியில்... ... 137
மாறுதலுக்கு ஏற்றபடி... ... 138
ரொம்ப வித்தியாசம் ... 139
சட்டம் போட்டாலும்... ... 140
முன்னேற்றத்தின் அளவுகோல் ... 141
செத்த பின்னும்... ... 141
அனுபவத்தால் ஆகும் ... 143
ஒரு நாளில் முடியுமா? ... 143
அறிஞருக்குத்தான் தோன்றுமா? ... 144
தவறான பாதை காட்டுவதா? ... 145
கோளாறு என்ன? ... 146
பழமையும் புதுமையும் ... 147
பழக்கத்தினால் ஏற்படும் நம்பிக்கை ... 148
சிறுவயது நினைவு ... 149
தேரும் திருவிழாவும் ... 150
சுயநல மனப்பான்மை ... 151
கெடுதியில்லாமல் தீர்வு ... 151
அன்பு விசாரணை ... 152
ஊர் கெட்டுப் போக... ... 153
யாரிடம் சொல்வது? ... 154
நம் ஊரில் என்ன? ... 155
மரியாதை மனப்பான்மை ... 156
படித்துக் கதை சொல்வது ... 157
எண்ணத்தில் உறுதி ... 158
முன்னேற்றத்தை நம்பாதவர்கள் ... 158
செயல்பட்டு வரும் புரட்சி ... 162
ரஷ்யா, சீனா மாதிரியா? ... 160
பரம்பரை வழக்கம்போல... ... 161
அறிவும் ஆற்றலும் ... 163
பயன்படும் இயக்கம் ... 164

| | | பக்கம் |
|---|---|---|
| மக்கள் பலம் | ... | 165 |
| வாழ்வு என்பது... | ... | 166 |
| செல்வம் பரவலாக... | ... | 167 |
| இருட்டறையில் விளக்கு | ... | 168 |
| பணப் புழக்கம் | ... | 169 |
| விலைவாசி குறைய... | ... | 170 |
| ஏமாற்றுப் பேச்சு | ... | 171 |
| சிக்கலான பிரச்சினை | ... | 172 |
| சர்க்கார் எதற்கு? | ... | 173 |
| கூடித் தொழில் செய்வோம் | ... | 174 |
| ஏற்றத்தாழ்வு மறைய... | ... | 176 |
| தொழில் புரட்சி | ... | 177 |
| புதிய உணர்ச்சி | ... | 178 |
| மறுக்க முடியுமா? | ... | 179 |
| மாறும் வேகம் | ... | 180 |
| மலைப்பு காரணமாக... | ... | 182 |
| நமக்கு ஏற்ற முறை | ... | 183 |
| பணம் படைத்தவன் போக்கு | ... | 183 |
| முளையிலேயே கிள்ளி... | ... | 185 |
| வாழும் நம்பிக்கை | ... | 186 |
| உயர்வும் தாழ்வும் | ... | 187 |
| பார்க்க வேண்டியது | ... | 187 |
| காரியத்தில் கண் | ... | 188 |
| சொந்த அரசாங்கம் | ... | 189 |
| கத்தினால் போதுமா? | ... | 190 |
| எல்லாரும் நல்லவரா? | ... | 191 |
| பொய்த் தோற்றமா? | ... | 192 |
| திட்ட அநீதி? | ... | 192 |
| சினிமா செட்டு, நாடக சீனா? | ... | 194 |
| அவசியமற்ற வேலை | ... | 195 |
| ஒரே விஷயமா? | ... | 196 |
| ஓட்ட முடியுமா? | ... | 197 |
| கிளிப்பிள்ளை போல... | ... | 199 |
| மந்திரத்தால் மாங்காய் | ... | 200 |
| நஷ்டம் யாருக்கு! | ... | 201 |
| மச்சான் மாப்பிள்ளைகே... | ... | 203 |
| தவம் செய்தால் | ... | 204 |
| தஞ்சாவூர் அரிசி | ... | 205 |
| ஒரே ஒரு பாதுகாப்பு | ... | 206 |





| | | பக்கம் |
|---|---|---|
| காலம் மாறி விட்டது | ... | 207 |
| நீ என்ன உயர்வு? | ... | 208 |
| பணக்காரன் பிள்ளைக்கு உள்ள வசதி? | ... | 210 |
| அடையாளம் என்ன? | ... | 211 |
| காந்திஜி உணர்ந்தது | ... | 212 |
| மாற்றப்பட்ட நிலைமை | ... | 212 |
| குறுகிய எல்லையில்... | ... | 214 |
| சந்தேகம் வராதா! | ... | 215 |
| யார் கொடுப்பது? | ... | 216 |
| கட்டாயம் இன்றி... | ... | 217 |
| உதறித் தள்ள முடியாது | ... | 218 |
| பேசுவது எதற்காக? | ... | 219 |
| அவஸ்தை இல்லாமல்... | ... | 220 |
| வளர்ச்சிக்கு வட்டமா! | ... | 222 |
| தள்ளவே முடியாது | ... | 223 |
| அறிஞர் கடமை | ... | 225 |
| நாகரிக வளர்ச்சி | ... | 225 |
| மாக்மில்லன் கூறியது | ... | 226 |
| வெந்ததைத் தின்று... | ... | 227 |
| வரியில்லை என்றால்... | ... | 228 |
| நன்மை செய்யாதே! | ... | 229 |
| ஒரு துளி இன்பமா? | ... | 230 |
| வறுமையின் சுவடு | ... | 231 |
| இடைக்கால சங்கடம் | ... | 231 |
| மறைபொருளா, தேவபாஷையா? | ... | 232 |
| எந்தப் பெயரானாலும்... | ... | 234 |
| பேரம் பேசும் பேச்சு | ... | 235 |
| சோற்றுக்கு மிஞ்சிதான் | ... | 235 |
| பெரிதாக்கிப் பேசுவதா? | ... | 236 |
| தள்ளிப்போடும் வழியல்ல | ... | 236 |
| சாதாரண சம்பவம் | ... | 238 |
| கட்சி வித்தியாசமற்ற பொறுப்பு | ... | 239 |
| அமைதியைக் காப்போம் | ... | 240 |
| சுகபோகத்திற்கு பெருகு | ... | 241 |
| மனிதனும் மிருகமும் | ... | 242 |
| பழம்பெரும் நோய் | ... | 244 |
| கருத்துப் புரட்சிக் காலம் | ... | 245 |
| சமதர்மத்தின் நோக்கம் | ... | 246 |
| புரட்சிக்கு வழி | ... | 246 |

| | | பக்கம் |
|---|---|---|
| நானும் ஒருவன்... | ... | 247 |
| கேட்கும் தைரியம் | ... | 248 |
| அப்பாவிக் கட்சியினர் | ... | 250 |
| நம்மை நாமே... | ... | 251 |
| மீண்டும் உயிர்ப் பலி ! | ... | 252 |
| சுரண்டல்காரர்களுக்கு இடம் | ... | 253 |
| இன்று விதைத்து, நாளை அறுவடை ! | ... | 253 |
| சுழலில் சிக்குவதா ? | ... | 254 |
| பக்தர் பிரார்த்தனை | ... | 265 |
| சுரண்டலற்ற சமூகம் | ... | 256 |
| முறியடிக்க முடியுமா ! | ... | 260 |
| சமமாக வாழ்வோம் | ... | 261 |
| பட்டாளம் வரவில்லை ! | ... | 262 |
| துரிதகதியில் முன்னேற... | ... | 263 |
| பாகற்காய் என்றதும்... | ... | 264 |
| நியாயம் பார்த்து | ... | 255 |
| பழைய கல்லாக இருந்தாலும் | ... | 266 |
| பிரேக் போடும் பாட்டு | ... | 267 |
| மதிப்பு உயர்ந்தது | ... | 269 |
| பத்துக்குப் பதில் நூறு | ... | 270 |
| உலகம் தெரியாதா ? | ... | 272 |
| தர்மமும் சமதர்மமும் | ... | 273 |
| அறிவாளிகள் பார்க்கவேண்டியது | ... | 274 |
| கொக்கு தலையில் வெண்ணெய் ! | ... | 275 |
| படிப்பு வேண்டாமா ? | ... | 275 |
| அது பிரிவினையாகிவிடுமா ? | ... | 276 |
| ஏமாற்றமடைந்தோர் புகலிடம் | ... | 278 |
| சுட்டுக்கொல்லும் எண்ணம் | ... | 279 |
| தும்பை விட்டு... | ... | 280 |
| முயற்சி எளிதாக... | ... | 281 |
| ரெடிமேடு சிந்தனை | ... | 282 |
| குறும்புப் புத்தி | ... | 283 |
| கஷ்டம் யாருக்கு ! | ... | 284 |
| திடீர்ப் பணக்காரர்கள் | ... | 284 |
| துன்பத்தையும் இன்பமாக... | ... | 285 |
| சுயரூபத்தைக் காட்டி... | ... | 286 |
| வடநாட்டிலும்... | ... | 287 |
| ஆபத்தானவர்கள் | ... | 288 |
| நின்று, பாருங்கள் | ... | 289 |



| | | பக்கம் |
|---|---|---|
| துவேஷத்தைத் தூண்டி விடுவதா ? | ... | 290 |
| ஆள் விமரிசனம் | ... | 290 |
| மதிப்பு ஏது ? | ... | 291 |
| வம்புக்காரர் கூட்டு | ... | 292 |
| பலன் எப்போது ? | ... | 293 |
| பணத்தைக் கட்டுப்படுத்துவதா ? | ... | 294 |
| செல்லாத பேச்சு | ... | 294 |
| பேய், பிசாசு பயம் | ... | 295 |
| இரண்டு வருடம் கழித்து | ... | 296 |
| கழுதைமேல் ஏறி | ... | 297 |
| திராவிடப் பூச்சாண்டி | ... | 297 |
| கைவைத்த உடன்... | ... | 298 |
| சுடச்சுடப் போட்டால்... | ... | 299 |
| முள்ளில் சிக்கிய துணி | ... | 300 |
| உலகத்தார் மரியாதை | ... | 300 |
| கள்ள மார்க்கெட் ஆசை | ... | 301 |
| சினிமா வசனம் போல... | ... | 302 |
| குறை கூறுபவன் குரல் | ... | 304 |
| கட்சிப் போட்டிகள் | ... | 305 |
| ஆட்டுக்கிடா சண்டை | ... | 306 |
| ஒன்று சேரலாம் | ... | 307 |
| குறைபாடே மூலதனம் | ... | 307 |
| பாட்டன் சொத்தா ? | ... | 308 |
| தமாஷ் பார்ப்பது | ... | 309 |
| எப்போதுதான் முன்னேறுவது | ... | 309 |
| தப்பான நம்பிக்கை | ... | 310 |
| அறியாதவன் வாயில்... | ... | 310 |
| அனுதாப குணம் | ... | 311 |
| பூஜை மட்டும் போதாது | ... | 312 |
| இந்தியைக் காட்டி... | ... | 313 |
| அமைதிக்குப் பொறுப்பு | ... | 314 |
| மாணவரும் அரசியலும் | ... | 315 |
| மாணவர் கடமை | ... | 315 |
| விளையாட்டும் விபரீதமும் | ... | 316 |
| திரைமறைவு வேலை | ... | 317 |
| அரட்டை அடிக்காமல்... | ... | 317 |
| தியாகம் எது ? | ... | 318 |
| சந்தேகம் இருந்தால்... | ... | 319 |
| பொறுப்பான உழைப்பு | ... | 320 |

| | | பக்கம் |
|---|---|---|
| பழைய வரலாறு | ... | 321 |
| முடிவற்ற கடமை | ... | 321 |
| ஐம்பதாண்டு முயற்சி | ... | 322 |
| வெளியில் இருக்கமுடியாது | ... | 323 |
| தியாக மனப்பாங்கு | ... | 324 |
| கடைசிவரை உறுதி | ... | 325 |
| எதையும் தாங்கும் இதயம் | ... | 326 |
| செலுத்தவேண்டிய பங்கு | ... | 326 |
| எத்தனை நாளைக்கு முடியும்! | ... | 327 |
| கதம்ப சர்க்கார் | ... | 328 |
| தாலியறுத்தால் போதும்! | ... | 328 |
| நாம்தான் சுமைதாங்கி | ... | 329 |
| கோழைகள் அல்லர் | ... | 329 |
| இலட்சிய முகடு | ... | 330 |
| கதவைமூடிக் கொண்டு... | ... | 330 |
| சோதனையும் சாதனையும் | ... | 331 |
| தியாகச் சுடர் | ... | 332 |
| நக்கீரர் பரம்பரை | ... | 333 |
| அழியும் விதை நெல் | ... | 333 |
| வெள்ளப் பெருக்கு | ... | 334 |
| தீ பரவட்டும்! | ... | 334 |

# காமராஜ் உவமைகள்

## காலாகாலத்தில் கல்வி

நம் குழந்தைகளை இன்றைக்குப் படிக்க வைக்காவிட்டால், பிற்காலத்தில் நம் மாதிரி தான் கஷ்டப்பட வேண்டியிருக்கும். சர்க்காரிலிருந்து ஏழைக் குழந்தைகள் படிக்க உணவு, உடை, புத்தகம் இவையெல்லாம் இலவசமாகக் கொடுக்கப் படுகிறது. இந்த நேரத்திலும் படிக்காமல் பின்பு வருந்தினால் அது யார் தப்பு? மதுரைக்குப் போக வேண்டும் என்றால், குறிப்பிட்ட நேரத்திற்கு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய், டிக்கட் எடுத்து, ரயில் வண்டி வந்ததும் ஏறிப் போனால்தானே நல்லது! அதை விட்டு ரயில் போன பிறகு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய், "இந்த ரயில்காரன் மகா மோசமய்யா, என்னை மட்டும் ஏத்திட்டுப் போகமாட்டேன்னு போயிட்டான்" என்று சொன்னால், குற்றம்

யாருடையது? சரியான நேரத்திலே போகாதது பிரயாணியின் தப்புதானே! ஆகவே, நம் குழந்தைகளை இப்போதே படிக்க வைத்து விட வேண்டும். அப்படிச் செய்யாமல் விட்டு விட்டு, பிற்காலத்தில் அதற்காக வருந்தக் கூடாது.

குழந்தைகள் எல்லோரும் இயற்கையாகவே புத்திசாலிகளாகவே இருப்பினும், ஏழைக் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு வசதிகளும் வாய்ப்புக்களும் இல்லாமலிருப்பதை அரசாங்கம் உணர்ந்துதான் ஏழைக் குழந்தைகளின் கல்வி அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தி வருகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன் படுத்திக்கொண்டு அனைவரும் நன்றாகப் படித்தாக வேண்டும். அதை விட்டு, ரயில் புறப்பட்டுப் போன பிறகு ஸ்டேஷனுக்குப்போய் 'ரயில் காரன் விட்டுட்டுப் போய்ட்டானே' என்று வருத்தப்படுபவர் நிலைமையை வரவழைத்துக் கொள்ளக் கூடாது. படிப்பு மிகவும் முக்கியம். அதைக் காலாகாலத்தில் நன்றாகத் தெரிந்து வைத்துக் கொண்டால் நல்லது. அந்த வகையில் காங்கிரஸ் சர்க்கார் எல்லா மக்களுக்கும் நல்ல வசதி செய்து வருகிறது. அதைக் 'கோட்டை' விடாமல் நன்றாகப் பயன் படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.



## எப்படிப் பொருந்தும்?

நாம் முன்னேற்றப் பாதையில்தான் சென்று கொண்டிருக்கிறோம். அதனால் முன்னேறிக்கொண்டிருக்கிறோம். சிலர் அமெரிக்காவையும், ஜப்பானையும், ரஷ்யாவையும் காண்பித்து, நமது இந்தக் குறுகிய கால முன்னேற்றத்தோடு ஒப்பிட்டுப் பேசுகிறார்கள். இது எப்படிப் பொருந்தும்?

பள்ளிக்கூடம் செல்லும் பத்து வயதுப் பையனிடம், வேலைக்குப்போகும் வயது வந்த ஆளைக் காண்பித்து, இவரைப்போல் நீயும் ஏன் வேலைக்குப் போகவில்லை?' என்று கேட்டால், அது எவ்வளவு புத்திசாலித்தனமாக இருக்குமோ, அவ்வளவு புத்திசாலித்தனமாகத் தான் இருக்கிறது அவர்கள் பேச்சும். அந்நியர்களுக்கு அடிமைப்பட்டு, அதனால் 150 ஆண்டுகள் பின்தங்கி, சமீபத்தில் சுதந்திரம் அடைந்து, அதன் பிறகு நாமாகத் திட்டமிட்டு சிறிது சிறிதாக முன்னேறிக் கொண்டிருக்கும் நாம், நம்மைவிட முன்னதாகவே விடுதலை பெற்று, நீண்டநாளாகத் திட்டமிட்டு முன்னேறிக் கொண்டிருக்கும் அமெரிக்கா, ஜப்பான், ரஷ்யா போன்ற நாடுகளோடு சமமாக இருக்கமுடியுமா? அதுவும் உடனேயே நடக்கக் கூடிய காரியமா? நாமும் மற்றவர்களைப் போல் வளரும் வரை பொறுக்க வேண்டாமா? அயராது பாடுபட வேண்டாமா? உழைத்

தால் அந்த நாடுகளைவிட நாமும் அதிகமாக முன்னேற முடியாதா என்ன? முடியும். நிச்சயமாக முடியும். அதற்காகத்தானே திட்டங்கள் போட்டு வருகிறோம்?

## கள்ளனுக்கு வக்காலத்தா?

இந்தியாவின் எல்லையைக் கம்யூனிஸ்டு ஆட்சி நடக்கும் நாடான சைனா ஆக்கிரமித்துக் கொண்டு விட்டது. இந்தப் பிரச்சினை பற்றி விஷயம் வெளியானதும் நம் நாட்டில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சி என்ன சொல்லிற்று, செய்தது! மக்களுக்குத் தெரியாததா என்ன?

'சின்னப் பிரச்சினை இது. இதைப் போய்ப் பிரமாதப்படுத்துவதா? இது வெறும் எல்லைத் தகராறு தான். இதில் ஆக்கிரமிப்புப் பிரச்சினையைச் சம்பந்தப்படுத்திக் குழப்புவதா?' என்று கம்யூனிஸ்டுகள் கேட்டார்களா இல்லையா?

கள்ளன், வீட்டின் உள்ளே நுழைந்து விட்டான். உடனே வீட்டிலுள்ளவர்கள் பலர் கூடி, உஷாராரக அவனைப் பிடித்து வெளியேற்றுகிறார்கள். பிடிபட்ட கள்ளன், தான் உள்ளே நுழைந்ததற்கு என்ன பதிலைச் சொல்வது என்று விழித்துக் கொண்டிருக்கிறான். இந்தச் சமயம் பார்த்து, வீட்டுக்காரப் பையன்



ஒருவனே, உள்ளே நுழைந்த கள்ளனுக்காகப் பரிந்து பேசினால் எப்படி இருக்கும்? சொல்லுங்கள்! கம்யூனிஸ்டுகள் சைனாக்காரன் பற்றிப் பேசுவதும் இப்படித்தானே! இதைக் கேட்டால், அவர்கள் கோபித்துக் கொள்வதா!

வீட்டின் உள்ளே நுழைந்த திருடனுக்காகப் பரிந்து பேசிய வீட்டுக்காரப் பையன் "உள்ளே வந்தவனை வெளியேற்றுவதா? அவன்மீது பழிசுமத்துவதா? உள்ளே வாருங்கள். சாவகாசமாக உட்கார்ந்து விஷயத்தைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்" என்று சொல்வது போலவே நம்முடைய எல்லையை ஆக்கிரமித்த சைனாக்காரனைப் பழிப்பதா? என்றெல்லாம் இங்குள்ள கம்யூனிஸ்டுகள் கேட்டார்கள். "ஆக்கிரமிப்பா, எல்லைத் தகராறு?" என்ற கேள்விக் கோஷத்தையே கொஞ்ச நாள் முக்கியமாகப் போட்டு வந்தார்களே! இவர்களை வெளிநாட்டு விசுவாசிகள் என்று சொல்லக் கூடாதா!

கம்யூனிஸ்டு கட்சியின் வேர், வெளி நாட்டில் இருக்கிறது என்று சொன்னால் இது அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கலாம். ஆனால், அவர்களுடைய போக்கு, பேச்சு, சிந்தனை யெல்லாம் கட்சியின் வேர் வெளிநாட்டில் தான் இருக்கிறது என்பதைத்தானே ஊர்ஜிதம் செய்கிறது?

# பணத்தின் சுழற்சி

சமுதாய வளர்ச்சிக்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்து, மேன்மேலும் அது வளர்ச்சியடைவதற்கு ஊக்கம் அளித்துக் கொண்டே இருக்கவேண்டும். சமுதாய வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும் என்று சொன்னால், அதில் தனிப்பட்டவர்களுடைய வளர்ச்சிக்கும் ஒரு வரம்பு வேண்டும் இல்லையா? மற்றெல்லாவற்றையும் ஒத்துக் கொள்வார்கள். விவசாயம் பண்ணுவதற்காகக் காவிரிக்கு அணை போடணும், வாய்க்கால் வெட்டணும் என்று சொன்னால் வேண்டாம் என்று சொல்வார்களா? அப்புறம் பணம் வரும் இல்லையா? அதற்காக ஒப்புக் கொள்வார்கள்.

கிடைத்தவரை எங்களுக்கே தண்ணீரைக் கொடுத்துவிடு என்று சிலர் சொல்லுகிறார்கள். இப்போது அணையைகட்டி, வாய்க்கால் வெட்டினோம் என்றால் அதன் மூலமாகத் தண்ணீர் ஊர் முழுவதும் பரவுகிறது இல்லையா? அப்படி இல்லாமல் 'எங்க வீட்டுக்கு மட்டும் தண்ணீர் கொடு' என்றால் நியாயமா என்ன? 'எனக்கு மட்டும் தண்ணீர் வருகிற மாதிரி வழி பண்ணிக்கொடு' என்றால் என்ன அர்த்தம்? அதிலே என்ன நியாயம் இருக்கிறது? உனக்கு மட்டும் வேண்டும், மற்றவர்களுக்கு அது வேண்டாமா



என்ன? அப்படியே செய்து கொடுத்தாலும் நீ எவ்வளவு நாளைக்குத்தான் அந்தத் தண்ணீரைத் தேக்கி வைப்பாய்? அப்படித் தேக்கி வைத்தால்தான் நன்றாக இருக்குமா? நாற்றமெடுத்துப் போகும்! கெட்டுப் போகுமே! அப்புறம் அதில் இருந்து கொசு வரும். அதனால் நோய் பரவும். இதைவிட, வெள்ளம் வந்தால் அது ஊருக்கே கூட ஆபத்து. அது எல்லாவற்றையும் சேர்த்து அடித்துத் கொண்டு போய்விடும். அதனாலே, நீரைத் தேக்கி வைத்தாலும் ஆபத்து; அப்படித் தேக்கி வைக்காவிட்டாலும் ஆபத்து. அதற்காக நாம் என்ன பண்ணுகிறோம்? அணையைப் போட்டு, அங்கே வாய்க்கால் வெட்டிப் பாசன வசதி பண்ணிக் கொடுக்கிறோம். எல்லோரும் வசதியாக இருக்கத்தானே நீரைத் தேக்கி வைத்து அனுப்புகிறோம்? அந்தத் தண்ணீர் சுற்றிச் சுற்றி வரவேண்டியது தானே!

தண்ணீர் மழையாகப் பெய்யுது; அது ஆறாக ஓடுது. அப்படி ஓடுகிற தண்ணீரை அணைக்கட்டித் தேக்கி வைக்கிறோம். பிறகு அங்கு வாய்க்கால் வெட்டி அதன் மூலம் தண்ணீரை விவசாயத்திற்கு அனுப்புகிறோம். விவசாயத்துக்குப் பயன்பட்டதுபோக கொஞ்சம் தண்ணீர் சமுத்திரத்திற்கும் போகிறது. பிறகு அது என்ன ஆகிறது? இந்த மழைநீர் வற்றி ஆவியாக மாறி, வேகமாக மேலே

போய் மறுபடியும் மழையாக் கொட்டுகிறது. இப்படித்தானே அது பழையபடி சுற்றிக் கொண்டே வருகிறது! அதைத்தடுத்து நிறுத்த முடியுமா, என்ன? அதேபோல்தான் பணமும், நம்மைச் சுற்றிச் சுற்றித்தான் வர வேண்டும்.

## சமதர்மக் கொள்கை

**ம**னிதனுக்கும் மழை அவசியம்; மிருகத்திற்கும் மழை அவசியம்; பயிருக்கும் மழை அவசியம். மழை இருந்தால்தான் வாழமுடியும். மழை இல்லாவிட்டால் நாட்டில் வரட்சி ஏற்பட்டுப் போகும். அதனுல் பஞ்சம், பசி, பட்டினி, சாவு பெருகும்!, மழையில்லை யென்ருல் யாருமே வாழமுடியாது. மழைக்கு இவ்வளவு பெருமை எப்படி ஏற்பட்டதோ, அதே மாதிரிதான் பணத்திற்கும் பெருமை ஏற்பட்டுள்ளது. மழையைப் போலத்தான் பணமும் சுற்றிச் சுற்றி வரவேண்டும். மழை எல்லா இடத்திலேயும் பெய்கிற மாதிரி எல்லா இடத்திலேயும் செல்வம் பரவலாக இருக்கவேண்டும். ஒருவரிடத்தில் மட்டும் அது தேங்கக் கூடாது. அதை ஒருவர் மட்டுமே சொந்தமாக உபயோகப் படுத்தக் கூடாது. குவிந்துள்ள செல்வத்தைத் தமக்குமட்டுமே சொந்தமாகப் பயன்படுத்திஞல், அதனுல் பணத்திற்குரிய செல்வாக்கு—மரியாதை போய்விடும்



என்ற மாதிரியான நிலைமை நாட்டில் உண்டாக வேண்டும். "சரிதான் போ ஐயா, உன் பணம் வேண்டாம்" என்று பணத்தில் மட்டும் பெருத்தவனைப் பார்த்துச் சொல்லுகிற நிலைமை வரவேண்டும்.

செல்வத்தைப் பெருக்க வேண்டும். அதோடு பலருக்கும் பயன்படுவதாக அதை விநியோகம் பண்ணவேண்டும். நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை இதுதான்; நம்முடைய காங்கிரசினுடைய கொள்கையும் இதுதான். அந்தக் கொள்கையை நாம் ஒன்றும் புதிதாக உண்டாக்க வில்லை; திடீரென்று சமதர்மக் கொள்கை என்று சொல்லவில்லை. நாம் சுதந்தரப் போராட்டக் காலத்திலிருந்து படிப்படியாகச் சொல்லி வந்ததுதானே! அதைத்தான் இப்போது நடை முறைக்குக் கொண்டு வருகிருேம். அதுவும் ஜனநாயக முறையில் செயல்படுத்த முனைகிருேம், அதைக் குறை கூறுவதா? சொல்லுங்கள்.

## குடும்பக் கடமை போல...

**வி**லைவாசி ஏறிவரும் இந்தக் காலத்தில், நடுத்தரக் குடும்பத்தில், கணவனது குறைவான சம்பளத்தை வைத்துக்கொண்டு, மனைவி எப்படிக் குடும்பத் தேவைகளைத் திறம்படச் சரிக்கட்டி வருகிருளோ, அதைப்போலத்தான்

அரசாங்கமும் இன்றையத் தினம் செய்துவரு கிறது. அரசாங்கம் வேலை வாய்ப்பு, படிப்புக்கு வழி, வீட்டு வசதி, தண்ணீர் சப்ளை போன்ற பல்வேறு வசதிகளை மக்களுக்குச் செய்து கொடுப்பதில் உள்ள பல பிரச்சினை களையும் சமாளித்துத் தன்னுல் ஆனதைச் செய்து வருகிறது.

எனவே, மக்கள், அரசாங்கத்துக்கு உள்ள பிரச்சினைகளைப்பற்றி நன்கு உணர வேண்டும்; அப்படி உணர்ந்து, நாட்டின் பொருளாதார, சமுதாய நிலையை மேன்மேலும் உயர்த்த, அரசாங்கம் போட்டுள்ள திட்டங் களையெல்லாம் நிறைவேற்றுவதற்கு ஒத்து ழைக்க வேண்டும்.

குடும்பத்தின் வருவாய்க்கேற்ப, குடும் பத்தைத் தகுந்தபடி நிர்வாகம் செய்யும் தாயா ருக்குக் குடும்பத்தார் உதவியாக இருந்து ஒத் தாசை செய்வதுபோல, மக்களும் அரசாங்கத் திட்டங்களுக்குப் பக்கபலமாக இருந்து அவைகளைச் சீராக அமுல் படுத்த ஒத்துழைக்க வேண்டும். குடும்பத்துக் கடமை போலத் தான் நாட்டின் அபிவிருத்திக் கடமையும் என்று நினைத்துப் பாடுபடவேண்டும். ஏதோ சில கஷ்டங்கள் ஏற்பட்டாலும் சகித் துக் கொண்டு முன்னேற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



## காங்கிரசைக் கலைப்பதா ?

காங்கிரசையே சிலர் அழிக்க நினைக் கிருர்கள். அவர்கள், அழிப்பதோடு மட்டு மல்ல; காங்கிரசையே கொளுத்துவோம் என்று கூடக் கூறுகிருர்கள். ஏழைகளுடைய அன்பும், ஆசியும் காங்கிரசுக்கு இருக்கும் வரை அதை யாராலும் அழிக்கவும் முடியாது; கொளுத்தவும் முடியாது; காங்கிரஸ் ஏழை களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்த வுடன், ஏழைகள் அடைய வேண்டியதை அவர்கள் அடைந்தவுடன் தாளுகவே காங் கிரஸ் கலையும். அதுவரை அது இருந்தேதீரும்.

பிறந்த குழந்தையை அப்படியே விட் விட்டால் அது தாளுகப் பிழைக்குமா ? அதற் குப் பால் கொடுக்க வேண்டும்; சோறு ஊட்ட வேண்டும்; பிறகு படிப்புச் சொல்லிக் கொடுக்க வேண்டும். படித்துக்கொண்ட பிறகு குழந்தை சம்பாதிக்கத் தொடங்கும்- சம்பாதிக்கும். அப்போது குழந்தை தாளுகவே பிழைத்துக்கொள்ள முடியும். அதுவரை குழந்தைக்குப் பாதுகாப்புத் தேவை. அது போலவே, சுயராஜ்யம் வந்தவுடன் காங்கிர சைக் கலைக்கவும் முடியாது? அது பொறுப் புள்ள செயலுமாகாது! ஏழைகள் சுயராஜ் யத்தின் நன்மைகளை அடையும்வரை காங் கிரஸ் இருந்துதான் ஆக வேண்டும். இருந்தே தீரும்.

## கல்யாணப் பைத்தியம்

தெருவில் போகும் ஒரு பெண்ணைப் பார்த்ததும், அவள் அழகையும், நடை உடை, பாவனைகளையும் பார்த்து விட்டு, ஒருவன் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறான். உடனே அவன், "எனக்கும் அந்தப் பெண்ணுக்கும் கல்யாணம், எல்லோரும் வாருங்கள், வந்து ஆசி கூறுங்கள்" என்று பேசினால் எப்படி இருக்கும்?

முதலில் அதற்கு அந்தப் பெண்ணின் சம்மதம் வேண்டும். பிறகு அதில் பெற்றோர்களிடையேயும் உடன்பாடு இருந்து, இருவருக்கும் குடும்ப வாழ்க்கை ஒத்து வரும் என்று தெரிந்தால்தானே கல்யாணம் நிச்சயமாகும். இதெல்லாம் ஒன்றும் செய்யாமல் "எனக்குக் கல்யாணம் தேவை. அதுவும் தெருவில் நான் பார்த்த அந்தப் பெண்தான் தேவை. அந்தப் பெண்ணைத்தான் கல்யாணம் செய்துக் கொள்ளப் போகிறேன். இதில் அவளுக்குச் சம்மதமா, இல்லையா? என்றெல்லாம் என்னைக் கேட்காதீர்கள்; தேதி வையுங்கள்; பிறகு தானே கல்யாணம் நடக்கும்" என்று பேசினால் அது நடக்குமா?

தெருவில் சென்று கொண்டிருந்த பெண்ணுக்கு அந்தக் கல்யாணத்தில் சம்மதமில்லாவிட்டால் கூட, அவன், அவளைத்



தூக்கிக் கொண்டு வந்து விடுவானோ என்று பலரும் நினைப்பார்களே!

"ஏதோ கல்யாணப் பைத்தியம்! பாவம்" என்று கூடச் சிலர் நாலு வார்த்தைகளை அவனுக்கு அனுதாபமாகக் கூறலாம். சில வேலையற்றவர்கள், கும்பலாகக் கூடி அதை வேடிக்கைப்பார்ப்பார்கள். சும்மா இருக்காமல் அவன் வாயைக் கிண்டி விட்டு, 'கல்யாணப் பேச்சு'ப் பேச வைத்து, அதைக் கேட்டுக் கைத்தட்டிக் கூட ரசிப்பார்களே!

இப்படிப்பட்ட பேச்சுக்களையும் கேலிகளையும் பார்த்து விட்டு, "எனக்கு எத்தனை பேர் பக்கபலம்! தெருவில் பார்த்த பெண்ணைக் கட்டிக் கொண்டே தீருவேன். கல்யாணத்திற்குத் தேதி வையுங்கள்." என்று அந்தக் கல்யாணப் பைத்தியம் நச்சரித்தால், உற்றாரும் சரி, ஊராரும் சரி என்ன செய்வார்கள்? பையனுக்கு ஏற்பட்டுள்ள "கோளாறு"க்குத் தகுந்த வைத்தியம் செய்ய முனைவார்கள்; இல்லையா!

"ஆந்திரம், மைசூர், கேரளம் ஆகிய மூன்று ராஜ்யங்கள் திராவிட நாட்டில் சேருகிறதா, இல்லையா; என்பதைப் பற்றிப் பேசுவானேன்? திராவிட நாடு பிரிவினைக்குத் தேதி குறித்து விடு; பிறகு அந்த ராஜ்யங்கள் தானாகக்கூட்டு சேரும்" என்று தி. மு. கழகத்தார் ஒரு சமயம் சொன்னதைக் கேட்டு அதன்படி

நடப்பதா! முடியுமா! தெருவில் பார்த்த பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளத் தேதி வை என்று பேசும் நபருக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

•

## கிணறு தோண்டியதும்...!

ஐந்தாண்டுத் திட்டங்களுக்குக் கோடி கோடியாகச் செலவுசெய்கிறார்கள் என்று சிலர் தவறாகப் பேசி வருகிறார்கள். நாம் சமுத்திரத்தில் பணத்தைப் போடவில்லை. மக்கள் நன்மைக்காகப் பலபல திட்டங்கள் செய்தோம். அவற்றை நிறைவேற்றுவதற்காகத்தான் கோடி கோடியாகப் பணத்தைச் செலவழித்து வருகிறோம். இத்திட்டங்களால் நாம் இப்பொழுது நன்மை அடைந்து வருகிறோம். திட்டங்களுக்காக இவ்வளவு பணம் செலவு செய்தும் நாட்டில் இன்னும் பட்டினி இருக்கிறதே என்று சொல்பவர்களும் சிலர் உண்டு. இது எப்படி இருக்கிறது என்றால், கிணறு தோண்ட ஆரம்பித்ததுமே தண்ணீர் வரவில்லை என்பது போல் இருக்கிறது. கிணறு தோண்டத் தொடங்கினதுமே தண்ணீர்வந்து விடாது. நிலத்தில் நன்றாக, ஆழமாகத் தோண்டியதற்குப் பிறகுதானே தண்ணீர் கிடைக்கிறது—கிடைக்கும்! ஏன் நெல் விதைப்பவர்கள் கூட நிலத்தை உழுது, விதைத்து, பல மாதங்கள் பயிர்களைப்



வளர்த்த பின்தானே நெல்லை அறுக்க முடிகிறது! இவற்றைப் போன்றதே நமது ஐந்தாண்டுத் திட்டங்கள்--அவற்றால் ஏற்படும் பலன்கள். இந்த அடிப்படை உண்மை கூடப் புரியாமல் திட்டச் செலவை வீண் செலவு என்று சொல்வது நல்லதா?

## விதையின் பயன்...

நெல் வயல் பார்க்காத ஒருவன் வயல் பக்கம் போகிறான். உழவர்கள் நிலத்தை உழுது சகதியாக மாற்றி, அதில் அழகான-மணியான நெல்லை விதைக்கிறார்கள். வயலே பார்க்காதவன் அங்கு வந்து, அதைப் பார்த்து விட்டு, 'ஐயா! இவ்வளவு நெல்லைச் சகதியில் போடுகிறீர்களே! இது வீணாகப் போகிறதே!' என்று வேதனைப் பட்டானாம்! இதைப்போன்றதுதான், ஐந்தாண்டுத் திட்டத்துக்குச் செலவு செய்வதை வீண் என்று சொல்வதும். திட்டச் செலவுகளை வீண் என்று சொல்பவர்கள் பைத்தியக்காரர்களாகத்தான் இருக்க வேண்டும். பட்டினி, பசி நாட்டில் இருக்கக் கூடாது; அனைவருக்கும் படிப்பு வசதி வேண்டும். பெரியவர்கள் வயதான காலத்தில், 'ஆண்டவனே! என் பிள்ளை பசியாமல் சாப்பிட வேண்டும். கஷ்டப்படாமல் காப்பாற்று' என்று கடவுளிடம் வரம் கேட்பது உண்டு. அவர்கள் படும் அந்தக் கவலையை அடியோடு

போக்கவே ஐந்தாண்டுத் திட்டம். நம் கஷ்டம் நம்முடன் சரி. நம் குழந்தைகளுக்குத் தொழிலும், படிப்பும் கிடைக்க வேண்டும்; எல்லோருக்கும் வீடு, சோறு, துணி வேண்டும். இதுவே நம் லட்சியம். இந்த லட்சியங்களை அடையவே நமது ஐந்தாண்டுத் திட்டங்கள்.

## நல்ல தண்ணீர்க் கிணறு

**ஊ**ரில் உள்ள ஒரே ஒரு நல்ல குடிதண்ணீர் கிணற்றிலும் மண்ணை அள்ளிப் போடுகிறேன் என்று சிலர் கூடிக்கொண்டு வந்தால் ஊர்மக்கள் அதைப் பார்த்துக் கொண்டிருப்பார்களா?

இது நெடுநாளாக உள்ள கிணறு. ஆகவே, அதில் மண்ணைப் போட்டுத் தூர்த்துத்தான் ஆக வேண்டும் என்றால் நடக்குமா? அதைக் கேட்டுக் கொண்டு ஊரார் சும்மாயிருப்பார்களா?

கிணற்றைத் தூர்க்கலாம் என்று 'சொல்வோர்' பேச்சை ஒரு வேளை கேட்பதாக இருந்தாலும், ஊரில் உள்ள அந்த ஒரே ஒரு கிணற்றையும் தூர்ப்பதற்கு முன்பு, அதற்குப் பதிலாக வேறு கிணறு தோண்டி, அதில் நல்ல தண்ணீர் கிடைக்கிறதா என்றுவது பார்க்க வேண்டும் அல்லவா? அப்படித்தானே ஊரார் செய்வது வழக்கம்!



இன்று நாட்டுக்கு நல்லது செய்ய ஒரே ஒரு கட்சிதான் உள்ளது. அதுதான் காங்கிரஸ். அதனால்தான், அது நிலையான அரசாங்கத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறது-வர முடிகிறது. மேலும், அரசாங்கத்தைத் தொடர்ந்து நடத்தும் சக்தியும் அதற்குத்தான் இருக்கிறது. எனவே, காங்கிரசை விட்டால், நாட்டில் வேறு நல்ல அரசாங்கம் அமைய வழியில்லை. என்றாலும், காங்கிரசை முதலில் ஒழித்துவிடு; பிறகு நடப்பது நடக்கட்டும்; கடவுள் விட்ட வழியாகிறது என்பது சரியா? உள்ள நல்ல கிணற்றையும் தூர்க்க ஒருபோதும் ஊர் மக்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்பதில் சந்தேகம் இல்லை அல்லவா? அது போலவே, காங்கிரஸ் அரசாங்கத்தையும் மக்கள் ஒருபோதும் அழித்துவிட மாட்டார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

## நிழல் தரும் மரம்

**ம**க்களிடையே தப்பான எண்ணங்களைச் சுலபமாகச் சிலர் ஏற்படுத்துகிறார்கள். அதன் மூலம் காங்கிரசைப் பலவீனப்படுத்தப் பார்க்கிறார்கள். காங்கிரஸ் பலவீனமானால் நாட்டின் கதி என்ன ஆகும்? என்பதை அவர்கள் நல்ல உள்ளம் படைத்தவர்களாக இருந்தால்,

சிந்தித்திருப்பார்கள். ஆனால், யார் எக்கேடா வது கெட்டுப் போகட்டும்; அதைப் பற்றிக் கவலையில்லை. தங்கள் பேச்சைக் கேட்காவிட்டால், கேட்காதவரை உடைத்தேயாக வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள். அது நல்லதா? அது நடக்குமா? நடக்கவே நடக்காது. மக்களது நம்பிக்கையைக் காங்கிரஸ் பெற்றுள்ளது. ஆகவே, அதனை உடைப்பது ஒருநாளும் முடியாத காரியமாகும்.

காங்கிரஸ் என்னும் மரம் மக்களுக்கு நல்ல நிழலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இப்பொழுது சிலர் இதை வெட்டிவிட வேண்டும் என்கிறார்கள். இதற்குத் தகுந்தாற்போல் இன்னொரு மரம் இருந்தாலும் பரவாயில்லை! இதைத் தவிர வேறு மரமே கிடையாது. இந்நிலையில், இருக்கின்ற மரத்தையும் வெட்டிவிட்டு வெயிலுக்கா போவது? சிலர், மக்களை நிழலிலிருந்து வெய்யிலுக்கு அழைத்துச் செல்லப் பார்க்கிறார்களே! அவர்கள் பின்னால் போவதா!

இதை ஜனங்கள் நன்றாக உணர்ந்திருப்பதனால்தான், நிழலைவிட்டுவிட்டு வெய்யிலுக்கு வாருங்கள் என்று கூப்பிடுபவர்களுக்கு ஆதரவு இல்லை. பாவம்! கூப்பிடுபவர்கள் தான் வெய்யிலில் நிற்கிறார்கள்!

எல்லோரும் வாழ வழி செய்வதுதான் காங்கிரசின் இலட்சியம். யாரையும் தொந்தரவு



செய்ய வேண்டுமென்ற ஆசை எங்களுக்குக் கிடையாது.

## சாதக பாதகம்!

தனியார் எந்தத் தொழிலை நடத்த முடியுமோ அத்தொழில்கள் அவர்கள் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் அவர்கள் வருமானம் குறைந்து விடவில்லை. நிறையச் சம்பாதிக்கிறார்கள். சம்பாதிக்கவில்லை என்று கூறமுடியுமா?

காங்கிரசின் சமதர்மக் கொள்கை பிடிக்காமல் பணக்காரர்களும் பெரிய முதலாளிகளும் காங்கிரஸ் மீது கோபப்படுகின்றனர். ஆனால் ஏழைகளுக்குக் காங்கிரஸ் மீது கோபம் வரலாமா?

நீர்த்தேக்கம் கட்டும்போது 10 ஆயிரம் ஏக்கர் மூழ்கிப் போகிறது. ஆனால் 5 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. இது போன்று 5 லட்சம் மக்களுக்கான ஒரு இலட்சியத்தை நிறைவேற்றும்போது 10 ஆயிரம் பேருக்குப் பாதகம் ஏற்படலாம். அதற்காக அவர்கள் கோபித்துக் கொள்ளத்தான் செய்வார்கள், அத்தகையவர்கள். அதைப் பற்றி நாம் கவலைப்பட முடியுமா? திட்டத்தை விட்டுவிட முடியுமா? பாதிக்கப் படுவோருக்கு வேறு

பரிகாரம் செய்து கொடுத்தாவது திட்டத்தை முடிக்கத்தானே வேண்டும் !

## சில்லரைத்தனம்

**பு**திய சமுதாயம் அமைக்க விரும்புகிறோம். எல்லோரும் சமமாகி விடுவோமோ என்று சிலர் அஞ்சுகின்றனர். நாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகள் உள்ளன. அவைகள் மக்களைத் தவறான வழியில் திருப்பப் பார்க்கின்றன. எல்லா கட்சிகளும் ஒன்று சேர்ந்து தங்கள் அனைவர் அறிவையும் பயன் படுத்தி, அரசாங்கத்தையும் காங்கிரசையும் பல கோணங்களிலும் எதிர்க்கின்றனர். ஆயினும் மக்கள் ஏமாற மாட்டார்கள். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை எதிர்த்தோரே மூன்றாவது திட்டத்தையும் எதிர்க்கின்றனர், என்பதையும் மக்கள் அறிவார்கள். நாம் எதிர்த்தும் இரண்டாவது திட்டம் நிறைவேறிவிட்டதுபோல் மூன்றாவது திட்டமும் நடந்துவிடுமே என்ற அச்சம் சிலருக்கு. கலியாணம் நடைபெறும் வீட்டில் சில்லரைத்தனமாக, வீண் குழப்பம் செய்வதையே இந்த எதிர்ப்பு ஒத்து இருக்கிறது.



## காத்திருக்கத் தேவையில்லை

**ப**ழம்பெருமை பேசிப் பயனென்ன? விடுதலை பெற்றும் சோறு இல்லையெனில் பயனில்லை. கோடிக்கணக்கான நம் மக்களின் பசிப்பிணி நீங்கவேண்டும். அதற்குத்தான் இனி நாம் தியாகங்கள் புரியவேண்டும். மக்கள் தம் வாழ்க்கைத் தரம் உயருவதில் வெற்றி காணுவதே நமக்குப் பெருமை தரும். ஒரே நாளில் நாம் விரும்பும் அனைத்தையும் பெற்று விடுதல் முடியுமா? 17 ஆண்டுகளில் எந்த நாடுதான் முன்னேற்றம் கண்டுள்ளது? பல நூறு ஆண்டுகள் தொல்லையுற்ற பிறகே உலகின் இன்றைய பெரும் நாடுகள் அனைத்தும் முன்னேறியுள்ளன. நாம் அவ்வளவு காலம் காத்திருக்கத் தேவையில்லை. முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளின் அனுபவங்களைக் கொண்டு வழிவகுத்துக் கொண்டால் நாம் விரைவில் முன்னேறிவிட முடியும்.

## லாப நோக்கம்

**நாம்**, தேசிய உணர்ச்சி மிக்க நல்ல பாதையில் செல்லாவிட்டால், அதனால், வருங்காலத்தில் பல அவதிகளுக்குள்ளாக நேரிடும். ஆனால், இப்போது நாம் சரியான பாதையில் தான் சென்று கொண்டிருக்கிறோம்.

மிகப் பழமையான நாடு நம் நாடு. மற்ற நாட்டினர் விவசாயம் தொழில், நாகரிகம் முதலியன தெரியாமல் வாழ்ந்தபோது, நாம் அவற்றை யெல்லாம் நன்கு அறிந்து சிறப்புடன் வாழ்ந்தோம். அப்படி வாழ்ந்த நமது வாழ்வு, இடையிலே அந்நியருக்கு அடிமைப் பட்டதால் தாழ்ந்தது—தாழ்ந்தோம். அவர்கள் இலாபம் கிடைக்கும் வரைக்கும் இருந்தார்கள்; சுரண்டினார்கள்; போய்விட்டார்கள். டீக் கடைக்காரன் லாபம் கிடைப்பது வரை தான் ஒரு ஊரில் கடை போட்டிருப்பான். இலாபம் இல்லை யென்றால் அங்கிருந்து போய் விடுவான். அதுபோல, வெள்ளையர்கள் நம்மைச் சுரண்டிவிட்டுப் போனார்கள். அதனால் நமது நிலை மேலும் தாழ்ந்தது; கல்வி, இல்லாமை, பட்டினி, பெருகிற்று.

## வளம் பெருக...

நல்ல ஆகாரம் சாப்பிட வேண்டும். உடல் வலிமை, மன வலிமை அப்போதுதான் ஏற்படும். முன்பு உழவர்கள் ஏர் பிடிக்கும் முன்பு கம்பங்கஞ்சி சாப்பிட்டார்கள். இப்பொழுது இட்லி, காபி சாப்பிடுவதால் ஏரைப் பிடித்தவுடன் மயக்கம் வருகிறது. நீர்வளமும், நிலவளமும், குடிவளமும் இருந்தால்தான் நாடு முன்னேறும்.



மனிதன் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டே யிருக்கிறான். அவனது சக்தியும் ஆற்றலும் பெருகுகிறது. பூமியைச் சுற்றுகிறான். சந்திரனுக்குப் பறக்கிறான். ஆனால் நிலத்தை அதிகப்படுத்தவும், மழையை உண்டு பண்ணவும் முடியவில்லை. இந்த இரண்டையும் நாமாகச் செய்ய முடிந்துவிட்டால் கவலையில்லையே !

## பூச்சாண்டி மிரட்டல்

சுதந்திரக் கட்சிக்காரர்கள் 'ஊழல், ஊழல்' என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள், குழந்தைகளுக்குத் தாய் பூச்சாண்டி காட்டி மிரட்டுவதில்லையா, அதைப் போல! குழந்தைகள் அழுதால், 'பூச்சாண்டி வருவான், உன்னைத் தூக்கிக்கொண்டு போய்விடுவான்' என்றெல்லாம் தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பயம்காட்டுவது உண்டு. திடீரென்று குழந்தை, "எங்கே அம்மா பூச்சாண்டி? காட்டு பார்க்கலாம்" என்று கேட்டுவிட்டால் விழிப்பார்கள். பூச்சாண்டியை எங்கிருந்து காட்டுவார்கள்? காட்ட முடியாதல்லவா. அதைப் போலத்தான் 'ஊழல் எங்கே?' என்று கேட்டால், 'ஊழல், ஊழல்' என்று கத்தும் பேர்வழிகள் அதைக் காட்ட முடியாமல் திகைக்கிறார்கள்! •

## சாக்கடையில் ஊறிக் குளித்து...

சாக்கடையில் போய் உட்கார்ந்து கொண்டு, நாற்றம் அடிக்கிறது, காங்கிரஸ் காரர்கள் என்ன ஆட்சி செய்கிருர்கள், என் ருல் என்ன அர்த்தம்? பெரிய சென்னே நக ரத்தின் நல்ல பகுதிகளே யெல்லாம் விட்டு விட்டு, எங்கேயோ சாக்கடைக் குழியில் போய் உட்கார்ந்து கொண்டு, "நகர் முழு வதும் நாற்றம்! நாற்றம்" என்ருல் நாம் என்ன செய்வது? அதேபோல ஊழலிலேயே ஊறிக் குளித்து முழுகிக் கொண்டிருப்பவர் கள் மற்றவர்களேப் பார்த்து, 'ஊழல், ஊழல்' என்ருல் என்ன செய்வது?

## யாருக்குச் சொந்தம்?

தொழில்கள் வளர்ந்து, அதன் மூலம் நல்ல இலாபம் ஏற்படும்போது, நான்தான் இலாபம் பூராவையும் அனுபவிப்பேன், என்று சொல்ல லாமா? காவேரித் தண்ணீர் ஊருக்கெல்லாம் சொந்தம்; அதை மேட்டூரில் தேக்கி கொஞ்சம் கொஞ்சமாக விவசாயத்திற்காக விடுகின் ருேம். உடனே மேட்டூர்க்காரர்கள் கூடிக் கொண்டு, "தண்ணீர் எங்களுக்குத்தான் சொந்தம், மேட்டூரில் தானே அணையைக் கட்டி இருக்கிறீர்கள்! எனவே, வேறு யாருக்கும் தண்ணீர் தரக்கூடாது; தரவே மாட்டோம்"



என்று சொல்லுவதா? அப்படிச் சொன்னுல் அதை நியாயம் என்று நாம் ஒப்புக்கொள் வோமா? அது என்ன மேட்டூர் தண்ணீரா. காவேரித் தண்ணீரா? எப்படி அவர்கள் இதைச் சொந்தம் கொண்டாடலாம்? என்று கேட்க மாட்டோமா? இதைக் கூடப் புரிந்து கொள்ளாமல்தானே வாய்க்கு வந்தபடி பேசு கிருர்கள்!

நிறையச் சம்பாதிப்பவர்களே அப்படியே விட்டுவிட வேண்டுமென்றும், அவர்கள் சம் பாதிப்பது பூராவும் அவர்களுக்கே சொந்த மென்றும், வரிகள் போட்டு அவர்களிட மிருந்து பணம் வசூல் செய்யக்கூடாது, என் றும் சொல்லுகிருர்களே! அதற்காக ஒரு கட் சியே பிறந்தாயிற்று. அந்தக் கட்சி நம் ஊரில் மட்டுமல்ல, உலகம் பூராவிலும், ஆதிக்க புத்தி அளவு கடந்து யாரிடத்தில் உள்ளதோ அவர்களிடம் எல்லாம் உண்டு. அதைப்பற்றிக் கவலேப் பட்டால் நாட்டின் முன்னேற்றம் என்ன ஆவது? கால்வாய் வெட்டி, அணையிலிருந்து பல பகுதிகளுக்கும் பாசனவசதி செய்து கொடுப்பது போல, அதி கப் பணத்திற்கு வரி போட்டு வசூலித்து ஊர் நன்மைக்குச் செலவு செய்யத்தானே வேண் டும்! கூடாதா?

## வரையறை வேண்டாமா?

ஆற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடினால், அது பெரிய சேதத்தில் கொண்டு போய் விடும். ஆகவே, வெள்ளத்தைத் தடுக்க, ஆற்றுக்கு அணை போடுகிறோம். அது போலவே, அதிகப் பணம் இருந்தாலும் அது ஆபத்தில் வந்து முடியலாம். அந்தப் பணம் அவசியமற்ற வழிகளிலும் செலவழிந்து போய் விடலாம். அதனால் அவர்களுக்கும் பயனில்லாமல் பிறருக்கும் பயனில்லாமல் போய்விடாதா! ஆற்றில் அணை போட்டு, வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி, வேண்டும் போது கொஞ்சம் கொஞ்சமாக நிலத்திற்குப் பாய்ச்சிப் பயிர் செய்வதுபோல, செல்வத்திற்கும் வரையறை தேவைதானே?

## யானைக் கவளம்

ஒரு யானை அதற்கு ஏற்றபடி சாப்பிடுகிறது. அது சாப்பிடும்போது ஒரு கவளம் கீழே சிந்திவிடுகிறது. அந்த ஒரு கவளம் லட்சக்கணக்கான எறும்புகளுக்கு ஆகாரமாகக் கிடைக்கிறதே! யானைக்கு ஒரு கவளம், அதன் சாப்பாட்டில் குறைந்தால், அது கவலைப்பட வேண்டியதில்லை. அதேபோலப், பணக்காரன் கொஞ்சம் வரிப்பணம் கொடுத்தால், அதனால் ஒன்றும் குறைந்து போய் விடாதே! அரசாங்கம் பணக்காரர்களுக்குப் போடுகின்ற குறைந்த அளவு வரியைக் கண்டே, சோற்றுக்குக்கூட இல்லாமல் பிடுங்குகிறோம் என்று அவர்கள் அனாவசியமாகப் பீதியைக் கிளப்ப வேண்டாம். பலபேரின் பட்டினி தீர, அவர்தம் நல்வாழ்வுக்கு வழி செய்ய, அந்த வரிப்பணம் பயன்படுமே!



## கொலு மாதிரி...

பணம் அதிகமாகச் சேருவதினால் அளவுக்கு மீறிப் பொருள்களை வாங்கிக் குவிக்கிறார்கள். மகனுக்கு ஒரு கார், மகளுக்கு ஒரு கார், மனைவிக்கு ஒரு கார் என்று வாங்கி அடுக்குகிறார்களே! • வேலைக்கு ஒரு காரில் போகிறார்களே! ஐந்து கார் வைத்திருப்பவர்கள், சாப்பாட்டுக்குக்கூட வழியில்லாத பல பேருடைய நல்வாழ்வுக்காக ஒரு காரைக் குறைத்துக்கொள்ளக் கூடாதா?

வீட்டில் 300 அல்லது 400 விலை உயர்ந்த சட்டைகளை வாங்கி அடுக்கி வைத்திருக்கிறார்கள். வெள்ளிப் பாத்திரங்கள், தங்க நகைகளைத் தேவைக்குமேல் பெட்டியில் வைத்துப் பூட்டிக் கொள்கிறார்கள். அவற்றைப் பொம்மைக் கொலு மாதிரி அடுக்கி வைத்துத், தங்கள் வீட்டுக்கு வருகிறவர்களுக்கு அதைக் காட்டுகிறார்கள். அப்படி அடுக்கிவைத்து

அழகு பார்த்துப் பிறருக்குக் காட்டிப் பெருமை கொள்ளும் அந்தப் பொருள்களில் சிலவற்றை, தேவைக்கு மீறியவற்றைக் குறைத்துக் கொள்ளக் கூடாதா? தேவை யான அளவு வாங்கி வைத்துக் கொள்ளக் கூடாதா?

## சுதந்திரம் எதற்கு?

"என் இஷ்டப்படி நடப்பேன்; நிறைய சம்பாதிப்பேன்; ஆசைக்காக, அலங்காரத்துக் காக, மதிப்புக்காகப் பிரியமான பொருள்களை வாங்கி வைத்துக்கொள்வேன்; அதைப் பார்த் துக் கொண்டே இருப்பேன். அது என் சுதந் திரம்; அதைப்பற்றி யாரும் எதுவும் கேட் கக் கூடாது—கட்டுப் படுத்தக் கூடாது" என்றெல்லாம் பேசுவதுதான் சுதந்திரமா?

சுதந்திரம் என்றால் வாழ்க்கையில் உயர்ந்து, வசதியாக உள்ளவர்களே, மேலும் மேலும் வசதி பெறுவது என்று மட்டுமா எண் ணுவது? அவர்களுக்கு எதைப்பற்றியும் கவலை இல்லை, வாழ்க்கைப் பிரச்சினையே கிடையாது. எல்லா வசதியும் அவர்களுக்கு இருக்கிறது. அதற்காக "அவர்களைச் சுற் றியே" அரசாங்கம் பாதுகாப்புத் திட்டம் போட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்பதா? அது எப்படி நியாயமாகும்?



## புளிய மரம் நட்டால்...!

ஊரில் புளிய மரம் இருக்கிறது. இப் பொழுது நிறைய புளியமரத்தை நடமாட்டேன் என்கிறார்கள். ஏன்? ஒரு புளிய மரம் நட்டால் அது காய்க்க 20 வருஷமாகிறது. அப்படிக் காய்க்கத் தொடங்கினாலும் அதிலிருந்து வரு ஷத்திற்கு 50 ரூபாய்தான் வருமானம் வருகி றது. இதற்காக 20 வருஷங்கள் வரை பொறுத்துக் கொண்டு இருக்க முடியுமா என்ன, என்று நினைப்பதா? நமக்குச் சோறு இல்லை; படிப்பு இல்லை; வேலை இல்லை; ஆனால் நாம் கஷ்டமில்லாமல் வாழ்க்கை நடத்த வேண் டும் என்று நினைக்கிறோம். அது எப்படி முடி யும்? இருபது வருஷத்திற்குப் பிறகு பலன் கொடுக்கும் புளிய மரத்தைப் பயிர் செய்வது போல், நம்முடைய குழந்தைகளைப் பள்ளிக் கூடத்தில் சேர்த்துப் படிக்க வைக்கவேண்டும். அவர்கள் படித்து முடித்து வேலைக்குப் போ கின்ற வரை நாம் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். அப்படி நம் குழந்தைகளைப் படிக்க வைக்காவிட்டால் வசதியாக வாழ முடியுமா? நம்முடைய பிள்ளைகளைப் படிக்க வைத்தால் போதுமே! ஒரு வீட்டில் ஐந்து பிள்ளைகள் இருக்கிறார்கள்; ஒருவன் விவசாயம் பண்ண லாம்; ஏர் பிடித்து உழவு அடிக்கலாம். ஒருவன் படித்துகுமஸ்தாவேலைக்குப்போகலாம்ஒருவன் வாத்தியாராகப் போகலாம்; ஒருவன் தொழில் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து பிட்டர் ஆகலாம்.

அல்லது மோட்டார் டிரைவர் ஆகலாம். இவைகளையெல்லாம் செய்வதற்கு சர்க்காரில்தான் திட்டம் இருக்கிறது.

## நல்வாழ்வுத் திட்டம்

சர்க்காரின் திட்டம் இதுதான்; எல்லோருக்கும் வேலை கொடுத்து வாழ வைக்க வேண்டும் என்பதுதான். இது புரியாமல் சிலர் யாரைக் கேட்டு திட்டம் ஆரம்பித்தீர்கள் என்கிறார்கள். ஒவ்வொரு ஏழைக்கும் எவ்வளவு செலவாகிறது என்பதைப் பாருங்கள். 4, 5 குழந்தைகள் இருந்தால், பள்ளிக்கூடம் அனுப்ப நிறைய செலவாகிறது. ஐந்தாவது வரை 3 ரூபாய்; எட்டாவது வரை 5 ரூபாய்; பத்தாவது வரை 10 ரூபாய் சம்பளம் கட்ட வேண்டும். அவன் 100 ரூபாய் சம்பாதித்து எப்படி 5 பேரை வைத்துக் காப்பாற்ற முடியும்? எனவே சர்க்காரே பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குச் சாப்பாடு போடுகிறார்கள்; சம்பளமில்லாமல் படிப்பு சொல்லிக் கொடுக்கிறார்கள்; துணி வாங்கிக் கொடுக்கிறார்கள்; புஸ்தகம் வாங்கிக் கொடுக்கிறார்கள். இப்படிச் செய்தால் அவனுக்கு 60 ரூபாய் மிச்சந்தானே! எல்லோரும் சம்பாதித்தால் நம் கஷ்டம் நம் காலத்திலேயே முடிந்து விடும். ஒருவன் விவசாயத்திலே போய் 100 ரூபாய் சம்பாதிப்பான். வாத்தியார் வேலையில் ஒருத்தன் போய் ரூ.120



சம்பாதிப்பான். ஒருவன் தொழில் பள்ளிக்கூடத்தில் போய் ரூ. 200 சம்பாதிப்பான். இப்படி 5 பேரும் சம்பாதித்தால் எல்லோரும் சௌகர்யமாக இருப்பார்கள். இது மாதிரி சௌகர்யமாக வாழ்வதற்குத்தான் திட்டம் இப்போது போட்டிருக்கிறோம். அதைச் செயல் படுத்திக் கொண்டும் வருகின்றோம்.

## பாகப் பிரிவினையா ?

திராவிட முன்னேற்றக் கழகம் 'நாட்டிலே இருக்கிற வடநாட்டுக்காரர்களுக்கு எல்லாம் வரி போட்டு விரட்டி விடு; நாட்டை இரண்டாக வெட்டி விடு; பாகப்பிரிவினை செய்து விடு' என்று கூறியது. இப்போது அந்தப் பிரச்சினையே இல்லையே. பிரச்சினை எங்கே இருக்கிறது? நம்முடைய பிரச்சினை சோற்றுப் பிரச்சினைதானே! இதைத் தீர்ப்பதற்கு முன்னால் வடநாடு சண்டையும் வேண்டாம்; தென்னாடு சண்டையும் வேண்டாம்; ஏழைச் சண்டை, பணக்காரன் சண்டையும் வேண்டாம்! சோற்றுக்கே தாளம் போடும்போது, பாகப்பிரிவினைக்கு என்ன வந்து விட்டது? ஏதோ பணக்காரன் ஒருவன் சொத்தைப் பாகப்பிரிவினை செய்கிறான் என்றால், அவனுக்கு 4 லட்சம் பணம் இருக்கிறது; 4 வீடுகள் இருக்கின்றன; 400 ஏக்கர் நிலம் இருக்கிறது. அத்தோடு நாலு பிள்ளைகளும் இருக்கின்றனர். ஆகவே

அவன் சொத்தைப் பிரிக்கிறுன். அப்படி பிரிக்கும்போது, அதில் பிள்ளைகளுக்கு ஆளுக்குப் பணத்தில் ஒரு லட்சம், ஒரு வீடு, 100 ஏக்கர் நிலம் என்று கிடைக்கும். ஆனுல் ஏழை வீடுகளில் என்ன இருக்கிறது? உடைந்த சட்டி தான் இருக்கும். மீறிப் போனுல், கிழிந்து போன துணி, பிய்ந்து போன செருப்பு, உடைந்து போன சீப்புதான் இருக்கும். வேண்டுமானுல் உடைந்து போன அந்தச் சட்டிகளை ஆளுக்கொன்ருக எடுத்துக் கொள்ளலாம்! ஆளுக்கு ஒரு சட்டி, ஒரு செருப்பு, ஏன்? ஒத்தைக் காலில் செருப்பு போட்டுக் கொள்ளலாம் அல்லவா? வேறு என்ன இருக்கிறது நமக்கு; பாகப்பிரிவினை செய்ய, பங்கு போட? 400 ஏக்கர் நிலம் சம்பாதித்து, 4 லட்ச ரூபாயும், 4 வீடும் சம்பாதித்து, அப்புறம் வாருங்கள் பங்கு போட்டுக் கொள்ளுவோம்! ஒன்றுமே இல்லாமல் பங்கு போடு. பாகப்பிரிவினை செய் என்ருல், எதைப் பங்கு போடுவது, எப்படிப் பிரிவினை செய்வது? நாமும், நமது கிராமங்களும் இன்னும் போதிய அளவு முன்னேறவில்லை; வட நாட்டுக் கிராமங்களிலும் நிலைமை நம்மைப் போலத்தான் இருக்கிறது. அவர்களும் ஏழைகள்தான். நாமும் அவர்களைப் போலத்தானிருக்கிருேம். நாமும் முன்னேற்றம் அடையவேண்டும்; அவர்களும் முன்னேற்றம் அடைவதற்கான வழிகளிலே, முயலவேண்டும். அதை விட்டு விட்டு, வரியைப் போடு; வட நாட்டவர்களை விரட்டு; பாகப்பிரிவினை செய் என்பதெல்லாம் நடைமுறைக்கு ஒத்து வராத விஷயங்கள். தேவையில்லாத, குழப்பம் நிறைந்த பேச்சுக்கள். ஆனுல் எப்படியோ அந்தப் பேச்சே இப்போது காணேம். மூட்டை கட்டி வைத்து விட்டார்கள். தற்போது, நம்முன் உள்ள ஒரே பிரச்சினை சோற்றுப் பிரச்சினை; ஏழைகளுக்கு வாழ வழிபண்ண வேண்டியபிரச்சினை தான்.



## பொர்மையை உடைப்பது போல...

நம்மிடையே ஏற்றத் தாழ்வில்லாத சம வாழ்க்கையும், சம சந்தர்ப்பமும் ஏற்பட வேண்டும். இதை மன மாற்றத்திஞல் செய்ய வேண்டும் என்று நினைத்துச்செயல் படுகிறது காங்கிரஸ். பலாத்காரத்திஞல்தான் இதை ஏற்படுத்த வேண்டும் என்கிருர்கள் கம்யூனிஸ்ட்டுகள். இதற்கு நடுவில் இந்தி, வட நாட்டு ஆதிக்கம் என்ற கோஷத்தைக் கிளப்பி நாட்டைக் குழப்புகிருர்கள் தி. மு. க. வினர். இதில் எது சிறந்தது என்று நாம் முடிவு செய்யவேண்டும்.

நாட்டிற்குக் காங்கிரஸ் கட்சி சுதந்திரத்தை வாங்கித் தந்தது. பட்டினி, வறுமை இவைகளை ஒழிக்கத் திட்டமிட்டிருக்கிறது.

இதற்காகத் திட்டமிட்டபடி வேலை செய்யும் பெரும் பொறுப்பையும் அது ஏற்றுள்ளது. அந்தப் பொறுப்பை எப்படி நடுவில் விட்டுவிடுவது? சிறு குழந்தைக்குப் பொம்மையைக் கொடுத்தால் அது சிறிது நேரத்தில் அதைப் போட்டு உடைத்து விடும். இது போன்றுதான் இன்று எதிர்க் கட்சிகள் இருக்கின்றன. பொறுப்பும், திட்டவட்டமான லட்சியங்களும் இல்லாத இவர்களிடம் ஆட்சியைக் கொடுத்தால், பொம்மையைச் சிறு குழந்தை உடைப்பது போலத்தான் உடைத்து விடுவார்கள்.

## பயிரும் களையும்

இங்கு எதிர்க்கட்சிகள் என்று சொல்லப்படுகின்றவற்றின் நோக்கம் சர்க்கார் அமைப்பதல்ல. சர்க்காரை எதிர்த்துக் கொண்டே இருப்பதுதான். இப்படிப்பட்ட ஒரு மனப்பான்மையை உலகில் வேறு எங்குமே காண முடியாது, நம் நாடு ஒன்றைத் தவிர. நெற் பயிருடன் களை வளருவது போல், இந்தக் கட்சிகளும் நம்மிடையே வளர்ந்து விட்டன. இவற்றை பிடுங்கித் தூர எறிய வேண்டாமா? அது நமது கடமையல்லவா!

நடை முறையில் என்னென்ன தேவைஎன்பதை அறிந்து, அவற்றைச் செயல் படுத்தி, நம்மை நாட்டின் முன்னேற்றப் பாதையில்



போக விடாமல் எதிர்க்கட்சிகள் புலம்புகின்றன. 'காங்கிரஸ் போட்ட திட்டங்கள் சரியில்லை' என்று அவர்கள் பரிகசிக்கிறார்களே தவிர, மாற்றுத் திட்டங்கள் தரவில்லை-தருவதுமில்லை. ஆகவே அவர்களின் துர்ப்பிரச்சாரத்திற்குப் பொது மக்கள் செவி சாய்க்கக் கூடாது. பயிரைக் கெடுக்கும் களைகளைப் பிடுங்கி எறிந்தால்தானே பயிர் வளரும்? தேவையற்ற வீண் கோபங்களையும், குழப்பங்களையும் மக்கள் ஒதுக்கித் தள்ளினால்தான் நல்ல காரியங்களில் நாட்டம் பிறக்கும்! நாடு முன்னேறும்!

## கையைக் கட்டி...

சில பேர்கள் வெள்ளைக்காரர் ஆட்சியிலே நடந்தது போல் செய்து விடுங்கள் என்கிறார்கள். அவர்கள் காலத்தில் குமஸ்தா வேலை செய்வதற்கு வேண்டிய படிப்பு, பாதுகாப்புக்குப் போலீஸ், முக்கியமான போக்குவரத்துக்கு ரோடு வசதிகள் ஆகியவை மட்டுமே அமைக்கப்பட்டன. அதே போல இப்போதும் விட்டு விட வேண்டுமா என்ன?

அப்படி விட்டுவிட்டால் ஏழைப் பையன் எப்படிப் படிப்பான்? கையைக்கட்டி, வாயைக் கட்டிப் படிக்கச் சொன்னால் படிக்க முடியுமா? அவன் படிப்பை நிறுத்தி விட்டு ஆடு மேய்க்கும்

போவான். அத்தோடு அவன் படிப்பும் நின்று விடுகிறது.

அவனை அந்தக் கதியில் விட்டு விட நாங்கள் தயாராக இல்லை. இலவசமாகப் படிக்க நிறையப் பள்ளிக்கூடங்கள் வைக்கிறோம்! 'அதெல்லாம் கூடாது, மாடு மேய்க்கிறவன் மாடு மேய்த்துக் கொண்டே இருக்கட்டும் நாங்கள் மட்டும் படித்து முன்னேறிக் கொண்டே இருக்கிறோம்,'' என்று கருதினால் அதைத் தைரியமாகச் சொல்லுங்கள்; மூடி மழுப்புவானேன்? அது நடக்குமா என்ன?

தண்ணீர் கீழ் நோக்கி ஓடுகிறது; திடீரென்று நின்றால் தேக்கம் ஏற்படுகிறது; அதைப் பகிர்ந்து தர வேண்டும். அதே போல் நாட்டில் பொருளாதார வளர்ச்சி பெருகும் காலத்தில், அந்த வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட இடத்தில் தேங்கி விடாமல், பிரித்துத் தர வேண்டும். எல்லாவற்றிற்கும் கல்விதான் அடிப்படை. எல்லோருக்கும் படிப்புச்சொல்லி கொடுத்து விட்டால், காலப்போக்கில் நல்ல மாற்றங்களும், பொருளாதாரத்தில் பரவலான நிலையும் ஏற்பட்டு விடும். அதைச் செய்யும் போது கோபப்படுவதற்கு என்ன இருக்கிறது?



## நமது எண்ணம்

என்னய்யா நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்தீர்கள்? உங்களுடைய சட்டத்தால் நிலமில்லாதவர்கள் எல்லாம், நிலச்சொந்தக்காரர்கள் ஆகி விட முடியுமா? என்று சிலர் கேட்கிறார்கள். இது வேடிக்கையான கேள்விதான்! ஜமீந்தார்களையெல்லாம் முன்பு வீட்டுக்கு அனுப்பினோமே, அதனால் நாம் எல்லோரும் ஜமீந்தார்களாகவா ஆகி விட்டோம்? மைசூர் மகாராஜா, திருவாங்கூர்அரசர் இப்படி பல பேர்களைச் சிம்மாசனத்தில் இருந்து இறக்கி விட்டோமே, அதனால் நாம் எல்லோரும் மகாராஜாக்களாகவா ஆகி விட்டோம்? இல்லையே! நம்முடைய எண்ணமெல்லாம் ஏகபோகம் ஒழிய வேண்டும். ஆதிக்கம் அழிய வேண்டும் என்பதுதானே தவிர எல்லோரும் ஆதிக்கக்காரர்களாக இருப்பது அல்லவே!

## அனுபவிக்க முடியாத அவதி

பணம் செல்வந்தர்களிடமே இருக்கட்டும்; அதை யாரும் பறிக்கும்படியாகச் சொல்லவில்லை. ஆனால், எல்லாவற்றையும் அவர்களே அனுபவிப்பதா, அல்லது அனுபவிக்கத்தான் முடியுமா? எட்டு வீடுகள் கட்டிக் கொண்டாலும் ஒன்றில்தானே குடியிக்க முடியும்! செட்டி நாட்டில் ஒவ்வொரு வீடும்

கோட்டை மாதிரி இருக்கும்; அதில் வசிப்பவர்கள் இரண்டு பேர்தான் இருப்பார்கள். அப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்களுக்கு "வசதியற்றோரின் குடிசைகள் மாறவேண்டும்; நல்ல வீடுகள் அவர்களுக்கும் அமைய வேண்டும்" என்ற சிந்தனை ஏற்பட வேண்டாமா?

வேஷ்டி, புடவைகளும் கூட அப்படித்தான். ஐநூறு வேஷ்டி, புடவைகளை வாங்கி பீரோ நிறைய அடுக்கி வைத்துக் கொண்டு, யாராவது விருந்தினர்கள் வந்தால் பீரோவை திறந்து அவற்றைக் காட்டுவார்கள்! அவ்வளவுதானே தவிர அதனால் அவர்களுக்கு வேறு பிரயோஜனமில்லையே. அதை விட, பஜாரிலே போய், அங்குள்ளவற்றை விருந்தினர்க்குக் காட்டக்கூடாதா? அவர்களுக்கும் உதவாமல், மற்றவர்களுக்கும் உதவாமல் வீணான பொருள்களில் பணம் முடங்கி, வீணாகப் போகாமல் அந்தப் பணம் வெளியே வந்து, நாட்டின் செல்வத்தை மேலும் பெருக்க வேண்டுமென்பதுதான் நம்முடைய கொள்கை. இது தவறா?

## தர்மம் கெட்டதா?

இந்த நாடு ஏழைகளுடைய சொத்து. கோபத்தால் காங்கிரசையே அழிக்கச் சிலர் நினைக்கிறார்கள். அவர்கள் காங்கிரசுக்குக்



கொள்ளி வைக்க வேண்டுமென்கிறார்கள். காங்கிரசையே கொளுத்துவோம் என்கிறார்கள். ஏழைகளுடைய அன்பும், ஆசியும் இருக்கும் வரை காங்கிரசை கொளுத்தவும் முடியாது. அழிக்கவும் முடியாது. ஏழைகளுக்கு வேண்டியதைச் செய்தவுடன், ஏழைகள் அடைய வேண்டியதை அடைந்தவுடன் காங்கிரஸ் தானாகக் கலையும். சுயராஜ்யம் வந்தவுடன் மாலைகள் வாங்குவதற்கு மட்டுமல்ல காங்கிரஸ் இருப்பது.

எல்லோருக்கும் சாமார்த்தியம் வர வேண்டும். ஏழைகளுக்கும், வசதியுள்ளவனுக்கும் சாமார்த்தியம் ஒன்றாகி விடுமா? இருவருடைய நிலையும் ஒன்றாகும் வரையில் காங்கிரஸ் இருக்கும். வசதியுள்ளவன் எதையும் செய்யலாம். அதனால் அவன் சாமார்த்தியக்காரனாக இருக்கிறான். ஏழை கூலி வேலைதான் செய்யலாம். வேறு அவன் நினைக்கிறபடி ஒன்றும் செய்ய முடியாது. அவர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் அப்பொழுது பிழைத்து விடுவார்கள். பிறந்த குழந்தையை தானாக விட்டால் பிழைக்குமா? அதற்கு பால் கொடுக்க வேண்டும்; பிறகு சோறு கொடுக்க வேண்டும்; படிப்புச் சொல்லிக் கொடுக்கவேண்டும்; பிறகு குழந்தை சம்பாதிக்கத் தொடங்கும்; அப்போது தானாகவே அது பிழைத்துக் கொள்ள முடியும்.

சுயராஜ்யம் வந்தவுடன் காங்கிரஸைக் கலைத்து விடலாமா? அது பொறுப்பாகுமா? ஏழைகள் சுயராஜ்யத்தின் நன்மைகளை அடையும் வரை காங்கிரஸ் இருக்கும். ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி, சாப்பாட்டுக்கு வசதி இல்லாத பிள்ளைகளுக்குச் சாப்பாடு இப்படியாக வசதி செய்யப்பட்டுள்ளது. பள்ளிக்கூடம் வைத்தால் போதாதா? சாப்பாடு ஏன் போடுகிறாய் என்கிறார்கள். ரோட்டில் பெற்ற குழந்தையை சிலர் போட்டு விட்டு ஓடி விடுகிறார்கள். அது போல் ஓடுவதுதான் பொறுப்பா? பொறுப்பற்று நடப்பது தர்மமா? ஏழைகளுக்கு உதவுவது தர்மக் குறைவா, தர்மம் கெட்டுப் போச்சா?

## பழகிவிட்ட பாரம்

நம் முன்னே பெரிய பிரச்சினைகள் இருக்கின்றன. மிகப் பெரிய நாடு இது. 45 கோடி மக்கள் வாழும் நாடு. மகாத்மாவின் வழியில் நடந்து சுயராஜ்யம் பெற்ற நாடு. நாடு செல்வம் மிகுந்த நாடுதான். நம்மில் பெரும் பகுதியினர் ஏழைகள். இவர்கள் அத்தனை பேருக்கும் உணவு, உடை, இருக்க இடம் கொடுத்தாக வேண்டும். இது பெரிய பிரச்சினை. இருந்தாலும் மிகத் தைரியமாக இதை நாம் மேற்கொண்டிருக்கிறோம். காங்கிரஸ் அந்தப் பணியைத்தான் செய்து வருகிறது. வசதி



யாக இருப்பவர்கள் மற்றவர்கள் வசதியைப் பற்றிக் கவனிக்க வேண்டும். அவர்களாக அதைக் கவனிக்கவில்லை. காங்கிரஸ் அதைக் கவனிக்க ஆரம்பித்தது; ஏழைகள் முன்னேற வேண்டும் என்று, இப்படிச் செய்ய ஆரம்பித்ததும் ஏற்கனவே வசதியாக இருந்தவர்களுக்கு அரசாங்கத்தின் மீது கோபம். அந்தக் கோபத்தில் அவர்கள் எதையும் செய்யத் துணிவார்கள். பலாத்காரத்திலும் இறங்குகிறார்கள். நாம் இதற்கெல்லாம் பயந்து விடக் கூடாது. கஷ்டம் இருக்கத்தான் செய்யும். இதையெல்லாம் சகித்துக் கொண்டு முன்னேற்றத்துக்கு வழி செய்ய வேண்டும்.

துன்பத்தையும் எதிர்ப்பையும் சமாளிப்பது நமக்குப் புதிதா? எல்லாவற்றையும் சகித்துக் கொள்ள நமக்கு மகாத்மா பயிற்சி அளித்து விட்டுப் போனார். அதனால் நமக்குக் கஷ்டம் தோன்றவில்லை. எதையும் சகிப்போம் எந்த எதிர்ப்பையும் தாங்க நமக்கு அவர் கற்றுக் கொடுத்திருக்கிறார். புதிதாக ஒருவனை பாரம் தூக்கச் சொன்னால் கழுத்து வலிக்கிறது, தலை வலிக்கிறது, கால் வலிக்கிறது என்று சொல்வான். 40 வருடங்கள் பாரம் தூக்கியே பழக்கமானவன் பாரம் தூக்குவதற்குப் பயப்படுவானா? அது போலத்தான் எத்தகைய எதிர்ப்பையும் தாங்கிச் சமாளித்துப் பழகிப் போய் விட்டோம். எனவே, நமக்கு எந்த எதிர்ப்பைப் பற்றியும் கவலையில்லை.

## வேடிக்கைப் பேச்சு

அமெரிக்காவைப் பார். இங்கிலாந்தைப் பார் என்று கூறுகிறார்கள்! எல்லா நாடுகளும் பல முயற்சிகளுக்குப் பின்தான் இன்று சுபிட்சமாக இருக்கின்றன என்பது எங்களுக்கு தெரியாதா?

அடுத்த வீட்டுப் பையன் வளர்ந்து பெரியவனாகி, பீ. ஏ. படித்து, இரு நூறு ரூபாய் சம்பளம் வாங்குகிறான் என்பதற்காக எஸ்.எஸ். எல். சி. படித்துக் கொண்டிருக்கும் தன் மகனிடம்,'பார்த்தாயா அவன் இரு நூறு ரூபாய் சம்பளம் வாங்குகிறான். வீட்டிற்குப் பணம் கொடுக்கிறான். நீயும் இருக்கிறாயே!' என்று சொன்னால், எப்படி இருக்குமோ அது போலத்தான் இருக்கிறது இவர்கள் கூறுவதும். இப்பையனும் நன்றாகப் படித்த பின் அவனை விட சம்பாதிக்க முடியாதா? நாமும் தொழில், உற்பத்திப் போராட்டத்தில் வெற்றி பெற்றால் மற்ற நாடுகளைவிட மேலாக நிச்சயம் இருக்க முடியும். நிலைமையைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் படிக்காதவர்கள் மாத்திரமல்ல, படித்தவர்களும் இப்படிப் பேசுவதைப் பார்க்கும் போது வேடிக்கையாக இருக்கிறது.



## ஒரே நாளில் காய்க்குமா?

பணப் புழக்கம் பெருகி இருப்பதற்கேற்ப பண்டங்களின் உற்பத்தியும் பெருகினால்தான் விலை குறையும். அது ஒரே நாளில் ஏற்படக் கூடிய காரியமல்ல. கழனியில் நெல்லை விதைத்தவன் சில மாதங்கள் காத்திருந்து கழனியைப் பாதுகாப்பதுபோல், நிறுவியுள்ள தொழிற்சாலைகளும், வகுத்துள்ள பல நல்ல திட்டங்களும் பலன் தரும் வரையில் சிறிது காலம் பொறுத்திருத்தல் வேண்டும்.

பையனைப் பார்த்து, 'உனக்கு 4, 5, ஆண்டுகள் படிப்புக்காக செலவழித்தாகி விட்டது; இனிமேல் நீ சம்பாதித்துக் கொண்டு வா' என்று அரைகுறைப் படிப்புக் காலத்தில் சொன்னால் என்ன ஆகும்? அப்படித்தானே இருக்கிறது, திட்டம் பூர்த்தியாகும் முன்பே பலன் எங்கே என்று கேட்பதும்? எந்த மரமுங்கூட ஒரே நாளில் காய்க்காதே? ஏதேனும் தவறான பாதையைக் காட்டிக் குழப்பம் விளைவிக்க முயலுபவர்களிடம் மக்கள் உஷாராக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஆட்கள் உலகம் தோன்றின நாட்கள் முதலாக உண்டு. அவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் நடப்பது நமது கடமை.

குருடன் தான் பெற்ற பார்வையைஇழக்க மாட்டான். அவனைக் குருடாக்க வருபவர்களை

அவன் ஏற்க மாட்டான். அதுபோல, சுதந்திரத்திற்குக் கேடு உண்டாக்க முயலுபவர்களை மக்கள் புறக்கணித்து விட வேண்டும்.

## நிலம், கூடப்போகிறதா !

ஒரு மாட்டைக் கட்டித் தீனி போட்டால் தான் நன்கு பால் கறக்கும். இல்லாவிட்டால் எங்கேயாவது போய்த் தீனி தின்னட்டும் என்றால் கால் படி பால்தான் கறக்கும். ஆகவே, கிராமங்களிலே சிறிய கைத்தொழில்கள், குடிசைத் தொழில்கள் இவைகள் வளர ஏற்பாடு செய்ய வேண்டும். கிராமங்களில் உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். உற்பத்தியை அதிகரித்தால்தான் மக்களுக்குச் சாப்பாடு போட முடியும். ஒரு கிராமத்தில் 500 அல்லது 1,000 ஏக்கர் இருந்தால், அங்கு ஒரு குழந்தை பிறந்தால், ஒவ்வொரு குழந்தை பிறக்கும் போதும் 2 ஏக்கர் நிலம், கூடவா போகிறது ? இருக்கிற நிலம் இப்பொழுது இருப்பது போல்தான் இருக்கப் போகிறது. கூடப் போவதில்லை. இப்போழுது ஒரு குடும்பத்தில் இரண்டு பேர் இருந்தால் ஒவ்வொருவருக்கும் இரண்டு, இரண்டு குழந்தைகள் இருக்கிறதென்றால், அவர்கள் பெரியவர்களாகி விட்டால் அவர்களுக்கு ஐந்து, ஐந்து குழந்தைகள் வீதம் பிறந்து அவர்கள் வளர்ந்து, அவர்களுக்கும் குழந்தைகள்



பிறந்து ஜனத்தொகை வளர்ந்து கொண்டே போகிறது. ஆக, ஒருவருக்குள்ள சாப்பாட்டைப் பலர் பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, குடும்பத்தைக் கட்டுப்பாடு செய்ய வேண்டும்.

## ஜோடிக் காளை

இரண்டு மாடுகள் சேர்ந்து போனால் தான் வண்டி ஓடும். ஒரு மாடு படுத்து விட்டால் மற்றொரு மாட்டை மட்டும் வைத்துக் கொண்டு போக வேண்டிய இடத்துக்கு எப்படிப் போவது ? அதேபோல், எல்லாவற்றையும் பரிசீலித்துத்தான் திட்டங்கள் அமைத்து இருக்கிறோம். ஐந்தாண்டுத் திட்டங்களை எடுத்துக் கொண்டால், நமக்கு எவ்வளவு வருவாய் வரும் ? நமது பொருளாதார சக்தி என்ன ? எவ்வளவு தூரம் உற்பத்தியைப் பெருக்க முடியும் ? இந்த ஐந்து வருடத்தில் (ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்) எவ்வளவு குழந்தைகள் பிறக்கும் ? எவ்வளவு பேர்களுக்கு நாம் வீடு கட்டிக் கொடுக்க முடியும் ? சாப்பாடு கொடுக்க முடியும்; உடை கொடுக்க முடியும், எவ்வளவு பேர்களுக்குக் கல்வி வசதி அளிக்க முடியும் ? இப்படிப் பல காரியங்களைச் சராசரியாகப் பார்த்து, நாம் திட்டம் வகுத்திருக்கிறோம். இவைகளை எல்லாம் எப்படி அமுல் நடத்துவது என்பதுதான்

நம்முடைய பிரச்சினை. விவசாயத் துறையாக இருந்தாலும சரி, கல்வித் துறையாக இருந்தாலும சரி, பல திட்டங்களை நாம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. விவசாயத்தை எடுத்துக் கொண்டால், சிறு குளங்கள் வெட்ட வேண்டும். கிணறுகள் தோண்ட வேண்டும். இம்மாதிரியான பல பொறுப்புகள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் இப்போது பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்திருக்கிறோம்.

## ஆழந்தெரியாமல்...

கிராமங்களில் தகராறுகள் பெருகிக் கொண்டே போனால், தனியாக அங்கு நீதி வழங்க அதிகாரம் வழங்க வேண்டும். ஆனால், இப்போது அது முடியுமா என்ன? அவசரப் படக்கூடாது. அவசரப்பட்டு எதிலும் போய் விழுந்து விடக்கூடாது. ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். காவிரியில் தண்ணீர் இருக்கிறதென்றால், எவ்வளவு தண்ணீர் இருக்கிறது, ஆழம் எப்படி இருக்கிறது என்று பார்த்து இறங்க வேண்டும். தண்ணீர் அதிகமாக இருக்கிறதென்று தெரிந்தால் திரும்பி விட வேண்டும். அதிகமாக இருக்கும் போது போய் அகப்பட்டுக்கொள்ளக்கூடாது. இப்போது பரீட்சார்த்தமாக ஜனநாயகத்தில் அதிகாரம் கொடுக்கப் பட்டு, சட்ட திட்டங்க



ளுக்கு உட்பட்டு, எப்படி நடைமுறையில் நடக்க வேண்டுமென்று பழக்கப் பட்டு அதற்குத் தகுந்தபடி ஜனங்கள் தங்களைத் தயார் செய்து கொள்வது மிக முக்கியம்.

## சரியான மனப்பான்மை

நம் மக்கள் அறிவாளிகள். மாறுதல்களுக்குத் தகுந்த மாதிரி நடப்பதற்கு பழகிக் கொள்வார்கள். அதற்கு நாம் வழி காட்ட வேண்டும். தலைவர்களைப் பொறுத்துத்தான் அது விளைகிறது. அதனால் தலைவர்களின் நடைமுறை நன்றாக இருக்க வேண்டும். மக்களைத் திருத்துவது கஷ்டமில்லை. இரண்டும் கெட்ட நிலையில் இருப்பதுதான் கஷ்டம். நம்முடைய மனப்பான்மை சரியாகி விட்டால் எல்லாம் சரியாகி விடும். உண்மையாக ஜனநாயகத்தை விரும்புகிறோம் என்றால், பொறுப்பு ஏற்றுக் கொள்கிறவர்கள் அதிகமானவர்களாக இருக்க வேண்டும். அப்போது தான் எல்லோருக்கும் பொறுப்புணர்ச்சி வரும். பொதுக் கூட்டத்தில் நின்று கடமை தவறக் கூடாது என்று சொல்லி விட்டால் போதுமா? மந்திரிகள் சொல்கிறார்கள், ‘எங்கும் தகராறு வரக்கூடாது’ என்று. அதை அவரே பார்த்துக் கொள்ளட்டும் என்று மக்கள் நினைக்கலாம் இல்லையா? அது கூடாது. பொறுப்புணர்ச்சி ஏற்படப் பழக வேண்டும்.

பொறுப்பைப் பங்கு போட்டுக் கொள்வது அவசியம்.

## தடுமாற்றம் கண்டு...

இன்னும் கல்லூரிகளில் போதனா மொழியாக எந்த மொழியிருக்க வேண்டுமென்பது ஒரு பிரச்சினை. கல்வித் துறையில் ஒரு தடுமாற்றம். பல வழிகளில் தடு மாற்றம் ஏற்பட்டிருப்பது போல் கல்வித் துறையிலும் ஒரு தடுமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் தடுமாற்றம் பற்றிப் பயப்பட வேண்டிய அவசியமில்லை. குழந்தை எழுந்து நடக்கும் போது கீழே பல தடவை விழுந்த பிறகுதான் நன்றாக நடக்கிறது. ஆதலின் சுதந்திரத்திற்குப் பிறகு பல துறைகளில் நமக்குத் தடுமாற்றம் ஏற்படுவது கண்டு பயப்பட வேண்டியதில்லை. திசை மாறி விட்டால், போன திசை தவறு என்று தெரிந்தால் மீண்டும் சரியான திசைக்கு திரும்பி வந்து விடுகிறோம். திருத்திக் கொள்வதில் தப்பு இல்லை. சுயேச்சையாகச் சிந்தித்து யோசிப்பதற்குத் தான் சுதந்திரம் கிடைத்திருக்கிறது. எது சிறந்த வழி என்பதை நல்லறிஞர்கள் அவ்வப்போது சொல்லிக் கொண்டிருப்பார்கள். இவ்விஷயங்களில் நிதானமாகப் போக வேண்டும்.



## காலத்திற்கு ஏற்றது

எப்போதுமே புதிய வழியிலே போகிறது மிகவும் சிரமமான காரியம். புதிய வழியிலே போகும்போது, பழைய வழியிலே பழக்கப்பட்டவர்கள் யாரும் புதிய வழிக்கு வர மாட்டார்கள். சாதாரண ஜனங்கள் ஒருவேளை வந்து விடுவார்கள், புதிய வழிக்கு. ஆனால் படித்தவர்கள் வரவே மாட்டார்கள்; ஒரே பிடிவாதம் பண்ணுவார்கள். பழக்கத்தைத் திடீர் என்று மாற்றிக் கொள்வது அவர்களுக்குச் சிரமம். சாதாரண ஜனங்களுக்கு இது நன்றாகப் புரியும். ஏனென்றால், அவர்களுக்கு விஷயங்களைப் புரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆசை இருப்பதனால், நல்லது எது, கெட்டது எது என்பதை உடனே தெரிந்து கொள்ளுகிறார்கள். புதிய வழி நல்லது என்று தோன்றினால் அதில் போக அவர்களுக்குப் பயமே இருப்பதில்லை. பழைய வழியையே பிடித்துக் கொண்டு போகின்றவர்கள் படித்தவர்கள். புதிய வழிக்குப் போக வேண்டுமானால் நமக்கு ஏன் இந்தச்சிரமம் என்று படித்தவர்கள் நினைப்பது இயற்கை.

புதியவற்றில் உள்ள நல்லதையும், பழைய முறையில் உள்ள நல்லதையும் ஏற்றுக் கொண்டு நடப்பதே காலத்திற்கு ஏற்றதாகும்.

# எதிர்காலப் பலன்

பிள்ளையைப் 15 வருஷம் காப்பாற்றிப் படிக்க வைத்தால்தான் அவன் ரூ. 150 சம்பாதித்துத் தருவான். அப்படிச் செய்யாமல் விரட்டி விட்டால், ஏதோ 4, 8 அணுத்தான் சம்பாதிப்பான். அதுபோலத்தான் அரசாங்கமும். திட்டங்கள் போடப்போடத்தான் நிலையான ஒரு வாழ்க்கை ஏற்படும். முன்னேற்றம் படிப்படியாக ஏற்படும். இதற்கு மக்கள் பொறுமையாக இருக்க வேண்டும். மக்களுக்கு படித்தவர்களும், பணம் படைத்தவர்களும் வழி காட்ட வேண்டும். நாம் நிறைவேற்றும் திட்டங்கள் நமக்கு உபயோகம் இல்லை என்றாலும் நம் பிள்ளைகளுக்கு உபயோகமாக இருக்கக் கூடாதா? வயது வந்த காலத்தில் பிள்ளைகளின் எதிர் காலத்தைத்தானே பார்க்கிறோம். நம் குழந்தைகளின் எதிர்காலத்தைத் தான் பார்க்க வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும்.

ஜனநாயக முறையில் திட்டம் போட்டு வேலை செய்வது நம் நாட்டில்தான். உலகில் வேறு எங்கும் இப்படி நடக்கவில்லை. கார் மீது கல்லைப் போட்டவர்களைப் பிடித்தால் ஏன் பிடித்தீர்கள் என்று கேட்கும் சுதந்திரமும் இங்கு இருக்கிறது. கல்லைப் போடவும் சுதந்திரம் அளித்துக் காரியங்களை நடத்த வேண்டியிருக்கிறது.



# மனித இயந்திரம்

ஏதோ ஒரு குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளையும், அவைகளைத் தொடர்ந்து ஏற்பட்ட புரட்சிகளையும், அதன் விளைவுகளையும் 'பிளான்' போட்டு நகலாக வைத்துக் கொண்டு இந்தக் காலத்தில் நாம் நம்முடைய நாட்டுக்கான காரியங்களைச் செய்ய முடியுமா?

வெளி நாடுகள் சிலவற்றில் நடைபெற்ற கம்யூனிஸ்டுப் புரட்சிகளையே கண் முன்னால் எண்ணிக் கொண்டே இருப்பதால் நாட்டுக்கு நாடு, கண்டத்திற்குக் கண்டம், வித்தியாசம் இருக்கிறது என்பதைக்கூட அடியோடு மறந்த நிலையில் எதையும் பேசுகிறார்கள்—செயலிலும் சில சமயம் காட்டத் தொடங்குகிறார்கள்.

இதன் மூலம் கம்யூனிஸ்டு கட்சியிலிருப்பவன் தன்னைத்தனி மனிதனாகக்கூட கருதும் நிலைமையில்லை. மனிதனுக்குள்ள சாதாரண ஆசாபாசங்கள், உணர்ச்சிகள், இன்ப துன்பங்கள், எதையுமே மதிக்காமல், ஒரு மனித இயந்திரமாகவே மாறி விடுகிறான். போராட்டத்தில் குதி என்றால் கண்ணை மூடிக்கொண்டு குதிக்கத் தயாராக இருக்கிறான்.

## குருட்டு நம்பிக்கை

வைதீகர்கள், பக்தர்களுக்குச் சில கண் மூடிப் பழக்கங்களும், குருட்டு நம்பிக்கைகளும் ஏற்பட்டால் விடவே மாட்டார்கள். அப்படியே பிடித்துக் கொள்வார்கள். அது போலவே கம்யூனிஸ்டு ஆட்சி நடக்கும் நாடு எந்த நாடாக இருந்தாலும் அதைச் சொர்க்க பூமி, சுகவாழ்வு கொடுக்கும் நாடு என்று பாராட்டத் தயங்காத நிலைமை கம்யூனிஸ்டுகளிடம் உள்ளது.

கம்யூனிசம் உலகம் பூராவும் ஏற்பட்டு விட்டால் உலகமே சுகம் பெறும், சமதர்மம் நிலவும் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இதற்காகத்தான் ஒவ்வொரு நாட்டிலும் கம்யூனிஸ்டு கட்சி வேலை செய்கிறது. உலகில் உள்ள கம்யூனிஸ்டு கட்சிகள் அனைத்தும் எப்படியோ ஒன்றுக்கொன்று தங்களது கருத்துக்களையும் அனுபவங்களையும் பரிமாறிக் கொள்கிறார்கள். இதெல்லாம் கட்சியைப் பொறுத்த வரையில் சரியாக இருக்கலாம். ஆனால் ஜனநாயக நடைமுறைக்கு ஒத்துவராதே, அதற்கென்ன செய்வது?

## வழி செய்வோம்

நம் நாட்டிலே நிறைய மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். ஆனால் நம் நாட்டிலேயே அதற்கான இயந்திரங்களை உற்பத்தி



செய்ய வேண்டும். நம் நாட்டவரே அந்த இயந்திரங்களை ஓட்ட வேண்டும். அதற்கு அவர்கள் படிக்க வேண்டும். அவர்கள் அப்படிப் படிக்கத்தான் வழி செய்து தருகிறோம்.

இதற்கு நிறையப் பணம் தேவைப்படுகிறது. இந்தப் பணம், மேட்டூரில் தண்ணீர் தேங்கிக் கிடப்பதுபோல், சில இடங்களில் தேங்கிக் கிடக்கிறது. அணையிலிருந்து தண்ணீரை வாய்க்கால் வெட்டி எடுப்பது போல் பணத்தை வரி போட்டு வசூலிக்க வேண்டும். அப்போது அவர்கள் தங்கள் அதிருஷ்டம் காரணமாகப் பணத்தைச் சம்பாதித்ததாகச் சொல்வார்கள். சர்க்கார் வசதி செய்ததால்தானே அவர்களால் சம்பாதிக்க முடிந்தது?

சிலர் குழப்பம் செய்யப் பார்ப்பார்கள். நமது யாத்திரை நீண்டயாத்திரை. சுமையை யாராவது தூக்கித்தான் ஆகவேண்டும். அதை நாம் தூக்குவதா, அல்லது நம் பிள்ளைகள் தூக்குவதா என்பதுதான் பிரச்சினை. நாம் தூக்கா விட்டால் அவர்களோ அல்லது அடுத்து வரும் பரம்பரையினரோ தூக்கித் தான் தீர வேண்டும். ஆகவே, எந்தக் குழப்பத்தையும் கண்டு கலங்காமல், நாமே கஷ்டத்தைச் சகித்து நம் குழந்தைகளின் நல் வாழ்வுக்கு வழி செய்வோம்.

## சண்டைக் குணம்

சமுதாயத்தில் இன்று ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களுக்கு நாம் சமபொறுப்பு ஏற்க வேண்டும். அப்போதுதான் அதைத் தீர்க்கக் கூட்டுப் பொறுப்புணர்ச்சியுடன் பாடுபடுவோம்.

எல்லோரும்கூடி, சேர்ந்து வேலை செய்யக் கூடிய இடங்களில் வேலை நன்றாக வேகமாக நடக்கிறது. வேலையில்லாமல் இருந்தால் என்ன நடக்கும்? நமக்கு வேலையா இல்லை? வேலையில்லையென்றால், ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்வார்கள். பட்டாளத்திலும் அப்படித்தான். பட்டாளத்தில் இருக்கும் போது சண்டை வந்தால் அதில் சண்டை போடுவார்கள். அவர்களுக்கு வேலையில்லாதபோது சும்மாயிருந்தாலும் அந்தச் சண்டைக் குணம் அவர்களை விடாது. ஏதாவது வீட்டில் கூட சண்டை போட்டுக்கொண்டிருப்பார்கள். அதுபோல புதிய சமுதாயத்தை அமைக்க நாம் எண்ணி இடைவிடாமல் காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தால் எந்தச் சச்சரவுகளுக்கும் இடம் இருக்காது.

## நமது இலட்சியம்

சுதந்திரம் வாங்கியதற்கு என்ன காரணம்? வெள்ளைக்காரன் அரசாங்கம் இருந்தது. அதை எடுத்து விட்டு நம்முடைய அரசாங்கத்தை வைத்துக் கொண்டு—மந்திரிகளை வைத்துக் கொண்டு—ராஜ்யம், பட்டாளம் எல்லாம் வைத்து நடத்துவதற்கு மட்டுமல்ல நாம் சுதந்திரம் பெற்றது. அரசியல் அதிகாரம் இருந்தால் நாம் விரும்பும் சமுதாயத்தை —நமக்கு வேண்டிய பொருளாதார வாழ்வை உண்டாக்க முடியும் என்றுதான் சுயராஜ்யம் வாங்கினோம். அந்த இலட்சியத்தை நாம் அடைகிறோமா, இல்லையா? என்பதைப்பொறுத்துத்தான் சுதந்திரம் நிலைக்கும். அதற்கு நாம் என்ன செய்தோம்என்று நினைத்து வேலை செய்ய ஆரம்பித்தால் அப்போது ஜாதி, மத பேதம், கட்சிச் சண்டை ஒன்றும் வராது. சரியான வழி அதற்கு வகுக்கப்படாமல் இருப்பதுதான் இப்போதுள்ள குறைபாடு.



மனிதன் வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படைத் தேவை நம் நாட்டில் இல்லாமல் இருக்கிறது. இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்து தரப் பாடுபட வேண்டும். மழைத் தண்ணீர் எப்படி அனைவருக்கும் சொந்தமோ அதே போன்று நாட்டின் செல்வமும் அனைவருக்கும் சொந்தம்.

## உணர்ச்சி வெறி

மாணவர்கள் நல்ல இலக்கியங்களைப் படிக்க வேண்டும்; அறிஞர்கள் எழுதி வரும் புத்தகங்களை எல்லாம் படிக்க வேண்டும்.

தமிழ் இலக்கியங்களையும் நன்கு படிக்க வேண்டும். தமிழ் அறிவும் வளர்ந்து கொண்டு வருகிறது. இதற்கு தேசிய உணர்ச்சி தான் காரணம். மொழி உணர்ச்சி நல்லது தான். ஆனால் அதே சமயம் அது அத்துமீறி விடக் கூடாது. வெறியாக மாறவுங் கூடாது. அப்படிப்பட்ட உணர்ச்சியைக் கட்டுப் படுத்த வேண்டியது அவசியம்.

தண்ணீரை அணையைப் போட்டுக் கட்டுப் படுத்தா விட்டால், ஊரையே அழித்து விடும் என்பது போல் மொழி உணர்ச்சியைக் கட்டுப் படுத்தா விட்டால் நாட்டுக்குக் கேடு. இதை யெல்லாம் உணர்ந்து ஆசிரியர்கள் குழந்தை களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். ஏழைக் குழந்தைகள் விஷயத்தில் ஆசிரியர்கள் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

## எஜமானர் யார் ?

சுதந்திரம் என்பது என்ன ? அதன் அடிப் படை என்ன ? நம்முடைய நாட்டை நாமே ஆள முடியும் என்ற நம்பிக்கை உணர்ச்சிதான் அது. நாம் எவர்க்கும் அடிமையல்லர். நம்மை யாரும் ஆண்டு அடக்கி ஆதிக்கம் செலுத்த முடியாது—விடவும் மாட்டோம்.

நாமே நமக்கு எஜமானர்கள். நாம் யாருக் கும் குடிகள் அல்லர் என்று காந்திஜி காட்டிய



வழியில் இன்று நமது சொந்த அரசாங்கம் நடக்கிறது. இதுதானே சுதந்திரம் !

சுதந்திரம் வந்து விட்டது. சொந்த அர சாங்கம் நடக்க வழி பிறந்து விட்டது. நமது நாடும் மக்களும் எல்லா வளமும் வசதியும் பெற்று முன்னேற்றம் அடையும் வழியில் சுதந்திரத்தையும், அதன் மூலம் நடந்து வரும் சொந்த அரசாங்கத்தையும் தகுந்தபடி பயன் படுத்திக் கொள்ள வேண்டாமா ?

சொந்த அரசாங்கம் என்றால் மக்களுடைய எண்ணங்கள், அபிலாஷைகளைப் பிரதிபலிப்ப தாய் இருக்க வேண்டும். ஆகையால் மக்கள் மனப்பான்மையை அறிந்து செயல்பட ஜன நாயக ரீதியான ஓர் அரசியல் அமைப்பை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். உலகிலேயே சிறந்ததொரு ஜனநாயக அமைப்பை நாம் வகுத்துக் கொண்டோம். நமது அரசியல் சட் டத்தின்படி, 21 வயது வந்த அனைவர்க்கும் வாக்குரிமை அளித்துள்ளோம்.

நம் சுதந்திர இந்தியாவில்தான், உண்மை யான ஜனநாயகரீதியில் சுமார் 20 கோடி வாக் காளர்களைக் கொண்டு மிகப் பெரிய அளவில் தேர்தல் நடத்தப்படுகிறது. அகில உலகிலும் எந்த ஒரு நாட்டிலும் வாக்குரிமை கொண்டவர் கள் இவ்வளவு அதிகமில்லை.

## திருவிழா, சினிமாவா ?

தேர்தல் என்றால் என்ன? இதில் மக்களுக்கு—வாக்குரிமை படைத்துள்ள மக்களுக்கு உள்ள பொறுப்பு என்ன ? வோட்டுப் போடுவதால் விளையும் முடிவு என்ன? அதன் மூலம் நாட்டில் ஏற்படும் நிலைமை என்ன ? என்பவைகளையெல்லாம் எல்லோரும் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இது மிகவும் அவசியமாகும்.

தேர்தல் என்பது ஏதோ ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை வந்து போகும் திருவிழாவா? அல்லது ஐந்து பத்து வாரங்களுக்கு ஒருமுறை தியேட்டர்களில் மாற்றிக் காண்பிக்கும் சினிமாவா? இல்லவே இல்லை.

தேர்தல் என்பது நமது ஜனநாயக முறையில் மிகவும் முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும். தேர்தலின் மூலம் மக்கள் தங்கள் எஜமானர்களை—இப்படிச் சொல்வதுகூடத் தவறு—தங்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்யும் நிர்வாகப் பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது என்பதை—நிர்ணயம் செய்கிறார்கள்.

ஏதோ விளையாட்டாக எக்கட்சி வந்தால் என்ன, போனால் என்ன? யாரோ பணம் பெருத்தவர்கள் தேர்தலுக்கு நிற்கிறார்கள். கட்சிக்காரர்கள் சண்டை அது என்று தேர்தல்



போட்டிகளையும், வேடிக்கை அல்லது விளையாட்டு என்று கருதி விடக் கூடாது.

இந்த நாட்டை ஆள்வது யார்? எந்தக் கட்சி ? என்பதைத் தேர்தல் முடிவுதான் நிர்ணயிக்கிறது.

நாட்டை ஆள்வது என்றால், யாருக்காக, யார் ஆள்வது என்பதும் ஒரு முக்கியமான விஷயமாகும்.

## நாமே பெற்ற உரிமை

மக்களுக்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மெஜாரிடி கட்சிதான் நாட்டின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். நமது ஜனநாயக முறையில் உள்ள சட்டம் அது.

இதன்படி, இந்த நாட்டின் அரசாங்க நிர்வாகம், அதாவது பொதுமக்களுக்கான படிப்பு உணவு, தொழில், சுகாதாரம், ரோடு, ஆஸ்பத்திரி, குடிநீர் முதலிய எல்லா வசதிகளையும் செய்து தரும் பொறுப்போடு, நாட்டில் சட்டத்தையும் சமாதானத்தையும், ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டி, மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்து, எல்லோரும் பயமற்ற வாழ்வு, நிம்மதியான கவலையற்ற வாழ்வு வாழச் செய்யும் மகத்தான பொறுப்பு, தேர்தல் மூலம் ஒரு குறிப்பிட்ட 'மெஜாரிடி கட்சியிடம்

ஐந்தாண்டுக் காலத்திற்கு ஒப்படைக்கப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

வாக்குரிமையின் சக்தி, அதாவது தேர்தல் நடக்கும் தினத்தன்று வோட்டுச் சாவடிக்குச் சென்று வோட்டுச் சீட்டைப் பெற்று, அதில் உள்ள ஒரு சின்னத்தின் மீது முத்திரை குத்தி விட்டு வருவதற்கு இருக்கும் சக்தி, இதுதான். இந்தச் சக்தி சாதாரணமானதல்ல. இது யாரோ தயவாகக் கொடுத்ததும் அல்ல. காங்கிரஸின் தலைமையில் ஒற்றுமையாகவும், ஐக்கியமாகவும் சுதந்திரப் போராட்டம் நடத்தி விடுதலை பெற்றதனால் நமக்குநாமே அளித்துக் கொண்ட உரிமை. அதுதான் வோட்டுப் போடும் சக்தியை நமக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

## ஓங்கும் குரல்

சுதந்திரம் வருவதற்கு முன்னால் எத்தனை பேருக்கு வோட்டு இருந்தது? சொத்து, படிப்பு, வருமானம் என்று வாழ்க்கையின் மேல்தட்டில் இருந்த சிலரிடம் தானே அந்தச் சக்தி இருந்தது!

நமக்கெல்லாம் அந்தச் சக்தியின் அருமையும் பெருமையும் அப்போது சரியாகத் தெரியவில்லை. ஆனால், ஏதோ சிலருக்கு மட்டுமே அப்போது வோட்டுப் போடும் உரிமை இருந்தாலும், அவர்களிடம் வோட்டுகளைப் பெற்ற



வர்கள், வோட்டுரிமை இல்லாத மற்ற மெஜாரிடி மக்களையும் ஆண்டு வந்தார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். இந்த வோட்டுப் போடும் சக்தியும் உரிமையும் யார் யாரிடம் இருந்ததோ அவர்களுடைய குரல்தான் அப்போது பெரிதும் ஓங்கியிருந்தது. ஆட்சியில் இருந்தவர்களும் அவர்களுடைய கோரிக்கைகளையும், அவர்களுக்கு வேண்டிய வசதிகளையும் பாதுகாப்புகளையுமே கவனித்துச் செய்ய வேண்டியவர்களாக இருந்தார்கள். இப்போது வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை இருப்பதால் பொது மக்களில் பெரும்பாலோருக்கு நாட்டின் நிர்வாகத்தில் பங்கு கிடைத்துள்ளது. மக்கள் குரல் ஓங்கியுள்ளதா, இல்லையா ?

## திரளும் சக்தி

இந்த நாட்டின் ஆளும் உரிமையை, அரசாங்கத்தின் பொறுப்பை ஒரு கட்சியிடம் அல்லது கூட்டத்தினரிடம் ஒப்படைக்கும் சக்தி எதிலிருந்து வருகிறது? வோட்டுச் சாவடியில், ஒவ்வொரு சீட்டிலும் குத்தப்படும் முத்திரையில் இருந்துதானே ?

ஒரே ஒருநாள், ஒரு சீட்டில் குத்தும் ஒரு முத்திரை, அடுத்த ஐந்து வருடங்களுக்கு நாட்டை ஆளப்போவது யார்? என்பதற்காகப் போடப்படும் முத்திரை என்பதை உணரும்

போது, நமது முத்திரைக்கு எவ்வளவு சக்தி உள்ளது என்பது தெரிகிறதல்லவா?

நம்மிடம் இவ்வளவு பெரிய சக்தி இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொண்டோமானால், அந்தச் சக்தியை உபயோகிக்காமல் இருக்க முடியுமா? முடியவே முடியாது.

இந்தச் சக்தியை எப்படி உபயோகிப்பது, எந்தச் சின்னத்தில் முத்திரை குத்துவது என்பது பற்றிய யோசனை எல்லாம், சக்தியின் வலிமையைத் தெரிந்து கொண்டதும், தானாகவே உண்டாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

பொறுப்புணர்ந்து, வாக்குச் சீட்டின் சக்தியை உணர்ந்து, நல்ல முறையில் வோட்டுப் போடும் பழக்கம் மக்களுக்கு இருக்க வேண்டும். அப்போதுதான், ஒவ்வொருவரும் தனித்தனியாக வோட்டுச் சீட்டில் முத்திரை குத்துவதின் மூலம் அளிக்கும் சக்தி அனைத்தும் ஒன்று திரண்டு, நாட்டை ஆளும் சக்தியாகும போது, நல்ல சக்தி ஆட்சியில் அமர முடியும்.

## நிலையான அரசாங்கம்

நிலையான அரசாங்கம் என்றால் என்ன? அப்படிப்பட்ட அரசாங்கம் தேவை என்பது எவ்வளவு முக்கியம்? அதனால் நாட்டுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் எவை? என்பதையும் தெரிந்துகொள்வது முக்கியமாகும்.



நிலையான அரசாங்கம் என்பது, முதலில் பூரண மெஜாரிடி பலம் உள்ள கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்பதுதான். அடுத்து, அக் கட்சியின் பலம் இடையில் சிதைந்து போகாமல் சுயபலத்திலேயே இயங்க வேண்டியது முக்கியமாகும்.

இப்படி அமையும் நிலையான அரசாங்கத்தில்தான், ஆளுங்கட்சி தனது பலம் குறைந்து விடுமோ என்ற பயம் இல்லாமல், நிர்வாக வேலைகளைத் தயவு தாட்சண்யமின்றிச் செய்ய முடியும்.

அப்படியின்றி இரண்டு மூன்று கட்சிகள் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைப்பதும் அல்லது ஒரு கட்சி, வேறு சில கட்சிகளின் ஆதரவையோ, அல்லது சுயேச்சை உறுப்பினர்களது ஆதரவையோ பெற்றுக்கொண்டு ஆட்சி நடத்துவதும் எப்படி இருக்கும்? அதை நிலையான அரசாங்கம் என்று கருத முடியுமா? அப்படிச் செயல்படத்தான் முடியுமா? முடியவே முடியாது.

## அனைவருக்கும் அக்கறை

தேர்தல் என்பது ஒரு தமாஷ் அல்ல; தேர்தல் மூலம் மக்கள் பொறுப்புடன் தங்கள் வாக்குரிமையைச் செலுத்தி, ஒரு நல்ல அரசாங்

கத்தை அமைக்க, தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க, தேச முழுவதற்கும் இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும்.

நம் சுதந்திர இந்தியாவில்தான் உண்மையான ஜனநாயக முறையில், இங்கு வாக்குரிமை பெற்றுள்ள 20 கோடிக்கும் மேற்பட்ட வாக்காளர்களைக்கொண்டு தேர்தல் நடத்தப்படுகிறது. அகில உலக ரீதியில் எந்த ஒரு நாட்டிலும் ஓட்டுரிமை கொண்டவர்கள் இவ்வளவு அதிகமாக இல்லை. கட்சிகள் ஆளும் நாடுகளில் தேர்தல்களை நடத்தப் பயப்படுகிறார்கள். ஆனால், நாம் எத்தகைய பயமுமில்லாமலே தேர்தலை நடத்தி வருகிறோம்.

நாம் ஒருமுறை வாக்களிப்பதன் மூலம் ஐந்தாண்டுகளுக்கு நம்முடைய வாழ்க்கைப் பொறுப்பை ஒரு கட்சியிடம் ஒப்படைக்கிறோம். எனவே, இது பற்றி நன்கு யோசனை செய்ய வேண்டும்.

'ஆட்சிக்கு யார் வந்தால் என்ன?' என்ற மனப்பான்மை கூடாது. நாட்டின் முன்னேற்றத்தில் அனைவருக்கும் அக்கறை வேண்டும். எனவே, ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு நாள் அரை மணி நேரத்தைச் செலவிட்டு வோட்டுப் போடக் கூடாதா?



## சமுதாய அந்தஸ்து

அரசாங்கம் என்பது எல்லா ஜாதிக்காரருக்கும் பொதுவானது.

மக்களுக்கு ஓட்டுப் போடும் அதிகாரம் கொடுத்த பிறகு நிலைமையே மாறிவிட்டது. முன்பெல்லாம் மக்களை மனிதர்களாக மதிக்காதவர்கள்கூட இப்போது ஓட்டு கேட்பதற்காக மக்களிடம் ஓடி வருகிறார்கள்.

மக்கள் சும்மா ஓட்டைக் கொடுத்து விடுவார்களா? "ஏனய்யா? போன தடவை எங்கள் கிராமத்திற்கு மின்சாரம் போடுகிறேன் என்று சொன்னீர்களே, ஏன் போடவில்லை? பள்ளிக்கூடம் கட்டாயம் கட்டித் தருகிறோம் என்று சொன்னீர்களே, ஏன் கட்டவில்லை?" என்று கேள்விமேல் கேள்வியாகக் கேட்பார்கள். ஓட்டு கேட்க வந்தவர் கோபப்பட முடியுமா? இந்தத் தடவை கண்டிப்பாக செய்து விடுகிறேன் என்று கெஞ்சுவார். இப்படி சமுதாயத்தில் மக்களுக்கு ஓர் அந்தஸ்து—கௌரவம்—ஏற்பட்டு இருக்கிறது.

## கதைகட்டும் போக்கு

பத்திரிகைகள் இப்போது எப்படி உள்ளன? முன்பெல்லாம் அவர்களுக்குக் கௌரவம் இருந்தது. பத்திரிகை ஆசிரியர்கள் என்றால் மக்கள் மதிப்பைப் பெற்றிருந்தார்கள்.

ரொம்ப தைரியசாலிகள், நேர்மையானவர்கள் என்று பாராட்டப்பட்டார்கள். இப்போதுள்ள பத்திரிகைகளுக்கு இன்றைக்கு ஒரு கொள்கை, நாளைக்கு ஒரு கொள்கை!

அதைவிட மோசம் என்னவென்றால், பத்திரிகை ஆசிரியர்கள் அரசியலில் ஒருவருக்கொருவரை முட்டிவிட்டு வேடிக்கைக் காட்டுகிறார்கள். உதாரணமாக, பெரியார் இருக்கிறாரே, அவர், காங்கிரஸ் இன்னும் தொடர்ந்து ஆட்சி நடத்த வேணடும் என்கிறார்: உடனே பத்திரிகைக்காரர்கள் காங்கிரசும் திராவிடர் கழகமும் ஒன்று என்று எழுத ஆரம்பித்து விடுகிறார்கள்! அது சரியா? எப்படி நாம் அவர்களோடு சேர முடியும்? சேருவதாக எங்கேனும் ஜாடைமாடையாக வேனும் சொன்னோமா? இல்லையென்றாலும் பத்திரிகைக்காரர்கள் 'கதைகட்டி' விடுகிறார்கள்!

அதே சமயத்தில் மாற்றுக்கட்சித் தலைவர்கள் சிலர் ஒரே மேடையில் ஏறி ஒருவரையொருவர் புகழ்ந்து கொள்கிறார்களே, இதை எந்தப் பத்திரிகையும் எழுதுவதில்லை. இது நியாயமா?

## பத்திரிகைகளின் பொறுப்பு

பத்திரிகைகளுக்கு நாட்டின் வளர்ச்சியில் நிறைய பொறுப்பு உண்டு. பத்திரிகை ஆசிரியர்கள் நம்மை எதிர்த்து எழுதுவதில் எனக்



கொன்றும் வெறுப்பு இல்லை. ஆனால் அவர்கள் பாரபட்சம் இல்லாமல், சுயேச்சையாக சிந்தித்து, நல்ல முறையில் நாட்டுக்கு வழிகாட்ட வேண்டும்.

இப்போது சில பத்திரிகைகள் மொழிக்கு மொழி மோத விடுகின்றன. அது கூடாது. அதனால் துவேஷமும் பூசலும் ஏற்படும்; ஒற்றுமை குறையும்; ஒற்றுமை குறைந்தால் நாடு முன்னேறாது. எனவே, இந்த அபாயகரமான வழியில் நாட்டை அழைத்துச் செல்லாமல் முன்னேற்றத்துக்கு எது உதவுமோ அதைப் பத்திரிகைகள் செய்ய வேண்டும்.

விடுதலைப் போராட்ட காலத்திற்கும், விடுதலைக்குப் பின்னும் நிரம்ப வேறுபாடு உள்ளது. இப்பொழுது நமக்கு முன்னாலே உள்ள பிரச்சினை, மக்களது வாழ்க்கைத் தரத்தை எப்படி உயர்த்துவது என்பதுதான். பத்திரிகைகள் இதில் கவனம் செலுத்த வேண்டுகிறேன்.

## மிருகங்களாக ஆகவேண்டுமா?

காங்கிரஸ் மீது ஏராளமான குற்றச்சாட்டுகள் சொல்லப்படுகின்றன. சுதந்திரம் வந்த பிறகு கடந்த பதினாறாண்டுகளாக அரசாங்கத்தை எடுத்து நடத்தி வருவது காங்கிரஸ் கட்சி. அந்தப் பொறுப்பை நடத்திக் கொண்டிருக்கிற வகையில், சில குறைபாடுகள்—நியாயமான குறைபாடுகள்—இருக்க

லாம். அதைச் சொல்ல வேண்டியது அவசியம்தான். அதற்காகத்தான் அரசியல் சட்டத்தில் உரிமை கொடுத்திருக்கிறோம்—பேச்சுரிமை, எழுத்துரிமை கொடுத்திருக்கிறோம்.

பேச்சுரிமை கொடுத்ததினால் எதை வேண்டுமானாலும் பேசலாமே என்று சிலர் ஒரு பக்கம் பலத்த பிரயத்தனம் செய்கிறார்கள்; காங்கிரசின் மீது எப்படியாவது ஒரு வித அதிருப்தி உண்டாக்க வேண்டும், ஆட்சி நடத்தும் அதிகாரத்தை அவர்களிடமிருந்து தட்டிப் பறிக்க வேண்டும் என்ற ஆத்திரத்தோடு உள்ளவர்களோடுகூட சில பெரியவர்களும் சேர்ந்துவிட்டதால் அவர்களுடைய பலத்த எதிர்ப்பு இன்னொருபுறம்; இன்னொரு கட்சி இப்போதுள்ள ஜனநாயக முறை அமைப்பை மாற்றி ஒரு சிலரது சர்வாதிகாரத்துடன் பொதுவுடமையை ஏற்படுத்த வேண்டும் என்று கிளர்ச்சி செய்கிறது. இன்னொருவர் தமிழ் நாடு என்று பெயர் வையுங்கள் என்று கேட்கிறார்; இதற்கெல்லாம் மத்தியில் திராவிட முன்னேற்றக் கழகத்தார் 'வடநாடு வேறு, தென்னாடு வேறு, அவர்கள் வேறு இனம், திராவிடர்கள் வேறு இனம்' என்கிறார்கள். நாம் எல்லோரும் மனித இனம். நமக்குள் வேறுபாடுகள் எதற்காக? மிருகங்களுக்குள் கரடிக்கும் புலிக்கும் வித்தியாசம் உண்டு. நமக்குள் அதைப்போல் கிடையாது. நாமும்



மிருகங்களாக ஆகவேண்டுமா என்ன? அது வேண்டவே வேண்டாம்.

## வரலாறு தரும் பாடம்

தமிழ் நாட்டில் மட்டும் நிலையான அரசாங்கம் இருந்தால் போதுமா? போதவே போதாது. பலமான மத்திய அரசாங்கமும் கூடவே இருந்தால்தான் நமது தேசம் பூராவிற்கும் நல்ல வசதியையும் நல்ல பாதுகாப்பையும் செய்துகொள்வது சாத்தியமாகும்.

வெளி நாடுகளுடன் தொடர்பு கொள்ளவும், தொழில், வாணிபம் முதலிய வளங்களைப் பெருக்கவும் பலமான மத்திய அரசாங்கம் அவசியமாகும்.

நமது நாடு பரந்த தேசம். இதில் பல மொழிக்காரர்களும், பல ஜாதி, மதங்களைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். இந்த வித்தியாசங்களைப் பெரிதுபடுத்திக் கொண்டிருந்தால் முடிவில்லாத தகராறுகள் தான் ஏற்படுமே தவிர, நாட்டில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படாது.

நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதிலும் ஒற்றுமையோடு பாடுபடுவதிலுந்தான் நமது முன்னேற்றம் இருக்கிறது. இந்த அடிப்படையில் அமையும் பலமான அரசாங்கமே

நமக்கு நல்வாழ்வையும் பாதுகாப்பையும் அளிக்க வல்லது.

வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் தேசத்தில் எங்கெந்தக் காலத்தில் பலமான மத்திய ஆட்சி நடைபெற்றதோ, அந்தக் காலங்களில் தான் நல்ல முன்னேற்ற வேலைகள் நடைபெற்று, மக்கள் அமைதியாகவும், நிம்மதியாகவும், சுபிட்சத்துடனும் வாழ்ந்தனர் என்பதைக் காண்கிறோம்.

பலமான மத்திய ஆட்சி பலவீனப்பட்டு, குட்டி ராஜாக்கள் ஏற்பட்டிருந்த காலங்களில் நாட்டில் சண்டை சச்சரவு ஏற்பட்டு, அமைதி குன்றி, சுபிட்சம் கெட்டு மக்கள் திண்டாடியதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட சமயங்களில்தான் அந்நியர் படையெடுத்து வந்துள்ளனர் என்பதையும் அறிகிறோம்.

இந்தியாவில், மத்திய ஆட்சி பலமற்று, குட்டி ராஜாக்கள் அதிகரித்திருந்த காலத்தில் தான் வெள்ளைக்காரர்கள் நமது நாட்டை அடிமைப்படுத்தினர் என்பதும் நமக்குத் தெரிந்ததே. அந்தப் பாடத்தை மறப்பதா ? கூடவே கூடாது.

## ஒற்றுமையின் விளைவு

காந்திஜியின் தலைமையில் சாதி, மத மொழி பேதங்களை மறந்து நாமெல்லாம் ஒற்றுமையாக வெள்ளையனை எதிர்த்துச் சுதந்திரம் அடைந்தோம். அந்தக் காலத்திலும், வெள்ளைக்காரன் கொடுத்துவிட்டுப் போன சர்வ சுதந்திரத்துடன் பல குட்டி ராஜாக்கள் நமது தேசத்தில் இருந்தனர். அவர்களில் பலர் படைகளைத் திரட்டிப் பக்கத்து ராஜ்யங்கள் மீது படையெடுத்துச் சண்டை போடவும், நாட்டின் அமைதியைக் குலைக்கவும் திட்டமிட்டனர். என்றாலும், காந்திஜியின் தலைமையின் மூலம் நமக்குக் கிடைத்த ஐக்கிய பலத்தாலும், ஒற்றுமையின் விளைவினாலும் காங்கிரஸ் அமைத்திருந்த பலமான மத்திய அரசாங்கம் எல்லா குட்டி அரசாங்கங்களையும் நல்ல முறையில் இந்தியாவுடன் இணைத்து ஒரே தேசமாகப் பலப்படுத்தியது.



இதே மாதிரிதான் இந்தியாவிலிருந்த அந்நிய நாட்டுக் காலனிகளும் நம்முடன் சேர்க்கப்பட்டுள்ளன.

மத்திய ஆட்சி மூலம் பொருளாதார முன்னேற்றத்திற்காக இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு, நல்ல முறையில் முடித்துவிட்டோம். இப்போது மூன்றாவது திட்டம் செயல்பட்டுக் கொண்டு வருகிறது,

திட்டங்கள் மூலம் நாட்டில் படிப்படியாக நல்ல தொழில் வளமும், வேலைவாய்ப்பும், கல்விப் பெருக்கமும் பெருகி வருகின்றன.

பலமான மத்திய ஆட்சி இருப்பதால்தான் பரந்த தேசத்தின் அடிப்படையில் பெரிய

திட்டங்களைப் போட்டு, அதற்கான மூலதனங்களைத் திரட்டவும், இயந்திர, தொழில் நுணுக்கச் சாதனங்களைச் சேகரிக்கவும் அவசியமான வெளிநாட்டு உதவிகளையும் வசதிகளையும் பெற முடிகிறது.

நிலையான அரசாங்கம் தமிழ் நாட்டில் ஏற்பட்டால் போதாது. மத்திய அரசாங்கத்திலும் தொடர்ந்து இருப்பது அவசியம்.

## விஷப் பரிட்சையா!

தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல், மத்திய ஆட்சியிலும் நிலையான அரசாங்கத்தை ஏற்படுத்தும் சக்தியைப் படைத்த கட்சிக்கு வோட்டுப் போடுவதுதான் நாட்டின் வளம் மேலும் பெருகவும் நல்ல பாதுகாப்புக்கும் வழி வகை செய்யும் என்பதையும் உணரவேண்டும்.

காங்கிரஸ் ஏற்கனவே ஆளுங் கட்சியாக, தமிழ் நாட்டிலும் மத்திய ஆட்சியிலும் பொறுப்பை ஏற்று நிலையான அரசாங்கத்தை நல்ல முறையில் நிர்வகித்து வருவது எல்லோருக்கும் தெரிந்ததே.

காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடும் கட்சிகள் ஏதாவது ஒரு கட்சிகூட மெஜாரிடி பலம் பெற்று அரசாங்கத்தின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளப் போகிறோம் என்று சொல்வ



தில்லை. அப்படிப்பட்ட பலத்தைப் பெறுகின்ற அளவுக்குத் தேர்தலில் போட்டி போடவும் இல்லை.

காங்கிரசை எதிர்க்கும் கட்சிகளில் எதுவும் தனது சுய பலத்தினால் மெஜாரிடி பலம் பெற்று காங்கிரசுக்குப் பதிலாக அரசாங்கப் பொறுப்பை ஏற்க முன் வராவிட்டாலும், காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதை மட்டுமே பெரிதாகப் பேசி வருகின்றனர். இது நல்லதா ?

அப்படியே காங்கிரசுக்குப் பலம் குறைந்து, மற்ற கட்சிகள் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைப்பதானாலும், அது நிலையற்ற அரசாங்கமாகத்தான் இருக்க முடியும் என்பதைப் பொதுமக்கள் நன்றாகச் சிந்தித்து உணர வேண்டும்.

ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கைகளைக் கொண்ட கட்சிகளின் கூட்டு அரசாங்கம் ஏற்படும் நிலைமை எப்போதும் உருவாகக் கூடாது. நமது நாட்டில் கூட்டு அரசாங்கம் என்பது ஒரு ‘விஷப் பரிட்சை’யாகத்தான் இருக்கும். அத்தகைய ‘விஷப் பரிட்சை’க்கு நமது மக்கள் தயாராக இருக்க மாட்டார்கள்.

## தேவையற்ற பேத உணர்ச்சி

**நா**டு உயர்ந்தால்தான் நாம் உயர்வோம். இதற்கு வேற்றுமை மனப்பான்மை இல்லாமல் காந்திஜி காட்டிய வழியில் பணி புரிய வேண்டும்.

நாம் இது விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எந்த வெறிக்கும் இடந் தரக்கூடாது. இவன் மலையாளி, இவன் தமிழன், இவன் கன்னடியன், அவன் மகாராஷ்டிரன், அவன் வடநாட்டான், இவன் தென்னாட்டான் என்று பேசுவார்கள். இப்படிப் பேசிப்பேசி, இவன் இந்து, அவன் முஸ்லிம் என்று சண்டை போட்டுத்தான் 200 வருடங்கள் அடிமையாய் இருந்தோம். மீண்டும் அத்தகைய நிலையை நாம் உருவாக்கிக் கொள்ளக் கூடாது.

இந்து, முஸ்லிம், கிறிஸ்தவன், நாடார், தேவர், பிள்ளை என்று மத, இனசாதி பேதம் பாராட்டுதல் கூடாது. பேதம் கற்பிப்பதற்காக ஊர் ஊருக்குச் சிலர் இருப்பார்கள். இவர்களிடத்திலும் நாம் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும்.

## அருமையை எண்ணினால்...

**ந**பிநாயகம் காலத்திற்கு முன்பிருந்தே பல வேறு மதத்தவர்கள் இந்தியாவில் இருந்திருக்கின்றனர்; குடியேறியும் இருக்கின்றனர். அவர்களின் நாகரிகங்களெல்லாம் இந்தியாவுக்கு நன்மையே அளித்திருக்கின்றன. கட்சிகளாக இருக்கட்டும் அல்லது மதங்களாக இருக்கட்டும், நல்ல கொள்கைகள் இருந்தால் அவைகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எந்த மதத்தவரையும் எந்த நல்ல கொள்கைகளையும் இந்தியா ஏற்றுப் பொறுத்து வந்திருக்கிறது. நல்லவைகளை ஏற்பதால் தப்பு வந்துவிடாது. காந்தியடிகள் எல்லா மதத்தவர்களும் மனமொத்து வாழலாம் என்பதற்கு வழி காட்டியுள்ளார்.



இந்திய சுதந்திரத்திற்கு முஸ்லிம்கள் பெரும் தொண்டு புரிந்திருக்கிறார்கள். கிலாபத் இயக்கம் நல்ல முறையில் நடந்தது. அலி சகோதரர்களைப் போன்றவர்கள் அபார தொண்டு செய்திருக்கிறார்கள்.

முஸ்லிம்கள் வாழாவிட்டால் இந்துக்கள் வாழ முடியாது. இந்துக்கள் வாழாவிட்டால் முஸ்லிம்கள் வாழ முடியாது. சில புதுத் தலைவர்கள் தோன்றி வடநாடு, தென்னாடு, சாதி, இனம், மொழி என்று சொல்லி வருகிறார்கள். இந்திய மக்களின் ஐக்கியத்தைக்குலைக்க சிலர் ஏதாவது சொல்வார்கள். அந்த நேரங்களில் நம் சுதந்திரத்தின் அருமையை எண்ணினால் நமக்குள் சண்டை போட்டுக் கொள்ள மாட்டோம். காங்கிரஸ் தலைவர்களுக்குப் பேத உணர்ச்சியில்லை. புதுத் தலைவர்களுக்குத் தான் இந்தப் பேத உணர்ச்சி இருக்கிறது.

முஸ்லிம்கள் விலகிப் போக எண்ணக் கூடாது. அப்படியே போனாலும் எங்கே போவார்கள்? இந்துவுக்கு உள்ள உரிமை முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களுக்கும் உண்டு. ஆகவே, மத, இனபாகுபாடு கொள்ளாது எல்லோரும் ஒற்றுமையாக வாழவேண்டும்.

## அடித்துக் கொண்டு சாவதா?

நாடு ஒன்று, நாமெல்லாம் இந்தியர்— என்ற எண்ணத்தை ஏற்படுத்த மகாத்மா அரும்பாடுபட்டார். அவர் எண்ணம் ஓரளவு செயலானதால்தான் நாடு சுதந்திரம் அடைந்தது. மீண்டும் பழைய கேடுகளைத் திரும்பப் புகுத்த பலர் வேலை செய்கிறார்கள். கச்சை கட்டிக் கொண்டு கட்சிகள் எல்லாம் வேலை செய்கின்றன. இதைப் பணம் படைத்தவர்கள்தான் தூண்டிவிடுகிறார்கள். ஆனால், அவதிப்படுவது ஏழைகள். தூண்டி விட்டு விட்டு, அவர்கள், எல்லா சாதியையும் சேர்ந்த பணக்காரர்கள்--தங்களுக்குள் சிநேகமாக இருப்பார்கள். நாம்தான் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு சாவோம். இந்தப் பிளவு மனப்பான்மையை அடியோடு ஒழிக்க வேண்டும். நம்மோடு-நம் காலத்தோடு இந்தக் கேடுகள் எல்லாம் குழிதோண்டிப் புதைக்கப்பட வேண்டும். நமது பிள்ளைகள்--குழந்தைகள், நமது சண்டையைப் பார்த்து அந்தப் பிஞ்சு



மனங்களிலும் இந்தப் பிரிவினை மனப்பான்மை தோன்றி விடக் கூடாது. அவர்கள் இன்னும் நெடுங்காலம் வாழ வேண்டியவர்கள்.

சமுதாயத்தில் பல குறைகள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. அவைகளுக்கு நல்ல வழியில் தீர்வு காண வேண்டியது நமது கடமையாகும்.

## தைரியமில்லை

சுதந்திரம் வந்த காலத்திலிருந்து காங்கிரஸ் கட்சியே ஆட்சியிலிருப்பது மற்ற கட்சிக்காரர்களது கண்ணை உறுத்தலாம். கருத்தைக் குழப்பலாம். இதற்குக் காங்கிரஸ் என்ன செய்வது? அதற்கு வோட்டுப் போட்டு, ஆட்சிப் பொறுப்பில் அமர்த்திய மக்கள் மீது கோபித்துக் கொள்கிறார்களா, என்ன?

பொது மக்களை நேரடியாகக் குறை கூற ஒரு கட்சிக்கும் தைரியம் வரக் காணோம். ஆனால், காங்கிரசைக் குறை கூறுகிறார்கள்.

## அட்டை மாதிரி...

சுதந்திரம் வந்ததும் நாட்டை ஜனநாயக முறையில் எப்படி ஆள்வது என்று அரசியல் சட்டம் செய்யப்பட்டது. அதன்படி வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை தரப்பட்

டுள்ளது. ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை தேர்தல் நடக்கிறது. தேர்தலில் எந்தக் கட்சி வேண்டுமானுலும் போட்டிப் போடலாம். மெஜாரிட்டியான இடங்களில் ஜெயித்துச் சர்க்கார் அமைக்கலாம். இப்படித்தானே காங்கிரஸ் கட்சி தொடர்ந்து ஆளுங் கட்சியாகும் சந்தர்ப்பம் கிடைத்து வருகிறது?

ஜனங்களிடத்தில் ஒவ்வொரு கட்சியும் அதனுடைய திட்டத்தை எடுத்துச் சொல்லட்டும். தேர்தலில் போட்டியிட்டு ஜெயிக்கட்டும். மெஜாரிட்டியாக வரட்டும், சர்க்கார் அமைக்கட்டும். இதைத் தடுப்பது யார்? ஒருவராலும் தடுக்க முடியாதே! இதைச் செய்வதை விட்டு, ஒவ்வொரு கட்சியும் என்ன சொல்லுகின்றன!

பொதுவாக எல்லாக் கட்சிகளுமே இன்று ஒரே ஒரு பாட்டைத்தான் பெரிதாகப் பாடத் தொடங்கியுள்ளன. "பார்! பார்! இந்த காங்கிரஸ்காரன் பதவியில் அட்டை மாதிரி ஒட்டிக் கொண்டிருக்கின்ருன்! விட மாட்டேன் என்கிருன்!" என்ற பாட்டைத்தானே எல்லாக் கட்சிக்காரர்களும ஏதோ பெரிய குற்றத்தைச் சுமத்துவது போலப் பாடுகிருர்கள்! இதில் உண்மை இருக்கிறதா சொல்லுங்கள்!



## பொதுமக்கள் கவலே

மந்திரி பதவி என்பது யாருக்காவது சொந்தமானதா என்ன? தனி உடைமையா அது? கிடையவே கிடையாதே. மக்களின் மெஜாரிட்டி ஆதரவைத் தேர்தல் மூலம் யார் பெறுகிருர்களோ அவர்கள் பதவி வகிக்க முடியும், இதுதானே சட்டம்? இந்த சாதாரண அரசியல் அறிவையும், உண்மையும்கூட தெரியாதவர்களேப்போல, மற்ற கட்சிக்காரர்கள் பேசுகிருர்களே! ஏதோ காங்கிரஸ், பதவியைத் தனக்கே சொந்தமாக்கிக் கொண்டதாகப் பிரச்சாரம் செய்வது எதற்காக? ஜனங்களேச் சுலபமாக ஏமாற்றிவிடலாம் என்ற எண்ணமா? அது எப்படி முடியும்!

பதவியில் யார் அமர்வது என்பது பெரிதல்ல. அதில் யார்வேண்டுமானுலும், அதற்கென்று சட்டப்படி உள்ள வழி முறைகளேப் பூர்த்தி செய்துவிட்டுப் போய் அமர்ந்து கொள்ள முடியும். ஆனுல், மக்களுக்கு யார் நன்மை செய்தார்கள்—செய்வார்கள்—செய்யப் போகிருர்கள் என்பதுதான் முக்கியம். இதில் கட்சிகளேவிட, பொது மக்களுக்குக் கவலே மிகவும் அதிகமாக இருக்கிறது. யாரைப் பதவியில் உட்கார வைப்பது என்பதை அவர்கள் தீர்க்கமாக யோசித்துத்தான் முடிவு செய்து வருகிருர்கள்—இனியும் செய்வார்கள். இதில் யாருக்கும் சந்தேகமே வேண்டாம்.

## செய்யவேண்டியதை விட்டு...

பதவியைப் பிடிக்க வேண்டும்; பதவியில் அமர்ந்து ஆட்சி செலுத்தவேண்டும். அதன் மூலம் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கட்சிகள் விரும்புவது தவறு அல்ல. இதற்கு என்ன செய்யவேண்டும்? தங்கள் திட்டங்களை மக்கள் முன் வைத்துப்பிரச்சாரம் செய்து தேர்தலில் போட்டியிட வேண்டும். மக்கள் பெருத்த ஆதரவு தந்தால் பதவியில் உட்காரலாம். ஆட்சியைப் பிடிக்க நினைப்ப வர்கள் ஒழுங்காகச் செய்யவேண்டிய காரியம் இதுதானே! இதைச் செய்கிறார்களா? செய்ய வேண்டிய காரியத்தை விட்டு விடுகிறார்கள்! ஆனால்; காங்கிரஸ்காரன் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிறான் என்று பேசி மக்களைக் குழப்பி விடலாம் என்ற வேலையிலேயே காலத் தைக் கழிக்கிறார்கள். இது வீண் வேலை.

காங்கிரஸ் சுயராஜ்ய போராட்ட காலத்தி லிருந்தே குறிப்பிட்ட திட்டங்களை மக்கள்முன் வைத்து, அவற்றை நிறைவேற்றும் அடிப் படையில் தேர்தலில் போட்டியிட்டு, மெஜாரிடி பலம் பெற்று, தொடர்ந்து ஆளும் கட்சியாக இருந்து வருகிறது. இந்த நிலையை மாற்ற வேண்டுமானால், நாட்டு மக்களைக் கவரக்கூடி யதும், நடைமுறையில் சாத்தியமாகக் கூடிய துமான நல்ல மாற்றுத் திட்டங்களை மக்கள் முன் வைத்தாக வேண்டும். இதைச் செய்யா



மல், காங்கிரஸ்காரர்களைப் 'பதவி வெறியன்' என்று மட்டும் இழித்தும் பழித்தும் பேசினால் என்ன பலன் ஏற்பட்டு விடும்?

## பதவிப் பாட்டு

காங்கிரஸ்காரன் பதவியை விடமாட்டேன் என்கிறான் என்பது ஒரு பாட்டு. "பதவியை விட்டு வெளியேறு" என்பது இதைத் தொடர்ந்த அடுத்த பாட்டு.

இந்த இரண்டு பாட்டைப் பாடியே, பதவி யைப் பிடித்து விடலாம் அல்லது பதவியில் இருப்பவர்களைப் போகும்படி செய்துவிடலாம் என்று மற்ற கட்சிகள் எண்ணிக் கொண்டி ருப்பது அந்தக் கட்சிகளுக்கே நல்லதல்ல. திருப்பித் திருப்பி இதையே பேசி மக்களைக் குழப்புவதால், நடக்கிற நல்ல காரியங்களையும் நடக்காமல் செய்யத்தானே இது பயன்படும். இதைச் சில கட்சிகள் தெரிந்தும் செய்யலாம்! தெரியாமலும் செய்யலாம். விளைவு என்ன?

பதவியில் யாருக்காக இருக்கிறோம்? யாரால் பதவியில் அமரும் யோக்கியதை கிடைத்தது? பொது மக்களால்தானே! பொது மக்களிடம் 'தேர்தலின்போது இதை இதைச் செய்கிறோம்- இந்த இந்தத் திட்டங்களை நிறை வேற்றுகிறோம். இந்த முறையில் பொறுப் போடு நடந்து கொள்கிறோம் என்றெல்லாம்

வெளிப்படையாகச் சொல்லி ஆதரவும்—வோட்டும் பெற்றோம், பதவியில் அமர்ந்திருக்கிறோம். அன்று சொன்னபடி இன்று நடக்க வேண்டாமா ?

## நட்டாற்றில் கைவிடுவதா ?

மக்கள் தங்களது "வோட்டு" என்ற உரிமை மூலம் எங்களுக்குப் பிறப்பித்த கட்டளைப்படி பதவியில் இருந்து காரியம் செய்து வருகிறோம். இன்றைக்கு "போ, போ,' என்று சில கட்சிகள் கூப்பாடு போடுவதைக் கேட்டுக் கொண்டு பதவியை விட்டுப் போவதா ! போய் விடவா ! அப்படித்தான் செய்ய வேண்டுமா ? அதுதான் ஜனநாயகமா ? அரசியல் அறிவா ? நேர்மையா ? மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் காட்டும் உறுதியா ? நாணயத்திற்கு எடுத்துக் காட்டா ? சொல்லுங்கள் !

காங்கிரசை மனதார நம்பி, ஆதரவளித்த மக்களை நட்டாற்றில் கைவிட்டு, பதவியை விட்டுப் போகமாட்டோம். அதுவும் அர்த்தமில்லாமல் பிற கட்சிகள் சொல்வதைக் கேட்பது ஜனநாயகப்படியும் சரியல்ல. எங்கள் கட்சியைப் பதவியில் அமர்த்திய மக்களுக்கு எங்களால் இயன்றதை—ஏற்கனவே சொன்னதைச் சொன்னபடி செய்தே தீருவோம்.



இதனைப் பிற கட்சிகள் உணர்ந்து உருப்படியான திட்டங்களுடன் வேலை செய்ய முன் வரட்டும். நாங்கள் மாலை போட்டு வரவேற்கத் தயார்.

## கவனத்திற்குரிய கட்டம்

சுயராஜ்யம், சம வாழ்வுக்கான சுதந்திர யாத்திரையின் ஒரு கட்டம்—முதல் கட்டம் தான்.

நாட்டில் உள்ள பின்தங்கிய நிலைமையை —சூழ்நிலையை மாற்ற வேண்டும். அறியாமையை அகற்றித் தொழில் பெருக்கத்துக்கும் வேலை வாய்ப்புக்கும் ஏற்ற வழி காண வேண்டும். இயற்கைச் சக்தியையும் மனித சக்தியையும் அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்திச் சுபிட்சத்துக்கு வழி கண்டு பிடிக்க வேண்டும். இந்த மகத்தான வேலைதான் சுதந்திர யாத்திரையின் இரண்டாவது கட்டம். இந்தக் கட்டத்தில்தான் நாம் இன்று இருக்கிறோம்.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், சுதந்திரம் சுயராஜ்யம் என்பதற்கான சூழ்நிலையை, தன்னம்பிக்கையையும் எழுச்சியையும், வீர உணர்ச்சியையும், அன்று-அதாவது 1947-க்கு முன்—எப்படி ஏற்படுத்தினோமோ அதைப் போலவே, ஏன், அதையும் விட மிகவும் வேகமாகவும் நல்ல முறையிலும் சம வாழ்வுக்கான

வழி வகைகளைக் காண, நாம் தனிக் கவனம் செலுத்தியாக வேண்டும்.

## தேவைப் பெருக்கம்

நாம் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை முடித்து, மூன்ருவது திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இதற்கு மக்களின் அனுமதியையும் பெற்றிருக்கிறோம். நான்காவது திட்டமும் உருவாகிக் கொண்டிருக்கிறது.

முற்காலத்தில் ஒரு நாடு நீர்வளமும், நிலவளமும் பெற்றிருந்தால் போதும். அப்போது மக்கள் க்ஷேமமாக வாழ முடிந்தது.

இன்றும்நிலவளமும், நீர்வளமும் இருந்தால் மக்களுக்குச் சோறு கிடைத்து விடும். ஆனால் மக்களுக்கு வேறு பல தேவைகளும் இக்காலத்தில் ஏற்பட்டிருக்கின்றனவே!

நமது தேவைக்குத் தகுந்த வகையில் எல்லாவித வசதிகளையும் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த வசதிகளை நாம் செய்து கொள்ளவில்லையானால், பெருகிக் கொண்டு வரும் ஜனங்களுக்கு வேலை கிடைக்காமல் போய் விடும்.

தேவை பெருகப் பெருக புதுப் புது தொழில்களை ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது.



அப்போது வேலை வாய்ப்பு அதிகரித்துக் கொண்டு போகிறது.

முன்பு கிராமங்களில் கூரை வீடுகளாகத் தான் இருக்கும். இப்போது அவை கட்டிடங்களாக மாறி வருகின்றன. திட்டங்களால் மக்களின் வருமானம் உயர்ந்திருக்கிறது என்பதுதானே இதன் அர்த்தம்!

## ஜனநாயகத்திற்கு ஆபத்து

ஜனநாயகத்தில் மாறுபட்ட கருத்துக்கு மதிப்புக் கொடுக்கவேண்டியது அவசியமே. ஆனால், ஜனநாயகத்தைப் பயன்படுத்திக் கொண்டே நாட்டு முன்னேற்றத்திற்குத் தடை போடும் முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. தங்கள் சுயநலம் தடைபடுவதால் அவர்கள் சர்க்கார்மீது குறைகூற ஆரம்பித்து விடுகிருர்களே! இது நல்லதா?

நல்ல எண்ணத்தோடு, நாடு முன்னேற வேண்டும் என்ற இலட்சியத்தோடு குறை கூறினல் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனல் இன்று அடிப்படையான நாட்டு ஒற்றுமைக்கே பாதகம் ஏற்படும் வகையில் நாட்டுப் பிரிவினைக்காக சிறு குறைபாடுகளையும் பயன் படுத்துகிருர்களே!

திட்டங்களால் பலர் நன்மை அடைகிருர்கள். ஆனல் நன்மை கிடைக்காத சிலரின்

குறைபாடுகளை எடுத்துக்கூறி கூச்சலிடுகிறார்கள். இதனால் நன்மை அடைந்தவர்களுக்கும் நன்மை ஏற்படவில்லையோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. இதுபற்றி நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஜனநாயக முறையைப் பலப்படுத்த நம் மனத்தில் பலமான எண்ணம் இருக்க வேண்டும். ஜனநாயகத்திற்கு நம் நாட்டில் இரு ஆபத்துக்கள் இருக்கின்றன. கம்யூனிஸ்டுகளால் இந்த ஆபத்து வரலாம். அல்லது முதலாளிகளிடமிருந்து இந்த ஆபத்து வரலாம்.

## அந்த ஜீவசக்தி

நாட்டில் சிறிய சக்திகள் பலப்பட்டு வருகின்றன. இந்தச் சக்திகளைப் பயன்படுத்தி முதலாளிகள் ஆட்சியைக் கைப்பற்ற நினைக்கின்றனர். இந்த இரு மோதல்களுக்கிடையே நாம் நிற்கிறோம். நமக்கு ஜனநாயகத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையும் உறுதியும் இருந்தால் நாம் பயப்பட வேண்டியதில்லை. இந்த உறுதி நமக்கு மாத்திரம் இருந்தால் போதாது. நம் இளைஞர்களுக்கும் இந்த உறுதியும் நம்பிக்கையும் ஏற்படச் செய்ய வேண்டும்.

பலவகைக் கட்சிகள் சுதந்திரம் வருவதற்கு முன்பும் இருந்தன. ஆனால் தனியாக, துணிவுடன் இருக்க காங்கிரசால்தான் முடிந்



தது. அந்தக் காலத்தில் இருந்த ஜஸ்டிஸ், இந்து மகாசபை, முஸ்லிம் லீக் போன்ற கட்சிகள் காங்கிரசுக்குத் தடையாக இருந்தன. அவற்றின் தடைகளை உடைத்துச் சுதந்திரமடைந்தோம். இதற்குத் தைரியமிருந்தது.

கோழைகளாக இருந்த நமக்கு காந்திஜி தைரியமூட்டினார். மண் பொம்மைகளாக இருந்த நமக்கு ஜீவசக்தியைக் கொடுத்தார். இப்போது காணப்படும் வேற்றுமைகள் அப்போதும் இருந்தன. காங்கிரஸ் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் தெரியும். பலவீனத்தை நாம் மறைக்க வேண்டியதில்லை. அதை உணர்ந்து விவாதித்து நல்ல முடிவுக்கு வர வேண்டும். காங்கிரஸ் என்பது பெரிய தேசிய, ஜனநாயக ஸ்தாபனமாகும். எனவே, காலப் போக்குக்கு ஏற்றவாறு தலைவர்கள் நடந்து வித்தியாசங்களைப் போக்கி வருகிறார்கள்.

## சமவாழ்வுத் திட்டம்

எல்லோரும் வாழ வழி செய்வதுதான் காங்கிரசின் இலட்சியம். யாரையும் தொந்திரவு செய்ய வேண்டுமென்ற ஆசை யாருக்கும் கிடையாது.

சில தனி நபர்களிடம் குறைபாடு இருந்தால் அதை நீக்க முடியும். நியாயமான குறைகளை நீக்க வேண்டியதுதான். இதை வைத்துக்

கொண்டு காங்கிரஸ்மீது துவேஷத்தை உண்டுபண்ணுவது சரியல்ல.

சமுதாயத்தில் உயர்நிலையிலும், பொருளாதார வாழ்வில் வசதியும் படைத்தவர்கள் ஏழைகளது வாழ்வு உயர்த்தப்படுவதால் தங்களது வாழ்வு அழிந்து விடுமோ என்று அச்சப்படுகின்றனர். எவருடைய வாழ்வையும் அழிப்பதற்காக காங்கிரஸ் இல்லை. அப்படி ஒரு நாளும் இருக்கவும் முடியாது. எல்லோரையம் நல்லபடி வாழ வைப்பது ஒன்றுதான் அதன் குறிக்கோள். சம வாழ்வுதான் அதன் செயல் முறைத் திட்டம்.

சுதந்திரம் வந்ததும் ஏற்கனவே உயர் நிலையிலும், வசதியிலும் உள்ளவர்கள் மேலும் உயர்ந்து கொண்டே போக விரும்புகின்றனர். இது மனித இயற்கைதான். ஆனால் பல கோடி ஏழைகளின் வாழ்வை உயர்த்தும்போது அப்படிப்பட்ட வசதிக்காரர்கள் வாழ்வு உயர்வது தடைபட்டுப் போகலாம். அல்லது அவர்கள் விரும்புகின்ற மாட மாளிகை வாகன வசதிகள் பெருகிய பெரும் உல்லாச வாழ்வு சிறிது குறைந்துங்கூடப் போகக் கூடும். இதற்காக கோபப்படுவதா ?

## வசதிக்காரன் கோபம்

சுதந்திரப் போராட்ட காலத்தில், காங்கிரசுக்கு ஆதரவாக சமூகத் தலைவர்களும், பெருந் தொழிலதிபர்களும், படித்தவர்களும், பணக்



காரர்களும் பெரிதும் துணை புரிந்தனர். அவர்களது பண உதவியும், மற்ற வேலைகளும் குறிப்பிடத் தகுந்ததாகக் கூடத்தான் இருந்தது. அதற்காக இன்றைக்கு அவர்களை மட்டுமே காங்கிரஸ் 'தாங்கி', வளர்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் கேட்பதும் நியாயமல்ல.

மேற்குறிப்பிட்டவர்கள் காங்கிரசின் பக்கம் துணையாக இருந்து உதவி செய்தது வெறும் தேசிய மனப்பான்மை ஒன்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டதா? காங்கிரஸ் சுதந்திர போராட்டக் காலந் தொட்டு நடத்திய சுதேசி இயக்கமும், விடுதலைப் போராட்டமும் பலருக்கும் தொழில் பெருக உதவி செய்ததும் ஒரு முக்கிய காரணமாக இருந்தது. உத்தியோகம் பெறவும், படிப்பை யொட்டிய பல தொழில்களை விருத்தி செய்ததும் காரணந்தானே.

விடுதலைப் போராட்டக் காலத்திலும் அத்தகையவர்கள் காங்கிரசின் மூலம் பெரிதும் பலன் அடையத்தான் அடைந்தார்கள். இது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும்.

அப்படி ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பலனை அனுபவித்துப் பொது வாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் வசதியும் வளர்ச்சியும்

பெற்றவர்கள், பழைய உதவியைச் சுட்டிக் காட்டி எங்களுக்கு ஒரு குறைவும் வராமல் பாதுகாப்பதோடு மேலும் உயர வழி சொல்! இதைவிட்டு ஏழைகள் பாட்டுப் பாடுவதா என்று கேட்பது சரியா?

## தலையாய கடமை

நாட்டு விடுதலைப் போரில், காந்திஜியின் கட்டளைக்கிணங்க எத்தனையோ கோடி ஏழைகள், படியாத மக்கள், தொழிலாளிகள் காங்கிரசின் பக்கம் இருந்து கஷ்டப்பட்டனர். மக்கள் தொகையில் பெரும் பகுதியான இப் படிப்பட்ட மக்கள் விடுதலை இயக்கத்தை வெளிப்படையாகவும், மிகப் பெரும்பான்மையான அளவிலும் ஆதரித்ததால்தானே வெள்ளையன் வெளியேறினான்!

அப்படிப்பட்ட ஏழைகளுக்குச் சுதந்திரம் வந்ததும் வாழ வழி செய்வதுதானே காங்கிரஸ் அரசாங்கத்தின் தலையாய கடமை! வாழ வழியே இல்லாத கோடானு கோடி மக்களுக்கு ஓரளவுக்காகிலும் வாழ வழி செய்து விட்டுத்தானே வசதிக்காரர்களைப் பற்றிய வசதிக் 'குறை'களைப் பற்றிச் சிந்திக்க முடியும்?



## நாடெங்கும் தெரிந்தது

சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வு கூடாது. பிறப்பினால் பேதமோ, உயர்வு தாழ்வோ இருப்பது அநீதி. அது அகற்றப்பட வேண்டும். பொருளாதார சமத்துவம் ஏற்படுத்த வேண்டும் என்பதைக் காங்கிரஸ் தனது கொள்கையாகப் பல வருடங்களுக்கு முன்பே பகிரங்கமாக அறிவித்து, அதற்காகப் பாடுபட்டும் வருகிறது. இது நாடெங்கும் தெரிந்தது தானே?

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கொள்கையை, சுதந்திர அரசாங்கம் செயல்படுத்துவது கண்டு பயம் ஏன்? அதைக் கண்டு அச்சம் ஏன்?

இப்படிப்பட்ட பயமும், அச்சமும் ஏற்கனவே காங்கிரசில் இருந்து, பாடுபட்டு உழைத்தவர்களில் முக்கியமான சிலருக்கு ஏற்படுவதுதான் வேடிக்கையாக உள்ளது.

## நடவாத காரியம்

காந்திஜியும் காங்கிரசும் சம வாழ்வுச் சமுதாய அமைப்புக் குறித்து வேடிக்கைக்காகப் பேசவில்லை என்பதை அனைவரும் உணர வேண்டும்.

சுதந்திரம் வந்ததும், சுக வாழ்வுக்காரர்களும், சமுதாயத்தில் உயர்ந்தவர்களும் தங்கள் ஆதிக்கத்தைத் தொடரலாம்; மேலும் வளத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்று நினைப்பது நடவாத காரியம். இதனை உணர்ந்து கொண்ட சிலர் காங்கிரசை விட்டு ஓடிவிட்டனர். பழைய ஆதிக்க சமுதாயத்தை மீண்டும் அமைக்க பல விதங்களிலும் முயற்சிக்கின்றனர். அது நடக்குமா என்ன? ஒருக்காலும் நடக்கவே நடக்காது.

## வியாதிக்கு மருந்து

நாட்டின் முன்னேற்றத்தைத் தடுக்க நடக்கும் முயற்சியின் உருவம்தான் சுதந்திரக் கட்சி. இதற்கு உறு துணையாக இருப்பவை நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று கருதும் மிக மிக பிற்போக்கான தி. மு. கவும், ஒருதரம் நாட்டைப் பிரித்த முஸ்லீம் லீக் கட்சியும் தான்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு, சமத்துவம் உடைய சமுதாயத்தை அமைப்பதற்குத் தடையாக இருக்கும் இந்த வியாதிக்கு நல்ல டாக்டராகப் பார்த்து வைத்தியம் செய்ய வேண்டும். வேண்டுமானால் ஆபரேஷனும் செய்ய வேண்டும்.



V911, அ 97 N8 N5

## இணைப்புச் சக்தி

காங்கிரஸ் கட்சி நாட்டின் இணைப்புச் சக்தியாக விளங்கி வருகிறது. காங்கிரஸ் இல்லாவிட்டால் நாடு துண்டாகி, பல சிறு ராஜ்யங்கள் ஏற்படலாம். ராஜாக்கள் இல்லாவிட்டாலும் அந்தச் சிறு ராஜ்யங்களை மந்திரிகள் ஆளலாம். இதனால் சண்டை சச்சரவு தானே வளரும்? நாட்டில் ஒற்றுமை நிலவுமா? இளைஞர் சமுதாயம் இதைச் சிந்திக்க வேண்டாமா?

107995

## பழிபோட்டு ஓடுவதா?

நாட்டில் உள்ள கட்சிகள் எல்லாம் பெரிய தப்புகளைச் செய்துவிட்டு அந்தக் காங்கிரஸ் மேல் போடுகின்றன.

'மொட்டை மரத்தில் யாரும் கல் எறிய மாட்டார்கள். பூ, காய், பழம் ஆகியவை இருக்கும் மரத்தில்தான் கல்லைப் போடுவார்கள்.' காங்கிரசு ஏதாவது தவறு செய்தால் கண்டிக்கிறார்கள். இதுபோல் தவறு செய்வது நாட்டுக்குக் கெடுதல் என்று "புத்தி" சொல்கிறார்கள். ஆனால் அதே தப்பை "புத்தி" சொல்பவர்களே செய்துவிட்டு, அதை மறைக்க காங்கிரஸ் மீது பழிபோட்டு ஓடப் பார்க்கிறார்கள். தப்பு செய்துவிட்டு அவர்கள் ஓடுகிறார்கள். நாம் ஓடத் தயார் இல்லை. தவறு செய்திருந்தால்

திருத்துவோம். நின்று, நிதானித்து, நல்லபடியாக நாட்டுக்கான கடமையைச் செய்தே தீருவோம்.

காங்கிரஸ்காரர்கள் ஆகாயத்திலிருந்து கொண்டுவரப்பட்டவர்கள் என்றோ, அரசாங்க அதிகாரிகள் ஆகாயத்தில் இருந்து கொண்டு வரப்பட்டவர்கள் என்றோ நாங்கள் சொல்ல வில்லை. எல்லாம் இந்த மண்ணால் செய்யப் பட்டவர்கள்தான். ஒரே மண்தான். இதை ஏனோ மறந்து விட்டார்கள்.

## இருக்கும் வசதியைக் கொண்டு...

இப்போது நமது பிரச்சினை என்ன? நாட்டில் உள்ள 45 கோடி மக்களும் நல்வாழ்வு வாழ வழி செய்ய வேண்டும். எல்லோரையும் படிக்க வைக்க வேண்டும். எல்லோருக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும். இதுதான் அரசாங்கத்தின் முக்கிய கடமை. இதைச் செய்யாவிட்டால் ஆட்சியில் இருப் பவர்களைக் கேட்க வேண்டியதுதான். அதற்கு நாங்கள் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். ஆனால், இதை விட்டு விட்டு நாட்டைப் பிரிக்க வேண்டும் என்றார்களே! இதுவா எதிர்க்கட்சி யின் கடமை?

சில இடங்களில் இயற்கை வசதிகள் காரணமாக அதிக சௌகரியங்கள் இருக்க



லாம். சில இடங்களில் குறைவாக இருக்கலாம். அந்த முறையில் ஏற்றத்தாழ்வு இருந்துதான் தீரும். இதை யாரும் எதுவும் செய்ய முடியாது. மழை பெய்தால்தானே நீர்த்தேக்கம் கட்டினா லும் பலன் கிடைக்கும்? எனவே வடக்கே ஒரு நீர்த்தேக்கத்தைக் காண்பித்து அதைப் போல் இங்கு இல்லை என்று கூறினால் அதற்காக நாட்டைப் பிரிக்க முடியுமா? இருக்கும் வச தியைக் கொண்டுதானே நமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்? இல்லா தது வருமா!

## எதை எதிர்க்கின்றனர்?

இந்நாட்டில் எதிர்க்கட்சிகளுக்குப் பேச்சு சுதந்திரம் உண்டு. எழுத்துரிமை உண்டு. ஏன் இந்த உரிமைகள் எல்லாம்? யாரும் அர சாங்கத்தைப் பார்த்துப் பயப்பட வேண்டிய தில்லை. பயப்படுவதென்றால் ஆட்சியில் இருப் பவர்கள்தான் மக்களைப் பார்த்துப் பயப்பட வேண்டும். நல்ல காரியங்கள் செய்யவேண் டும். இல்லாவிட்டால் பொதுமக்கள் ஓட்டுப் போடமாட்டார்கள்.

இன்று பல அரசியல் கட்சிகள் நாட்டில் குழப்பம் ஏற்படுத்துவதைத் தவிர வேறு எந்தக் கொள்கையும் இல்லாதவைகளாக இருக்கின்றன. நாட்டிற்கு நல்லவழி காட்ட தலைவர்கள் வேண்

டுமே தவிர, குழப்பங்கள் செய்வதற்காக ஒரு தலைவரும் கட்சியும் தேவையில்லை.

காங்கிரசை எதிர்ப்பதாகக் கூறுகின்றனர். எதை எதிர்க்கின்றனர் என்பது புரியவில்லை. சம்பளமில்லாத கல்வித் திட்டத்தை எதிர்க்கின்றனரா? ரஸ்தா அபிவிருத்திகளை எதிர்க்கின்றனரா? மதிய உணவுத் திட்டத்தை எதிர்க்கின்றனரா? என்பது புரியவில்லை. ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வகையில் ஒரு கட்சியும் பொறுப்புள்ளதாக ஏற்படவில்லையே! இந்நிலையில் காங்கிரஸ் பலம் குன்றுமேயானால் நாட்டில் அமைதி குலைந்து அராஜகம்தானே ஏற்படும்?

ஜனநாயக அமைப்பில் நல்ல எதிர்க்கட்சி அவசியம்தான். இப்போதுள்ள எதிர்க்கட்சிகளுக்கு இத்தகைய தகுதி இல்லை. எனவே, நல்ல எதிர்க்கட்சி அமைய இன்னும் சிறிது காலமாகலாம்.

## போனால் போகட்டும்!

மந்திரிகளாக இருப்பது மாலை வாங்கிக்கொண்டு ஊர் சுற்றுவதற்கு அல்ல. நமக்கொரு இலட்சியம் உண்டு; நாட்டிலுள்ள ஏழைகளை வாழ வைக்கவேண்டும். அதற்காக காங்கிரஸ் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. அதைக் கலைக்கச் சொன்னால் ஏன் கலைக்க வேண்டுமென்று கேட்கிறேன்! தாழ்த்தப்பட்டவர்களையும் ஏழைகளையும் ஆதரிப்பதால் கலைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்களா?



காங்கிரசிலிருந்து ஓடிவிட்டவர்கள்தான் இப்படிச் சொல்லுகிறார்கள்; அந்த மாடி வீட்டு மகானுபாவர்கள் போனால் போகட்டும். அவர்கள் போவதுபற்றிக் கவலை இல்லை. குடிசைக்காரர்கள் காங்கிரசில் மேலும் அதிகமாக வந்து விட்டார்கள்; எனக்குச் சந்தோஷம் தான். காங்கிரசுக்குச் சொந்தக்காரர்கள் அவர்கள்தானே.

## கெடுதல் என்ன?

காங்கிரஸ் கட்சி ஓர் இலட்சியத்தோடு வேலை செய்கிறது. கோடானு கோடிப் பேர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு இப்போது என்ன செய்வது என்பதுதான் அதன் முன்புள்ள பிரச்சினை. இதற்காக அது வேலை செய்து வருவதால் வசதியாக இருப்பவர்கள் காங்கிரசை எதிர்க்க ஆரம்பித்து விட்டார்கள். "காங்கிரஸ்காரர்கள் எங்கேயோ போய், கடைசியில் ஏழைகளை அல்லவா ஆதரிக்கிறார்கள்!" என்று அவர்கள் பயப்படுகிறார்கள். சுதந்திரக் கட்சி அதற்காக ஏற்பட்ட கட்சி. அவர்கள் மறைக்காமல் சொல்லுகிறார்கள்—"சமதர்மக் கொள்கை, திட்டம் இரண்

டையும் விட்டுவிட்டால் சுதந்திரக் கட்சியைக் கலைத்து விடுகிறோம்'' என்கிறார்கள்.

சமதர்மத்தில் என்ன கெடுதல் இருக்கிறது? பட்டினியாக இருப்பவர்கள் எத்தனை நாளைக்கு இப்படியே இருந்து வருவது ? ஒரு சிலர் செல்வத்திலும், பலர் சாப்பிடக்கூட இல்லாத நிலைமையிலும் இருக்கலாமா ? இந்த வேறுபாடு போய் எல்லோரும் சமமாக இருக்க வேண்டும் என்பதுதானே சமதர்மம். அதில் என்ன தப்பு? நாம் எல்லோரும் முன்றேறுவதற்குத் திட்டம் போட்டு வழி செய்கிறோம். இதை வேண்டாமென்பதா ?

## ஆதரவு இருக்கும்வரையில்

இந்தியா பெரிய நாடு. நாம் எல்லோரும் வேலை செய்ய விவசாயம் மட்டும் போதுமா ? எல்லோரும் விவசாயத்தில் பிழைக்க முடியாது இதற்காகத்தான் தொழிற்சாலைகள் வேண்டுமென்று காங்கிரஸ் அரசாங்கம் வேலை செய்து வருகிறது. ஒரு சிறிய மோட்டார் ஷாப் என்று வைத்துக் கொண்டால் கார் டிரைவர், மெக்கானிக், கிளீனர் என்று சுமார் பத்துப் பேருக்கு வேலை கிடைக்கிறது. இரும்பு ஆலை வைத்தால் பத்தாயிரம் பேர் வேலை செய்யலாம் இது மாதிரி தொழிற்சாலைகள் இல்லா விட்டால நம நாட்டிலுள்ள மக்கள் என்ன ஆவார்கள் ? பழைய காலத்தில் தமிழ் நாட்டில் மூன்று



அல்லது நான்கு லட்சம் பேர்கள்தான் இருந்தார்கள். ஆனால் இப்போது மூன்று கோடிப் பேர்கள் இருக்கிறோம். நம்முடைய தேவைகளும் அதிகமாகி விட்டன.

இதையெல்லாம் சமாளித்து நிறைய தொழிற்சாலைகள் ஏற்படுத்தி, எல்லோரும் வயிறார சாப்பிடுவதற்கான வசதிகளை உண்டாக்கத் திட்டம் போட வேண்டும். என்ன ஆனாலும் சரி, மக்களுடைய ஆதரவு இருக்கும் வரையில் அவர்களுடைய முன்னேற்றத்திற்காக உழைப்போம். அதில் ஒரு சிறிதும் சந்தேகம் வேண்டாம்.

இந்த நாடு ஐக்கியமாக இருக்க காங்கிரஸ் வேண்டும். காங்கிரஸ் அழிந்துவிட்டால் எல்லாம் அழிந்துவிடும். அது நன்றாக இருக்க வேண்டும். அப்போதுதான் ஏழை மக்கள் முன்னேற முடியும்.

## சாமர்த்தியம் செல்லுமா ?

நம் நாட்டிலுள்ள முதலாளிகள் மிகவும் கெட்டிக்காரத்தனமாக நடந்து கொள்ளுவதாக நினைக்கிறார்கள். அவர்களுக்கு அவசியமானபோது சர்க்காரைத் தேடி வருகிறார்கள். வெளிநாட்டிலிருந்து கார்கள் வராமல் தடுத்து விடுகிறோம். வெளிநாட்டுக் கார்கள் —பெரிய கார்கள்-ரூ. 10,000 விலையில் கிடைக்

கிறது. அத்தகைய கார்கள் இங்கே வந்து விட்டால் இங்கே ஆரம்ப நிலையிலுள்ள கார்களை அதிக விலை கொடுத்து யாரும் வாங்க மாட்டார்கள். ஆகவேதான், தடை போடுகிறோம். அப்படிச் செய்யும்போது கார் உற்பத்தி செய்யும் முதலாளிக்குச் சந்தோஷம்; சர்க்காரைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் அல்லவா, அதனால்!

அதே முதலாளிகள், நாம் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து உதவியதின் மூலம் அவாகள் சம்பாதிக்கும் பணத்திற்கு வரி போட்டால் சுதந்திரக் கட்சிக்குப் போய் விடுகிறார்கள்! சர்க்காரைக் குறை கூறுகிறார்கள்! இது ஒரு சாமர்த்தியமா?

## ஓய்வு அவசியமா?

சக்தியுள்ள அரசாங்கத்தைக் காங்கிரஸ் தான் தர முடியும். வேறு யாராலும் முடியாது. அரசாங்கத்தை நடத்துவது 'தொல்லை பிடித்த' வேலை! "மந்திரிகள் வந்தால் மாலைகளாகப் போடுகிறார்களே, ஊர் ஊராகச் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்களே, அவர்கள் பாடு சந்தோஷந்தான் போல இருக்கிறது" என்று யாரும் நினைக்க வேண்டாம்.

நாடு கெட்டுப் போகாமல் இருக்க வேண்டும் மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்று



தான் ஆட்சியில் இருக்கிறோம். மக்கள் காங்கிரஸ் கட்சியை ஆட்சிப் பொறுப்பிலிருந்து அகற்றி விட்டால், நாங்கள் சந்தோஷமாக வீட்டுக்குப் போய் ஓய்வு எடுத்துக் கொள்ளுவோம்.

வெள்ளைக் காரன் ஆட்சி நடத்திய காலத்தில் ஆறு மாதம், ஒரு வருடம், என்று அடிக்கடி சிறையில் தள்ளுவார்கள். அதையே 'ஓய்வு' என்று கருதிக்கொண்டு, சிறைவாழ்வைக் கழிப்போம். வெளியே வந்ததும் மறுபடி போராட்டத்தை ஆரம்பிப்போம்! அது போல் இப்போதும் செய்துகொள்ள நாங்கள் தயார். அது அவசியமா! கூறுங்கள்?

## மக்கள் பொறுப்பு

நமக்கு நல்லது வேண்டுமா? நல்லாட்சி வேண்டுமா? அப்படியானால் பொறுப்போடு செயலாற்றக்கூடிய கட்சி எது என்று யோசித்துப் பார்க்க வேண்டும். நல்ல எதிர்க் கட்சி மிகவும் அவசியம். வேண்டாமென்று யாரும் சொல்லவில்லை. நல்ல எதிர்க்கட்சியை மக்கள் ஆதரிப்பதும் நல்லதுதான். ஆனால் அதற்காக ஆட்சியில் இருப்பவர்களே எதிர்க் கட்சியை ஏற்படுத்திக்கொடுக்க முடியுமா? கேரளத்தில் பார்த்தோமே—காங்கிரசின் மீதுள்ள கோபத்தால் மக்கள் கம்யூனிஸ்டுகளுக்கு ஓட்டுப் போட்டதால் என்ன நடந்தது என்பதை? கம்யூனிஸ்டுகள் தவறான பாதை

யில் சென்றதால் மக்களே அவர்களைப் புறக் கணித்து விட்டார்களா, இல்லையா?

இதற்கு முன்பு பிரஜா சோஷலிஸ்ட் கட்சி சிறிது பலமாக விளங்கும் போல இருந்தது. அதிலிருந்தவர்கள் எல்லோரும் அநேகமாக காங்கிரசிலிருந்து சென்றவர்கள் தான். சோஷலிஸ்ட் கட்சி பரவாயில்லை, வளரவேண்டும், என்று நான்கூட நினைத்தேன். ஆனால் அது பலவீனமாகப் போயிற்று, ஏனென்றால் காங்கிரஸ்காரர்கள் என்ன தவறு செய்கிறார்கள் என்று அவர்கள் கூறி வந்தார்களோ, அதே தவற்றை அவர்களும் செய்ய ஆரம்பித்து விட்டார்களே!

ஆகவே, நல்ல எதிர்க்கட்சி உண்டாகின்ற வரை நாம் காத்திருக்க வேண்டியது தான். இந் நிலைமையை நாங்கள் விரும்புகிறோம் என்று சொல்ல முடியுமா? மாற்று அரசாங்கம் ஏற்பட்டால்கூட நல்லது என்று நான் நினைக்கிறேன். அப்படி ஏற்பட்டால், காங்கிரஸ் அரசாங்கம் என்ன செய்தது, மாற்று அரசாங்கம் என்ன செய்கிறது, எது நல்லது என்று மக்களுக்குப் புரியுமல்லவா?

நல்ல எதிர்க்கட்சி ஏற்படுகிற வரையில் காங்கிரஸ் அழியாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது பொதுமக்களுடைய பொறுப்பு; இதை அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.



அது உனக்கெப்படித் தெரியும் என்று கேட்கிறீர்களா? ஏழைகளாக இருப்பவர்கள் எல்லோரும் இப்போது காங்கிரஸ் ஸ்தாபனத்தில் தைரியமாக வந்து சேர்ந்து கொண்டிருக்கிறார்கள்; மாடி வீட்டில் இருப்பவர்கள் காங்கிரசிலிருந்து போய் விட்டார்கள். கொஞ்ச நஞ்சம் மீதியாக உள்ளவர்களும் போய்த் தீருவார்கள். இனி காங்கிரஸ் ஏழைகளின் ஸ்தாபனம்.

## பணமும் பண்டமும்

எல்லோருக்கும் பணம் வேண்டும் என்ற ஆசை யிருக்கிறதே தவிரப் பண்டம் வேண்டுமென்று யாரும் கேட்பதில்லை. எல்லோரும் விரும்புகிற மாதிரி டில்லியில் சொல்லி ஏராளமாக ரூபாய் நோட்டுகளை அச்சடித்துக் கொண்டு வருகிறேன்; உங்கள் ஒவ்வொருவருடைய வீட்டிலும் ஒரு மூட்டை கட்டிப் போட்டுப் போய் விடுகிறேன். நீங்கள் அதைப் பார்த்ததும், ‘சரி, நம்மிடம்தான் பணம் இருக்கிறதே’ என்று கடைக்குப் போவீர்கள். மளிகைக் கடையில் போய் சாமான் கேட்பீர்கள். அவர்கள் இல்லையென்று சொல்லுவார்கள். ‘என்னிடத்தில் நிறைய பணம் இருக்கிறது; எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறேன்; சாமானைக் கொடு’ என்று கேட்பீர்கள். அதற்கு அவர்கள், ‘உன்னிடம் மட்டும் தான் பணமிருக்கிறதா, எனக்கும் காமராஜர்

கொடுத்திருக்கிறார்—இதோ பார், ஒரு பை நிறையக் கட்டி வைத்திருக்கிறேன். ஆகவே தான் நான் வியாபாரம் செய்வதை நிறுத்தி விட்டேன். சரக்கு உற்பத்தி செய்வதில்லை' என்று விளக்கமாகச் சொல்லுவார்கள்.

நீங்கள் திகைப்பீர்கள், கை நிறைய ரூபாய் நோட்டுகள் இருந்தும் பயனில்லையே என்று வருத்தப்படுவீர்கள்.

நோட்டுகளை வைத்துக்கொண்டு சாப்பிட முடியாது. ஆகவே, பணம் வந்தால் மட்டும் பிரயோஜனப்படாது. பண்டங்கள் வேகமாக உற்பத்தியாகிப் பெருக வேண்டும். அதற்கு உழைப்பு தேவை.

## தோண்டும் குழியில்...

**எ**னக்கு நாற்பது வருஷத்திற்கு மேற்பட்ட அனுபவம் காங்கிரஸில் உண்டு. அது ஏழைகளுக்காகத்தான் இருக்கிறது. சோறு இல்லாமல், வீடு இல்லாமல் இருந்தவர்கள் எல்லாம் இப்போது காங்கிரசை நெருங்கி வருகிறார்கள். அதனால்தான் காங்கிரசிற்குப் பலம் கூடியிருக்கிறது.

இதைக்கண்டு முஸ்லிம்களிடம் சென்று சுதந்திரக் 'கட்சி ஜாதிப் பிரச்சினையைக் கிளப்புகிறது; அவர்களில் யாருக்கும் மந்திரி பதவி இல்லை என்றது. கம்யூனிஸ்ட் கட்சி என்



னென்ன முறைகளைக் கையாளுமோ, அதே வழிகளைத்தான் சுதந்திரக் கட்சியும் பின்பற்றுகிறது. அதை மறுக்க முடியுமா ?

காங்கிரசுக்குக் குழி தோண்ட அவர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுகிறார்களாம்; தோண்டும் குழியில் அவர்கள் தாம் விழுவார்கள்.

## ஊமை பேசினால்...

கிராமத்திற்கு நல்லது செய்ய வேண்டுமென்று சர்க்கார் பல லட்சக்கணக்கான ரூபாய்களைக் கொடுக்கிறது. ஆனால், என்ன நடக்கிறது தெரியுமா ? ஊரில் உள்ள 'பிரபல' மனிதர்கள், சமுதாயத்தில் ஏற்கனவே நல்ல நிலையில் இருப்பவர்கள், விஷயந் தெரிந்திருக்கிற காரணத்தால் அதிகாரிகளை அணுகிச் சலுகைகளைப் பெற்றுக்கொண்டு விடுகிறார்கள். ஏழைகளுக்கு ஒன்றும் கிடைப்பதில்லை, ஏமாந்து விடுகிறார்கள்.

இதுவரையில், தாங்கள் ஏமாந்து வருகிறோம் என்பதே அவர்களுக்குத் தெரியாமல் இருந்தது. இப்போது தெரிந்து விட்டது! அதாவது விழிப்பு ஏற்பட்டு விட்டது. என்னையே ஒரு ஏழை விவசாயி கேட்டார். 'அதிகாரிகள் எங்களை ஏமாற்றி விடுகிறார்கள், நீங்கள் செய்யும் நல்ல காரியங்கள் எங்களை

அடைவதில்லையே, என்ன செய்வது ?' என்று எனக்குச் சந்தோஷம்; இதுவரையில் ஊமையாகக் கிடந்த மக்களுக்குக் காங்கிரசாட்சியில், 'இனி ஏமாறக்கூடாது. வாழ வேண்டும்' என்ற உணர்ச்சி வந்துவிட்டது அல்லவா? அது போதும். இனிமேல் அவர்களுக்கு நல்ல காலம்தான் !

இந்த நிலைமையை யார் உண்டு பண்ணினர்கள்? காங்கிரஸ்காரர்கள்தானே ! இதை மக்களும் உணர்ந்தே இருக்கிருர்கள். ஆகவேதான் ஏழைகள் பலர் காங்கிரசில் சேர முன் வருவதைப் பார்க்கிரேம்.

## நீயும் படிக்க வா !

மக்கள் எந்தத் தொழிலும் செய்யலாம். அதில் ஒன்றும் தவறு இல்லை. சலவைத் தொழிலாளியின் ஒரு மகன் சலவைத் தொழிலுக்குப் போனல் இன்னொரு மகன் பெரிய வேலைக்குப் போகலாம். சலவைத்தொழிலாளர்கள் நம் ஆடைகளின் அழுக்கைப் போக்குபவர்கள். அவர்களது பணி வாழ்க்கைக்கு வெகு முக்கியம். காங்கிரஸ் கட்சி அரசாங்கத்திற்கு வந்தவுடன், 'நீயும் படிக்க வா' என்று சலவைத் தொழிலாளியின் மகனைக் கூப்பிடுகிறது. அவர்கள் தலை நிமிர்ந்து நடக்க சர்க்கார் பல திட்டங்களைப போட்டு வருகிறது.



திட்டங்கள் போட்டிருக்கிருேமே, அது யாருக்காக ? ஏழைகளது பஞ்சமும் பட்டினியும் ஒழிய வேண்டுமே என்பதற்காகத்தான். பணக்காரர்களுக்கு, ஏற்கனவே செல்வத்தில் மிதப்பவர்களுக்கு—இதைப்பற்றி அதிக அக்கறை இருக்காது. ஆனல் ஏழைகள் திட்டத்தை விட்டுவிட்டால் அவர்களது வளர்ச்சிக்கு வேறு வழியில்லை.

## சொந்தக் காலில்

காங்கிரசினுடைய ஆசை இதுதான். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தோடு இந்தப் பஞ்சமும் பசியும் வேலையில்லாத் திண்டாட்டமும் மற்றக் கொடுமைகளும் தொலையட்டும், எங்கள் தலைமுறைக்குப் பிறகாவது நாடு சுபிட்சமாக இருக்கட்டும்.

காங்கிரஸ் இந்த ஆசையோடுதான் பணி செய்து வருகிறது. நாம் நமது சொந்தக் காலிலேயே நிற்கவேண்டும். பிறர் தயவில் வாழவே கூடாது. அதற்காக நாமெல்லோரும் சேர்ந்து பணிபுரிவோம்.

ஏழைகளுக்கு நன்மை செய்வதை எதிர்க்கிருர்கள். யார் அப்படி எதிர்ப்பவர்கள்? பணக்காரர்கள்தாம். அவர்களிடத்தில் பணம் இருக்கிறது; நிலம் இருக்கிறது; வீடு வாசல்

எல்லாம் இருக்கிறது. இதெல்லாம் போய் விடப் போகிறதே என்ற பயம் அவர்களுக்கு!

அவர்களிடத்தில் பணம், நிலம், சொத்து, பூமி எல்லாம் எப்படி வந்தது? என்று கேட்டுப் பாருங்கள். அவர்களுடைய சாமர்த்தியத்தினுலா? அல்லது அதிர்ஷ்டத்தினுலா? இரண்டும் இல்லே. பழைய காலத்தில், சந்தர்ப்பம் கிடைத்தபோது, அதிகாரத்தைப் பயன் படுத்திக்கொண்டு எடுத்துக் கொண்டார்கள்! அவ்வளவுதான்.

## யாருக்குச் சொந்தம்?

நிலம் யாருக்குச் சொந்தம்? மழை பெய்கிறதே, அது யாருக்குச் சொந்தம்? எல்லோருக்கும்தானே! அப்படியிருக்க நிலம் மட்டும் சிலருக்குச் சொந்தமாக இருப்பானேன்? பலருக்கு இல்லாமல் இருப்பானேன்? இதைத் தான் காங்கிரஸ் கட்சி கேட்கிறது.

அதிகாரம் யாரிடம் இருந்ததோ அவர்கள் நிலங்களே எடுத்துக்கொண்டு விட்டார்கள். இப்போது அதிகாரம் நம் கையில் வந்து விட்டது. 'இதுவரையில் அனுபவித்தது போதும், இனிமேல் நிலத்தைப் பங்கு போடு' என்கிறோம். மக்களுக்கு இது விருப்பமானுல் ஏற்றுக் கொள்ளட்டும். இல்லாவிட்டால் எனக் கொன்றும் ஆட்சேபம் இல்லே. ஏனென்றல்,



இப்போது உண்மையான அதிகாரம் மக்களிடம்தான் இருக்கிறது. 21 வயது ஆன ஒவ்வொருவருக்கும் அதிகாரம் இருக்கிறது. அதைக் கொடுத்ததே காங்கிரஸ்காரன்தான். தங்கள் இஷ்டப்படி அந்த 'அதிகாரத்தைப் பயன்படுத்தலாம்.

## நாலு காசு இருந்தால்...

ஏழைகள் கையில் பணப் புழக்கம் பெருக வேண்டும். அப்போதுதான் நாடு நல்லபடியாக இருக்க முடியும். புதிய தொழிற்சாலேகளேக் கட்ட முடியும். ஏழைகள் நிறைய காப்பி சாப்பிடுவதால் சர்க்கரை மிகுதியாகத் தேவைப்படுகிறது. உடனே சர்க்கரை ஆலே வைக்கிறோம். ஆகவே நம்மாலேதான் ஆலேகள் நடக்கின்றன. பணக்காரர்கள் அநேகமாக ஓட்டலுக்கே வரமாட்டார்கள். நாம்தான் கையில் 'நாலு காசு' இருந்தால் உடனே காப்பிக் கடைக்குள் நுழைகிறோம்.

அதே போலத்தான் பஸ் தொழிலும். பணக்காரர் காரில் போகிறுர். ஏழைகள்தாம் ரூபாய் கொடுத்து பஸ்ஸில் நிறைய பிரயாணம் செய்பவர்கள். ஏன், சினிமா கொட்டகையை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கும் வரும்படியில் முக்கால் பாகம் ஏழைகளால்தான்.

ஆகவே, ஏழை கையில் பணமிருந்தால் தான் வாழ்க்கை நன்ருக நடக்கும். இது புரிய

வில்லை என்றால் என்ன செய்வது? நாடு வாழ ஏழைகள் நல்லபடி வாழவேண்டும். இதைத் தான் மகாத்மா காந்தி சொன்னார்.

## உச்சிப் படியில்

ஏழைகள் இப்போது பாதாளத்தில் இருக்கிறார்கள். அவர்களை ஒவ்வொரு படியாகத் தூக்கி, உச்சிப் படியிலுள்ள பணக்காரர்களுக்குப் பக்கத்தில் நிறுத்த வேண்டும். அதற்கு ஆத்திரப்படுவதா?

ஆத்திரப்பட்டாலும் என்ன செய்ய முடியும்? உச்சிப்படியில் ஏற்கனவே உள்ளவர்கள் இனியும் மேலே போக முடியாது. கீழே இறங்கிவர வேண்டியதுதானே!

'நான் என் சாமர்த்தியத்தால் சம்பாதித்தேன்; நான் எதற்காகக் கீழே இறங்கிவர வேண்டும்?' என்று பணக்காரர்கள் கேட்கிறார்கள்.

அவர்களிடம் சாமர்த்தியமும் இல்லை; அதிர்ஷ்டமும் இல்லை. அரசாங்கம் உதவி செய்கிறது—ஆகவே சம்பாதிக்கிறார்கள். அரசாங்கம் கூட்டுறவு முறையில் பெரிய சர்க்கரை ஆலை நிறுவ உதவி செய்கிறது. மிராசுதார் கரும்புப் பயிரிட்டு ஆயிரக்கணக்காகச் சம்பாதிக்கிறார். அரசாங்கம் இந்த ஏற்பாடுகளைச் செய்யவில்லையென்றால் லாபம் எப்படிக் கிடைக்கும்?



## அதற்குத் தயார் இல்லை

முதலாளிகள் பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் போது கோடிக்கணக்கான ரூபாய்களைக் கடனாகக் கேட்கிறார்கள். கொடுக்கிறோம். வெளிநாட்டுச் சரக்குகள் வந்து போட்டி போடாமல் தடை செய்கிறோம். இவ்வளவு சலுகைகளால் கோடிக்கணக்காகச் சம்பாதிக்கிறார்கள்.

சம்பாதிக்கட்டும்; வரி கொடு என்றால், மாட்டேன் என்பதா? நாங்கள் ஆலையை மூடிவிட்டால் சம்பாதிக்க முடியுமா? மின்சாரத்தை நிறுத்தி விட்டால் தொழில் பண்ண முடியுமா? ஆகவே, அதிர்ஷ்டம், சாமர்த்தியம் என்றெல்லாம், சொல்லாமல் 'வரி கொடுங்கள்' என்று கேட்கிறோம். இது தவறா?

இதுதான் எங்கள் கொள்கை. மக்கள் இதை ஒப்புக்கொள்ளுவதானால் சொல்லட்டும், இருக்கிறோம். இல்லை என்றால் மூட்டை கட்டிக் கொண்டு போகத் தயார்! 'மாடு மேய்ப்பவன் அப்படியே மேய்க்கிற வேலையைச் செய்யட்டும்' என்று சொல்லிக்கொண்டு ஆட்சி நடத்த நாங்கள் தயார் இல்லை. அதற்கு வேறு ஆளைப் பாருங்கள்!

## கேலியும் கிண்டலும்

முன்பு சுயராஜ்யம் பெறுவது நம்முடைய கொள்கையாய் இருந்தது. இப்போது வித்தியாசம் இல்லாத சமதர்ம சமுதாயம் ஏற்படுத்த வேண்டுமென்பது நம்முடைய இலட்சியம்.

'இது எப்படி நடக்கும்?' என்று கேட்கிறார்கள். முன்பும் அப்படித்தான் கேலி செய்தார்கள்; மகாத்மா காந்தி சுயராஜ்யம் என்று கேட்கிறாரே, எங்கே கிடைக்கப் போகிறது, என்றார்கள்.

மகாத்மா காந்தி சமுதாயத்தில் கீழே இருப்பவர்களைத் தூக்கிவிட வேண்டுமென்று தீர்மானம் போட்ட போதும் அப்படித்தான் கிண்டல் செய்தார்கள். 'நூல் நூற்றால் சுதந்திரம் வருமா, கதர் கட்டினால் சுதந்திரம் கிடைக்குமா ? என்றும் கேட்டார்கள். அப்படியெல்லாம் கேட்டவர்கள் வெட்கம் அடையும் படியாக நமக்குச் சுயராஜ்யம் வந்து விட்டதல்லவா ? ஆகவே, இப்போது நம்மை "சமதர்ம சமுதாயத்தை உங்களால் நிறுவ முடியுமா ?" என்று கிண்டல் செய்பவர்களைப் பார்த்து நான் சிரிக்கிறேன். முடிவில் வெற்றி நமக்குத் தானே !

இத்தகைய கேலி செய்வதில் பெரிய கட்சியாக சுதந்திரக் கட்சி விளங்குகிறது. அந்தக் காலத்திலிருந்ததைப் போல் அதே நிலையில் இருக்க வேண்டும் என்பது அவர்களது வாதம். இந்த அழகான கொள்கையை வைத்துக் கொண்டு நம்மைக் கேலி செய்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் விவரம் புரிந்தவர்கள்; கேலியால் அவர்கள் மாறிவிட மாட்டார்கள்.



## சிவப்பும் கருப்பும்

காந்தியடிகள் காலத்தில் எத்தனையோ பேர் ஆங்கிலம் கற்ற மேதைகளாகத்தான் இருந்தனர். ஆனால் சுதந்திரத்திற்காகப் போராடும் துணிச்சல், ஆர்வம் எத்தனை பேரிடம் இருந்தது ? காந்தியடிகள் மட்டுமே தலைமைப் பதவி ஏற்றுப் போராடினார். காரணம் மற்றவர்களுக்கு ஆர்வம் இல்லை.

நாம் சின்னச் சின்ன காரணங்களுக்கெல்லாம் சண்டை போட்டுக் கொள்ளுகிறோம். பெரிய காரியங்களுக்காக நாம் சண்டை போடுவதில்லை. போடவும் தெரியாது. சிலர் துரும்பையும் இரும்பாக்கிப் பேசுகிறார்கள். வடக்கு, தெற்கு; இந்தி பேசுகிறவன் என்று பாகுபாடு காட்டுகிறார்கள். இந்தச் சண்டைகளுக்கு ஏதாவது அர்த்தமிருக்கிறதா ? ஒரே நிலப்பரப்பில் சிவப்பு மண்ணும் கருப்பு மண்ணும் இருப்பதில்லையா ?

காந்திஜி சின்னக் காரியங்களுக்காகச் சண்டை போடவில்லை. பெரிய காரியத்திற்காகச் சண்டை போட்டார். அதன் பலனாக

வளமிக்க நாட்டை நமக்குச் சம்பாதித்துக் கொடுத்தார்.

## கடன் வாங்கியும் பட்டினியா?

நாட்டில் நமக்கான எல்லா வளங்களும் இயற்கையாகவே இருக்கின்றன. இருந்தும் ஏன் கவலைப்பட வேண்டும்? கடன் வாங்கியும் பட்டினியா என்பார்கள். ஆனால் நம்மிடம் வள மிருந்தும் வறுமையால் ஏன் வாடவேண்டும்? ஆகவே, நாட்டிலுள்ள இயற்கை வளங்களை எடுத்து நாம் பயன்படுத்த வேண்டும்.

கொஞ்சம் காலதாமதமானாலும் நல்ல முறையில் முன்னேற வேண்டும். பிற நாடு கள் எப்படி முன்னேறுகின்றனவோ அதைப் போல் நாமும் முன்னேற வேண்டும். அதற் கான அறிவும் ஆற்றலும் நம்மிடம் இருக்கின் றன. காந்திஜியின் வழியில் அதை நல்ல முறை யில் பயன்படுத்த நாம் ஒவ்வொருவரும் சங்கல் பம் செய்துகொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான் திட்டங்களை வெற்றிகரமாக நடத்த முடியும்.

## சுரண்டல் வாழ்வு

நம்முடைய எதிர்கால வளர்ச்சியைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாமலே சிலர் திட்டங் களை ஒத்திப்போடு என்கிறார்கள். அவர்கள்



ஒத்திபோடச் சொல்வது ஏன் தெரியுமா? பல தடவை சொல்லியிருக்கிறேன். அவர்கள் வாழ்க்கையிலே, முன்பே எல்லா வசதிகளையும் அடைந்து விட்டார்கள். ஒத்திப்போட வைத்து விட்டால் திட்ட வேலைகளெல்லாம் நின்று போகும்; ஏழைகளுக்குப் பள்ளிக்கூடத்தைக் கட்டிக் கொடுப்பது, குறைந்த வட்டிக்குக் கடன் கொடுப்பது, ரோடு போடுவது, மின் சாரம் கொடுப்பது போன்ற வேலைகள் நின்று போகும். ஏழைகள் கையில் பணப் புழக்கம் இருக்காது. தாங்கள் சுகமாகச் சுரண்டி வாழ லாம் என்று கருதியே திட்டம் வேண்டாம், ஒத்திப் போடு என்கிறார்கள். இவர்கள் சொல் வதைப்போல திட்டத்தை ஒத்திப் போடுவதாக வைத்துக் கொள்வோம். நிலைமை எப்படி இருக்கும்?

இப்பொழுது பட்டினியாக இருக்கிறவனை இன்னும் பத்து வருஷம் பட்டினியாகவே இரு. கொஞ்சம் பொறுத்துக் கொள் என்றும், இப் போது வெளிச்சமில்லாமல் இருட்டில் இருப் பவனை இன்னும் கொஞ்ச நாளைக்கு இருட்டி லேயே இரு—பத்து வருஷத்துக்குப் பிறகு வெளிச்சத்தில் வாழ்ந்து கொள்ளலாம் என்றும் சொல்வது நியாயமா, என்ன?

## சண்டை போட்டுச் சாவதா ?

மக்களின் தேவை அதிகரித்துக்கொண்டே போகிறது. இது நம் பொருளாதார வளர்ச்சியையே எடுத்துக் காட்டுகிறது. நமக்கு எதுவும் தேவை இல்லை என்ருல் நம்மிடத்தில் போதிய வளர்ச்சி ஏற்படவில்லை என்றுதான் அர்த்தம்.

வறுமையோடு கோடிக்கணக்கானவர்கள் போராடிக் கொண்டிருக்கிருர்கள். நம் நாட்டில் பெரும்பான்மையினர் ஏழைகள்தான். பொருளாதார ஏற்றத் தாழ்வு குறைந்தால் ஜாதி, மத வேற்றுமைகள் மறைந்துவிடும். பொருளாதாரப் பிரச்சினை உலகப் பிரச்சினையாகும்.

பழைய காலத்தில் முற்போக்குச் சமூகத்தாரிடம் நில வசதியோ, கல்வி வசதியோ இருந்தது. அவர்கள் அரசாங்கத்திலும் பெரிய வேலைகள் பார்த்து வந்தார்கள். பிற்பட்ட வகுப்பினர் படிப்பில்லாத காரணத்தால் பட்டாளத்தில் வேலை பார்த்தார்கள். அவர்களுக்கு முன்னேற வசதியில்லாமல் போய்விட்டது. இந்த நிலையை மாற்றுவதுதான் புதிய சமுதாயம் அமைப்பதின் இலட்சியமாகும். இதனுல் யாரும் கோபித்துக் கொள்ள வேண்டியதில்லை.

இந்நாடு ஒன்ருக இருக்க பல ராஜாக்கள் முயற்சி செய்தார்கள். ஆனுல் பல்வேறு காரணங்களால் அவர்களால் அதைச் செய்ய முடியவில்லை. இந்த நாடு ஒன்ருக இருந்தால் அனைவரும் வாழலாம். சண்டை போட்டுக்கொண்டால் சாகலாம்.



படிப்பும், வேலையும், பணமும் வந்து விட்டால் ஏற்றத் தாழ்வு மனப்பான்மை மறைந்து விடும். இதற்குக் குழந்தைகள் அனைவரையும் படிக்க வைக்க வேண்டும். தொழிலைப் பொறுத்தவரை எந்தத் தொழிலும் தாழ்ந்ததல்ல. நாடு முன்னேற முன்னேற வருமானம் உயர்ந்து விடும்.

## படிப்பும் பணமும்

சமுதாயத்தை மாற்றி அமைக்கத்தானே சுதந்திரம்? ஒரு மாறுதலும் வேண்டாம் என்ருல் சுதந்திரமே வேண்டாம். சமுதாயத்தை மாற்றி அமைக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. ஏழ்மை, அறியாமை இரண்டையும் அகற்றத்தான் காங்கிரஸ் இருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களிடம் பணம் இல்லை. படிப்பு இல்லை. இவற்றை அவர்களுக்குத் தர வேண்டும். அதற்குப் பலம் பொருந்திய அரசாங்கம் இருக்கவேண்டும். அதே நேரத்தில், அது ஜனநாயக அரசாங்கமாகவும் இருக்க வேண்டும். ரஷ்யா, சீனு போன்று எதேச்சாதிகாரம் பொருந்தியதாக இருக்கக் கூடாது.

ஜனநாயகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துத் திட்டம் போடுகிறோம். திட்டங்களால்தான் முன்னேற முடியும் என்பதை நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். ஆகையால் திட்டங்களின் மீது கோபப்பட்டுப் பிரயோஜனம் இல்லை.

## வாய்க்கால் மூலம்...

வரி, ஏழைகளுக்குப் போடுகிறோமா? ஏழைகளிடம்தான் வீடு, நிலம், பணம் ஒன்றுமில்லையே. அவர்களுக்கு எப்படி வரி போட முடியும், எப்படி அவர்களிடம் வசூல் செய்ய முடியும்? சம்பாதித்தவர்களுக்கு வரி போடுகிறோம். இப்பொழுது, சிலர் திடீரென்று சம்பாதித்து விடுகிறார்கள். முற்காலத்தில் இப்படிச் சம்பாதிக்க முடியாது. சர்க்கார் வாய்க்கால் வெட்டுகிறது. பக்கத்தில் நிலம் உள்ளவர்கள் நிறைய சம்பாதிக்கிறார்கள், அவர்களிடம் வரி வாங்குகிறோம். கோடி ரூபாய் செலவு செய்து பத்து ரூபாய் வரி கேட்கிறோம். சம்பாதிக்க வசதி செய்து கொடுத்து வரி போடுவது பாவமா?

## அந்தப் பரம்பரை

வரிப்பணத்தை வீண் விரயம் செய்வதாகச் சொல்கிறார்கள். எது வீண் விரயம்? நீர்த்தேக்கம் கட்டுவது, பள்ளிக்கூடம் கட்டுவது, ரோடு போடுவது வீண் வேலையா, விரயமா? ஊழல் ரொம்ப ஆகிவிட்டது என்கிறார்கள். மகா பாரதத்தில் கூட திருடினான், கொலை பண்ணினான் என்று இல்லையா? அன்றைய பரம்பரையில் வந்தவர்கள்தானே? தர்மராஜா காலத்தில் சூதாடுகிறவன், திருடுகிறவன் இல்லையா? சோறு கொடுத்தால், வேலை கொடுத்தால் அவன் அவன் வேலையைப் பார்ப்பான். தர்மம் கெடாது.



## சுயராஜ்யம் மட்டுமே...

கட்டுப்பாடு வேண்டுமென்றால் காங்கிரசைத் தொலைத்து விடுவோம், அரசாங்கத்தைக் கவிழ்த்து விடுவோம்" என்கிறார்கள். அப்புறம் என்ன ஆகும்? இப்பொழுது இராத்திரியில் திருடுபவன், இனிமேல் பகலில் திருடுவான். பணம் சிலரிடம் குறட்டைவிட்டுத் தூங்குகிறது. பணம் இருந்தால் மட்டும் போதுமா? பணம் சாப்பாடு போடுமா? ஒருவனிடத்தில் ரூ. 5,000-ம் கொடுத்தால் பிழைத்து விடுவானா? ஒரு துணிக்கடையோ டீக்கடையோ வைத்து அதில் வருமானம் வந்தால்தானே பிழைப்பான்? சுயராஜ்யம் மட்டுமே சோறு போடுமா? கிணறு வேண்டும், விவசாயம் செய்ய சாமான்கள் வேண்டும்-இதெல்லாம் கொடுத்தால்தானே ஏழை பிழைப்பான். ஐந்து வருடத் திட்டம் ஏன் என்று கேட்கிறார்கள். ஒரு வேளை சாப்

பிட்டால் போதுமா? மூன்று வேளை சாப்பாட்டிற்கும் சம்பாதிக்க வழிபண்ண வேண்டாமா?

## எனக்குப் புரியும் கோபம்

**போ**துமென்று யாராவது இருக்கிறார்களா? பணக்காரர்களும் கோபிக்கிறார்கள். ஏழைகளும் கோபிக்கிறார்கள். யார் கோபத்தைக் கவனிக்கவேண்டும்? ஏழையின் கோபம் எனக்குப் புரிகிறது. அனுதாபப்படுகிறேன். சாப்பாடு இல்லாவிட்டால் செத்துப்போய் விடுவான். ஏழையின் கோபம்தான் எனக்குப் பெரிது. பணக்காரன் பணத்தை வைத்துக் கொண்டு கார் கிடைக்கவில்லை என்று கோபிக்கிறான். அதற்கு என்ன செய்வது? சாப்பாடு கூட சரியாக இல்லாதவனைக் கவனிக்க வேண்டாமா?

பள்ளிப் பையன்களுக்கு மட்டும்தானா சாப்பாடு என்கிறார் ஒரு பெரியவர். அவருக்கும் வழி பண்ணிவிட்டேன். முதியவர்களுக்கு ஓய்வு கால உதவிப்பணம் என்ற திட்டம் வந்திருக்கிறதா இல்லையா?

## உழைப்பின் உயர்வு

**பொ**ருளாதார வளம் பெருகத் தொழில் வளம் பெருக வேண்டும். அப்பொழுதுதான் மக்களுக்கு வேலையளித்து உணவளிக்க முடி



யும். பழங்காலத்தில் விவசாயம் ஒன்றில் மட்டுமே நமக்கு ஈடுபாடு. இப்பொழுது அந்நிலை மாறிவிட்டது. பெரும் தொழில்கள் நாட்டில் வளரவேண்டும். இதற்கு இரும்பு, கரி, எண்ணெய் இன்றியமையாதன. இவையும் மற்றும் இயற்கை வளங்களும் நம்மிடம் இருக்கின்றன. இயற்கை வளங்கள் ஏதுமின்றியே ஜப்பான் முன்னேற்றம் கண்டுள்ளது. இதற்கு உழைப்புத்தான் காரணம். ஜெர்மனியும் உழைத்தே முன்னேறியுள்ளது. ஆனால் நம்மிடையே சோம்பலை வளர்க்கவே தலைவர்கள் உள்ளனர். வேலை செய்யாதே எனக் கூறுபவர் தொழிலாளர் தலைவர். படிக்காதே எனக் கூறுபவர் மாணவர் தலைவர். இதுதானே நம் நிலைமை? நம்மிடமுள்ள இயற்கை வளங்களை உழைப்பின் மூலம் பயன்படுத்த வேண்டாமா?

## மனிதனால் ஆகாதது

**ம**னிதன் சந்திர மண்டலம் போகிறான். மின்சாரத்தை உற்பத்தி செய்கிறான். இன்னும் புதுமையானவைகளையெல்லாம் உண்டு பண்ணுகிறான். ஆனால், இரண்டு காரியங்கள் மட்டும் முடியவில்லை. மழையை உண்டு பண்ண முடியவில்லை; நிலங்களைத் தேவைக்கேற்ற அளவு விஸ்தரிக்கவும் முடியவில்லை. இவற்றை மந்திரத்தால் உண்டு பண்ண முடி

யுமா என்ன ? மழை பெய்தால்தான் தண்ணீர் கிடைக்கும். நிலம் இருந்தால்தான் பயிர் செய்து உணவு உற்பத்தி செய்ய முடியும். நாட்டில் நம்மிடம் உள்ளதைக் கொண்டுதான் வாழ்க்கைக்கானவற்றை உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது.

## மறக்கடிக்கப் பார்ப்பதா ?

நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்குவதற்கு அரசாங்கம் பல வழிகளில் முயற்சி எடுத்து வருகிறது.

தொழிற்சாலையை உருவாக்க செங்கல், சிமிண்ட், இரும்பு போன்ற பொருள்கள் முக்கியமாகத் தேவைப்படுகின்றன. எனவே கட்டிடங்களைக் கட்டுவதற்கு முன்னுல் இம்மாதிரியான பொருள்களை நாம் உற்பத்தி செய்தாக வேண்டும். இவற்றில் ஏதாவது குறைந்தாலும் தொழில் வளம் குறையும். இத்தனையும் இருந்தால்தான் தொழில்கள் முன்னேற்றமடையும்.

இதற்கிடையில் நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டம் ஒருபுறம். மற்றொரு புறம் வசதிகள் பெருகுகின்றன. வசதிகள் பெருகுவதன் மூலம் வசதிக்கேற்ற பொருள்களை நாம் பெற்ருக வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம். எனவே பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்கியாக வேண்டும்.



இன்று நமக்கு இருப்பது ஜாதிப் பிரச்சினை அல்ல. மதப் பிரச்சினை அல்ல. மொழிப் பிரச்சினை அல்ல.எல்லோருக்கும்வேலைகிடைக்க வேண்டும். சோறு கிடைக்கவேண்டும். இது தான் நமக்குள்ள பிரச்சினை. ஜாதி, மத, மொழிச் சண்டைகளின் மூலம் இந்த முக்கிய பிரச்சினையை மறக்கடிக்கப் பார்க்கிறார்கள். நாம் வித்தியாசங்களை மறந்து உழைத்தால்தான் முன்னேற முடியும்.

நமது நாட்டில் ஏராளமான இயற்கைச் செல்வம் இருக்கிறது. வித்தியாசங்களை மறந்து இந்த இயற்கைச் செல்வங்களைப் பயன்படுத்தி நாம் முன்னேற வேண்டும்.

## தேவைக்கு உச்ச வரம்பு

நமக்குத் தேவைகள் எண்ணற்றவை. குறைகளும் கூடத்தான். நிலத்திற்குத் தான் உச்சவரம்பு கட்டினோம். ஆனால் நமது தேவைகளுக்கு உச்சவரம்பு கட்ட முடியுமா ? முடியாது. முன்பு கட்டை வண்டியில் நமது முன்னோர்கள் ஊர்ப் பயணம் போனார்கள். இப்போது காரிலும், ரயிலிலும் போகிறோம். முன்பு காலையில் கஞ்சியோ, நீராகாரமோ சாப்பிட்டார்கள். இப்போது காப்பியோ டீயோ சாப்பிடுகிறோம். இப்படி நாம் பல வகையிலும் முன்னேறி வருகிறோம். ஆனால் நாம் மற்ற நாடுகளைப் போல இன்னும் முன்னேறவில்லை.

அந்த அளவு முன்னேற்றத்திற்கு நாம் திட்டங்கள் போடுகிறோம்.

## வெகுதூரம் ஆனாலும்...!

நாட்டிலே சுபிட்சம் நிலவத் தொழில் முன்னேற்றம் அடைய, தொழிற்சாலைகள் கட்டுகிறோம். ஏழைப் பிள்ளைகள் படிக்கவும், உடுக்கவும், உண்ணவும் வகை செய்கிறோம். வயதானவர்களுக்கு அதாவது 65 வயதுக்கு மேல் உள்ளவர்களுக்கு உதவக் கூடியவர்கள் யாரும் இல்லையென்றால், அவர்களுக்கு மாதம் ரூ. 25 கொடுக்கிறோம்.

நாம் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறோம். நாம் செல்லவேண்டிய இடம் வெகுதூரத்திலுள்ளது. சென்ற 200 ஆண்டுகளாக முன்னேறாத நிலையில் இருந்த நம் நாடு, முன்னேறிய அமெரிக்கா, ரஷ்யா முதலிய நாடுகளைப்போல் முன்னேறவில்லையே என்று குறை கூறலாம்! அந்த அளவு இப்போது முன்னேறவில்லை என்பதற்காகக் கவலைப்பட வேண்டாம். நாம் முன்னேறி விடுவோம்.

## தலைநிமிரக் கூடாதா?

நாடு முன்னேறத் தேவையான இரும்பு, நிலக்கரி, தண்ணீர் எல்லாம் நாட்டில் கிடைக்கின்றன. நிலக்கரியையும் இரும்பையும்



தோண்டி எடுப்பதில் மிகுந்த சிரமம் இருக்கிறது. ஓர் இரும்புத் தொழிற்சாலை வைக்க சுமார் ரூ. 150 கோடி வேண்டும். நிலக்கரியைத் தோண்டி எடுக்க நெய்வேலியில் ரூ. 100 கோடி செலவிடப்படுகிறது. இத்துடன் கோடிக் கணக்கில் செலவிட்டு மின்சார உற்பத்தி செய்ய வேண்டியிருக்கிறது.

சுயராஜ்யம் கிடைத்ததால் நாட்டில் தொழில், நடந்து வேலை கிடைக்கிறது. வியாபாரமும் தொழிலும் நடக்கிறது ரயில்கள், பஸ்கள் ஓடுகின்றன. ஓட்டல், சினிமாக் கொட்டகைகளில் ஏராளமான கூட்டம் கூடுகிறது.

கையில் பணம் வந்திருப்பதால்தானே ரயில்களில் செல்கிறோம். சினிமா பார்க்கிறோம். இது முன்னேற்றமில்லையா? கிராமங்களில் கூட ஹைஸ்கூல்கள் வரவில்லையா? நிறையப் பிள்ளைகள் படிக்கவில்லையா?

சமுதாயத்தில் தாழ்ந்து கிடப்பவர்களைக் காங்கிரஸ் தலை நிமிரச் செய்து அவர்களின் வாழ்க்கை வசதிகளை உயர்த்த வழி செய்வதால், ஏற்கனவே வளர்ச்சி அடைந்துள்ளவர்களுக்குக் காங்கிரசின் மீது கோபம். இதை வெளிப்படையாகச் சொல்லாமல் காங்கிரஸ் சமுதாயத்தைக் கெடுத்துவிட்டது என்கிறார்களே! தாழ்ந்து கிடப்பவர்கள் தாழ்ந்தே இருக்க வேண்டுமா? தலைநிமிர்ந்து நடக்கக் கூடாதா?

## தாத்தாவைக் கேட்டால்...

**பொ**துவாக முன்னேற்றம் அடைகிற நாட்டில் முன்னேற்ற திட்டத்தினுல் பாதிக்கப் படும், ஏற்கனவே வசதியாக உள்ள சிலருக் குக் கோபம் ஏற்படும். அப்படிப்பட்ட சிறு பான்மையோர் அதிருப்தி அடைவார்கள். அது சரியா?

முன்னேற்றம் அடையவில்லை என்கிருர் கள். யார் முன்னேற்றம் அடையவில்லை? விவ சாயி, தொழிலாளி, போலீஸ்காரர் போன்ற எல்லோரும் பழைய நிலையிலா இருக்கிருர்கள்? சட்டை இல்லாதவனுக்கு சட்டையும், நான்கு சட்டை இருந்தவனுக்கு எட்டு சட்டையும் இன்று இல்லையா? பழைய நிலையை நினைத் துப் பார்க்க வேண்டும். பழைய நிலை தெரி யாது என்று இளைஞர்கள் சொன்னுல், அவர் கள் தங்கள் அப்பா, தாத்தாவைக் கேட்டுப் பார்க்கட்டும்!

இருப்பது போதாது என்று குறைப்பட்டுக் கூறினுல் ஏற்றுக் கொள்ளலாம். ஒன்றுமே நடக்கவில்லை, செய்யவில்லை என்று கூறுகிருர் களே, இதை ஒப்புக்கொள்ள முடியுமா?

நாம் எல்லாத் துறைகளிலும் முன்னேற் றம் அடைந்திருக்கிருேம். இதை இல்லை என்று யாராவது மறுக்க முடியுமா?



**ப**த்து கார், 15 வீடு என்றெல்லாம் வைத் திருப்பவர்களுக்குக் காங்கிரசின்மீது கோபம்! ஏன் கோபப்பட வேண்டும்? சுதந்திரம் அடைந்த பிறகுதானே இந்த வசதி எல்லாம் இவர்களுக்கு ஏற்பட்டது. வசதி இல்லாதவர் களைத் தூக்கிவிட முற்படுகையில் கோபம் வந்து விடுகிறது. காங்கிரசைத் தோற்கடிக்க முயல்கிருர்கள். ஆனுல் அவர்கள்தான் தோல்வியடைவார்கள்.

செல்வம் பெருகுகிறது. அதைப் பலருக் கும் பயன்படச் செய்ய வேண்டாமா? தொழில் பெருக்கத்தின் காரணமாக செல்வம் பெருகி, அது எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால்தான் தொழில் மேலும் வளரும்.

## அர்த்தமற்ற மூடத்தனம்

**நா**ன் ஒரு சமயம் ஒரு கிராமத்திற்குப் போயி ருந்தேன். அந்த ஊரில் ஒரு ஆசிரியை இருந் தார். பள்ளிக்கூடத்திற்கும் ஊருக்கும் சிறிது தூரம் இருந்ததால் ஒரு சைக்கிளில் போய் வந் தார். இதைப் பார்த்த கிராமவாசிகள் பெண் கள் சைக்கிளில் போவது ஆகாது. இந்த அம்மாவை மாற்றுங்கள் என்று சொன்னுர் கள். வேறு ஏதாவது காரணம் இருந்தால்

மாற்றலாம். இதற்காக மாற்ற வேண்டாம் என்று நான் சொன்னேன். தேர்தல் முடிந்த போது அந்தக் கிராம ஓட்டுக்கள் முழுவதும் காங்கிரசுக்கு விரோதமாக இருந்தது.

அர்த்தமில்லாத—நியாயமில்லாத மூடப் பழக்கத்தை ஒப்புக்கொள்ள முடியுமா? பிறப்பால் தாழ்ந்தவர்கள் செருப்பு போடக்கூடாது; பெண்கள் சைக்கிளில் போகக்கூடாது என்று சொல்லும் மூடத்தனத்துக்கு முடிவு கட்ட வேண்டாமா?

## ஏழை மீது பொறாமை

இப்போது நடப்பது வசதி உள்ளவர்களுக்கும், வசதி அற்றவர்களுக்கும் நடக்கும் போராட்டம். வசதி அற்றவர்கள் பக்கம்தான் காங்கிரஸ் இருக்கிறது. அதனால் வசதி படைத்தவர்கள் வேறு இடத்திற்குப் போகிறார்கள். ஏழை மக்களுக்கு நாம் என்ன அள்ளியா கொடுக்கிறோம். இலவசபடிப்பும், வேலைவாய்ப்பும் கொடுக்கிறோம். சில சலுகைகள் காட்டுகிறோம். இதில் பொறாமையா? இப்படிப் பொறாமைப்பட்டால் நாடு என்ன ஆகும்?

## பாதிக்கும் சூழ்நிலை

சம வாழ்வுச் சமுதாயம் அமைக்கும் பணியைக் கட்டாயத்தின் மூலம் காங்கிரஸ் செயல்படுத்த விரும்பவில்லை. மக்களிடம் அதற்கான



மன மாறுதலை ஏற்படுத்துவதின் மூலமே செய்ய விரும்புகிறது.

சமுதாயத்தில் ஏற்கனவே சுகவாழ்வுக்காரர்களாக உள்ளவர்களும் காலப்போக்கில் சமவாழ்வுக் கொள்கையை ஒப்புக் கொள்வார்கள். அதை எதிர்த்து நெடுநாள் வாழ முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலை தானாகவே வந்து கொண்டிருக்கிறது.

சுகவாழ்வில் இருக்கும் நபர்கள் தங்களைச் சுற்றிலும் ஏழைகள் வசதியற்று வாழ்வதைக் கண்டு எத்தனை நாளைக்குப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? பங்களாவில் வாழ்பவனுக்குத் தன்னைச் சுற்றியுள்ள குடிசைகளில் உள்ள ஏழைகள் கஷ்டம் உறுத்தாதா? ஜன்னல் கதவைத் திறந்ததும், அது கண்ணில் படாதா? சுற்றிலும் ஏழ்மையால் ஏற்படும் வேதனையும், சுகாதாரக் கேடும், அதனால் ஏற்படும் வியாதியும் அவனையும் பாதிக்காதா? தொத்திக் கொள்ளாமல் போய்விடுமா என்ன?

சுற்றிலுமுள்ள கஷ்டங்களைப் பார்த்து, சுகவாழ்வுக்காரர்களும் படிப்படியாக சூழ்நிலைக்கேற்ப மனம் மாறத்தான் செய்வார்கள்.

## அவர் வழியில்...

இப்போதுதான் நாம் முன்னேற ஆரம்பித்திருக்கிறோம். ஒரு சட்டை போட்டவன் இப்போது இரண்டு சட்டை போடுகிறான். ஒரு

வேஷ்டி கட்டியவன் இப்போது இரண்டு வேஷ்டி கட்டுகிறான். நிறைய பஸ்கள் விட்டும் கூட்டமாக இருக்கிறது. இன்னும் பஸ்கள் விடச் சொல்லுகிறார்கள். இதெல்லாம் நாடு முன்னேறுவதைத்தானே காட்டுகிறது.

நாட்டை உயர்த்த, நம்மை உயர்த்திக் கொள்ள, வேற்றுமையைப் போக்க மகாத்மா காந்தி முயற்சி எடுத்துக் கொண்டு வெற்றி கண்டார். நாமும் அவர் வழியில் சென்று வெற்றி காண்போம்.

## மாறுதலுக்கு ஏற்றபடி...

நாட்டில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி நாம் நல்வாழ்வு வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். வாழ்க்கை முன்னேற்றம் என்பது இந்த நாட்டைப் பொறுத்தவரை வேலையில்லாமல், சோறு இல்லாமல் கிடக்கும் கோடானுகோடி மக்களுக்கு அவற்றைக் கிடைக்கச் செய்வது தான்.

தொழில்கள் அதிகரிப்பதால் அதிகம் பேருக்கு வேலை கிடைப்பதுடன், தொழில் நடத்துகிறவர்களின் வருவாயும் அதிகரித்துக் கொண்டே போகிறது. இப்படிப் பெருகும் செல்வம் நாட்டுக்குப் பொதுவான செல்வமாகும்.



தொழில் வளர வளர வேலை வாய்ப்புக்கள் பெருகும். வேலை வாய்ப்புக்கள் பெருகப் பெருக வருமானம் உயரும். வருமானம் உயர உயரத் தேவைகள் அதிகரிக்கும். அப்போது உற்பத்தி பெருகும்.

இப்போது நம் நாட்டில் ஏற்பட்டிருக்கக் கூடிய மாறுதலை மக்கள் புரிந்து கொள்ளவில்லை. மாறுதலுக்கு ஏற்றபடி நம் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

மனிதன் வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படைத் தேவை நம் நாட்டில் இல்லாமல் இருக்கிறது; இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்து தரப் பாடுபட வேண்டும். மழைத் தண்ணீர் எப்படி அனைவருக்கும் சொந்தமோ, அதே போன்று நாட்டின் செல்வமும் அனைவருக்கும் சொந்தமாகப் பயன்பட வேண்டாமா ?

## ரொம்ப வித்தியாசம்

நம் நாட்டைப் பொறுத்தவரை வயிற்றுப் பிழைப்புக்கு வழியில்லாதவர்கள் கோடானு கோடிப் பேர். மற்ற முற்போக்கு நாடுகளில் வயிற்றுக்கு இல்லை என்று சொல்கிறவர்கள் இருக்கிறார்களா ? மோட்டார் வேண்டும், சைக்கிள் வேண்டும் என்றுதானே அவர்கள் கேட்கிறார்கள்.

மற்ற நாடுகளுக்கும் நம் நாட்டுக்கும் ரொம்ப வித்தியாசம். அங்கு எல்லாம் பொரு

ளாதார ஏற்றத்தாழ்வு மாத்திரம்தான். ஆனால் நம் நாடு அடிமைப்பட்டிருந்தது. பொருளாதார ஏற்றத்தாழ்வு, ஜாதி வித்தியாசம் போன்ற ஏராளமான வித்தியாசங்கள் இருந்தன.

இவற்றைப் போக்க சுதந்திரம் வேண்டும் என்றோம்; சுதந்திரத்தைப் பெற்றோம்.

## சட்டம் போட்டாலும்...

இப்போதும் நாம் சுகவாழ்வைப் பூரணமாக அடையவில்லை. முன்பு இருந்த நிலைமையை விட இப்போது அபிவிருத்தி அடைந்திருக்கிறது: அவ்வளவுதான். ஏற்றத்தாழ்வைப் போக்கச் சட்டங்கள் இயற்றுகிறோம். ஆனால் பூரண பலனளித்து விட்டது என்று சொல்ல முடியாது. குடிக்கக் கூடாது என்று சட்டம் போட்டோம், திருட்டுச் சாராயம் காய்ச்சுகிறார்கள் அல்லவா? திருடக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. திருடாமலா இருக்கிறார்கள். அவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக அப்படிச் செய்கிறார்கள். சமூக ஏற்றத் தாழ்வைப் போக்கி, ஊழலை அகற்றி சம அந்தஸ்துக் கொண்ட சமுதாயம் ஏற்படுத்துவதை ஏன் எதிர்க்க வேண்டும்? தாழ்த்தப்பட்டவர்களும் மற்றவர்களோடு சரிசமமாக வாழத் தகுதியுள்ளவர்களாகச் செய்வதை ஏன் எதிர்க்க வேண்டும்?



## முன்னேற்றத்தின் அளவுகோல்

காந்திஜி, கத்தியின்றி ரத்தமின்றி அரசியல் புரட்சி நடத்தியதுபோல நாம் சமுதாயப் புரட்சி நடத்தியே ஆகவேண்டும்.

கிராமங்களில் சம வாழ்வுக் கொள்கையைப் பேசினால் சிலருக்குக் கோபம் வருகிறது. எல்லாம் கெட்டுவிட்டது என்கிறார்கள். யார் வாழ்க்கைத் தரம் குறைந்து விட்டது? எல்லோர் வாழ்க்கைத் தரமும் ஒரு அளவுக்காவது உயர்ந்து கொண்டுதானே போகிறது. அப்படியிருக்க ஏன் கோபித்துக்கொள்ள வேண்டும்?

நாமும் மற்ற தேசங்களைப் போல் முன்னேறப் பாடுபடுகிறோம். ஒரு நாடு முன்னேறியிருக்கிறதா என்பதை அறிய அளவுகோல், அந்த நாட்டில் எல்லோரும் படித்திருக்கிறார்களா? எல்லோருக்கும் வேலை இருக்கிறதா? எல்லோருக்கும் சோறு கிடைக்கிறதா? என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இதை இலட்சியமாகக் கொண்டுதான் நாம் பாடுபடுகிறோம். இதை எதிர்ப்பதா?

## செத்த பின்னும்...

மனத்தில் நல்லெண்ணம் இருந்தாலும் பழக்க வழக்கங்களை விடுவது மிகவும் லேசானதல்ல. சமீபத்தில் செங்கற்பட்டு ஜில்லாவில் சில கிராமங்களுக்குப் போயிருந்தேன். ஒரு கிராமத்

தில் ஹரிஜனங்கள் வீடு கட்டிக்கொள்ள நில மில்லாமல் மிகவும் கஷ்டப்படுவதாகக் கூறி, நான் ஹரிஜனக் குடியிருப்புக்குப் போய் அவர் களை நேரில் பார்க்க வேண்டும் என்று சொன் னார்கள். இதைச் சொன்னவர்கள் உயர்ஜாதிக் காரர் எனப்படுவோர். அங்கே போனேன். ஆனால் அந்த ஹரிஜன மக்கள் என்னிடம் வீடு கட்ட நிலம் கேட்கவில்லை. அவர்கள் கேட்டதெல்லாம் தங்களில் யாரேனும் இறந் தால் எரிக்க உடனடியாக ஒரு சுடுகாடு வேண் டும் என்பதுதான்.

அந்த ஊருக்கென்று உள்ள சுடுகாட்டி லேயே எரித்தால் என்ன? என்று நான் கேட் டேன். "அங்கே எப்படிங்க இடம் விட முடியும்?" என்றார் என் பக்கத்தில் இருந்தவர். அந்த நபர்தான் ஹரிஜன மக்கள் கஷ்டத்தைப் பற்றிச் சொல்லி என்னை அங்கே அழைத்துப் போனவர். "இப்படிச் செத்த பின்னும் ஜாதி வேறுபாடு கருதி சுடுகாட்டில் இடமளிக்க மறுக்கிறார்கள். உண்மையில் அவருக்கு நல் லெண்ணம் உண்டு. ஆனால், பழக்கம் மாறவே யில்லை. மனமாற்றம் ஏற்பட வேண்டும். அது தான் நல்ல மருந்து. சட்டம் அதற்கு அனு சரணையாக இருக்க வேண்டும்.



## அனுபவத்தால் ஆகும்

கிராமங்களில் ஜாதி மத பேதங்களைக் கிளப்பிச் சண்டை ஏற்படாமல் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

நம் அனுபவத்தால் நாட்டு முன்னேற்றத் துக்குத் தடையாக இருப்பவைகளை விலக்க வேண்டும். இதற்குக் கிராம மக்கள் பாடுபட வேண்டும். நமக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதையே கண்ணும் கருத்துமாகக் கொண்டு காரியம் செய்தால் இடையூறு செய்கிறவர்கள் பக்கத்தில்கூட வரமாட்டார்கள். எனவே, கூட்டு உணர்ச்சி, கூட்டுப் பொறுப்பு, கூட்டு முயற்சியுடன் அனைவரும் பாடுபட வேண்டும்.

## ஒரு நாளில் முடியுமா?

சுதந்திரம் கிடைத்ததால் என்ன ஆயிற்று என்று கிராம மக்கள் கேட்க மாட்டார்களா? வாழ்க்கையில் ஏதாவது சாப்பாட்டுக்கு வசதி உண்டாயிருக்கிறதா? அதற்கு ஏதாவது செய் திருக்கிறோமா என்று பார்க்க வேண்டும். இல்லையென்றால் அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று நாம் யோசிக்க வேண்டும்.

பொருளாதார உயர்வு என்பது திடீ ரென்று ஒருநாளில் ஏற்பட்டு விடாது. ரோடு

போடலாம். வரி அதிகமாகப் போட்டால பள்ளிக்கூடங்கள் கட்டலாம், மற்றும் எல்லாம் செய்யலாம். ஆனுல் பொருளாதார உயர்வை அப்படி உடனே செய்துவிட முடியாது. பொருளாதார உயர்வு ஏற்படும்போது சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு இருந்து கொண்டுதானிருக்கும். பத்து ஏக்கர் வைத்துக் கொண்டிருப்பவருக்கு வருகின்ற இலாபம் இரண்டு ஏக்கர்காரருக்கு வருமா என்ன? அம்மாதிரி ஏற்கனவே வசதியாக இருக்கிறவர்கள் அதிக வசதியைப் பெறுகிருர்கள்; குறைவான வசதியுள்ளவர்களுக்கு அதற்கேற்ற வசதிகள்தான் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. சமுதாயத்தில் இந்த ஏற்றத் தாழ்வு போக நாம் முயற்சி எடுத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

## அறிஞருக்குத்தான் தோன்றுமா ?

ஏற்றத்தாழ்வான உணர்ச்சிகள், எண்ணங்கள் இருந்தால் நாம் போடுகிற சட்டங்களை ஒழுங்காக நடத்த முடியாது. பெரும்பாலானவர்களை ஏழைகளாக வைத்துக் கொண்டு சிறுபான்மையோர் வசதியோடு இருப்பது நியாயமல்ல. அந்தக் கண்ணேட்டம் நமக்கு வேண்டும். பெரிய பொருளாதார நிபுணர்கள், அறிஞர்கள் எல்லாம் இருக்கலாம். அவர்களால்கூட இதைச் செய்ய முடிவதில்லை. இதைப் போக்க நாமும் யோசிக்க வேண்டும்.



அறிஞர்களுக்குத்தான் யோசனை தோன்றுமா என்ன? நமக்கும் அனுபவத்தில் தெரியும். கிராமத்தில் நிலைமை எப்படியிருக்கிறது? மக்கள் மனப்பான்மை என்ன? என்பதும் நமக்கும் தெரியும். என்ன செய்ய வேண்டுமென்று நாமும் சொல்ல முடியுமா, இல்லையா? அதைச் சொல்ல வேண்டும். நாமும் அதைப் பற்றியெல்லாம் தெரிந்து கொண்டிருக்கிறேம் என்ற கண்ணேட்டத்தோடு கவனிக்க வேண்டும்.

## தவருன பாதை காட்டுவதா ?

நம்முடைய நாடு பரந்த நாடு—பெரிய தேசம். நாம் ஒன்ருக இருக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேம். அதில் நமக்கு வித்தியாசம் ஏதுமில்லை. பல்வேறு பிரிவினை முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதற்கெல்லாம் காரணம் என்ன? இதையெல்லாம் யார் செய்கிருர்கள்? பட்டினி கிடப்பவர்களுக்கான பிரச்சினையா இது? சாப்பாட்டுக்கு இல்லாதவன், பாவம், தனக்கு நல்வாழ்வு வேண்டுமென்று நினைக்கிருன். மேலே இருக்கிறவன், 'நீ பட்டினியாய் இருக்கிருய், அதற்கு அதுதான் காரணம், இதுதான் காரணம்' என்று ஜாதி வேற்றுமை, இன வேற்றுமைகளைக் காட்டுகிருன். அதற்கு ஏழை என்ன செய்வான்?

தவறான பாதையைக் காட்டினால் அவனும் அதிலேயேதான் போவான். காரணம், அவனுடைய தாழ்ந்த நிலைமைதான். அது மாறினாலொழிய, அவன் நிலைமை உயர்ந்தாலொழிய, நாம் எவ்வளவுதான் ஐக்கியத்திற்குப் பாடுபட்டாலும், ஒன்றும் செய்ய முடியாது. அதுவரையில், ஜாதி—இன—மொழி வேற்றுமைகளைக் காட்டி பிரிவினையை உண்டாக்கக் குழப்பங்கள் செய்து கொண்டுதான் இருப்பார்கள். அதற்கு முடிவு கட்ட வேண்டுமானால், பொருளாதார ஏற்றத்தாழ்வு சமுதாயத்தை விட்டுப் போக வேண்டும். அதற்கு யோசனை செய்ய வேண்டும். அது இல்லாமல் பெரிய காரியம் ஒன்றும் செய்ய முடியாது. புதிய சமுதாயத்தை உருவாக்கும் பெரிய கடமை—பொறுப்பு—நமக்கு இருக்கிறது. இது கட்சிப் பிரச்சினை அல்ல. பொருளாதார ஏற்றத்தாழ்வு போக வேண்டுமென்று எல்லாக் கட்சிகளும் ஒப்புக் கொள்ளுகின்றன. இதில் கட்சிப் பிரச்சினை இருக்கிறதா என்ன ?

## கோளாறு என்ன ?

தாழ்ந்தவர்கள், உயர்ந்தவர்கள் என்ற வித்தியாசம் இல்லையென்று சொல்லுகிறோம். இருந்தாலும் சரியான பாதையில் நாம் போக முடியவில்லையே! அதற்கென்ன காரணம் ? கோளாறு எங்கேயிருக்கிறது ? எண்ணத்தின் அடிப்படையில் ஒரு முடிவுக்கு வந்து விட்டோம்; ஆனால், இன்னும் காரியத்தில் போகவில்லை. அதை யோசிக்காமல் இருக்கிறோம். அரசியல் கட்சித் தலைவர்கள் மட்டும் பொறுப்பில்லை. மக்கள் எல்லோரும்தான் பொறுப்பு. ஒருவர்மேல் ஒருவர் பொறுப்பைப் போட்டுவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை.



சாதாரணமாக, நமக்கு ஒரு கெட்ட பழக்கம் இருக்கிறது. ஏதாவது கெட்டது நடந்தால் அவர் கெடுத்தார், இவர் கெடுத்தார் என்று ஒருவரை ஒருவர் சொல்வார்கள். நல்லது வந்தால் 'நானே' என்று சொல்லுவது, மாலை மரியாதைக்கு முன்வருவது அதிகம். ஏன் அப்படி ? நமக்குத் தைரியம் வேண்டும். தவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும். தவறு யாருமே செய்வதில்லையா என்ன ? தவறு இருந்தால், தவறான பாதையில் போனால் திருத்திக் கொள்ளக் கூடாதா ?

## பழமையும் புதுமையும்

பழைய வழியிலேயே போக வேண்டியதில்லை; பழையது என்பதற்காக முழுமையாக அதைத் தள்ளிவிடவிடவும் வேண்டியதில்லை. நல்லது அதிலும் இருக்கிறது. அதை ஏற்றுக் கொள்ளலாம். தள்ள வேண்டியதைத் தள்ள வேண்டும். புதுமையை முழுவதும் ஏற்றுக் கொள்ள வேண்டியதுமில்லை. தள்ள வேண்டி

யதும் இல்லை. அதுமாதிரிப் போக்கில் போனால் தான் புதிய சமுதாயம் உருவாகுமே தவிர, நல்லதையும் ஏற்கமாட்டேன், கெட்டதையும் விடமாட்டேன் என்றிருக்கக்கூடாது.

பள்ளிக்கூடம், ரோடு, கிணறு எல்லா வசதிகளும் செய்து கொடுக்க வேண்டியது தான். ஆனால் அதுதானா நமது இலட்சியத்தின் முடிவு? இலட்சியம் என்ன? புதிய சமுதாயத்தை அமைப்பதுதான். நமது பஞ்சாயத்துத் தலைவர்களும், யூனியன் தலைவர்களும் ஒற்றுமையாக இருந்தால், காரியங்கள் சரியாக நடக்கும். அந்த உணர்ச்சி இல்லையென்றால், அந்த மனப்பான்மை இல்லையென்னும்போது சின்னச் சண்டைகளைத் தீர்க்கவே வேலை சரியாகிவிடும்.

## பழக்கத்தினால் ஏற்படும் நம்பிக்கை

பஞ்சாயத்து ராஜ்யம் இரண்டு இடங்களில் நடைமுறையில் இருக்கும்போது அங்கு நடைபெறும் விஷயங்களைக் கேட்பதால் இரண்டு பேருக்கும் ஒரு நம்பிக்கை, பலம் ஏற்படுகிறது. அப்படி ஒரே கொள்கையாக இயங்குவதால் தான் இந்தியா ஒன்றாக இருக்க முடிகிறது. டெல்லி சட்ட சபைக்குப் போகிறோம், வேறு பல வேலைகளுக்கும் அங்கு போகிறோம். அங்குள்ளவர்களுடன் ஒன்றாக இருக்கிறோம், பழ



குகிறோம், ஒருவருக்கொருவர் நம்பிக்கை ஏற்படுகிறது.

பழகாத நிலையில் ஒருவர் மீது குற்றம் சொன்னால் நம்ப முடியுமா? ரொம்ப நல்லவர், நியாயமாக நடப்பவர், கெடுதல் ஒன்றும் செய்யமாட்டார் என்ற நம்பிக்கை நமக்கு உறுதியாக இருக்க வேண்டும். அது இல்லாதவர்கள் அவர்களைக் கண்டு பயந்து கொண்டு அவர்கள் தப்பாகச் செய்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். சேர நாடு வேறு, சோழ நாடு வேறு, பாண்டிய நாடு வேறு என்று சொல்லுகிறார்கள். காரணம் என்ன? இதற்கெல்லாம் காரணம், அவர்கள் கூடிப்பழகாதது தான். அதுமாதிரி நாமும் பழகாமல் இருந்தால் அந்த நிலைதான் ஏற்படும்.

## சிறுவயது நினைவு

பழைய காலத்தில் நான் சிறுவனாக இருக்கும்போது, தஞ்சாவூர்ப் பக்கங்களிலிருந்து மதுரை—இராமநாதபுரம் பக்கங்களுக்கு வருகிறவர்கள், 'நாங்கள் சோழ தேசம்' என்று சொல்லுவார்கள். கோயம்புத்தூர்க்காரர்கள் 'கொங்கு நாடு, கொங்கணர்' என்றுதான் சொல்லுவார்கள். இதையெல்லாம் பழைய காலத்தில் சொன்னார்கள். இப்போது அப்படிச் சொல்லுகிறார்களா? பழைய காலத்தில் அப்

படிப் பெயர் வைத்திருப்பார்கள். அதையெல்லாம் வைத்துக் கொண்டு அவன் ஆரியன்-திராவிடன், அது வடக்கு-தெற்கு என்று ஆரம்பித்து விடலாமா? இதை ஒப்புக்கொள்ளத்தான் முடியுமா? ஒருவருக்கொருவர் பழகாவிட்டால் இது போகாது. சினேகத்தால் வருவதுதான் இவையெல்லாம். கூடிப் பழகாமல் இருந்தால் வேறு வேருக நினைக்கும்படி இருக்கும்.

## தேரும் திருவிழாவும்

சாதாரணமாக, நம் ஊர்களிலேதேர், திருவிழா என்று ஏன் வைக்கிறேம்? அப்போது எல்லோரும் ஒன்று சேருகிறேம். அதனுல் நமக்கு ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது. குடும்பத்தைப் பாருங்களேன்! அது எப்படி இருக்கிறது? கல்யாணம், திருவிழா, பண்டிகை என்றெல்லாம் வைக்கிருர்கள் அல்லவா? எதற்காக? அப்போதுதான்—எல்லோரும் ஒன்ருகச் சேர முடிகிறது—பழக வாய்ப்பு ஏற்படுகிறது—எல்லோரும் பழக முடிகிறது. அம்மாதிரி, வருஷத்துக்கு ஒரு தட்வையோ, இரண்டு தடவையோ நாம் கூடிப் பழகும் சந்தர்ப்பம் மகாநாடுகளால்தான் ஏற்படுகிறது. இது ரொம்ப நல்லது. ஒருவருக்கொருவர் பரஸ்பரம் நம்பிக்கை உண்டாக்குவது சாதாரண காரியமா, என்ன? அது பெரிய காரியம்தான்! அப்போது இந்த வேற்றுமைகளை நம்பமாட்டோம்.



## சுயநல மனப்பான்மை

மந்திரிகள் இருக்கிருர்கள். முதன் மந்திரி அவர் ஊருக்கே எல்லாம் கொண்டுபோய் விட்டார். நல்லதை எல்லாம் அவர் கொண்டுபோய் விட்டார். கோயம்புத்தூருக்கு அந்த மந்திரி கொண்டுபோய் விட்டார். இதுமாதிரி—யெல்லாம் ஜனங்கள் சொல்லுவார்கள் — பேசிக் கொள்வார்கள். காரணம் என்ன? மனிதனின் மனப்பான்மையில் சுயநலம் அதிகமாகவிருக்கிறது. நல்லது செய்தாலும் நாம் ஒத்துழைக்க மாட்டோம் என்கிறேம். அந்த எண்ணம் நம்மை விட்டுப் போகவேண்டும்.

## கெடுதியில்லாமல் தீர்வு

ஒவ்வொரு துறையிலும் பல நல்ல முயற்சிகளை எடுத்தால்தான் சாதாரண மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும். சாதாரணமாகத் தறி இருக்கிறது. அதில் முன்போல 20-ம் நம்பரையும் 40-ம் நம்பரையும் மட்டும் போட்டுக் கொண்டு இருந்தால் போதாது. இப்போது 40-ம் நம்பருக்குக் குறைந்து யாரும் துணி வாங்குவதில்லை. ஆகவே, இந்தத் தறிகளை எல்லாம் மாற்ற வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. புதுத் தறிகளைக் கொண்டு வர வேண்டும். இவ்விதம் பல்விதப் பிரச்சினைகள் இருக்கின்றன. தமிழ் நாட்டில் மூன்று கோடிப்

பேர்களது பிரச்சினைகள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் நல்ல முறையில், யாருக்கும் கெடுதியில்லாத முறையில் தீர்ப்பதற்கு நாம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் பல பிரச்சினைகளை நாம் தீர்க்க முடியும்.

## அன்பு விசாரணை

ரோடு போடுகிறோம் என்றால், ரோடு எதற்கு, எங்கள் வண்டி போகப் போகிதா? என்று கேட்பார்கள். ஹரிஜன காலனி கட்டுகிறோம் என்றால் சிலருக்குத்தான் கிடைக்கும். மற்றவர்கள் தங்களுக்கு இல்லையே என்பார்கள்.

ஆக, பல்வேறு பிரச்சினைகளை நாம் சமாளிக்க வேண்டும். எல்லோரையும் கூப்பிட்டு அவர் அவர்களுக்கு என்ன வேண்டும், எப்படி இருக்கிறீர்கள் என்றெல்லாம் அன்புடன் விசாரிக்க வேண்டும். உங்களுக்குச் சாப்பாட்டிற்கு வசதியிருக்கிறதா, என்ன தொழில் செய்கிறீர்கள், உங்கள் பிள்ளை நன்கு படிக்கிறானா என்றெல்லாம் விசாரிக்க வேண்டும். அப்படி விசாரிக்கும்போது அவர்களுக்கு ஒரு திருப்தி ஏற்படும். நாம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முயற்சி எடுக்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரியவேண்டும்.



இதில், அரசியல் விஷயம், பஞ்சாயத்தில் வரத்தான் செய்யும். வரத்தான் வரும். ஆனால் அரசியல் கட்சிகள் பஞ்சாயத்து விஷயங்களில் கலந்து கொள்ளாமல் விலகி நின்றால் நல்லது. ஏற்கனவே தொந்திரவுகள் இருக்கின்றன. அரசியலும் வரவேண்டுமா? கிராமப் பஞ்சாயத்துச் சம்பந்தப்பட்ட மட்டில் அரசியல் விவகாரங்களுக்கு இடம் கொடுக்காமல் இருக்க வேண்டும்.

## ஊர் கெட்டுப் போக...

சில ஊர்களில் ஒன்றுமே நடக்காது. அப்படி ஒன்றுமே நடக்காததற்குக் காரணம் ஊரில் உள்ள சண்டைதான்.

ஒரு பள்ளிக்கூடம் வைக்க வேண்டுமென்றால், இங்கே வைக்க வேண்டும் என்பர் சிலர். வேறு ஒரு இடத்தில் வைக்க வேண்டுமென்பார்கள் வேறு சிலர். அங்கு வைத்தால் 6 பர்லாங்கு நடக்க வேண்டியிருக்கிறது என்பர் ஒரு சிலர். ஆக, இப்படியே சொல்லிக் கொண்டு ஒன்றுமே நடக்காமல் இருக்கும்.

இப்படிச் சண்டை போட்டுக்கொண்டால் இந்தக் கிராமத்திற்கு வேண்டாம் என்று நினைத்து, அந்தப் பள்ளிக்கூடத்திற்கு உண்டான செலவை வேறு ஒரு கிராமத்தில் செலவழித்து விடுவார்கள். கோபம் வரலாம், ஆத்திரம் வரலாம், வராது என்று சொல்லவில்லை.

உணர்ச்சி இல்லாவிட்டால் அது மரக்கட்டை தான். கூடுமான வரையில் சண்டை காரணமாக ஊர் கெட்டுப்போக இடம் கொடுக்கக் கூடாது. பலவிதமான அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆனால், தகராறு இல்லாமலிருந்தால் கிராமத்திற்குத்தான் நல்லது. எல்லாவற்றையும் பார்த்து, அதற்குத் தகுந்தாற் போல் நடந்துகொள்ள வேண்டும்.

## யாரிடம் சொல்வது?

மகாத்மாவிற்கு மக்களின் எண்ணத்தை உணர்ந்து காரியங்களை ஆற்றும் சக்தி இருந்தது. மக்களின் எண்ணத்தை உணர்ந்து காரியங்களை நடத்தியதால் ஒரு பெரிய சக்தியை காந்திஜியினால் திரட்ட முடிந்தது. ஜாதிச் சண்டை, மதச் சண்டை என்று பலஇருந்தன. அவைகளையெல்லாம் மறந்து கட்டுப்பட்டிருந்ததற்குக் காரணம் என்ன? மக்களுக்கு அவரிடமிருந்த நம்பிக்கைதான்.

அதேபோல் பஞ்சாயத்துத் தலைவர்கள் என்றிருக்கக் கூடியவர்கள் ஒவ்வொருவரும் மக்களுடைய நம்பிக்கையைப் பெறவேண்டும். ஏழைக்குப் பல குறைகள் இருக்கின்றன. அவன் யாரிடத்தில் போய்ச் சொல்லுவான். அவனுடைய குறைகளை எல்லாம் நாம் கேட்க வேண்டும். அதில் ஏதாவது நிவிர்த்தி செய்து



கொடுக்க முடியுமா என்பதையும் நாம் பரிசீலிக்க வேண்டும்.

## நம் ஊரில் என்ன?

இன்றைக்கு ஆந்திராவிலிருந்து தண்ணீர் கிடைக்கவில்லை. கேரளாவிலிருந்து தண்ணீர் கிடைக்கவில்லை என்றெல்லாம் பேசிக்கொள்கிறோம். ஆனால் நம் ஊரில் என்ன நடக்கிறது.

எனக்குப் பல சம்பவங்கள் தெரியும். அடுத்த ஏரியிலிருந்து ஒரு கால்வாய் வெட்டித் தண்ணீர் கொண்டு வந்தால் எங்களுக்குச் சாகுபடி செய்ய முடியும் என்று பக்கத்திலிருக்கக் கூடியவர்கள் சொன்னால், அது முடியாது, எப்படிக் கொடுக்க முடியும், எங்களுக்குத் தண்ணீர் இல்லாமல் போய்விடும் என்று பயந்து விடுகிறார்கள். எல்லாவற்றிற்கும் பயம்தான் காரணம். பொருள் பற்றாக்குறை ஏற்படும்போது தான் இந்தநிலைமை ஏற்படுகிறது.

இதுபோன்ற பல பிரச்சினைகள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் நாம் பரிசீலிக்க வேண்டும். எங்காவது தவறு நடப்பதைப் பற்றி மட்டும் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். தப்பைப் பற்றி மட்டும் பேசிக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி நாம் விவாதிக்க வேண்

டும். பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு எல்லாரும் ஒத்துழைக்க வேண்டும்.

## மரியாதை மனப்பான்மை

கிராமங்களில் சின்னஞ்சிறு வித்தியாசங்கள் இருக்கலாம். பரம்பரையாகவே இருக்கின்ற காரணங்கள் இருக்கலாம். அதேபோல பல பெரியவர்கள் இருக்கலாம். அவர்களை எல்லாம் நாம் ஒன்று சேர்த்துக்கொள்ள வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் என்று ஏற்பட்டு விட்டால், அதில் பல தகராறுகள் ஏற்படலாம் எல்லா இடத்திலும் ஒழுங்காக நடக்கும் என்று சொல்ல முடியாது. பல தகராறுகள் இருந்தால் பல திட்டங்கள் நிறைவேறுவதற்குக் காலதாமதம் ஏற்படலாம். இம்மாதிரி காரியங்களில் யார் பெரியவர் என்பதற்காகச் சண்டை போடக்கூடாது.

ஜனநாயகம்—மக்களாட்சி நம் நாட்டில் வந்ததற்குப் பிறகு, நாம் எல்லோரும் பெரியவர்கள் தான். இந்த மனப்பான்மை எல்லோருக்கும் இருக்க வேண்டும். மரியாதையாகப் பழகுவதற்கு எல்லோரும் பழகிக்கொள்ள வேண்டும். பொறுமையோடு நடந்து கொள்வதற்கும் பழகிக்கொள்ள வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர் என்று சொன்னால் இந்தக் குணங்கள் எல்லாம் இருக்க வேண்டும்.



## படித்துக் கதை சொல்வது

ஒவ்வொரு ஜில்லாவிலும் செய்திருக்கிற அபிவிருத்தி வேலைகளைப் பற்றி புத்தகம் வெளியிட்டிருக்கிறார்கள். அவை நன்றாக இருக்கின்றன. அதையெல்லாம் எப்போது படிப்பது? அவரவர்களுடைய பிழைப்புக்காகத் தொழில் இருக்கிறது அவரவர்களுக்கு. அதனால் படிக்க நேரம் கிடைப்பதில்லை. ஊரில் உள்ளவர்கள் ஒரு சிலருக்கு நேரம் இருக்கும். இவர்கள் இத்தகைய வெளியீடுகளைப் படிப்பார்கள்.

பழைய காலத்தில் பாரதம், இராமாயணம் போன்ற கதையெல்லாம் சிலர் படிக்க மற்றவர்கள் கேட்பதுண்டு. சாயங்கால வேளையில் அதைப்போல திட்டம் சம்பந்தமாகவும் பாட்டாகப் போட்டு வைத்துக்கொண்டு கிராமப்புறங்களில் எடுத்துச் சொல்லலாம். இந்தக் காரியத்தை முடிந்த வரையில் ஊழியர்களே செய்யலாம். மாலை வேளையில், படித்து மற்றவர்களுக்குச் சொல்வது நல்லது. ஏனென்றால் ஒவ்வொருவரும் படிப்பது என்றால் முடியாத காரியம்.

## எண்ணத்தில் உறுதி

கிராமத் தொண்டர்கள் அதிகமாகத்தான் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அதைக் கண்டு சந்தோஷப்படுங்கள். வீட்டிலே பல கஷ்டங்கள் ஏற்படுகின்றனவே, அப்பொழுதெல்லாம் நாம் என்ன செய்கிறோம்? 'எப்போதாவது நமக்கு நல்ல காலம் வராதா?' என்ற நம்பிக்கையோடு காரியங்களைச் செய்து கொண்டே போகிறோம் அல்லவா? அதுபோல் நாமும் வேலை செய்துகொண்டே போனால் நமக்கும் நல்ல நிலைமை ஏற்படத்தான் செய்யும். ஒரு வேலையும் பண்ணாமல் வீட்டில் சும்மா இருக்கக்கூடாது. எவ்வளவு வேலைகள் இருந்தாலும் சரி, அவை எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் சரி, அது எவ்வளவு பெரிய காரியமாக இருந்தாலும் சரி, அவற்றைச் செய்து முடித்தே தீருவது என்று மனத்தில் உறுதியாக வைத்துக் கொண்டால் போதும். அந்த எண்ணம் இருந்தால்தான் வேலையைச் சரியாகச் செய்ய முடியும். அதேபோல் நல்ல முறையில் எந்தக் காரியத்தையும் செய்ய முடியும்.

## முன்னேற்றத்தை நம்பாதவர்கள்

எதிர்க்கட்சிக்காரர்கள் கிராமம் கிராமமாகச் சென்று, "ஒன்றும் நடக்கவில்லை" என்று சொல்கிறார்கள் என்றால், கிராமத்தில்



ஏற்படக்கூடிய முன்னேற்றம் அவர்களுக்குத் தெரியாது என்றுதான் அர்த்தம். முன்னேற்றத்தை அவ்வளவு சீக்கிரமாகத் தெரிந்து கொள்ள முடியாது.

நாட்டில் ஏற்பட்ட பெரிய மாறுதலே அவர்களுக்குத் தெரியாமலிருந்தது. சுயராஜ்யத்தைப் பற்றியும் இம்மாதிரிதான் அப்பொழுது பலர் நினைத்துக் கொண்டிருந்தார்கள். 1920-ம் வருடத்திலிருந்து காந்தியடிகளது தலைமையின்கீழ் சுயராஜ்ய இயக்கம் நடந்துகொண்டு இருந்த காலத்தில் நாங்கள் இராட்டையைத் தூக்கிக்கொண்டு, கதர்த் துணியை உடுத்திக்கொண்டு போய்க்கொண்டிருக்கும் போது, எங்களைப் பார்த்து, "இவர்கள் எல்லோரும் பைத்தியக்காரர்கள், கோணிச் சாக்குத் துணியைப் போட்டுக்கொண்டு போகிறார்கள்" என்று கேலி செய்தவர்களும் உண்டு. சுயராஜ்யம் வருவதற்கு முதல் நாள் வரைக்கும் அவர்கள் நம்பவில்லை. அதே மாதிரிதான் நாட்டின் முன்னேற்றத் திட்டங்களையும் நம்பாமல் ஒரு சிலர் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கட்டும். ஆனால், நாம் செய்யக்கூடிய வேலைகளைச் சரியான முறையில், உறுதியாகச் செய்தால் நம்மை அறியாமல் நாட்டில் மாறுதல் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

## செயல்பட்டு வரும் புரட்சி

சுதந்திரப் புரட்சி எப்படி ஏற்பட்டது? அகிம்சா முறையில், உலகமே பிரமிக்கத்தக்க வகையில், தகராறு இல்லாமல், பலாத்காரம் இல்லாமல் ஒரு அரசாங்க முறையை மாற்றியமைத்த புதுமை நமக்குத் தெரிகிறது. அது போலவே, இப்போதும் கிராமங்களில் ஒருவருக்கும் தெரியாமல் புதிய புரட்சி நடந்து கொண்டிருக்கிறது; அந்தப் புதிய புரட்சியைச் செயலில் நடத்திக் கொண்டிருக்கக்கூடிய பெரும் பொறுப்பு, பஞ்சாயத்துக்களேயும், கிராம சேவகர்களாகிய, கிராம சேவகிகளாகிய, சமூகக் கல்வி அமைப்பாளர்களேயும் இன்னும் அப்பெரும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்களேயும் சார்ந்தது.

இவ்விதம் நல்ல முறையில் கிராமங்களில் மாறுதல் ஏற்பட்டுக் கொண்டிருப்பது நமக்கே கூடத் தெரியாது. நல்ல முறையில் மாறுதல் ஏற்பட்டுக் கொண்டே வருகிறது. ஆகவே, இந்தக் கருத்தில் மற்றவர்கள் யாராவது குறை சொன்னுல் அதைப்பற்றிக் கவலேப்பட வேண்டிய அவசியமில்லே. இந்த நல்ல திட்டத்தை நாம் எப்படியும் நிறைவேற்றியாக வேண்டும். எவ்வளவு சிரமங்கள் இருந்த போதிலும், அவைகளேப் பொருட்படுத்தாமல் திட்டங்களே நிறைவேற்றியே தீருவது என்று



பஞ்சாயத்துக்களும் கிராம ஊழியர்களும் தன்னம்பிக்கையோடு செயலாற்ற வேண்டும்.

## ரஷ்யா, சீனு மாதிரியா?

எந்தத் தனி மனிதனுக்கும் சொந்தம் இல்லாத நிலத்திலும், சர்க்காருக்குச் சொந்தமான நிலத்திலும் விஞேபாஜியின் கிராமதான இயக்கம் மூலம் கிடைத்த நிலத்திலும்தான் கூட்டுப் பண்ணையை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம். எந்தத் தனி மனிதனுடைய நிலத்தையும், அவனுடைய விருப்பத்துக்கு மாருக இதில் சேர்க்கவே மாட்டோம். இதில் சேர்ந்தால் நன்மை ஏற்படும் என்று கருதுகிறவர்கள் வந்து சேரலாம்.

ரஷ்யா, சீனு போன்ற நாடுகளில் யாருக்கும் நிலம் சொந்தமாக இல்லே. அங்கே நடக்கிற மாதிரி கூட்டுப் பண்ணையைக் கொண்டு வரமாட்டோம். யாருடைய நிலத்தையும் இதற்காகப் பிடுங்கவே மாட்டோம். விவசாயம் பற்றி தெரியாதவர்களும் விவசாயிகளுடன் தொடர்பு இல்லாதவர்களும் இது பற்றிப் பேசிக் குழப்பப் பார்க்கிருர்களே!

## பரம்பரை வழக்கம்போல...

விவசாயிகளுக்குத் தேவையான விதை, மாடு, உரம், கடன் வசதி ஆகியவற்றைச் செய்து தருவதே சேவைக் கூட்டுறவு ஆகும். யந்திரக் கலப்பைகள், பாசன வசதிகள் இந்தச் சங்கத்தின் மூலம் செய்ய முடியும்.

நம்முடைய கிராமங்களில் பரம்பரை பரம்பரையாக ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து கொண்டு வருகிறார்கள். நாற்று நடுவது, ஏர் உழுவது, அறுவடைக்குப் போவது இந்த விஷயங்களில் ஒரு குடும்பத்தினர் மற்ற குடும்பத்தினருக்கு உதவுகிறார்கள் அல்லவா? அதே தான் இப்போது சங்கமூலம் செய்யலாம் என்று சொல்கிறோம். இதில் புதியது ஒன்றும் இல்லை. சங்கம் மூலம் செய்தால் நன்றாகவும் விரிவாகவும் செய்ய முடியும். அரசாங்கத்தின் உதவியும் கிடைக்கும்.

கூட்டுறவுப் பண்ணையில் யாரையும் கட்டாயமாகச் சேர்ப்பது இல்லை. இது ஒரு முறை. உற்பத்தி பெருகவும், விவசாய அபிவிருத்திக்கும் இது ஒரு நல்ல முறை. ஒரு ஏகரா, இரண்டு ஏகரா நிலத்துக்கு வரப்பு போட்டுக் கொண்டிருப்பவர்கள் இதில் சேர்ந்தால் நன்மை கிடைக்கும். வேறு உப தொழில்கள் நடத்தவும் உதவி கிடைக்கும். யாருடைய நிலமும் பறிபோய் விடாது.



## அறிவும் ஆற்றலும்

நாட்டின் வளமும் செல்வமும் பெருக வேண்டுமானால் மக்களின் கூட்டுணர்வு மனப்பான்மை வளர வேண்டும். கூட்டு உழைப்பும் கூட்டுப் பொறுப்புணர்ச்சியுமே நம்முடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் சாதனங்கள்.

ஒன்றுபட்ட புதியதோர் சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தான் நாம் பாடுபடுகிறோம்.

கூட்டுறவு இயக்கம் சிறந்த முறையில் நடந்தால் சாதாரண மக்கள் பயன் அடைவார்கள். நம் நாட்டில் பெரும்பான்மையானவர்கள் சாதாரண மக்கள். அவர்கள் தங்கள் பிழைப்புக்கு உடல் உழைப்பைத்தான் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. நில வசதி, கல்வி வசதி, பண வசதி இருந்தால்தான் விவசாயம் செய்து உத்தியோகம் செய்து, தொழில் செய்து பிழைக்க முடியும் என்ற நிலையை மாற்றி அமைக்கவேண்டும். நல்ல ஆற்றல் இருப்பவர்களுக்கு வசதி செய்து தருவது சமுதாயத்தின் பொறுப்பு. ஆற்றலும் அறிவும் உள்ளவர்களுக்கு வசதி இல்லையானால் அந்த ஆற்றலும், அறிவும் வீணாகி விடும். அத்தகையவர்களின் ஆற்றலையும், அறிவையும் நல்ல முறையில் பயன்படுத்த கூட்டுறவுச் சங்கங்கள் பயன்பட்டு வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்

களை நல்ல முறையில் பயன்படுத்தினால் நம் நாடு நல்ல முறையில் முன்னேறும்.

## பயன்படும் இயக்கம்

ஒருவருக்கொருவர் உதவுவதுதான் கூட்டுறவு. கூட்டு முயற்சி, கூட்டு உழைப்பு, கூட்டுப் பொறுப்பு இவை இணைந்ததுதான் கூட்டுறவு. யாரும் தனித்து வாழ முடியாது. ஒருவருக்கொருவர் உதவித்தான் வாழவேண்டும்.

மழை எல்லோருக்கும் பயன்பட்டால்தான் எல்லோரும் மழைவேண்டும் என்பார்கள். அப்படிப் பெய்த மழைத் தண்ணீரை அணைகட்டித் தேக்கவேண்டும். அந்தத் தண்ணீர் அனைவருக்கும் பயன்பட வேண்டும். இல்லாவிட்டால் ஆபத்து ஏற்படும்.

கூட்டுறவு இயக்கம் ஏதோ ஒரு தவறான இயக்கம் என்று சந்தேகப்படுகிறார்கள். அப்படிப்பட்ட சந்தேகத்துக்குக் காரணம் இல்லை.

நமது நாட்டில் பெரும்பான்மையான மக்கள் ஏழைகள் வறுமையினால் அல்லற்படுகின்றனர். அவர்களுக்கு உதவி செய்யத்தான் இந்தக் கூட்டுறவு இயக்கம். இதை ஏழை மக்களும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகையால் அரசாங்கம் இந்த இயக்கத்தைப் பல துறைகளில் விஸ்த



ரித்துக் கொண்டே போகிறது. இந்த இயக்கம் பலப்பட பலப்பட நாட்டின் பொருளாதார ஏற்றத்தாழ்வை ஓரளவுக்குக் குறைத்துக் கொள்ள முடியும்.

கூட்டு முயற்சி முறையில் பாடுபடாவிடில் முன்னேற முடியாது. இதை மக்கள் மனத்திலே நிலைநிறுத்தச் செய்ய வேண்டும்.

## மக்கள் பலம்

முயற்சியிலும் உழைப்பிலும் மட்டுமின்றி பொறுப்பிலும் கூட்டு வேண்டும். இந்தப் பொறுப்பு இல்லை என்றால், உழைப்பில் உற்சாகம் இருக்காது. பொறுப்பில் பங்கு கொடுக்காவிடில் இயக்கம் நீண்ட நாள் நடக்காது; பொறுப்பு கொடுத்தால்தான் பெருவாரியான மக்கள் இந்த இயக்கத்தில் பங்கு கொள்ள முடியும்.

பெரும் காரியங்களைச் செய்யும்பொழுது, பெரும் திரளான மக்கள் நம் பின்னால் பலமாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்தக் காரியம் வெற்றிகரமாக முடியும்.

சம வாழ்வு வாழவேண்டும் என்று பாடுபடுகிறோம். சம வாழ்வு கூடாது என்று யாரும் மறுக்கவில்லை. இனி இதை மறுக்க முடியாது என்ற காரணத்தால் கூட்டுறவு முறையில் உள்ள சில குறைபாடுகளை மட்டும்

எடுத்துக் கூறுகிறார்கள்—அது அவர்களின் தந்திரமாகும்.

குறைகள் இருந்தால் அதை மறைக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. குறைகளைப் போக்க வழி சொல்வதுதான் நியாயம். குறைகளைச் சொல்லி ஸ்தாபனத்தை உடைக்கக்கூடாது.

## வாழ்வு என்பது...

எல்லாத் துறையிலும் ஊழல் இருக்கிறது என்பது வாஸ்தவம். ஊழல் ஆகாயத்திலிருந்து வந்துவிடவில்லை. நம்மிடையே, நம் சமுதாயத்தில் உள்ள சீர்கேட்டினால்தான் ஊழல் ஏற்படுகிறது. ஊழல் செய்பவர்கள் அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள்தான். குறை இல்லாமல் இருக்க முடியாது. குறை செய்கிறார்கள் என்றால் வறுமைதான் காரணம். தண்டனை அடைந்தாலும் பரவாயில்லை. சாராயம் விற்றுப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறான். வறுமை போனால் குறைபாடுகள் தானாக நீங்கி விடும்.

குறைபாடுகளைப் போக்கத் தகுந்த வேலை செய்ய வேண்டும். விஷயம் தெரியாதவர்கள் குற்றம் செய்வது தவறு என்பதைவிட, விஷயம் தெரிந்தவர்கள்தான் ஊரையே குழப்பத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். வாழ்வு



என்பது, எல்லோரும் சமமாக வாழவேண்டும் என்று நினைப்பதுதான் வாழ்வு.

கூட்டுறவு முறையில் சம்பந்தப்பட்டவர்கள் சிறு தவறுக்குக்கூட இடம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தப்பு கண்டு பிடிக்க வேண்டும் என்பதற்காக பூதக்கண்ணாடியை வைத்துக்கொண்டு பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஆகையால் தவறுக்கு இடம் கொடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மிகவும் ஜாக்கிரதையாக இருந்து இந்த இயக்கத்தை வலுப்படுத்த வேண்டும். சாதாரண மக்கள் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்ற எண்ணம் இருந்தால் வலுப்படுத்தலாம். நமக்குத்தான் இந்த இயக்கம் என்ற எண்ணத்தைச் சாதாரண மக்களுக்கும் உண்டாக்க வேண்டும்.

## செல்வம் பரவலாக...

நம் நாட்டில் திட்டங்கள் காரணமாகவும், உழைப்பின் காரணமாகவும் செல்வம் பெருகிக் கொண்டு வருகிறது. ஆனால் அந்தச் செல்வம் எல்லோருக்கும் பரவலாகக் கிடைக்கவில்லை. அப்படிப் பரவலாக கிடைக்கச் செய்ய கூட்டுறவு இயக்கம் பேருதவியாக இருக்கும்.

லேவாதேவி செய்வது மாத்திரம் கூட்டு றவு இயக்கத்தின் வேலே அல்ல. சர்க்கரை ஆலேகள் ஏற்படுத்தலாம். கூட்டுறவு முறையில் தொழில்களே ஏற்படுத்தலாம். விவசாயத்தையும் கூட்டுறவு முறையில் செய்யலாம்.

அரை ஏக்கர் முக்கால் ஏக்கர் நிலம் இருப்பவர்கள் நல்ல மாடு வாங்க முடியுமா? அப்படி இருப்பவர்கள் இருபது பேர் சேர்ந்து கூட்டுறவு முறையில் விவசாயம் செய்தால் நல்ல முறையில் உற்பத்தி பெருகும்.

## இருட்டறையில் விளக்கு

பணமில்லாத காரணத்தால் யாரும் சக்தி இழந்திருக்கக் கூடாது. சிறிய தொழில்கள் செய்வதற்குக்கூட சக்தியற்றவர்களாக இருக்கிருர்கள். இந்த நிலேமையை மாற்றத்தான் கூட்டுறவு இயக்கத்தை நடத்தி வருகிரேம்.

சிறு குறைபாடுகள் இருக்கலாம்; இதற்கு வறுமைதான் காரணம். மானத்தோடு பிழைக்க வழி ஏற்பட்டு விட்டால் தவருன வழியில் செல்லமாட்டார்கள். வறுமையைப் போக்கி விட்டால் குறைபாடுகள் மறைந்து விடும். இருட்டறையில் விளக்கைக் கொண்டு போனல், இருட்டு தானகப் போய்விடும்.

நாம் நல்ல முறையில் முன்னேற்றமடைய வேண்டியிருக்கிறது. இதற்கு ஒருவருக்



கொருவர் உதவிக்கொள்ள வேண்டும். இன்னெருவரைத் தாழ்த்தி, அதன் மூலம் தான் உயரப்பார்ப்பது கூடாது. தான் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை இருப்பதில் தவறில்லே.

## பணப் புழக்கம்

பொருளாதாரத் துறையில் தாழ்ந்த நிலேயில் இருப்பவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து முன்னேறினல்தான் நாடு முன்னேறியதாகக் கருத முடியும். இதற்குத் தொழிலும் விவசாயமும் நல்ல முறையில் வளர்ச்சி பெறவேண்டும். அப்போது தொழில் வாய்ப்புக்கள் பெருகி, மக்களிடம் பணப் புழக்கம் அதிகரிக்கும்.

நாட்டின் செல்வம் பெருகப் பெருக வாழ்க்கை வசதிகள் தானகப் பெருகிக் கொண்டே போகும். இன்றைக்கு நிறைய வீடுகள் கட்டப்படுவதற்குக் காரணம் மக்களிடையே பணப் புழக்கம் அதிகரித்திருப்பதுதான். இதனல் பண்டங்களின் தேவை அதிகரித்து விலேவாசியும் உயர்ந்திருக்கிறது.

தொழிலாளருக்கு அதிகக்கூலி கிடைத்தால் அவர்கள் ஒரு முறைக்கு இரு முறையாக சாப்பிடுவார்கள். அதனல் சர்க்கரை போன்ற பொருள்களின் தேவை அதிகரித்து

அதிகத் தொழிற்சாலைகள் ஏற்படக் காரண மாக இருக்கும்.

நமக்குத் தேவையான பருத்தியை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்வதால், நம் நாட்டுச் செல்வம் வெளிநாடுகளுக்குச் செல்லும். இதைத் தடுக்க நம் நாட்டில் விவசாயத்தை அபிவிருத்தி செய்யவேண்டும்.

நாட்டில் தொழில் வளர, ஏராளமான நிலக்கரி, இரும்பு, எண்ணெய் ஆகியவைகளும் மின்சாரமும் தேவைப்படுகிறது. இவை யாவும் நம் நாட்டிலேயே இருக்கின்றன. இவற்றை நாம் பயன்படுத்தாமல் இருந்ததால் நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படாமல் இருந்தது. இப்போது அவற்றைப் பயன்படுத்தி முன்னேறி வருகிறோமே!

## விலைவாசி குறைய...

விலைவாசி கூடிப்போயிருக்கிறது என்று குறை கூறுபவர்கள் விலை ஏற்றத்தை எப்படிக் குறைப்பது என்று வழி சொல்லவில்லை. விலையும் குறைய வேண்டும்; கண்ட்ரோலும் கூடாது என்று சொல்லுகிறார்கள்.

விலைவாசி குறைய வேண்டுமானால் நமது தேவைக்கு மேல் இரண்டு மடங்கு உற்பத்தி



அதிகமாக ஆகவேண்டும். அப்போது வாங்க ஆள் இருக்காது. விலையும் தானே இறங்கும்.

இடைக்காலத்தில் விலை குறைய வேண்டுமானால் கண்ட்ரோல் போட்டால்தான் முடியும். இதனால் அதிகமான அளவில் விலைவாசி இறங்காது. இதுபோல எத்தனையோ தொந்திரவுகள் இருக்கின்றன.

குறைந்த விலையில் சாமான்களைப் பெற 100 குடும்பத்திற்கு ஒரு "உபயோகிப்போர்" கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் ஓரளவுக்குக் குறைந்த விலையில் சாமான்களைப் பெற முடியும்.

இந்த முறையைக் கையாளத் தொழிற் சங்கத் தலைவர்கள் முயலவேண்டும்.

## ஏமாற்றுப் பேச்சு

கூட்டுறவு இல்லையானால் ஒரு சிலரிடம் பணம் குவிந்து விடுகிறது. குவிந்த பணத்திற்கு வரி போடுகிறோம். உடனே அவர்கள் வரி போடுகிறார்களே என்று சத்தம் போடுவார்கள். மக்களும் அவர்களுடன் சேர்ந்து சத்தம் போடுவார்கள். நாட்டுக்கு ஏதோ ஒரு கெடுதல் வந்துவிட்டது என்று சொல்லிக் குழப்பத்தை உண்டுபண்ணப் பார்க்கிறார்கள். அதனால் சமதர்மம் வேண்டாம் என்று சொல்லுகிறவர்

களின் ஏமாற்றுப் பேச்சுக்களைக் கேட்டு ஏமாறு தீர்கள்.

விலைவாசி அதிகம் ஏறி உள்ளது என்பதில் சந்தேகமில்லை. அரிசி விலை, விறகு விலை போன்ற பண்டங்களின் விலை உயர்ந்துள்ளது. இரண்டு தெருக்களில் உள்ள 100 குடும்பத்தினர் ஒன்றாகச் சேர்ந்து கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டும். அதற்கு நல்ல ஆட்களைத் தேர்ந்தெடுத்து ஒரு கமிட்டி அமைக்க வேண்டும்.

## சிக்கலான பிரச்சினை

விலைவாசி ஏறிவிட்டது என்கிறார்கள். இந்தக் கவலை எதிர்க்கட்சியினருக்கு மட்டும் அல்ல. காங்கிரஸ்காரர்களுக்கும் உண்டு. விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை நாங்களும் உணர்ந்து இருக்கிறோம். ஆனால் இதில் சிக்கலும் இருக்கிறது.

தான்யங்களின் விலையைக் குறைத்தால், விவசாயிகளின் உற்சாகம் குறைந்து போகும். கட்டாந்தரையையும் பண்படுத்திப் பயிரிடும் அவர்கள் எதற்கு இந்தச் சிரமம் என்று சும்மா இருந்து விடுவார்கள். ஆகவே, அவர்கள் நலனும் பாதிக்கப்படக் கூடாது.

அதற்காக விவசாயிகளிடம் இருந்து அரசாங்கமே உணவுத் தான்யங்களை வாங்கி,



கூட்டுறவுக் கடைகள் மூலம் விற்று வருகிறது. அரசாங்கமே கொள்முதல் செய்வதால், இடைத்தரகர்கள், வியாபாரிகள் ஆகியோரின் இலாபம் தவிர்க்கப்படும். இதனால் நியாய விலையில் அரிசி விற்க முடியும்.

## சர்க்கார் எதற்கு?

பல தொழில்கள் தனியார் துறையில் ஆரம்பிப்பதற்கு பண உதவிக்கு சர்க்கார் உத்திரவாதம் கொடுப்பதுடன் சர்க்காரும் பொருள் உதவி அளித்து வருகிறது. தொழில்களை ஆரம்பிப்பதனால் லட்சக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கின்றன என்பதால்தான் சாக்கார் ஆதரவு கொடுத்து வருகிறது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சாமான்களுக்குக் கிராக்கி ஏற்பட்டு வியாபாரம் விருத்தியடைய வெளிநாடுகளிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்யப்படுவதை இந்திய சர்க்கார் தடுத்துவருகிறது. சர்க்கார் ஏழை மக்களின் நன்மைக்காகப் பல திட்டங்களை வகுத்து நிறைவேற்ற வேண்டுமானால் பணம் தேவை என்பது தெரிந்ததே. இதற்காக ஏராளமான இலாபம் சம்பாதிக்கும் தொழில் அதிபர்கள் வரிவிதிப்பதை ஆட்சேபிக்க நியாயமில்லை.

பட்டினியாய் வாடுபவன் எப்பொழுதுமே பட்டினி கிடப்பதற்காகவோ, பணக்காரர்கள்

வருமானத்தை மேலும் பெருக்கிக் கொண்டு போவதற்காகவோ காங்கிரஸ் சர்க்கார் இருக்க வில்லை. சமதர்மக் கொள்கைகளை அமுல் நடத்தி எல்லோருக்கும் நல்வாழ்வை ஏற் படுத்தி, ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பாடுபட்டு வருவதே சர்க்காரின் நோக்கம்.

## கூடித் தொழில் செய்வோம்

கூட்டுறவு முறையில் தொழிலாளர்கள் மில்களை நடத்த முன்வந்தால் இப்போது மானேஜ்மெண்டார்களுக்குக் கொடுத்து வரும் ஆதரவை எல்லாம் தொழிற்சங்க யூனியன் களுக்கும் சர்க்கார் கொடுத்து வருவார்கள். மில் தொழிலை ஆரம்பித்து தொழிலாளர்களே நடத்தி வந்தால், அதில் உள்ள கஷ்டநஷ்டங் களை அறிய முடியும். தொழில்களை ஆரம்பிக்க எல்லோருக்கும் சந்தர்ப்பம் இருக்க வேண்டும்.

தொழில்களை நடத்துபவர்கள் கூட்டுறவு முறையில் தொழிற்பேட்டை நிறுவுவதால் அவாகள் தொழில் நடத்தும் இடம் காலக் கிரமத்தில் அவர்களுக்குச் சொந்தமானதாகவே ஆகிவிடும். சர்க்கார் தொழிற்பேட்டைகளைக் கட்டி அவைகளில் தொழில் நடத்துவதற்கு யார் வருகிறார்கள் என்று காத்துக் கொண் டிருக்க வேண்டியதில்லை.



தேசம் பல்வேறு துறைகளில் முன்னேறி யாக வேண்டும். இதற்குத் தொழில் வளர்ச்சி மிகவும் அவசியம். பெரிய தொழில்களைப் போலவே சிறு தொழில்களும் வளரவேண்டும். தொழில்கள் வளருவதற்கு இடம், தண்ணீர், மின்சாரம் ஆகியவை எவ்வளவு அவசியம் என்பது யாவருக்கும் தெரிந்ததே. பெரிய நக ரங்களில் இடம் கிடைப்பதில் பலவித கஷ்டங் கள் ஏற்படுகின்றன. மேலும் நிலத்தின் விலை போட்டிபோட முடியாத அளவுக்கு உயர்ந் துள்ளது.

முன்பு தொழில்கள் எல்லாம் கையினால் தான் செய்யப்பட்டன. ஆனால், இப்போது இயந்திர சக்தியும் மின்சார வசதியும் இல்லா மல் தொழில் செய்ய முடியாத நிலைமை இருக் கிறது.

கூட்டுறவு பாங்கின் நன்மைகளைப்பற்றி மக்கள் நன்கு உணர்ந்து வருகிறார்கள். அத னால் கூட்டுறவு இயக்கத்தில் பெருவாரியான மக்கள் இப்போது ஈடுபட்டு வருகிறார்கள். கூட்டுறவு முறையில் தொழில், விவசாயம் முதலியன செய்வதும் பெருகி வருகின்றன.

பாங்கு என்றால், கடன் வாங்குவதற் கானது மாத்திரம் அல்ல. மக்கள் தங்களிடம் உள்ள சிறு தொகைகளைப் போட்டு வைத்துத் தாங்களும் இலாபமடைந்து, பிறருக்கும் உதவ லாம்.

கூட்டுறவு முறையில் நூற்பு ஆலைகள், சர்க்கரை ஆலைகள் போன்ற பெரிய தொழிற் சாலைகளும் நடத்தி வருகிறோம்.

## ஏற்றத்தாழ்வு மறைய...

கூட்டுறவு முயற்சியால் எல்லாம் நடைபெற வேண்டும்' என ஆசைப்படுகிறோம். எவ்வளவு பலமுள்ளவர்களானாலும், பணமுள்ளவர்களானாலும், தனித்து வாழ முடியாது. கோடிக்கணக்கான மக்களின் கூட்டு முயற்சியால்தான் மனித சமுதாயம் வாழ்ந்து வருகிறது. இந்தக் கூட்டுறவு நம்மை அறியாமலேயே நடந்து வருகிறது. இந்த அடிப்படையில்தான் கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. இந்த இயக்கத்தால் மக்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வு மறைய உதவியாக இருக்கும்.

ஏற்றத் தாழ்வை அறவே ஒழித்துவிட முடியாது. இருந்தாலும் மனிதனின் அடிப் படைத் தேவையைப் பொறுத்தவரை ஏற்றத் தாழ்வுகளைப் போக்கப் பார்க்கிறோம். இதற்குச் சில தொழில்களைக் கூட்டுறவு முறையில் செய்வதால் நாம் இந்த இலட்சியத்தை அடைய வேண்டும்.

கூட்டுறவு முறையில் விவசாயம் நடைபெறவேண்டும் என்கிறோம். இதைப் பார்த்



துச் சிலர் பயப்படுகிறார்கள். ஆனால் அப்படிப் பயப்பட வேண்டியதில்லை. கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதால் விவசாயிகளுக்கு நன்மை இருக்கிறது. கூட்டுறவு முறையில் நூற்பு ஆலைகள் ஏற்படுத்துவதால் மலிவான விலையில் நூல் கிடைக்கிறது. இதில் இலாபமும் இருக்கிறது.

## தொழில் புரட்சி

இந்தியாவில் உள்ள கோடிக் கணக்கான மக்களுக்கு உணவு, வீட்டு வசதி, வேலை ஆகியவற்றைத் தேடித்தர காங்கிரஸ் சர்க்கார் பாடு பட்டு வருகிறது. இதை வெற்றிகரமாகச் செய்து முடித்தால்தான் மற்ற தேவைகளை அரசாங்கம் கவனிக்க முடியும்.

நாட்டை வளப்படுத்தும் இந்த மாபெரும் பணியில் தொழிலாளர்கள் தங்களது முழு ஒத்துழைப்பையும் அளிக்க வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பிரச்சினைகள் இருக்கும் என்பது உண்மைதான். இந்தியாவில் இப்போது தொழில் புரட்சி ஏற்பட்டு வருகிறது. தொழிலாளர்கள் தங்களது கடமைகளை உணர்ந்து, இந்தியாவில் தொழில் வளர்ச்சி ஏற்படப் பாடுபட வேண்டும். சிறு காரணங்களுக்காகத் தொழிலாளர்கள் வீணாக வேலை நிறுத்தத்தில் ஈடுபடாமல் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும்.

சென்னை நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் தொழிற்சாலைகள் பெருகி வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள், நகரில் வசித்துக் கொண்டு அங்கிருந்து தொழிற்சாலைக்கு வருவது என்பது கஷ்டம். ஆகவே, தொழிற்சாலைக்கு அருகேயே அவர்களது வீடுகள் இருக்க வேண்டும்.

## புதிய உணர்ச்சி

மனிதனுக்கு ஏற்படும் தேவைகளுக்கு அளவு ஒன்றும் கிடையாது. தேவைகள் வளர வேண்டியது அவசியமும்கூட. தேவைகள் வளர்ந்தால்தான் மனித இனத்தில் முன்னேற்றம் ஏற்படுகிறது என்று பொருள். தேவைகளை நிறைவு செய்ய வேண்டியது அரசின் கடமை. தொழிலாளர்கட்கு வீட்டு வசதிகள் செய்து கொடுக்க வேண்டியதும் அவசியம். தொழிலாளர்கள் தேவையைக் கேட்கிறார்கள் என்றால், கேட்பது அவர்களின் உரிமை. அதைக் கொடுக்க வேண்டியது அரசின் கடமை. எல்லா வசதிகளையும் தொழிலாளர்கட்கு அரசாங்கம் செய்து கொடுக்கும்.

எனவே, சர்க்கார் ஊழியர்களின் குடியிருப்பு வசதியைப் பெருக்கத் தீவிர முயற்சி செய்து வருகிறோம். அதேபோல், கிராம மக்களுக்காகவும் ஏற்பாடு செய்து வருகிறோம்.



இதற்காக 20 வருஷத் தவணையில் 2000 ரூபாய் கடனும் வீடு கட்டுவோர் 1000 ரூபாயும் போட்டு 3000 ரூபாயில் வீடுகள் கட்ட, ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்பாடு செய்து வருகிறோம். இந்த முறையினால் கிராம மக்கள் பழைய குடிசையை விட்டுவிட்டுப் புது வீட்டில் குடியிருக்கப் போவதைக் காண சந்தோஷமாக இருக்கிறது. காவிரியில் புது வெள்ளம் வந்ததுபோல் மக்கள் உள்ளத்திலே புதிய உணர்ச்சி ஏற்பட்டுள்ளது.

முன்பு 750 ரூபாயில் வீடு கட்டிக் கொடுத்து வந்தோம். இப்பொழுது அரசாங்கம் கடனாகப் பணம் கொடுத்து 3000 ரூபாயில் வீடு கட்ட ஏற்பாடு செய்துள்ளோம். புதுத் திட்டம் யாருடைய, உதவியுமில்லாமல் மக்களே தங்கள் முயற்சியில் முன்னேற உதவுகிறது. மகாத்மா காந்திஜியின் ஆசை நிறைவேறி வருகிறது. இன்னும் 10 வருஷத்தில் நாடு மிகவும் முன்னேறப் போகிறது எனத் திட்டவட்டமாகக் கூறலாம்.

## மறுக்க முடியுமா ?

சுதந்திரத்திற்குப் பிறகு, நாட்டில் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. நாட்டில் ஏராளமான புதிய பள்ளிக்கூடங்கள், புதிய தொழிற்சாலைகள், புதிய ஆஸ்பத்திரிகள், புதிய ரோடுகள் ஏற்படுத்தப்

பட்டிருக்கின்றன. கிராம வாழ்க்கையிலிருந்து நகர வாழ்க்கை வரை எல்லா துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டுத்தான் இருக்கிறது. இது ஏற்படவில்லை என்று யாராவது மறுக்க முடியுமா? மாட்டு வண்டிகள் போகக்கூடிய மண் ரோடுகளுக்குப் பதிலாக மோட்டார் கார்கள் செல்லக்கூடிய நல்ல ரோடுகள் வேண்டும் என்று கேட்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

## மாறும் வேகம்

நாட்டில் வீட்டுத் தேவை அதிகரித்து வருகிறது. இதற்குப் பொருளாதார முன்னேற்றம் தான் காரணம். ஆண்டுக்கு ரூ. 6 கோடி வீதம் செலவிட்டால் 5 ஆண்டுக் காலத்தில் ரூ. 30 கோடி செலவிட முடியும். இதனுல் வீட்டுப் பிரச்சினை தீர்ந்துவிடாது. வசதி பெருகப் பெருகத் தேவை அதிகரித்துக் கொண்டுதான் போகும். தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவது மிகவும் வரவேற்கத்தக்கது. நமக்கு வீடு கட்டும்போது நம் வசதியைத்தான் பார்க்கிறோம். நம் வீட்டில் வேலை செய்பவர்கள் எங்கோ குடிசையில் வாழ்கிறார்கள்.

வசதியாக வீடு கட்டிக் கொள்கிறவர்கள் தங்கள் வீட்டு வேலைக்காரர்களுக்கும் வீடு கட்டித் தரவேண்டும் என்று சட்டம் போட்டே ஆகவேண்டும். இல்லாவிட்டால் கட்டித் தர மாட்டார்கள். சேரிப் பிரச்சினையும் தீராது.



நல்ல வீடுகளில் வாழ்ந்தால்தான் அவர்கள் வாழ்க்கையும் நல்லபடியாக அமையும். குடிசைகளில் வாழ்வதால், பொழுதுபோக்கு முதலியவற்றில் அவர்கள் சம்பாதிக்கும் பணத்தை முழுவதும் வீணாக்கி விடுகிறார்கள்.

எனவே, அவர்கள் வாழ்க்கை திருந்த எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் குடிசை வாழ் மக்களுக்கு நல்ல வீடுகள் கட்டித்தர வேண்டும். சென்னை நகரில் குடிசைப் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. தொழில் செய்வதற்காக சென்னைக்கு வரும் ஏழை மக்கள் குடிசைகள் போட்டுக்கொண்டு வாழவேண்டிய நிலைமை இருக்கிறது. விவசாயத்தை நம்பி குறைந்த வருவாய் பெற்று வாழ்ந்தவர்கள், தொழில் செய்து பிழைக்க வருவதை நாம் தடுக்க முடியாது. அவர்கள் தொழில் வளர்ச்சியில் பங்கு கொள்வதை நாம் வரவேற்கிறோம்.

இந்த மாறுதல் மெதுவாக நடக்கிறதே, வேகமாக நடக்கவில்லையே என்று வருந்துகிறோம். ஆனால், வேகமாக மாறுதல் நடப்பதாகச்சிலர் நினைக்கிறார்கள். இந்த மாறுதல் வேகமாகத்தான் நடக்க வேண்டும்.

## மலைப்பு காரணமாக...

தார் ரோடுகள் வேண்டும் என்று கிராமங்களிலும் கேட்குமளவுக்குக் காலம் மாறியிருக்கிறது. இந்த அளவு மக்களின் தேவையும் அதிகரித்திருக்கிறது. இந்த நிலைமை ஏற்படத் திட்டங்கள் தானே காரணம் ?

ஆனால், புதிய தேவைகளைக் கண்டு மலைக்கும் காரணமாக, நாம் அடைந்திருக்கும் முன்னேற்றத்தை அறிய முடியாமல் போகும் நிலைமையும் சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது. இது மனித சுபாவம்.

இந்த நிலையில் சிலர் வளர்ச்சி வேண்டாம், திட்டம் வேண்டாம் என்று கூறுகின்ற போக்கும் இருந்து வருகிறது. இந்தப் போக்கு கூடாது. நாம் அடைந்துள்ள நல்ல பலனை உணர்ந்து அதற்குக் காரணமாக இருக்கும் நல்ல திட்டங்களைத் தொடர்ந்து நடத்த ஆதரவளித்து, அதற்கு ஒத்துழைப்புத் தருவது அவசியமாகும். பழைய காலத்தில் வாழ்ந்தது போல் நாம் இன்று வாழ முடியாது. ஆகவே, முன்னேற்றம் ஏற்படவில்லை என்று கூறுவோர் சத்தம் ஓங்கிவிட இடமளித்து விடக் கூடாது. எதிர் காலத்தில் ஏதோதானோ என்று வாழ முடியாது.



## நமக்கு ஏற்ற முறை

நம் நாட்டில் நாம் ஏக காலத்தில் தொழில் வளர்ச்சிக்கும் மக்களின் வசதியான வாழ்க்கைக்கும் திட்டமிட்டுச் செலவிடுகிறோம். நம் நாட்டுக்கு ஏற்றவாறு ஜனநாயக அடிப்படையில் சர்க்கார் இயங்குகிறது. இங்கு ஓட்டுரிமை, குறைகளைத் தெரிவிக்கும் உரிமை எல்லாமே இருக்கிறது.

நம் நாட்டில் நாம் சுதந்திரம் பெற்றதே புதிய முறை. ரத்தம் சிந்தாமல் புரட்சிசெய்து காந்திஜி தலைமையில் சுதந்திரம் பெற்றோம். எல்லாத் துறைகளிலுமே புதிய முறைகளை நாம் கைக் கொண்டு வருகிறோம். இந்த முறைகளை நம் சக்திக்கேற்றவாறு அனுஷ்டித்து வருகிறோம்; என்றாலும் சிலர் அதைரியமும் பயமும் கொள்கிறார்கள். சிலர் வேண்டுமென்றே பயமுறுத்துகிறார்கள், கூச்சலிடுகிறார்கள். படித்தவர்கள், பணக்காரர்களைக் காட்டிலும் பாமர ஏழை மக்களே சர்க்கார் நடவடிக்கைகளைக் கவனித்துத் திட்டங்களுக்கு ஆதரவு தருகிறார்கள்.

## பணம் படைத்தவன் போக்கு

நம் நாடு பழமையான நாடு. இங்கு, மக்கள் பல்வேறு தொழில்கள் செய்து பிழைத்து வந்தார்கள். இதனால் நாட்டில் பல மாறுதல்கள்

ஏற்பட்டு வந்தன. பல ஜாதிகள் ஏற்பட்டன. தாழ்த்தப்பட்ட மக்கள் பல கொடுமைகளுக்கு உள்ளாகி வந்தார்கள். இந்து சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் இந்த அழுக்கைப் போக்க வேண்டும் என்றும், அப்போதுதான் நாடு முன்னேறும் என்றும் காந்திஜி கூறிய வழியில் நாம் செல்கிறோம்.

வசதி படைத்த சிறுபான்மையோர், வசதி இல்லாத பெரும்பான்மையோரின் உழைப்பைப் பயன்படுத்திக் கொழுத்து வந்தார்கள். உழைத்து உணவை உற்பத்தி செய்த ஏழைகள் பட்டினி கிடக்கவேண்டி வந்தது. உழைக்கும் இந்த ஏழைகளுக்கு நன்மை செய்யவே உழவர்களுக்கு 60 பங்கு, நிலச் சொந்தக்காரர்களுக்கு 40 பங்கு என்று சட்டம் கொண்டு வந்தோம்.

இப்படிச் செய்ததைப் பார்த்துக் கோபித்துக் கொள்கிறார்கள். தர்மம் கெட்டுப் போகிறது என்கிறார்கள். ஏழைகள் ஏழைகளாகவே இருக்க வேண்டும் என்பதுதானா தர்மம்? பெரும்பான்மையான மக்கள் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஏழைகள் தானே! உயர்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களில் 100-க்கு இருபதுபேர்தான் வாழ்க்கை வளம் பெற்றவர்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 100-க்கு 100 பேரும் ஏழைகள்தான். இதுதான் வித்தியாசம்.



உயர்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பணம் படைத்தவர்கள், தங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த ஏழைகளிடம் சென்று, 'பார்த்தாயா? காங்கிரஸ் உங்களையும் ஹரிஜனங்களையும் ஒன்றுபோல் கருதுகிறது.' என்று பிரச்சாரம் செய்து புதிய சமுதாயம் ஏற்பட முடியாமல் தடுக்கப் பார்க்கிறார்கள். எல்லோரும் படித்து விட்டால் அப்படிச் செய்ய முடியாது.

## முளையிலேயே கிள்ளி...

இப்போது மக்கள் முன் இருக்கும் பிரச்சினை ஜாதிப் பிரச்சினையல்ல, ஆனால், பொருளாதாரப் பிரச்சினை. பொருளாதாரம் நல்லபடியாக இருந்தால், ஜாதி உணர்ச்சி தானாகச் செத்துப் போகும். ஜாதிஉணர்ச்சி நமது சொந்த சிருஷ்டி.

வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் முன்னேற்றத்துக்கான கல்வி வசதிகளைச் செய்வதும்தான் அரசாங்கத்தின் இலட்சியம். மற்றும் எதிர்க்கட்சிகள் சமய சந்தர்ப்ப நிலவரங்களைச் சுயநலத்திற்குப் பயன்படுத்திக் கொண்டு பிரிவினையை உண்டாக்க முயற்சித்து வருகின்றன. இதனால் முடிவில் கஷ்டத்துக்கு உள்ளாகிறவர்கள் ஹரிஜனங்கள் தான். எனவே, ஹரிஜனங்களுக்குள் உள்ள

கிளைச் சக்திகளுக்குள் ஐக்கியம் ஏற்படுத்த வேண்டும்.

ஜாதி என்ற நோயை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். இன்றேல், அது பெரியதாக வளர்ந்து விடும். பின்னர் அதை அகற்றுவது கடினமாகி விடும்.

## வாழும் நம்பிக்கை

நாட்டில் யாரும் தாழ்ந்தவர்களில்லை. எல்லோரும் சமமே. நாம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரைத் தாழ்த்தி வைத்திருந்தோம். நாமே நம்மில் சிலரைத் தாழ்த்தி வைத்துக் கொண்டிருந்தால், பிறகு நாம் எப்படி முன்னேற முடியும்? நமக்குள் உயர்வு-தாழ்வு இருப்பது ஆபத்து; நமக்குள் ஒற்றுமை இல்லை எனில், நாட்டுச் சுதந்திரம் பறிபோய் விடும்.

காந்திஜி ஹரிஜன சகாயநிதியைக் கோடிக் கணக்கில் வசூலித்து ஹரிஜன முன்னேற்றத் திற்கான வேலைகளைச் செய்து வந்தார். அந்த வேலைகளை இப்பொழுது சர்க்கார் ஹரிஜன இலாகா மூலம் செய்து வருகிறது. வாழ முடியுமா? என்று தயங்கிக் கிடந்த மக்களுக்கு வாழ முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டி விட்டோம். நம்பிக்கை இல்லையென்றால் வாழ்க்கையில் முன்னேற முடியாது. மனத்தில் தெம்பு வேண்டும்.



## உயர்வும் தாழ்வும்

பிறவியால் யாரும் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று கிடையாது. செய்கையால் தாழலாம், உயரலாம். செய்கையால் தாழ்ந்தவர்களை ஒதுக்கவேண்டும். மனித சமுதாயம் நல்ல முறையில் வாழ ஒற்றுமை அவசியம். இந்த மனப்பான்மை குழந்தைகளுக்கு ஏற்பட வேண்டும்.

ஹரிஜனங்களுக்குள்ள தொல்லைகளுக்கு மூலகாரணம் ஏழ்மைதான். அவர்களுக்குக் கல்வியளிப்பதின் மூலம் ஏழ்மையை ஒழிக்க முடியும். அந்த நோக்கத்தோடு அவர்களின் கல்விக்காக அரசாங்கம் பெரும் தொகையைச் செலவழித்து வருகிறது.

## பார்க்க வேண்டியது

நம்முடைய ஜனநாயகப் பண்பு வளர வேண்டும் என்று சொன்னால் திடீர் என்று எப்படி முடியும்? இங்கிலாந்திலே நூற்றுக் கணக்கான வருஷங்களாக அதை வளர்த்து வந்திருக்கிறார்கள். அதைப் பார்த்தவுடனே அதைப்போல நடக்க முடியுமா? அமெரிக்காவைப் பார்த்தவுடனே அமெரிக்காவைப் போல வளர முடியுமா? பிரிட்டிஷ் ராஜ்யத்தைப் பார்த்தவுடனே அதுபோல் இருக்க முடியுமா?

என்ன? தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் தவிர மற்றவர்களைத்தான் அவர்கள் பார்க்கிருர்கள்.

சுயராஜ்யம் வந்து 17 வருஷங்கள் ஆகிவிட்டதே. பட்டினியைத் தீர்த்து விட்டாயா? பஞ்சத்தை ஒழித்து விட்டாயா? என்று சில பேர் கேட்கிருர்கள். அமெரிக்காவைப் பார்த்தாயா? ரஷ்யாவைப் பார்த்தாயா? என்றும் கேட்கிருர்கள். அங்கெல்லாம் எதற்காகப் பார்க்கவேண்டும்? அங்கே பார்த்துப் பயன் என்ன? நம் ஊரையே பார்த்தால் போதும். இங்கே சோறு இல்லை, வீடு இல்லை, வேலை இல்லை, படிப்பு இல்லை, அதைத்தானே பார்க்க வேண்டும்? இந்த ஊரிலே வேலை இல்லாதவர்களுக்கும் படிப்பு இல்லாதவர்களுக்கும் சோறு இல்லாதவர்களுக்கும் என்ன பண்ண வேண்டும் என்று யோசிக்க வேண்டும். அதற்கு வேண்டிய பிரயத்தனம் நாம் பண்ணவேண்டுமே தவிர வேறு நாட்டைப் பார்த்து என்ன பண்ண இருக்கிறது?

## காரியத்தில் கண்

வேற்று நாட்டின் சில அனுபவங்கள் நமக்குத் தெரிய வேண்டும். அந்த நாட்டுக்குச் சுயராஜ்யம் வருவதற்கு முன்னுலே—அவர்கள் சொந்த அரசாங்கம் ஏற்படுத்துவதற்கு முன்னுலே அவர்கள் பட்ட கஷ்டங்கள், சிரமங்கள்



அவர்கள் எப்படி முன்னேற்றம் அடைந்தார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். அவர்கள் அடைந்த முன்னேற்றங்களையெல்லாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்குக் கொள்கையிலே எப்படித் தவக்கம் ஏற்பட்டது? அவர்களுக்கு முட்டுக்கட்டை எங்கேயெல்லாம் இருந்தது? என்பதையெல்லாம் பார்த்து நம் எதிரே உள்ள முட்டுக் கட்டையைத் தூக்கி எறிய வேண்டும்.

பாடுபட்ட அந்த நாட்டின் கொள்கைகளை வைத்துக் கொண்டு நம்முடைய நாட்டை முன்னேற்றப் பாதையிலே ஓட்டிக்கொண்டு போக வேண்டும். முன்னேற்றப் பாதையிலே போவதற்கு முயற்சி எடுத்துக்கொள்பவர்கள் பின்னுலே திரும்பிப் பார்க்க வேண்டியதில்லை. காரியத்தில் கண்ணுக இருக்கவேண்டும். மற்றெல்லாவற்றையும் மறக்கவேண்டும். ஏழைகளை மட்டும் மறக்காமல் இருக்கவேண்டும்.

## சொந்த அரசாங்கம்

நமக்குச் சொந்த அரசாங்கம் இல்லாமல் தடுமாறிக் கொண்டிருந்தோம். யார் இருந்தாலும் தெரியாது; யார் வந்தாலும் தெரியாது; யார் போனுலும் தெரியாது. ஒரே தடுமாற்றம். எங்கு போனுலும் தடுமாற்றம். இந்தத் தடுமாற்றம் ஒரு காலத்தில். அதற்குப் பிறகு அன்னிய அரசாங்கம் 150 ஆண்டுகள் இருந்

தது. அந்த இடைக்காலத்தில்தான் நம் முன்னேற்றம் தடைப்பட்டுப் போய் விட்டது. இந்த 200-300 ஆண்டுகளில் உலகமே வெகு முன்னேறி விட்டது. உலகத்திலே ரயில், மின்சாரம், யந்திரங்கள் முதலிய விஞ்ஞான வளர்ச்சிகள் இப்படித்தான் ஏற்பட்டன. இது 200 ஆண்டுகளுக்குள் ஏற்பட்டது. அந்தக் காலத்தில் நமக்குச் சொந்த அரசாங்கம் இல்லை. அந்தக் காலத்தில் எதற்குச் சொந்த அரசாங்கம் இருந்ததோ அந்தத் தேசம் முன்னேறி விட்டது. சொந்த அரசாங்கம் இல்லாத தேசம் எல்லாம் பின்தங்கி விட்டன. பின்தங்கிய நாடு என்றால் ஆப்பிரிக்கா, இலங்கை, மலேயா, இந்தியா என்று குறிப்பிடுகிறோம் இல்லையா? அந்தத் தேசம் எல்லாம் அப்படியே பின்தங்கிப் போய் விட்டன.

## கத்தினால் போதுமா ?

ஏதோ "சுயராஜ்யம், சுயராஜ்யம்" என்று கத்தினார்கள், திடீரென்று சுயராஜ்யம் வந்து விட்டது என்று சொல்லுகிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தார். அந்த நினைப்பில் தான், நாமும் "திராவிடம், திராவிடம்" என்று கத்தினால் "திராவிடம்" திடீரென்று வந்து விடும் என்று மனப்பால் குடிக்கிறார்கள். அதனால் திராவிடம் வந்துவிடுமா என்ன ? திராவிடம் எங்கே இருக்கிறது ? அதை அவர்களால் அடைய முடியுமா ? அவர்களே அதை மூட்டை கட்டி வைத்து விட்டார்களே !



## எல்லாரும் நல்லவரா ?

உலகத்திலேயே நம் நாட்டிற்கு ஏன் பெருமை என்றால் பல்வேறு நாகரிகத்தையும் தன்னுடைய நாகரிகமாகக் கொண்டிருக்கும் பெருமைதான் நமக்கு. யார் வந்தாலும் நம்மவர்கள் ஆக்கப்படுகிறார்கள். நல்லவர்களை நம்மவர்களாக்குவதில் என்ன தப்பு இருக்கிறது? நல்லவர்கள் எங்கே இருந்து வந்தாலும் யாராயிருந்தாலும் நம்மவர்களாக்கிக் கொள்வதுதான் நம் கொள்கை.

ஏதோ முஸ்லீம்கள் சண்டை, சமணர்கள் சண்டை, சைவர்களின் சண்டை, ஆரியர்கள் சண்டை, திராவிடர்கள் சண்டை என்று எங்கேயோ நடந்திருக்கும் ஒரு ஓரத்திலே. அதைத்தான் இப்பொழுது பிரமாதப்படுத்துகிறார்கள். அது எப்பொழுதும் நடக்கும். ஒரு நகரத்தில் இருப்பவர்கள் எல்லாரும் நல்லவர்களாக இருப்பார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஒரு ஊரென்று இருந்தால் எல்லாரும் நல்லவர்களாக இருப்பார்களா என்ன ? 4 பேர் ரவுடியாக இருப்பார்கள். 2 பேர் கள்ளச்சாராயம் காய்ச்சி இருப்பார்கள். 2 பேர் தப்பு பண்ணுகிறவர்கள் இருப்பார்கள். 2 பேர் தகராறு பண்ணுகிறவர்களாக இருப்பார்கள். இப்படி

பல விதமான ஆட்கள் இல்லாமலா இருப்பார்கள்? சண்டை இல்லாமலா இருக்கும்? பெரிய ஊரென்ருல் அங்கே சண்டை போட்டுக் கொள்ளாமலா இருப்பார்கள்?

## பொய்த் தோற்றமா?

ஒரு பெரிய ஊரிலே போய்ப் பாருங்கள். இந்துக் கோயில் இருக்கும். கொஞ்ச தூரத்திலே சர்ச் இருக்கும். மசூதி இருக்கும். இவை எல்லாம் என்ன பொய்த்தோற்றங்களாஎன்ன? இந்தக் கோபுரங்கள் எல்லாம் பொய்த் தோற்றமா? மசூதி பொய்த் தோற்றமா? இதையெல்லாம் இன்றைக்குக் கட்டிவிட முடியாது. இந்த சண்டை போடுகிறவர்கள் எல்லா இனத்திலும் இருக்கிருர்கள். "சண்டை போடுகிறவர்கள் இங்கேயும் இருக்கிருர்கள். அவன் நாகரீகம் வேறு; நம் நாகரீகம் வேறு. இதுதான் திராவிட நாகரீகம் என்று பிரிக்க முடியுமா என்ன? எப்படிப் பிரிக்க முடியும் என்று நினைக்கிறீர்கள்?

## திட்ட அநீதி?

சுதந்திரம் பெற்றதனுல் ஏற்பட்டுள்ள சொந்த அரசாங்கம்தான் இந்திய நாட்டை ஆள்கிறது. மக்களுக்கான திட்டங்களைப் போட்டுச் செயல்படுத்தியும் வருகிறது. அரசியல் சட்டப்படி அந்தந்த மாகாணங்களில் ராஜ்ய சர்க்கார்கள் நடைபெற்று வருகின்றன. மத்திய சர்க்காரும் மாநில அரசாங்கங்களும் சேர்ந்து திட்ட வேலைகளையும், செலவுகளையும் பங்கு போட்டுக்கொண்டு செய்தபடி உள்ளன.



இந்தச் சமயத்தில் திட்டங்களைப் பற்றியோ அதன் மூலம் ஏற்பட்டுள்ள பலன்களைப் பற்றியோ ஒரு சிறிதும் அக்கறை காட்டாமல் 'திட்ட அநீதி' என்று கூட்டம் கூட்டிப் பெரிதாகப் பேசி வருகிருர்கள்.

திட்டத்திஞல் ஏற்பட்டுள்ள நீதியைப்பற்றித் தெரியாதவர்கள் இவர்கள்—நன்மையைப் புரிந்துகொள்ளாதவர்கள். திட்டத்தில் சென்னை ராஜ்யத்திற்கு நன்மை—நீதி கிடைக்கவேயில்லை, ஒரே அநீதி செய்யப்பட்டு விட்டது போலத்தானே பேசுகிருர்கள்! சென்னை ராஜ்யத்தையும் அதற்கான திட்டங்களையும், செலவுகளையும் ஒரு பக்கம் சொல்லுகிருர்கள். அடுத்து ஒவ்வொரு ராஜ்யமாகக் கணக்குச் சொல்லி ஒப்பிட்டுப் பார்க்கிருர்களா? மனத்திற்குள் ஒரு வேளை எண்ணிப் பார்க்கலாம். ஆனுல், வெளியில் அப்படிச் செய்வதில்லை. வடநாட்டுக்கு எவ்வளவு தொகை பார்! சென்னைக்கு எவ்வளவு குறைவு பார்! அநீதியைப் பாருங்கள் என்கிருர்கள். சென்னை தவிர்த்த மற்ற எல்லா வடநாட்டு ராஜ்யங்களுக்கும் மொத்தமாகவுள்ள திட்டத்தைக் காட்டி

'அநீதி' என்பதில், என்ன நீதி இருக்கிறது? ஒரு ராஜ்யத்தின் செலவோடு பல ராஜ்யங்களின் செலவுகளை ஒப்பிட்டுக் காட்டினால் யார் ஏமாறுவார்கள்?

## சினிமா செட்டு, நாடக சீனு?

சென்னை ராஜ்யத்தின் வளம், மூலப் பொருள் வசதி முதலியவற்றைவிட அதிகமாக உள்ள வேறுசில ராஜ்யங்களுக்கு, தனித் தனியே கணக்குப் பார்த்தால் சில திட்டங்களில் அதிகமாகக்கூட இருக்கலாம். அதே மாதிரி சென்னை ராஜ்யத்தைவிட மிகவும் குறைந்த அளவு திட்டங்கள் உள்ள ராஜ்யங்களும் இருக்கின்றன. தேசத்தில் உள்ள வளம், வசதிகளுக்கு ஏற்பத் திட்டங்களை முன்பின்னாகவாவது செய்து கொண்டு போகவேண்டும். முடிந்த அளவுக்கு அவசியமான திட்டங்களைத் தள்ளிப் போடவே கூடாது.

சாத்தியமாகும்—பலன் தரும்—அவசியம் என்ற முறையில் உள்ள திட்டங்களில் எதை விட்டோம்? ஒரு திட்டம் என்றால், மற்றவர்களைப் போல பெரிய நோட்டீஸ் அடித்து சுவரில் ஒட்டிவிட்டு, கூட்டம் போட்டுப் பேசுவதோடு முடிந்துவிடுகிற காரியமா என்ன!

திட்டத்தைப்பற்றிய பூர்வாங்க பரிசீலனையிலிருந்து தொடங்கி, யந்திரம், தொழில்



நுணுக்க உதவி, அந்நிய செலாவணி முதலிய எத்தனையோ காரியங்களுக்கு ஏற்பாடு செய்தால்தானே முடியும்?

நினைத்ததும் தோன்றும் கோட்டையும், சுரங்கமும் கட்டி முடிக்க, சினிமா செட்டிலும், நாடக சீனிலும்கூட முடியுமா? அதற்கு எவ்வளவோ முன்னேற்பாடான வேலைகள் நடந்துதானே தீரவேண்டும்?

## அவசியமற்ற வேலை

திட்டத்தின் பெயரால் மட்டுமல்ல. வேறு எந்த விதத்திலும் சென்னை ராஜ்யத்திற்கு யாராலும் எந்தவிதமான அநீதியும் செய்துவிட முடியாது.

அநீதியைச் சகித்துக் கொண்டிருக்கவே மாட்டோம். முதலில் அநீதி நடக்கவே விட மாட்டோம். மக்களுக்கு நன்மை தரும் திட்டத்தை நடத்தத்தானே மக்கள் ஆணைப்படிப் பொறுப்பில் இருக்கிறோம்? ஆகவே, வீணாக 'திட்ட அநீதி,' என்று பேசி, மக்களைக் குழப்புவது அவசியமற்ற வேலை. அதைவிட, நடக்கும் திட்டங்களையும், வரப்போகும் திட்டங்களையும் மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவும் ஒத்துழைக்கவும் உதவலாம்.

## ஒரே விஷயமா?

வெள்ளைக்காரனை அகிம்சை முறையில் எதிர்த்தோம். அவன் செய்த கொடுமைகளையும் ஏற்றுச் சகித்தோம். சத்தியாக்கிரகங்கள் பல நடத்தினோம். வெள்ளைக்காரன் நம் நாட்டவன் அல்லன். அந்நியன். நம் நாட்டை அடக்கி ஆண்டு, பொருளாதாரத்தைச் சுரண்டினான். இதை உணர்ந்து காந்திஜி "அந்நியனே வெளியேறு, வெள்ளையனே வெளியே போ" என்று இயக்கம் ஆரம்பித்தார். இதைத் தொடர்ந்து நடைபெற்ற பல சத்தியாக்கிரகப் போர்களில் ஈடுபட்டவர்களில் காங்கிரஸ்காரர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கலாம். ஆனால், அந்நியனை விரட்டும் இயக்கத்திற்கும், அதில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்களுக்கும், அடிபட்டுக் கஷ்டப்பட்டவர்களுக்கும் பொது மக்கள் அதிக மதிப்பும் மரியாதையும் அளித்துப் பாராட்டினார்கள். பொது மக்களது அனுதாபமும் ஆதரவும் நாளுக்கு நாள் அதிகரித்த படியே இருந்தது. வெளிநாட்டுக்காரனாகிய நாம் இனி ஆள்வது நடக்காது என்று உணர்ந்துகொண்ட வெள்ளைக்காரன், விடுதலையளித்துவிட்டு, நாட்டைவிட்டு வெளியேறி விட்டான்.

வெளிநாட்டுக்காரர்களான ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடியதும், இந்திய மண்ணில் பிறந்து வளர்ந்து இந்தியாவில் வாழ்ந்து



வரும் மக்களில் பெரும் பகுதியினரை வெறுத்துப் பிரிந்து போகிறேன் என்று சொல்வதும் ஒரே விஷயமா? எப்படி ஒன்றாகிவிடும்?

## ஓட்ட முடியுமா?

முன்பு நாடு துண்டு துண்டாகப் பிரிந்து, போட்டி பொறாமை காரணமாக பலவீனப் பட்டிருந்தது. வெளிநாட்டான் சுலபமாக எல்லோரையும் அடிமைப்படுத்தி விட்டான். இதிலிருந்து விடுபட இருநூறு ஆண்டுகளாகி விட்டன. ஏற்கனவே ஏற்பட்ட பிரிவினையின் விளைவையும் பலனையும் தெரிந்து அனுபவித்தும் வருகிறோமே. மீண்டும் பிரிவினைப் பேச்சு நல்லதா? அவசியமா? பலன்தான் தருமா? தரவே தராது.

வெள்ளைக்காரன் வெளிநாட்டிலிருந்து வந்தவன். அதோடு நம்மை ஆதிக்கம் செலுத்தி வந்தான். நாம் விழித்துக்கொண்டு "நீ போ, வெளியே" என்று போராடத் தொடங்கினோம். சமாளித்துப் பார்த்தான்—நடக்கவில்லை. புத்திசாலித்தனமாக வெளியேறி விட்டான்.

வெள்ளைக்காரனை விரட்டியது போல விரட்டுவோம். போராடுவோம் என்கிறார்களே. அது எப்படி முடியும்? வெளிநாட்டான் அவன். தன்னுடைய நாட்டுக்குத் திரும்பி விட்டான். ஆனால் இந்திய மக்கள் எங்கே ஓடுவார்கள்—ஓட்ட முடியுமா என்று கேட்கிறேன்!

"விரட்டுவதும் ஓட்டுவதும்" நடக்காத பேச்சு. பிரிவினை, புரட்சி என்றெல்லாம் பேசிக் கொண்டே, நீண்ட காலத்திற்கு மக்களை உணர்ச்சி வசப்படுத்தி, இஷ்டப்படி நடத்திச் செல்ல முடியாது.

மக்களிடத்தில் உண்மையான அன்பும் அக்கறையும் இருக்குமானால், முதலில் செய்ய வேண்டியது என்ன? சொந்த அரசாங்கம் அமைதியாக நடக்கப் பக்கத் துணையாக இருக்கவேண்டும். அப்போதுதானே சொந்த அரசாங்கத்தின் மூலம் மக்களுக்கான ஆக்கவேலைகளை ஒழுங்காகவும் சங்கடமின்றியும் செய்து கொள்ள முடியும்!

தமிழ்நாட்டை மாத்திரம் தனியாக எடுத்துக் கொண்டால் நமக்கு இயற்கை வசதி போதாது. ஆந்திராவுடன் ஒப்பிட்டால் இயற்கை வசதி இங்கு மிகவும் குறைவு. அப்படியிருக்க நாம் பிரிந்து போகவேண்டும் என்பதில் அர்த்தமிருக்கிறதா? ஏற்கனவே நம்மோடு இருந்துதானே அவர்கள் பிரிந்து சென்றிருக்கிறார்கள்? திராவிடநாடு பிரிந்தால் ஆந்திரர்கள் நம்மோடு இருப்பார்களா? நாடு பிரிந்தால் அவர்களும் மைசூர்க்காரர்களும் கேரளத்தவர்களும் நம்மோடு இருப்பார்களா?

தமிழர்கள்தானே கூலி வேலை செய்ய இலங்கைக்கும், பர்மாவுக்கும், மலாயாவுக்கும் சென்றார்கள்? தமிழர்கள் இனிமேல் அங்கெல்



லாம் போக முடியுமா? நாடு ஒன்றாக இருந்தால் இங்கிருந்து, பஞ்சாபுக்கு, ஆந்திரத்திற்கு, பம்பாய்க்கு, டில்லிக்குப் போய் பிழைக்கலாம். தமிழ்நாடு பிரிந்தால் அவர்கள் அனுமதிப்பார்களா?

நாடு பிரிவதால் எவ்வளவு கஷ்டங்கள், துன்பங்கள் இருக்கின்றன என்பதைப்பற்றி சிந்திக்காமல் பேசுகிறார்களே!

## கிளிப்பிள்ளை போல...

உலகெங்கும் பெரிய மாறுதல் ஏற்பட்டு வருகிறது. நாம் எல்லோரும் ஓர் இனம், உலகில் உள்ள மனிதர் எல்லோரும் ஓர் இனம் என்னும் கருத்து இப்பொழுது பெருகி வருகிறது. ஒரு நாட்டில் ஒரு பகுதியில் நிகழும் சம்பவம் அல்லது சம்பவங்கள் மற்றப் பகுதிகளைப் பாதிக்கின்றன. பரந்த, பெரிய தேசம் நம் நாடு. இப்பெரும் தேசமே, உலகில் மற்ற நாடுகளிலிருந்து தனித்து வாழமுடியாது. இந்த மாறுதல்களைக் கருத்தில் கொள்ளாமல் செய்வதையே திரும்பத் திரும்பச் செய்து, கிளிப்பிள்ளை போல சொன்னதையே சொல்லி, விடாப்பிடியாக பழைய பிரிவினைக் கோரிக்கையை, திராவிடஸ்தான் கோரிக்கையை, திராவிட முன்னேற்றக் கழகம் மறைமுகமாகவேனும் வலியுறுத்துவது பைத்தியக்காரத்தனமா

கும். உண்மையான பகுத்தறிவுவாதிகளின் அறிவுடைமைச் செயல் அல்ல அது.

## மந்திரத்தால் மாங்காய்

மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதைத் திடீரென்று செய்ய முடியாது. மந்திரத்தால் மாங்காய் காய்க்குமா ? சொல்லுங்கள். அதைப் போலத்தான் இதுவும்.

உதாரணமாக, விவசாயியை எடுத்துக் கொள்ளுங்கள். அவரிடம் போனல் அவர் தண்ணீர் வேண்டுமென்று கேட்கிறார். தண்ணீர் எப்படித் திடீரென்று கிடைக்கும் ? பெரிய அணைக்கட்டைக் கட்டி நீரை ஏராளமான அளவில் தேக்கி வைத்தால் விவசாயிக்குத் தேவையானபோது தண்ணீர் கொடுக்கலாம். அணை கட்டுவதற்கு நிறைய செலவாகிறது. நிறைய சிமெண்டும், இரும்பும் வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் போட்டுக்கட்டி முடித்ததும், 'யார் ஊருக்கு நிறைய தண்ணீர் விடுவது ?' என்ற பிரச்சினை கிளம்புகிறது.சரி, அதை ஒருவிதமாகச் சமாளிக்கிறோம்.

தண்ணீருக்குப் பிறகு மாடுகள் வேண்டும் என்று கேட்கிறார்கள். மாடுகளுக்காக, அவற்றை வாங்கி நல்ல முறையில் பயிர் செய்வதற்காகக் கடன் தருகிறோம்.



பெரிய விவசாயியாக இருந்தால் மாடு வேண்டாம், பெரிய டிராக்டர் வேண்டும், என்று கேட்கிறார். சிறு விவசாயிகளும் உழவுக்கு வேண்டிய புதுவகையான கருவிகளைக் கேட்கிறார்கள். அடுத்தாற்போல நல்ல ரசாயன உரம் வேண்டியிருக்கிறது. அது நம்மிடம் நிறைய இல்லை. கடன் வாங்கி எப்படியோ ரசாயன உரத்திற்கு ஏற்பாடு செய்கிறோம். அல்லது இருக்கிற வசதிகளை வைத்துக் கொண்டு சிந்திரியில் ஓர் உரத் தொழிற்சாலை வைத்தால் 'பார்த்தாயா, வடக்கு வாழ்கிறது !' என்று கூச்சல் போடுகிறார்கள். அங்கே தயாராகும் உரம் நாடு பூராவும் விநியோகமாகிறது. ஆனாலும் எதிர்க்கட்சிக்காரர்கள் எதையாவது சொல்லி மக்களைக் குழப்பப்பார்க்கிறார்கள்.

விவசாயியின் பிரச்சினையைத் தீர்க்க இவ்வளவு செய்ய வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் கவனிக்காது எதிர்க்கட்சிக்காரர்கள் சத்தம் போடுகிறார்களே, இது நியாயமா ?

## நஷ்டம் யாருக்கு !

முதல் இரண்டு திட்டங்கள் போட்டு நன்றாக முடிந்து, மூன்றாவது திட்டத்தையும் ஆரம்பித்துள்ளோம். இந்த நிலையில் திட்டத்தைக் கைவிட்டால் காங்கிரசுக்கு நஷ்டமில்லை; நாட்டுக்குத்தான் நஷ்டம்; நாட்டு மக்களுக்குத்தான் நஷ்டம்; கஷ்டம். இந்தத் திட்டம் நிறை

வேரு விட்டால் பட்டினியாக இருப்பவர்கள்—வேலையில்லாமல் இருப்பவர்கள்—அப்படியே தான் இருக்க வேண்டும். அதுமாதிரி இருக்கக் கூடாதென்றுதான் காங்கிரஸ் முயற்சி எடுத்து வருகிறது. பணக்காரர்கள் நிலைமை இப்படியே இருக்கட்டும் என்கிருர்கள்; நாங் கள் என்ன சொல்லுகிறோம்? "நீ பல காலமாக வாழ்ந்து கொண்டிருக்கிருய்; பட்டினியாக இருப்பவனை உன் பக்கத்தில் கொண்டு வந்து விடுகிறேன்; அவனும் வாழவேண்டும்'' என் கிறோம்! அது தவரு?

உணவு உற்பத்தி, விவசாயம், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் போன்ற முக்கியமான திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். இவை நடைமுறைக்கு வந்து நாடு முன்னேற்றம் அடைய ஒற்றுமை மிகவும் அவசியம். கன்னி யாகுமரி முதல் காசிவரை, ஏன் காஷ்மீரம் வரை, இது நமது நாடு; நாம் எல்லோரும் இந் தியர்கள் என்ற உணர்ச்சி வேண்டும். தமிழன் என்று சொல்லுவதில் இன்னும் அதிகமான பெருமை கொள்ள வேண்டும். இந்தியா வாழ்ந் தால்தான் தமிழ்நாடு வாழும். அதில் மோதல் ஏற்பட்டால் திட்டத்திற்குத் தடை உண்டா கும். நமது வாழ்வு பாழாகும்.



## மச்சான் மாப்பிள்ளைக்கே...

இப்போதே இந்த மாகாண உணர்ச்சி, குறுகிய உணர்ச்சி, சிறிது சிறிதாகத் தலை தூக்குகிறது. மலையாளிகள் தண்ணீர் கொடுக்கவில்லை, ஆந்திரர்கள் கோதாவரி நீரை விடவில்லை என்று பத்திரிகைகளில் எழுது கிருர்கள்; குழப்பம் ஏற்படுத்தப் பார்க்கிருர் கள்.

இதற்கெல்லாம் பிற மாகாணங்கள்தான் காரணம் என்று சொல்லி துவேஷம் உண்டாக் கப் பார்க்கிருர்கள். இது தவறு. நீங்களே உங்கள் ஜில்லாவிற்கு அணைக்கட்டு வேண்டு மென்று கேட்பீர்கள். கட்டுவதற்கான உத்த ரவு தரப்பட்டதும், "என்னுடைய ஊருக்குத் தான் அதிக நீர் உபயோகமாக வேண்டும்'' என்று ஒவ்வொரு ஊரைச் சேர்ந்தவர்களும் கேட்க ஆரம்பித்து விடுவீர்கள். ஆகவே இது போன்ற பூசலுக்குக் காரணம், 'தங்களுக்கு வேண்டும்' என்ற எண்ணம்தானே தவிர, இது மலையாளத்தான் பிரச்சினையோ, மராட்டிய னின் பிரச்சினையோ அல்ல! சொல்லப்போனுல் சொந்த மச்சான் மாப்பிள்ளைகளுக்கே தரமாட் டேன் என்று சண்டை போடுகிறோம் அல் லவா? மக்களுக்குத் தமக்கு நிறைய வேண்டும் என்ற எண்ணம் இயற்கையாகவே இருக்கி றது. இதை வளர்க்க எதிர்க்கட்சிக்காரர்கள் முயலுகிருர்களே! அது நல்லதா?

## தவம் செய்தால்

எல்லா ஆறுகளிலும் அணைகள் கட்டி இருக்கிறோம். காவிரி, வைகை, மணிமுத்தாறு, தாமிரபரணி, பெண்ணாறு போன்ற பல ஆறு களில் அணைகள்கட்டி முடிந்தாகி விட்டது. போடக்கூடிய மின் சார திட்டங்களையும் போட்டு வேலை நடக்கிறது. இன்னும் ஏதா வது பாக்கி இருந்தால் யார் வேண்டுமானாலும் சொல்லட்டுமே!

தமிழ்நாட்டில் புதிதாக அணைகள் கட்டி, தண்ணீரைத் தேக்கி, பாசன வசதிகள் செய்வ தற்கு, ஏதாவது திட்டம் இருந்தால் காட்டுங் கள். அதை நாங்கள் செய்து முடிக்கிறோம். ஆனால், எங்கிருந்து காட்ட முடியும்? ஏற் கெனவே ஒரு சொட்டுக்கூட வீணாகாமல் பயன் படுத்தி வருகிறோமே!

இப்பொழுது கிடைக்கும் தண்ணீர், பாசன வசதிக்குப் போதாதுதான்! அதற்காகச் சத்தம் போட்டால் போதுமா? அப்போது வானத்தி லிருந்து தண்ணீர் பொத்துக்கொண்டு பூமி யில் கொட்டிவிடுமா? தவம் செய்தால் வந்து விடுமா? அல்லது மந்திரம் சொன்னால் வந்து விடுமா, என்ன?

இனிமேல், கேரளம், ஆந்திரம் போன்ற பக்கத்து ராஜ்ஜியங்களிலிருந்து தான் தண் ணீர் கொண்டு வரவேண்டும். அதற்காகவும்



முயற்சிகள் எடுத்து வேலைகள் நடக்கின்றன. சும்மா கைகட்டிக்கொண்டு நாங்கள் இல்லையே!

## தஞ்சாவூர் அரிசி

கேரளத்திலிருந்து தமிழ்நாட்டுக்குத் தண் ணீர் வேண்டும் என்றால் உடனே கிடைத்து விடுமா? அங்கே தண்ணீர் உபரியாக இருக் கிறதா என்று பார்த்துத்தான் கொடுக்க முடி யும். அப்படியே கேரளத்தில் தண்ணீர் உபரி யாக இருந்தாலும் அங்குள்ள ஊர் நிலைமை, மக்களுடைய மனப்போக்கு இதையெல்லாம் பார்த்துத்தானே செய்ய முடியும்!

தஞ்சாவூரிலிருந்து அரிசி கேரளாவுக்குப் போய்விடுகிறது என்று இங்கே இருக்கிறவர் கள் குறை சொல்கிறார்கள். இதைப் பற்றிக் கேரளாவில் அரிசி இல்லாமல் கஷ்டப்படும் மக் கள் பேச மாட்டார்களா? இதற்கெல்லாம் சமா தானம் சொல்லித்தானே, நமக்குத் தண்ணீர் தர முடியும்?

பரம்பிக்குளம், ஆளியாறு நீர்ப்பாசன, மின்சார திட்டம் போட்டிருக்கிறோம். இது எப் படி உருவாகியது? கேரளாவிலிருந்து தண் ணீரைத் திருப்பி விடுவதால் சாத்தியமாகிறது. இதைத் தொடர்ந்து, படிப்படியாக, வசதிக்கு ஏற்றபடி தொடர்ந்து திட்டங்களைப் போட்டு

வருகிறோம். இப்போது பரம்பிக்குளம் திட்ட வேலை பெரிய அளவில் நடந்து வருகிறது. மூன்று ஆண்டுகளில் இந்தத் திட்டத்தினால் பலன் கிடைக்க ஆரம்பித்துவிடும்.

ஆந்திராவிலிருந்து கோதாவரி--கிருஷ்ணா நதிகளின் தண்ணீரைத் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வரவும் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறோம். இதற்கான உத்தேசத் திட்டமும் பரிசீலனையில் இருந்து வருகிறதே!

## ஒரே ஒரு பாதுகாப்பு

கம்யூனிஸ்டு சித்தாந்தம் என்ன? ஜனங்களுக்கு ஒன்றுமே தெரியாது; எல்லாம் கம்யூனிஸ்டு கட்சித் தலைமைதான் மக்களுக்குச் சொல்லி வழி காட்டவேண்டும் என்பதுதானே! ஏதோ ஒரு காலத்தில், அப்போதைய சந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடி சொன்ன 'மார்க்சிசம்', அப்படியே இன்றும் நடக்கவேண்டும் என்றால் முடியுமா?

நம்முடைய நாட்டுக்கு ஏற்றபடியும், காலத்திற்குத் தகுந்த மாதிரியுந்தானே எந்த மாறுதலும் நடக்க வேண்டும்!

இதைக்கூட கம்யூனிஸ்டுகள் ஒப்புவதில்லையே! இதற்கெல்லாம் வெளிநாட்டு 'வேர்' ஆழமாக ஊன்றி இருப்பதுதானே காரணம்! வெளிநாடுகளில் நடைபெற்ற பலாத்காரப்



புரட்சி இங்கும் நடக்கவேண்டும் என்பது சரியா? அது எப்படி முடியும்?

வோட்டு முறை கூடாது என்று விட்டு விட முடியுமா, என்ன? ஏழைகளுக்கு இருக்கும் ஒரே ஒரு பாதுகாப்பும், உரிமையும் அது தானே?

எல்லாவற்றையும் ஒரே அடியாக தலை கீழாக மாற்றுவது முடியுமா? அப்படியே, பலாத்கார மூலம் செய்தாலும் நிலைக்குமா என்ன?

மக்களுடைய ஆதரவைப் பெற்று, அவர்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்களை விளக்கி, சம்மதம் பெற்றுத்தானே எதையும் செய்ய வேண்டும்? காரியம் ஒழுங்காகவும், அமைதியாகவும் நடக்க இதைவிட நல்ல வழி என்ன?

## காலம் மாறிவிட்டது

ஒரு காலம் இருந்தது. பள்ளிக்கூடங்கள் மிகுதியாக இல்லாத காலம், அது. இருந்த சில பள்ளிக்கூடங்களுக்கும் போதிய அளவு, குறைந்த பட்ச எண்ணிக்கையுடைய மாணவர்கள் படிக்க வராத காலம். அப்போது, ஆசிரியர்கள் தாங்களாகவே கிராமம் கிராமமாகச் சென்று பள்ளிக்கூடத்துக்குத் தம்து பிள்ளைகளைப்படிக்க அனுப்பும்படி பெற்றோர்களைக் கேட்டார்கள்! போதிய அளவு பிள்ளைகள்

படிக்க வராவிட்டால் பள்ளி மூடப்படும், வேலை போய்விடும் என்ற பயம் ஆசிரியர்களுக்கு இருந்திருக்கக் கூடும்.

எப்படியோ பள்ளிக்கூடத்தில் போதிய மாணவர் எண்ணிக்கை இல்லாதிருந்தநிலைமை இன்று அடியோடு மாறி விட்டதா இல்லையா? இப்போதுள்ள பிரச்சினை பள்ளிக்கூடங்கள் இல்லையென்பதல்ல; போதிய அளவு பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. பிள்ளைகளும் பெரு மளவில் படிக்க வருகின்றனர். ஆனால், இருக் கும் பிரச்சினை யெல்லாம் போதிய ஆசிரியர்க ளும் நல்ல கட்டிடமும் மற்ற வசதிகளும் இல்லை என்பதுதான்.

சர்க்காரோ, மக்களோ அல்லது இரண்டு பேருமாகச் சேர்ந்தோ படிப்பதற்கு உள்ள பல விதமான இடையூறுகளையும் குறைகளையும் பலவிதங்களிலும் நிவர்த்தி செய்துதான் வரு கிறோம். இந்த வகையில் பாரதியார் சொன்ன படி ஏழைகளுக்கு அறிவுக் கண் திறந்து விடும் பணி வேகமாகப் பரவியபடி உள்ளது. இதையும் ஏன் செய்ய வேண்டும் என்று யாரா வது கேட்டால் அவர்களை என்ன சொல்வது?

## நீ என்ன உயர்வு?

இன்றைக்குப் படிப்பு மிகவும் அவசியமாகி விட்டது. வேலைக்குப் போவதற்காகவே படிக்கவேண்டும் என்ற காலம் மாறிவிட்டது.



எந்தத் தொழில் செய்தாலும் சரி, அது சிறிய தொழிலாக இருந்தாலும் பெரிய அளவில் இருந்தாலும் கணக்கு வைத்து நடத்த வேண் டியிருக்கிறது. இதற்காக ஓரளவுக்காவது படிப்பு அவசியம்.

அத்துடன் படிப்பதால் ஏழை தெளிவு பெறுகிறான். படிக்காமல் இருக்கும் வரையில், நாம் ஏழை, நமக்கு மற்றவர் போல் வாழ வழி யில்லை. அது முடியவும் முடியாது என்ற எண்ணந்தான் மேலோங்கியிருக்கும். படிக்கத் தொடங்கியதுமே அறிவுக் கண் திறந்து கொள்கிறது. படித்து விட்டால் உலகம் தெரிகிறது. மேலே உயர்ந்திருப்பவனைப் பார்த்து 'நீ என்ன உயர்வு, நான் என்ன மட் டம்?' என்று கேட்கும் தெளிவும் தையரியமும் ஏற்பட்டு விடுமல்லவா? இந்த மாதிரி நிலைமை வரக்கூடாதே என்பதற்காகத்தான் சிலர் தர் மத்தின் பேரால் "ஏழைக்குப் படிப்பு எதற்கு? சோறே இல்லையே" என்று உருக்கமாகப் பேசு கிறார்கள், குழப்புகிறார்கள்.

பொது மக்கள்-அதிலும் குறிப்பாக ஏழை மக்கள் படிப்பின் அவசியத்தை நன்றாக உணர்ந்து விட்டார்கள். தங்கள் குழந்தை களைப் படிக்க அனுப்பத் தவறுவதில்லை. இதில் கட்டாயம் செய்வதற்குள்ளாகவே, எல் லாக் குழந்தைகளும் தாமாகவே பள்ளிக் கூடம் வரும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மதிய உணவு, பள்ளிச் சீரமைப்பு, சீருடை அளிப்பு ஆகிய திட்டங்கள், எவ்விதச் சங்கடமோ அல்லது சங்கோஜமோ இன்றித் தங்களுடைய குழந்தைகளை உடனடியாகப் பள்ளிக்கூடம் அனுப்ப ஏழைப் பெற்றோர்களுக்கு உதவுகின்றன. இத்திட்டங்களை மேலும் பரப்பவேண்டும்.

## பணக்காரன் பிள்ளைக்கு உள்ள வசதி

நம்முடைய நாட்டிலே பள்ளிக்கூட வசதி எவ்வளவு செய்து கொடுத்தாலுங்கூட, பணக்காரப் பிள்ளைகள் படிக்கக் கூடிய அவ்வளவு வசதி ஏழைகளுக்குச் செய்து கொடுக்க முடியவில்லை. அவ்வளவு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம்.

அந்த ஆசையை நிறைவேற்றுவது சமுதாயத்தில் உள்ள பெரியோர்களின் கடமையும் பொறுப்பும் என்பதை நாம் உணர வேண்டும். நாம் உணர்ந்துகொண்டு இருக்கின்றோம். நாம் உணர்ந்ததனால் பிள்ளைகளுடைய சாப்பாட்டுத் திட்டத்தையும், இன்னும் இது போன்ற திட்டங்களையும் தைரியமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.



## அடையாளம் என்ன ?

நம்முடைய ஜனங்கள் நல்ல ஜனங்கள். ஊரிலே மக்கள் கூடி வாழவேண்டும் என்ற அபிப்பிராயம் உள்ளவர்கள். அந்த அபிப்பிராயமுள்ள மக்களை நாம் அணுகி, நம்முடைய திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொன்னால், அவர்களுடைய ஒத்துழைப்பைக் கட்டாயம் பெறுவோம். அதற்கு அடையாளம் என்னவென்று கேட்டால் இதுதான்.

உங்கள் ஊரிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய கடிகாரத்தை, கற்பலகையை புத்தகத்தை நீங்களே வாங்கிக் கொள்ளுங்கள். பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய சாமான்களை நீங்களே தயார் செய்து கொள்ளுங்கள் என்று நாம் சொல்லாமல் இருந்தோம். அதனால் அவர்கள் நினைத்தார்கள், அரசாங்கம் கொடுக்கட்டும், ஜில்லா போர்டு கொடுக்கட்டும், பஞ்சாயத்து கொடுக்கட்டும் என்று. நாம் சொன்னோம், அது வேறு இது வேறு அல்ல என்று. நாம்தான் செய்ய வேண்டும் என்ற உணர்ச்சியைத் தூண்டி விட்டோம். உணர்ச்சியும் நல்லெண்ணமும் இல்லா விட்டால் நாம் என்ன சொன்னாலும் கேட்க மாட்டார்கள். அவர்கள் உள்ளத்திலே புதைந்து கிடக்கும் நல்ல உணர்ச்சியைத் தட்டி எழுப்பினோம். அந்த உணர்ச்சி வேகத்தில்தான் நல்ல

காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## காந்திஜி உணர்ந்தது

மக்களது உணர்ச்சி வேகத்தை மகாத்மா காந்தி நாற்பது ஆண்டுகளுக்கு முன்னுலே உணர்ந்தார். நம்முடைய நாட்டிலே சுய முயற்சியோடும் தன்னம்பிக்கையோடும் எந்தக் காரியத்தையும் செய்யும் சக்தி வாய்ந்தவர்கள் இருக்கிருர்கள்; அவர்களுடைய சக்தியையும், முயற்சியையும் தட்டி எழுப்பி விடுவோமாஞல், எல்லா நல்ல காரியங்களும் நடக்கும் என்பதை உணர்ந்ததஞல்தான் சுதந்திரத்தைக் கேட்டார். அதஞல்தான் சுதந்திரம் வந்தது. அந்தச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்குத் தன்னம்பிக்கையும் முயற்சியும் வேண்டும். இந்த எண்ணம் ஏற்படுமேயாஞல் மகாத்மா காந்தியினுடைய சர்வோதய சமுதாயம்தானே ஏற்பட்டுவிடும்.

## மாற்றப்பட்ட நிலைமை

கல்லூரிப் படிப்பு என்பது முன்பெல்லாம் வசதி படைத்த பணக்காரர் வீட்டுப் பிள்ளைகளுக்கே சொந்தமாக இருந்தது. ஏழைகளால் செலவிட்டுப் படிக்க முடியவில்லை. அப்படியே ஏதோ ஒரு சிலர் படித்திருந்தாலும் எவருடைய



தயவையோ, தர்மத்தையோ பெற்றதால் மட்டுமே நடைபெற்றது.

ஆஞல், இன்று அந்த நிலைமை மாற்றப்பட்டிருக்கிறது. சாதாரண ஏழைக் குடும்பத்துப் பிள்ளைகளும் குறிப்பிடும் அளவிற்குக் கல்லூரிப் படிப்பு கற்று வருகின்றனர். என்ருலும் பணக்காரப் பிள்ளைகளுக்குள்ள படிப்புக்கான வசதிகள், ஏழைப் பிள்ளைகளுக்குப் போதுமான அளவில் இல்லை. அவர்களுக்கு மேலும் அதிக வசதி செய்து தரக் கடமைப்பட்டிருக்கிருேம். செய்து தருவோம்.

மாணவர்கள் கல்வி கற்பது வெறும் அறிவு வளர்ச்சிக்காக மட்டும் பயன்படாமல், நாட்டு முன்னேற்றத்திற்கும் பெரிதும் உதவுகிறது. பல்வேறு விஞ்ஞான தொழில் நுணுக்க நிபுணர்கள் மாணவர்களிடமிருந்து தோன்றி அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்பட்டு வருகின்றனர். எனினும், நமது வளர்ச்சி வேகத்திற்கு அது போதுமானதாக இல்லை. எத்தனையோ பற்ருக்குறைகளைப் போலவே நிபுணர்கள் பற்ருக்குறையும் உள்ளது. மாணவர்கள் நன்கு கற்று விஞ்ஞான, தொழில் நுணுக்க மேதைகளாகி, நாட்டுக்குப் பாடுபட வேண்டும்.

## குறுகிய எல்லையில்...

மேலும் மேலும் தமிழை வலிமையுள்ள மொழியாக வளர்ப்பதற்கு நாம் ஆசைப்படுகிறோம். அதற்கான முயற்சியும் எடுத்துக் கொள்ளப் படுகிறது. ஆனால், குறுகிய எல்லையில் நாம் இருந்து விட்டால் தமிழ் வளர்ச்சி பெற முடியாது. பரந்த நோக்கம் வேண்டும். குறுகிய எல்லையிலேயே இருக்க வேண்டும், வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது என்ற உணர்ச்சியை மக்களிடையே பரப்பச் சிலர் முயற்சித்து வருகின்றனரே !

தமிழ் மொழி உலகமெல்லாம் பரவ வேண்டுமானால் குறுகிய எல்லை நோக்கம் எப்படி உதவ முடியும்? பல அறிஞர்கள் அந்நிய மொழிகளில் உள்ள நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து வருகின்றனர். நிறைய நூல்கள் தற்போது வெளிவருகின்றன. அது மட்டும் போதாது. மொழிபெயர்ப்பின்றி தமிழிலேயே சிந்தித்து நூல்களை எழுத வேண்டும். தமிழ் மொழிக்கு அத் தகுதி இல்லையா ? நாம் தான் பிற மொழிகளிலிருந்து கடன் வாங்க வேண்டுமா ? பிறர் நம் மொழியிலிருந்து கடன் வாங்கிக்கொள்ளட்டுமே ! இதற்கு விரிந்த மனப்பான்மை வேண்டும். இல்லாவிடில் தமிழ் வளர்ச்சி மட்டுமின்றி தமிழர் வாழ்வும் தடைப்பட்டுப் போகும்.



## சந்தேகம் வராதா !

உலகத் தொடர்பு நமக்கு வேண்டுமானால், அதற்கு நாம் முயற்சி எடுத்துக்கொண்டு, நம்முடைய குழந்தைகள் ஆங்கிலத்தைச் சிறந்த முறையில் படிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். அதற்காகவே, சிறு வயதிலேயே ஆங்கிலம் கற்றுத் தருவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கின்றோம். ஆகவே, பல மொழி கற்கும் பிரச்சினையை ஒப்புக்கொண்டே தீர வேண்டும்.

இதிலும் ஒரு சிக்கல் இருக்கிறது. நாம் தமிழில் பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக, தமிழைப் பயிற்சி மொழியாக்கிக் கொண்டு, நம்முடைய குழந்தைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க முயற்சி எடுத்துக்கொண்டே இருக்கின்றோம். ஆனால், சமுதாயத்தில் நல்ல அந்தஸ்து உள்ளவர்கள், படித்தவர்கள், பணக்காரர்கள் இதற்கு முன் வரமாட்டார்கள். கான்வெண்ட்டில் தங்கள் பிள்ளைகளைக் கொண்டு போய் விடுவார்கள். அவர்கள் குழந்தைகள் பல மொழிகள் தெரிந்து கொள்ளவேண்டும் என்று நினைக்கிறார்கள். சாதாரண ஜனங்கள் மனத்திலே என்ன படுகிறது ? என்ன இவர்கள் எங்கெங்கேயோ போய்க்கொண்டு இருக்கின்றார்களே என்ற சந்தேகம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றது. இவர்கள் நம் பிள்ளைகளை மட்டும் தமிழ் படி என்கிறார்களே

என்ற சந்தேகம் வருகிறது. சந்தேகம் ஏற்படவில்லை என்று சொல்ல முடியாது. சந்தேகத்தைப் போக்கித்தான் தீர வேண்டும்.

## யார் கொடுப்பது ?

பல மொழிகளைக் கற்பித்துத் தங்களுடைய குழந்தைகளை முன்னேறும்படிச் செய்ய, வசதியற்றவர்களால் 20 முதல் 30 ரூபாய் கொடுத்துக் கான்வெண்ட்டில் படிக்க வைக்க முடியுமா? பலர் 5 ரூபாய் கொடுத்துப் படிக்க வைப்பதற்கே கஷ்டப்படுகிருர்கள். இன்னும் 25 ரூபாய் யார் கொடுப்பது? இந்த நிலைமை இருந்து கொண்டேதான் இருக்கின்றது. இல்லை என்று சொல்ல முடியாது. அதற்கும் பரிகாரம் தேட வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தார் இந்த தாரதம்யத்தைப் போக்கவேண்டுமென்று ஆசைப்படுகின்ருர்கள். பணக்காரர்களின் பிள்ளைகள் பல மொழி கற்கும் நிலையையும், ஏழைகள் தமிழ் மட்டும் கற்கும் நிலையையும் மாற்ற வேண்டும்.

இதற்காகவே, "பழையபடி மூன்ருவது வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தை ஆரம்பித்துக் குழந்தைகளது ஆங்கில மொழி அறிவை வளர்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.



## கட்டாயம் இன்றி...

நம்முடைய தமிழ்நாடு, இந்திய தேசத்திலே சேர்ந்து இருக்க வேண்டுமா, வேண்டாமா? இது ஒரு பிரச்சினை: இது ஒரு சிக்கலான பிரச்சினை. முடிவு சுளுவாகக் காணக்கூடிய பிரச்சினை அல்ல. உணர்ச்சிகளைத் தூண்டிவிடக் கூடிய பிரச்சினையாக இருப்பதனுல் ஜாக்கிரதையாக நடக்க வேண்டி இருக்கிறது. நம் தமிழ்நாடு இந்தியாவின் ஒரு சிறு பகுதிதான். மற்ற பகுதியினரின் உறவு இல்லாமல் முடியாது. அதற்கு இந்தி வேண்டும். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த மட்டில் தமிழ் மொழி, இந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்றையும் படித்துத்தான் ஆகவேண்டும்."

ஆனுல், கட்டாயப்படுத்தினுலோ ஒரே கூச்சல் உண்டாகிவிடும். இவர் யார்? இவருக்கு என்ன தெரியும்? மூன்று மொழியைப் படிக்கச் சொல்லுகிருரே; படிக்கிறது அவ்வளவு சுலபமா என்ற கேள்விகள் பிறக்கும். அதனுல் கட்டாயப்படுத்த முடியாது. படிக்க வேண்டும் என்று இஷ்டப்படுபவர்களுக்கு வசதியும் நாம் செய்து கொடுத்தாகவேண்டும். ஆங்கிலம் படிப்பேன் என்று சொன்னுல் அதற்கும் வசதி செய்து கொடுக்க வேண்டும். இந்தியும் படிப்பேன் என்று சொன்னுல் அதற்கும் வசதி செய்து கொடுக்க வேண்டும். தமிழ் மட்டும் வேண்டுமென்ருலும் படிக்கட்டும். இதைத்

தான் அரசாங்கத்தின் கொள்கையாக வைத்து இருக்கின்றோம். கட்டாயப்படுத்தாமல் மக்களுக்கு இஷ்டமான மொழியிலேயே அறிவு வளர்ச்சி அடைவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

## உதறித்தள்ள முடியாது

பெரும்பான்மையோருக்குத் தமிழ்தான் புரிந்து இருக்கும். அவர்களுக்கு வேண்டியது புத்தகங்களும், அறிவும்தான். தமிழ் மாத்திரம் தெரிந்தவர்களை விட்டுவிட்டுப் போக முடியுமா! உனக்குத் தமிழ் மட்டும்தான் தெரியுமா? அது உன்தலையெழுத்து, நீ போ என்று உதறித்தள்ள முடியுமா என்ன? உன்னை யார் தமிழ் படிக்கச் சொன்னது என்று சொல்லி விட்டு ஓடமுடியாது! அப்படிச் செய்தால் சமூகத்தில் பொறுப்பு அற்றவர்கள் ஆகி விடுவோம். சமூகத்தில் பொறுப்பு உள்ளவர்கள் பொதுமக்களுக்கு என்ன என்ன வேண்டுமோ அந்தத் தேவைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொடுப்பதுதான் கடமை.

பெரும்பான்மையோருக்கு, அதாவது 100-க்கு 90 பேருக்குத் தமிழ் தவிர வேறு ஒன்றும் தெரியாது. எல்லாரும் எல்லா மொழிகளையும் தெரிந்து இருக்கமுடியுமா, என்ன? எல்லா மொழிகளையும் படிப்பதற்கு எங்கே நேரம்



இருக்கிறது? நேரமே கிடையாதே! வயிற்றுப் பிழைப்புக்குச் சம்பாதிக்கவே நேரம் இல்லையே, வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டு யார் படிக்க முடியும்? நம்மால் படிக்க முடியுமா என்ன? ரொம்பச் சிரமமான காரியம். நல்ல புத்தகங்கள் எல்லாவற்றையும் படிக்க வேண்டும் என்கிற ஆசைதான் எனக்கு. ஒரு தடவை படிப்பது நல்லதுதான். எனக்கு எங்கே நேரம் இருக்கிறது? இதே மாதிரிதான் எல்லோரும்.

## பேசுவது எதற்காக?

தமிழ், தாய்மொழியாக இருக்கின்றதனால் அது பழக்கமான மொழி. அந்த மொழியைத் தெரிந்தவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். இந்தத் தாய்மொழியையே சிரமப்பட்டு எழுதிப் படிக்கக் கற்றுக் கொள்ளுகிறார்கள். அவர்கள் சுலபமாகப் படிக்கக்கூடிய நல்ல புத்தகங்கள் அவசியம். தமிழ் மக்கள் எல்லாருக்கும் அறிவு வளர்ச்சி யடைய வேண்டும். ஆங்கிலம் கற்றவர்கள் மட்டும் அறிவு வளர்ச்சி பெற்றால் ஒரு நாளும் போதாது. பொதுமக்கள் அறிவு வளர்ச்சியடைய வேண்டுமானால், கல்லூரிகளிலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு மட்டும் அல்ல; எல்லாருக்கும் உபயோகப்படக்கூடிய முறையில் தமிழ் மொழியில் புத்தகங்கள் வெளியிடவேண்டும்.

இது கொஞ்சம் சிரமம்தான். தமிழிலேயும், தனித் தமிழாக, சுத்தத் தமிழாக வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். அந்த ஆசை நல்லதுதான். அதற்காகப் புரியாத வார்த்தைகளைப் போட வேண்டாம். புரியாத வார்த்தைகளைப் போட்டால் யாருக்கு என்ன லாபம்? ஒருவரோடு ஒருவர் பேசுவதெல்லாம், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்குத்தான். மொழி வல்லமையைக் காட்டுவதற்கு அல்ல. அப்படி வேண்டும் என்றால், புலவர்குழுக் கூட்டத்தில் உட்கார்ந்து, அவர்களுடைய உணர்ச்சிகளை, சாமர்த்தியங்களை, சொல் அலங்காரங்களை, கவியாகப்பாடச் சொல்லிக் கேட்கலாம். அது இனிமையாக இருக்கும். பொதுவாக, நான் சொல்வது என்ன என்றால், எளிய தமிழ் நடையிலேயே, எல்லோரும் புரிந்துகொள்ளும்படி எழுதவேண்டும் என்பதே.

## அவஸ்தை இல்லாமல்...

**சா**தாரணமாக மக்கள் மத்தியிலே நடைமுறையில் இருக்கக்கூடிய வார்த்தைகளைப் பழக்கத்தில் கொண்டுவரவேண்டும். புதிய தமிழ் வார்த்தைகள் நல்லதாக இருந்தால் அதையும், பழக்கமான வார்த்தையாய் இருந்தால் அதையும் சமயம்போல் இரண்டையும் உபயோகிக்கலாம். சில வார்த்தைகள் நாளடைவில் பழக்கத்தில் நின்றுவிடலாம். இப்பொழுது



யாரைப்பார்த்தாலும் வணக்கம் என்று சொல்லுகிறார்கள். 40, 50 வருஷத்திற்கு முன்னால் யாராவது வணக்கம் என்று சொன்னார்களா? இல்லை. நமஸ்காரம் என்றுதான் சொன்னார்கள்! சின்னப் பையன்கள்கூட இப்போது வணக்கம் என்று சொல்லுகிறார்களே! இடைக்காலத்தில் இப்படித்தான் ஒரு விதமாக இருக்கும். நாளடைவில் நடைமுறையில், பழக்கத்தில் வரக் கூடிய காலத்தில் சில சொற்கள் உறுதியாக நிலைத்துப் போய்விடும்.

சில பதங்களைத் தனித் தமிழாக்கினால் அது நீளமாகக் கணக்கில்லாமல் போகும். எங்கேயோ சுற்றிக்கொண்டு போகும். சொல்லிமுடிப்பதற்குள் ஆரம்பித்தது மறந்து போய் விடும். ஒரு வார்த்தை சொன்னவுடனே சட்டென்று மனத்தில் அதன் அர்த்தம்பட வேண்டும். அதை ஞாபகத்தில் கொண்டு வருவதற்கு ஒரு நிமிஷம் நினைக்க வேண்டி இருக்கக் கூடாது. அந்த மாதிரி அவஸ்தை இல்லாமல் வரும் சொற்களை, வேறு மொழிச் சொல்லாக இருந்தாலும் அப்படியே போட்டு விடலாம். ஆங்கிலச் சொல்லையும், இந்திச் சொல்லையும் அப்படியே போட்டு விடலாம். அதிலே என்ன தப்பு என்றுதான் கேட்கிறேன். அதில் ஒரு தப்பும் இல்லை. அப்பொழுதுதான் தமிழ் மொழி மிக வலிமையுள்ளதாக வளர்ச்சி அடையும்.

## வளர்ச்சிக்கு வட்டமா !

தமிழ் வளர்ச்சியைச் சுற்றி வட்டம்போட்டுக்கொண்டு அதன் உள்ளேயே உட்கார்ந்து கொண்டுதான், இருக்கப் போகிறேன் என்றால், இருக்கலாம். உலகத் தொடர்புவேண்டாம் என்றால், அப்படியே இருக்கலாம்.

உலகத் தொடர்பு இல்லாமல் இக்காலத்தில் இருக்கவே முடியாது. அந்தக் காலத்தில் ரோடு மார்க்கம் இருந்ததா? வான மார்க்கமாகப் போனார்களா? இல்லை. அல்லது போக முடிந்ததா? அதுவுமில்லை. ஆனால், இந்தக் காலத்தில் அப்படி இல்லாமல் நமக்குப் பல தொடர்புகள் ஏற்பட்டு விட்டன. அப்படிப் பட்ட தொடர்புகள் அவசியம் வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் வளர்ச்சி தடைப்பட்டு போகிறது.

தமிழ் மொழி வளர்ச்சிக்கும் உலகத் தொடர்பு அவசியம். அதிலேயும் விஞ்ஞானத் துறைக்குள் புகும்போது ஜாக்கிரதையாக இருக்க ஆசைப்படுகிறோம். அதை அவ்வளவு எளிதாகத் தமிழுக்குக் கொண்டு வருவது முடியாது. அதற்கு ரொம்பநாள் ஆகலாம். திடீர் என்று அதில் கை வைக்கும் உத்தேசம் நமக்கு இல்லை. ஏப்படியும் ஒரு காலம் வரும்; வராமல் போகாது. இதில் கொஞ்சம் சிரமம் இருக்கிறது. தமிழ் மூலம் படித்து விட்டு, அப்புறம் ஆங்கில அறிவு இல்லாமல் இருந்து விடுமோ, விஞ்ஞானத் துறைக்குப் போகும் பொழுது தடுமாற்றம், கஷ்டம் ஏற்படுமோ, என்ற பயம் இருக்கிறது. அதற்கு ஒரே பரிகாரம் தான் இருக்கிறது. அதாவது ஆங்கில மொழியில் நல்ல பயிற்சி அளிப்பதுதான் அந்தப் பரிகாரம். வேறு வழி கிடையாது. நம்முடைய குழந்தைகள் ஆங்கில அறிவைப் பெருக்கிக் கொள்ளும் முயற்சியிலே, நாம் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். அதை எடுத்துத்தான் ஆக வேண்டும்.



## தள்ளவே முடியாது

கிராமம் தோறும் பள்ளிகள் ஏற்பட்டு இருக்கின்றன. கிராமப்புறப் பள்ளிகளில் படித்துவிட்டு வந்த உடனே ஆங்கிலம் கற்றுக்கொள்வது கொஞ்சம் சிரமம். கிராமப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களுக்கு ஆங்கிலத் திறமை இருக்கிறதா என்பது சந்தேகம். ஆகவே, அங்கிருந்து வரும் பையன்களுக்கு ஆங்கிலத்தில் படிப்பதற்குச் சிரமம் இருக்கும், ஆரம்பத்தில். அந்தச் சிரமத்தைப் பொருட்படுத்தாமல், தேவையான நல்ல முறையில் பொறுமையோடு இருந்து, எல்லாக் குழந்தைகளுக்கும் ஆங்கிலத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற ஆர்வம் ஆசிரியர்களுக்கு இருந்தாலொழிய, இதில் வெற்றி அடைய முடியாது.

அரசாங்கத்தார் புத்தகம் எழுதி, பிரசங்கம் செய்து கொண்டு இருக்கலாம். நடைமுறைக்குக் கொண்டு வரும் பொழுதுதான் சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஏழைப் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுக்க ஒரு ஆவேச மனப்பான்மை இருக்க வேண்டும். ஆங்கிலம் கற்றுக்கொடுக்க வசதி இல்லையென்று நாம் சொன்னால் ஏழை மக்கள் சும்மா இருப்பார்களா ? சத்தம் போடுவார்கள். சத்தம் போடாமல் வீட்டிலே சும்மா உட்கார்ந்து கொண்டு இருப்பார்களா? நான் ஊர்களைச் சுற்றி வருகிறேன். அவர்கள் கேட்பதை நாம் அசட்டை செய்ய முடியுமா? நமக்குச் சிரத்தை வேண்டும்; ஆர்வம் வேண்டும்; உணர்ச்சி வேண்டும்.

படித்த ஜாதி, படிக்காத ஜாதி, ஆங்கிலம் படித்த ஜாதி, ஆங்கிலம் படிக்காத ஜாதிஎன்று உண்டாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆங்கிலத்திற்கு இருக்கக்கூடிய உயர்வைக் குறைத்துக்கொள்ள முடியாது. எல்லாக் குழந்தைகளுக்கும் நல்ல முறையில் ஆங்கிலத்தைக் கற்றுக்கொடுப்பதன் மூலம்தான் தமிழ் மொழிக்கு ஆக்கம் வரும். அவ்வளவு சுளுவாக ஆங்கிலத்தைத் தள்ளிவிட முடியாது. தள்ளவே முடியாது என்பது என் கருத்து. எனவே நல்ல முறையில் ஆங்கில மொழிப் பயிற்சிக்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும்.



## அறிஞர் கடமை

நமக்குத் தமிழ் மொழி தாய்மொழியாக இருந்தாலும் நம்மிடையே பல மொழிகள் பேசுபவர்கள் இருக்கிறார்கள். அவர்களோடு நாம் பழகித்தான் ஆக வேண்டும். முன் காலம் மாதிரி இருக்க முடியாது. தொழில் நிமித்தம் பிழைப்புக்காகவும் நாம் பிறரோடு பழகிக் கொள்ள வேண்டும். பல மொழிகளைக் கற்றுக் கொள்வதற்கான ஆசையைச் சிறு குழந்தைகள் மனத்திலே ஊட்ட வேண்டிய பொறுப்பு அறிஞர்கள் கடமை. அதை விட்டுவிட்டு ஆங்கிலம் படிக்கவேண்டாம், இந்தி படிக்க வேண்டாம் என்று கூறுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது ? பிற மொழிகளைப் படிக்க வேண்டாம் என்று சொல்பவர்கள் அறிஞர்களாக இருக்க முடியாது. அரை குறை அறிஞர்கள்தான் அப்படிச் சொல்லுவார்கள்.

## நாகரிக வளர்ச்சி

மாணவர்கள் நமது நாட்டு வரலாற்றை நன்றாகக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் சில சமயங்களில் வரலாற்றை மறந்து விடுகிறார்கள். யாராவது தவறாகச் சொன்னாலும் அதைத் தெரிந்து கொள்ள முடியாமல் போய் விடுகிறது.

உலக ஆரம்ப காலத்தில் சிறிய நாடுகள் தான் இருந்திருக்க முடியும். நாகரிக வளர்ச்சி ஏற்பட ஏற்படத்தான் நாடுகள் விரிந்து கொண்டே வந்தன.

ஆதிகாலத்தில் வேட்டையாடிப் பிழைப்பு நடத்தியவன் நிலையாக ஓரிடத்தில் வாழ்ந்திருக்க முடியுமா? விவசாயம் செய்ய ஆரம்பித்த பிறகுதான், மனிதன் நிலையாக வாழ ஆரம்பித்தான். அவன் குடிசை போட்டுக்கொண்டு வாழ்ந்தான். விவசாயக் கருவிகளைக் கண்டு பிடித்தான். பிறகு சிறிய நாடுகள் ஏற்பட்டு, நாகரிகம் வளர வளரப் பெரிய பெரிய நாடுகள் உருவாயின.

## மாக்மில்லன் கூறியது

அசோகன், அக்பர் காலத்திலிருந்தே அரசியல் துறையில் இந்தியாவை ஒரே ஆட்சியின் கீழ்க் கொண்டு வர முயற்சி நடைபெற்றது. ஆனால் அவர்களால் முடியவில்லை. அப்பொது தமிழ் நாட்டையே ஒன்றுபடுத்த முடியவில்லை.

அப்போது நாடு ஒரே அரசின் கீழே இருக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் ஒரே நாடு அல்ல என்று எப்படிச் சொல்ல முடியும்?

இப்பொழுது உலகில் பெரிய ராஜ்யங்களாக வாழவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்



டது. பெரிய ராஜ்யத்தில் வாழ்வதற்காக மகிழ்ச்சி அடைய வேண்டும். அப்படியிருக்க வருத்தப்படுவதில் அர்த்தம் என்ன?

முன்பு ஏகாதிபத்தியம் இருந்தபோது, வெள்ளையர்கள் தனித்து வாழ முடிந்தது. இப்போது ஐரோப்பிய நாடுகள் சேர்ந்து வாழமுன் வந்திருக்கின்றன. 'எங்களுக்குக் குறுக்கே ஒரு கால்வாய்தானே இருக்கிறது. நாங்கள் 50 ஆண்டுகளுக்கு முன்பே ஒன்றாக இருந்திருந்தால் இரண்டு மகாயுத்தங்களைத் தவிர்த்திருக்கலாம்' என்று பிரிட்டிஷ் பிரதமராயிருந்த மாக்மில்லன் கூறியிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

நாம் ஒன்றுக்கொன்று இணைந்து போகாவிட்டால் முன்னேற முடியாது, தொழில் வளராது. அடிமைத்தனம் தான் வளரும். ஒரே நாடாக இருந்தால்தான் தொழில் வளர்ச்சி ஏற்பட முடியும்.

## வெந்ததைத் தின்று...

"தமிழ் நாடு பிரிந்திருந்தால் வாழ முடியாதா?" என்று கேட்கிறார்கள். முடியும். வெந்த சோற்றைத் தின்று, விதி வந்தால் சாவு என்று இருக்க முடியும். தனித்து வாழ்ந்தால்குறைந்த செலவில் பொருள்களை உற்பத்தி செய்யும் சக்தி வேண்டாமா? இங்குக் குடிதண்ணீருக்கே பஞ்சமாக இருக்கிறதே!

இதுமட்டுமல்ல; தமிழ் நாட்டில் நூற்பு ஆலைகள் ஏராளமாக இருக்கின்றன. 5 லட்சம் பேர்கள் வேலை பார்க்கிறார்கள். அவர்கள் நூற்கும் அத்தனை நூலும் இங்கு தமிழ்'நாட்டிலேயே செலவாகிறதா? இல்லை. ஆகையால் தமிழ்நாடு பிரிந்தால் 50,000 பேர் வேலை செய்தால் போதும். மற்ற நூல் எல்லாம் இப்போது மற்ற ராஜ்யங்களுக்குச் செல்கிறது. நாடு பிரிந்தால் நூலை அனுப்ப முடியுமா? லட்சக் கணக்கானவர்களுக்கு வேலை போய்விடாதா? இம்மாதிரித்தான் மற்ற தொழில்கள் விஷயத்திலும். எனவே, நாடு ஒன்றாக இருந்தால்தான் நாம் வாழ முடியும்.

## வரியில்லை என்றால்...

சென்ற பத்து ஆண்டுகளில் திட்டங்கள் காரணமாக அதிகம் பேர் படித்திருக்கிறார்கள். அதிகம் பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது.

தொழிலாளிக்கு நாளொன்றுக்குச் சில ரூபாய்கள் கிடைத்தால், முதலாளிக்கு நூற்றுக்கு மேல் கிடைக்கிறது. மாதத்திற்கு ஆயிரக்கணக்கில் வருமானம் வருகிறது.

தொழிலாளி தனக்குக் கிடைக்கும் வருமானத்தில் குழந்தையைப் படிக்கவைக்க முடியுமா? அதைச் செய்யத்தான் ஆயிரக்கணக்கில் சம்பாதிப்பவர்களிடம் சம்பாதிப்பதில் ஒரு



பகுதியை வரியாகக் கேட்கிறோம். எனவே, அவர்கள் கோபப்படுகிறார்கள்.

வரி வசூலிக்கவில்லை என்றால் பள்ளி ஆசிரியருக்கு எப்படிச் சம்பளம் கொடுப்பது? 'சர்க்கார் வரி வாங்கவில்லை. நீயும் சம்பளம் கேட்காதே' என்றால் ஆசிரியர்கள் வேலை பார்ப்பார்களா?

அதற்காக வருமானம் உள்ளவர்களிடம் குறைந்த அளவில் வரி போடுகிறோம். வரி போடாமல் யாராவது திட்டத்தை நிறைவேற்றுவார்களா? 100 ரூபாய், 200 ரூபாய் என்று இலாபம் வரும்பொழுது ரூ. 5, ரூ. 10 என்று வரி கொடுத்தால் என்ன?

## நன்மை செய்யாதே!

விளையும் நிலத்திற்குத் தண்ணீர் வசதியாகக் கிடைக்கச் செய்கிறோம். அதற்குச் செலவிடப் பணம் வேண்டாமா? வரி போடாமல் தண்ணீர் எப்படிக் கிடைக்கும்?

இதைப் பார்த்து காங்கிரஸ் அரசாங்கம் வரி போடுகிறது என்று எதிர்க்கட்சிக்காரர்கள் வீணாகக் கூச்சல் போடுகிறார்கள். "வரி போடாதே" என்று எதிர்க்கட்சிக்காரர்கள் கூறுவது "மக்களுக்கு நன்மை செய்யாதே!" என்று கூறுவது போலாகும். இப்படிச் சொல்வது, காங்கிரஸ் ஆட்சி வேண்டாம் என்பது, நல்லது வேண்டாம் என்று கூறுவதாகும்.

நாம் தொழிலில், கல்வியில் பெரிய அள வில் முன்னேறவில்லை. ஆனால் தனி மனிதன் எவ்வாறு முன்னேறியிருக்கிறான் என்பதைக் கூடவா எதிர்க்கட்சிகள் தெரிந்து கொள்ள வில்லை?

## ஒரு துளி இன்பமா!

**வ**ரியை ஏன் போடுகிறோம்? சிறிது சிந் தனை செய்து பாருங்கள். எல்லோரும் சமநிலை யோடு வாழவேண்டும். சிலர் மாடி வீடுகளிலும் பலர் மண்குடிசைகளிலும் வாழும் நிலை மாறி எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் இனம் என்ற நிலைக்கு உயரவேண்டும். இந்த எண் ணத்தைத் தவிர, ஏழைகளை வாட்டுவதற்கா கவோ, பணக்காரர்களைப் பழிவாங்குவதற் காகவோ, அல்ல; நல்ல பெயர் எடுக்க எங்களா லும் வரிபோடாமல் இருக்கமுடியாதா? ஆனால் இன்று கிடைக்கும் ஒரு துளி இன்பத்தைவிட நாளை கிடைக்கப் போகும் நீண்ட இன்பத்திற் காக இன்று வரும் சில துன்பங்களை நாம் ஏற் கத் தயாராக வேண்டும். இந்த எண்ணத்தோடு தான் எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது மக்கள் நலனே நமது சேவை என்று பாடுபடு கிறோம்.



## வறுமையின் சுவடு

**நா**ம் போகும் வேகம் குறைக்கப்படவேண் டும் என்றும் சிலர் சொல்கின்றனர். இதுவே குறைவான வேகம், இன்னும் குறைந்தால் நாம் இன்னும் நூறு ஆண்டுகள் கழித்தே முன்னேற முடியும். இந்த நிலை வேண்டாம். நம்மைச் சூழ்ந்துள்ள வறுமையும், பிணியும், பசியும், பஞ்சமும் நமது தலைமுறையோடு ஒழியட்டும்.

நமது சந்ததி வறுமையின் சுவடு தெரியா மல் வாழட்டும் என்ற இலட்சியத்திற்காகப் பாடுபடுகிறோம். அதற்கு மக்களுடைய ஒத் துழைப்பே சிறந்த வழிகாட்டியாகும்.

## இடைக்கால சங்கடம்

**வி**லைவாசியைக் குறைக்கவேண்டும் என் பதற்காக நெல், அரிசி விலையை பழைய நிலைக் குக் கொண்டுவர முடியாது. விவசாயச் செலவு கூடிவிட்டது. விலையைக் குறைக்க ஒரே வழி உற்பத்தியைப் பெருக்குவதுதான்.

மக்கள் தொகை அதிகரித்துக்கொண்டு போகிறது. இதனால் நிலப்பரப்பு அதிகரித்து விட்டதா? பெய்கிற மழைதானே பெய்கிறது. யாராவது மழை பெய்ய வைக்க முடியுமா? இருக்கிற நிலத்தில் அதிகம் உற்பத்தி செய் வதுதான் நல்லவழி.

நாட்டில் இருக்கும் சிக்கலான பிரச்சினைகளைத் தீர்க்க நாம் முயன்றுகொண்டு இருக்கும்போது சிலர் நமது கவனத்தை வேறு திசையில் திருப்பப் பார்க்கிறார்களே!

நீண்டகாலத் திட்டமிட்டு, படிப்படியாக வளர்ச்சி அடைந்து வரும் சமுதாயத்தில் தவிர்க்க முடியாத சங்கடங்களும், கட்டுப்பாடுகளும் ஓரளவுக்கு ஏற்படத்தான் செய்யும். இந்த இடைக்கால சங்கடமெல்லாம் திட்டத்தின் பலன் கிடைக்கத் துவங்கும்போது தானாகவே விலகிவிடும் என்பது உறுதி.

## மறைபொருளா, தேவபாஷையா?

எந்தக் காரியத்துக்கும் மக்களிடம் வோட்டு வாங்க வேண்டும். கம்யூனிஸ்ட் முறையில் வோட்டு இருக்காது. அதுபோலவே முதலாளிகள் கட்சியிலும் வோட்டு இருக்காது. இந்த இரண்டிற்கும் மத்தியில் ஜனநாயக முறைக்கு உட்பட்டு, மக்களின் குறைகளைத் தீர்க்க அரசாங்கம் முற்பட்டிருக்கிறது. இதைப் புரியாததுபோல, கம்யூனிஸ்ட் வழி என்று குழப்புகிறார்களே! நல்லதா?

தேர்தலுக்கு நின்று மக்களிடம் வோட்டு வாங்கி ஆட்சிக்கு வரவேண்டும். வோட்டு முறையில் தானே நமது ஜனநாயக ஆட்சி முறை அமைந்துள்ளது? அப்படி இருக்கும்



போது 'வோட்டின்' மேலேயே எங்களுக்குக் கண் என்று கேலி செய்கிறார்களே! இதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?

மக்களிடம் வோட்டு கேட்டு வாங்கும் ஜனநாயக முறை கூடாதா? வோட்டு கேட்பதும், மக்களுக்கு வேண்டியதைச் செய்து தருகிறேன் என்று சொல்வதும், அப்படிச் செய்யத் திட்டம் போடுவதும், சுதந்திரக் கட்சிக்கு ஏனோ பிடிக்கவில்லை? வோட்டு முறையே கூடாது என்று சொல்வதாகத்தானே இதற்கு அர்த்தம்! வேறு என்ன?

வோட்டர்கள்மீது எப்போதும் எங்களுக்குக் கண் என்று பேசுகிறார்கள். வோட்டர்கள் என்றால் யார்? ஏழைகள்தானே பெரும்பான்மையான வோட்டர்கள்? ஆமாம். அவர்களைத் திருப்திப்படுத்தவே விரும்புகிறோம். ஏழைகளைத் திருப்திப்படுத்துகிறோம் என்று எங்களைச் சொல்லாமல், வோட்டர்களைத் திருப்திப்படுத்துகிறோம் என்று சொல்வது ஏன்? வோட்டர்கள் என்றால் ஏழைகள் என்று அவர்கள் மறைபொருளாகப் பேசுகிறார்களாம்! இது அவர்களுடைய கூட்டத்துக்கு மட்டும் புரியக் கூடிய "தேவ பாஷை" என்று நினைப்பா? மக்கள் எப்படியும் புரிந்து கொள்வார்களே! மறைக்க முடியாதே!

## எந்தப் பெயரானாலும்...

நாட்டில் உள்ள கோடிக்கணக்கான மக்கள் சம உரிமையும், சம வாய்ப்புகளும், வசதிகளும் பெற்று வாழ வழி செய்ய வேண்டும். இதற்குப் பெயர் எதுவாக இருந்தால் என்ன? யாராவது நல்லது செய்தால் மக்கள் வேண்டாம் என்று சொல்லிவிடப்போகிறார்களா? அவர்களுக்கு அக்கறை இல்லையா?

காங்கிரசின் சமதர்ம நோக்கமும் போக்கும் கம்யூனிஸ்டு வழியென்று பூச்சாண்டி காட்டிக் குழப்புவதையே சிலர் தங்கள் வேலையாக வைத்திருக்கிறார்கள். இருப்பதையெல்லாம் பிடுங்கிவிடுவார்கள் என்றும் வீணாகப் பயம் ஊட்டி வருகிறார்கள்.

ஏழைகளிடம் இப்படிப்பட்ட அர்த்தமற்ற பேச்சுக்கள் பேசுவது நல்லதா? இதனால் தேசத்தில் உள்ள பசி, பிணி, வேலையில்லாமை முதலிய பிரச்சினையில் கவனம் செலுத்தாமல், வீண் கூப்பாட்டைக் கேட்டுக்கொண்டு இருப்பதா? இதனால் முன்னேற்ற திட்டங்களை மறந்து விடுவதா!

இதையெல்லாம் மக்கள் நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும். ஏதோ வசதி படைத்த வெகு சிலரைப் பாதிக்கும் என்று கூப்பாடு போடுவதைப் பற்றி, மக்கள் கவலைப்பட வேண்டுமா, என்ன? அவசியமில்லையே!



## பேரம் பேசும் பேச்சு

ஏழைகளுக்குச் சம்பந்தமில்லாததைப் பேசி, ஏழைகளைக் குழப்பி வசதி படைத்தவர்களுக்குப் பக்க பலம் தேடுவதா!

சோற்றுக்கும் துணிக்கும் வழியே இல்லாமல் தவிக்கும் மக்களது பிரச்சினைதானே முதலில் தீர்க்கப்பட வேண்டியது? உல்லாச சவாரிக்குக் கார் கிடைக்கவில்லையே! ஆடம்பரப் பொருள்களை இறக்குமதி செய்யத் தடை ஏன்? பெரிய பங்களாக்கள், சினிமாக்கள் கட்ட வசதி செய்யத் தாமதம் ஏன்? என்று பேரம் பேசும் பேச்சே நாட்டில் பெரிதாகப் போகிறதே!

இதை வசதி படைத்தவர்கள் பேசுவதில் அர்த்தம் இருக்கிறது! ஆனால் சாதாரண மக்கள், இந்தக் கூச்சலைக் கேட்டுக்கொண்டு பின்னால் போக முடியுமா, என்ன?

## சோற்றுக்கு மிஞ்சிதான்

கடவுள் வழிப்படியே பார்த்தாலும் சர்க்கார் ஏழை பங்காளனாக இருப்பதில் தப்பு இல்லையே! கடவுளை ஏழை பங்காளன் என்றுதானே சொல்லுகிறோம்! பணக்காரன் து பங்காளன் என்றா சொல்லுகிறோம்! இல்லையே! எங்கள் பக்கத்தில் ஒரு பழமொழி உண்டு.

"ஆற்றுக்குப்போய் 'அரகரா' போட்டாலும் சோற்றுக்கு மிஞ்சிதான் சொக்கேசன்" என் பார்கள். அதைப் போல, சோற்றுக்கும், துணிக்கும், வீட்டுக்கும் படிப்புக்கும் முதலில் வசதி செய்ய முயற்சிக்கிறோம்! இதை மறக் கடிக்க, வீண் கூச்சல் போட்டு குழப்ப நினைக் கும் புதுக்கட்சியின் விசித்திரப் பாட்டை மக் கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

## பெரிதாக்கிப் பேசுவதா ?

சுதந்திரக்கட்சி, ஏழ்மையே நாட்டில் இல் லாத மாதிரி, வாழ்க்கைக்கு அடிப்படையான விஷயங்களை அப்படியே ஒதுக்கி வைத்துவிடு கிறதே! கவனித்தீர்களா ?

வாழ்க்கையில் ஓரளவுக்கு வசதியும், நிம் மதியும் படைத்தவர்களது பிரச்சினையைத் தான் பெரிதாக்கிப் பேசி, மேலும் உயரேயே போக 'சுதந்திரம்' கேட்கிறார்கள், இல்லையா!

இதையெல்லாம் பொது மக்கள் கவனித்து "புதுப் பாட்டு" பற்றிக் கவலைப்படாமல், முன் னேற்றத் திட்டங்களில் ஈடுபடவேண்டும்.

## தள்ளிப்போடும் வழியல்ல

மக்கள் நலனுக்காகச் செய்ய வேண்டிய காரியங்கள் ஏராளமாகத்தான் உள்ளன. எல்



லாத் தேவைகளையும் உடனடியாகப் பூர்த்தி செய்து விட முடியுமா ? இப்படிக் கேட்பதால், பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைத் தள்ளிப் போட இது ஒரு வழி என்று கேலி கூடச் செய்யலாம். ஆனால் உண்மை இதுதானே !

சாதிக்கவே முடியாது, செய்யவே முடி யாது என்று எந்த நல்ல காரியத்தை ஒத்திப் போடுகிறோம் ? அல்லது தட்டிக் கழித்துப் பொறுப்பிலிருந்து நழுவுகிறோம்? சொல்லுங் கள் !

திட்டமிட்டு, முன்னேற்றத்திற்கான காரியங்களைச் செய்து வருகிறோம். திட்டங் கள் நமக்காகத்தான். நம்முடைய வாழ்வு இத னால் வளம் பெறும் என்ற நம்பிக்கையும் அதன் மூலம் மக்களின் ஒத்துழைப்பையும் பெறுவது முதல் வேலையாக உள்ளது.

மக்களுக்காகப் போடப்படும் திட்டங் களைத் தெரிந்து கொள்வதில் அனைவரும் அக் கறை காட்டத் தவறக்கூடாது. அடிப்படை யான முன்னேற்றத் திட்டங்களைச் செயல் படுத்துவதில் கட்சிப் பூசல்களோ, மற்ற ஜாதி, மதபேதங்களோ, மொழிச் சிக்கல்களோ குறுக்கிடாதபடி கவனிப்பது முக்கியமாகி றது.

## சாதாரண சம்பவம்

தர்மம் பேசிக்கொண்டே, திட்டமே வேண்டாம் என்று பேசும் போக்கும், நாட்டைப் பிரித்து விட்டால் எல்லாம் தீரும் என்று தம்பட்டம் அடிப்பதும், தலைகீழ்ப் புரட்சிதான் நல்ல வாழ்வுக்கு வழி என்பதும் அவரவர் கட்சியின் வளர்ச்சிக்கும் நடமாட்டத்திற்கும் உதவலாம். ஆனால் இப்பேச்சே பெரிதாகி, அடிப்படை முன்னேற்றத்தையே தடைப்படுத்தும் நிலைமை ஏற்பட்டு விடக் கூடாது. இதைப் பற்றிக் கட்சிகளும் சரி, பொதுமக்களும் சரி கவனித்து நடப்பது அவசியமாகும்.

எந்தக் கட்சியானாலும் சரி, மக்கள் வாழ வேண்டும் என்றுதான் சொல்லுகின்றன. ஆனால் எப்படி மக்களை வாழ்விப்பது? எந்த வழி வகுத்து இதை நடத்துவது என்பதில் கருத்து வேறுபாடும் மாறுபாடும் இருக்கலாம். இது கூட இல்லை என்றால் தனித்தனிக் கட்சி வைத்திருப்பதற்கு அர்த்தமே இல்லாமல் போய் விடாதா?

சில கட்சிகளது கருத்துக்களுக்கு மக்கள் ஆதரவு அதிகம் இல்லாமல், ஆட்சிப்பீடத்தில் அமர முடியாமல் போகலாம். ஜனநாயகத்தில் இது சாதாரண சம்பவமாகும். ஆனால் ஆளும் சந்தர்ப்பம் ஏற்படவில்லையே என்பதால் சலிப்பும், சஞ்சலமும் ஏற்பட்டு, இதுவே பெரிதாகி



ஆள்பவர் செய்வதைக் கண் மூடித்தனமாகக் குறை கூறுவது எக்கட்சிக்கும் நல்லதே அல்ல.

## கட்சி வித்தியாசமற்ற பொறுப்பு

எத்தனை கட்சிகள்—கொள்கைகள்-கோட்பாடுகள் வேண்டுமானாலும் இருக்கலாம். நாட்டில் அமைதி நிலவ வேண்டும். இது மிகவும் அவசியம். அமைதியான சூழ்நிலையில்தான் ஆக்க வேலைகளில் ஆள்வோர் மட்டுமல்ல; மக்களும் தகுந்த கவனம் செலுத்த முடியும்.

கட்சிகள் காரணமாகவும், அவற்றிற்கிடையில் உள்ள கொள்கை மாறுபாடு, வேறுபாடு காரணமாகவும் நாட்டின் பொது அமைதி குலையும் போக்கு ஒரு சிறிதும் ஏற்படக் கூடாது. அமைதி குலைந்தால் மக்கள் வாழ்வே குலைந்து போகும்; தேசத்தின் செல்வங்கள்தான் பாழாகும்; மக்களது நிம்மதிதான் கெட்டுப்போகும். நம்முடைய சக்திதான் வீணாகும்; விரயமாகும். இந்த நிலைமை ஏற்படவே கூடாது. எந்தச் சிக்கலுக்கும் ஜனநாயக முறையில், அமைதியான முறையில் தீர்வு காண முடியும். அமைதியைக் காப்பதில் நம் அனைவருக்குமே பொறுப்பு உண்டு. கட்சிக்குக் கட்சி இதில் வித்தியாசம் இல்லை. ஜாதி, மதம், மொழி வேற்றுமை கூட இதற்கு முன் நிற்கக் கூடாது.

## அமைதியைக் காப்போம்

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி நடக்கும் இந்த நேரத்தில் அமைதியைக் குலைத்துத்தான் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மை வேண்டுமா ?

படித்தவர்கள், வாழ்க்கையில் வசதி படைத்தவர்கள், நடுத்தர மக்கள், உத்தியோகத்திலும், தொழிலிலும் இருப்பவர்கள்-பொது விஷயங்களைக் கவனித்து அதைப் பற்றிக் கொஞ்ச நேரமாவது பேச—வாதப்பிரதிவாதம் செய்யும் வாய்ப்புள்ளவர்கள் அனைவருக்கும் நாட்டின் 'அமைதியைக் காப்போம்' என்ற உணர்ச்சியும் உறுதியும் ஏற்பட்டு விட்டால், சாதாரண மக்களுக்கு எந்தவிதமான குழப்பமும் ஏற்படவே ஏற்படாது.

புதிய சமுதாயம், சர்வோதய சமுதாயம், சமதர்ம சமுதாயம் அமைப்பதில் அனைவருக்கும் பொறுப்புள்ளது. யாருக்குப் பொறுப்பு என்று கணக்குப் பார்ப்பது அர்த்தமற்றது—அவசியமற்றது—தேவையற்றது. எல்லோருக்கும் கூட்டுப் பொறுப்பு உண்டு என்ற பொறுப்புணர்ச்சி தேவை.

மக்கள் வாழ்வில் சாந்தியும் இன்பமும் நிலவ வேண்டும். பொறுப்புணர்ச்சி உடையவர்களின் இலட்சியமும் வேலைத் திட்டமும் இதுவாகத்தான் இருக்கவேண்டும். இந்த உணர்வுடன் காந்திஜி கண்ட புதிய சமுதாயத்தை அமைக்க உறுதி கொள்வோம்; அதற்கான முயற்சிகளில் உற்சாகத்துடன் ஈடுபடுவோம்.



## சுகபோகத்திற்கு மெருகு

தற்கால உலகில் மிருக உணர்ச்சி படைத்த சில மனிதர்களின் செயல்களை வரையறை செய்யாமல் அப்படியே, அவர்களது தன்னிச்சைப்படி உலவ விட்டுவிட முடியுமா ? அப்பாவியான ஏழை எளிய மக்களை, வசதி படைத்தவர்களும் கல்மனம் படைத்தவரும் கசக்கிப் பிழிந்து விடாமல் தடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். பெரிய முதலாளித்துவ நாடுகளில் கூடக் கட்டுப்பாடற்ற தொழில் முறையும், சுதந்திரமான வியாபாரமும் அனுமதிக்கப்படாமல், ஓரளவுக்கு அவை ஒரு கட்டு திட்டத்திற்குள்ளாக்கத்தானே வைக்கப்பட்டிருக்கின்றன !

வசதி படைத்த பெரிய முதலாளிகள் ஏழை எளிய மக்களை வாட்டி வதைத்து அவர்களுடைய வாழ்வுக்கு உலை வைக்காமல் தடுத்து நிறுத்தத்தான் நாம் திட்டங்கள் தீட்டிச் செயலாற்றுகிறோம். நாம் திட்டங்கள் போடுவதே இதற்காகத்தான். நமது நாட்டைப் பொறுத்த வரையில், தனியார் துறையானது கட்டுப்பாடற்ற முறையில் தன்னிச்சையாக

தலைவிரித்தாட நாம் அனுமதிக்க முடியாது. அக்கிரமமான வழிகளில் பலத்தையும் பணத்தையும் பெருக்கிக்கொண்ட பெரிய மூலதனக்காரர்கள், அப்பாவி ஏழை எளிய மக்களின் வாழ்வை நாசமாக்குவதை, கேவலமான வழிகளில் அவர்களைக் கொள்ளையடித்துத் தங்களுடைய சுகபோக வாழ்க்கைக்கு மெருகு ஏற்றிக் கொள்வதை, எந்தக் காலத்திலும் நாம் அனுமதிக்க முடியுமா என்ன? முடியாது.

## மனிதனுள் மிருகம்

புத்திக்கூர்மை படைத்தவர்கள் தங்களுடைய மேதாவிலாசத்தைப் பயன்படுத்தி, சமுதாயத் துறையில் முன்னேறுவதை நாம் ஒரேயடியாகத் தடுத்து நிறுத்தி விட முடியாது. அது நம்முடைய நோக்கமுமல்ல. பார்க்கப் போனால், உடல் வலிமை மட்டுமே அதிகாரத்தைக் கவர அடிப்படை அல்ல. அறிவும் அந்த அளவுக்கு முக்கியமானது தான். அறிவானது சில பேரிடம் அதிகமாக இருக்கலாம். சில பேரிடம் குறைவாக இருக்கலாம். அறிவு பரம்பரைச் சொத்து அல்ல. ஆனால், பலவீனமானவர்களுக்குச் சரிசமத்துவமான வசதிகளைச் செய்து தருவதின் மூலம் அவர்களையும் சமுதாயத்தில் பலம் பொருந்தியவர்களாகவும் அறிவாளிகளாகவும் உலவ விட முடியும்.



ஆகவே, தன்னிச்சையாக, இயற்கையாக உலகில் எதையும் நடக்க அனுமதித்து விடுவோமானால் பலம் பொருந்தியவர்கள், ஏமாற்றுக்காரர்கள் ஆகியவர்களின் பாடு வேட்டை தான்! அவர்கள் வெகு சுலபமாக பலவீனர்களை, அப்பாவிகளை ஏமாற்றி, அவர்களைப் பெருத்த அளவில் கொள்ளையடித்துத் தங்களுடைய சுகபோக வாழ்க்கையைப் பெருக்கிக் கொள்ளத் தயங்கமாட்டார்கள். இந்தக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டால் பணக்காரன் இன்னும் பணக்காரன் ஆவான். ஏழை இன்னும் ஏழையாகத்தான் காட்சியளிப்பான்.

பெரிய முதலாளித்துவ நாடுகளில் கூட அரசாங்கங்கள், அறிவு, பணம் முதலியவலம் பொருந்தியவர்களுடைய " வசதிகளைக் குறைத்து, ஓரளவு கட்டுப்பாடுகளைப் புகுத்தி, அவர்கள் சமுதாயத்தை உறிஞ்சும் அட்டைகளாக மாறாமல் பார்த்துக் கொள்கின்றன.

மனிதனின் மிருக உணர்ச்சியானது வெறியாக மாறி மனிதனுடைய மனத்தை ஆட்டிப் படைக்கும்படியான நிலையில் விட்டு வைக்கக் கூடாது. இந்த மிருக உணர்ச்சி மெள்ள மெள்ளவாவது நம்மிடமிருந்து அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். ஏனென்றால், இதனால் சுயநல மனப்பான்மையும், தன்னல உணர்ச்சியும், பிறர் உழைப்பைச் சுரண்டி வாழ்கிற கேவல மனப்பண்புந்தான் மனிதர்களிடையே வளருகின்றன.

# பழம்பெரும்நோய்

இந்த நாட்டின் மக்களது வாழ்வையும் தாழ்வையும் நிர்ணயம் செய்வதுதான், நாம் போடுகின்ற திட்டங்கள். நாட்டின் சக்திகள், மக்களின் முன்னேற்றத்திற்காக மேலும் மேலும் கிடைக்கும் வசதிகள், இவைகளைத் தீவிரப் பரிசீலனை செய்து, அதன் பேரில் இந்தத் திட்டங்களைப் போடுகிறோம்.

எல்லா மக்களையும் சரிநிகர் சமானமாக ஆக்கிவிட முடியாது என்பது உண்மைதான். ஆனால், அவர்களுக்குச்சரிசமமான வசதிகளாவது செய்து தரப்பட வேண்டாமா? நமது நாட்டில் கிராமப் புறங்களில் உள்ள பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப் போதிய கல்வி வசதி கிடையாது. இந்தப் பழம் பெரும் நோய்க்குத்தக்க மருந்தை நாம் கண்டுபிடித்து வருகிறோம். பழங்காலத்தில் உபயோகித்த மருந்து இந்தக் காலத்திற்குப் பயன்படாது. இன்றைய உலகம் இருக்கின்ற நிலை, நமது நாட்டின் தற்போதைய நிலை, இவைகளை மனத்திலே கொண்டு, உணர்ந்து பார்த்து நாம் செயலாற்ற வேண்டும். பழங்கால நடைமுறைகள் இப்போது பயன் படாமல் போகலாம். நமக்கு ஒத்த முறைகளில் சமதர்ம சமுதாயத்தை உருவாக்கச் செயலாற்ற வேண்டும்.



# கருத்துப் புரட்சிக் காலம்

தொழில் துறையில் ஏற்பட்ட புரட்சியும் வளர்ச்சியும் பெற்றெடுத்த குழந்தைதானே சமதர்மம். செல்வமானது புதிதாக உருவாக்கப்படுகிற பொழுது, அதைப் பங்கு போடுகிற பிரச்சினையும் கூடவே எழுகிறது. தொழில் புரட்சிக்கும் வளர்ச்சிக்கும் முன்னால், சாதாரண மக்கள் தங்களுடைய தலைவிதியின் பயன் என்று எண்ணிப் பொறுமையோடு முணுமுணுக்காமல் காலத்தைக் கடத்தி வந்தார்கள். ஆனால், இப்போதைய நிலை அப்படியா? மனித சமுதாயத்திலே உருவாகின்ற எண்ணங்களிலே, கருத்துக்களிலே ஒரு புரட்சித்தன்மை ஏற்பட்டிருக்கிறதா, இல்லையா?

புரட்சிகரமான மாறுதல், தினம் தினம் ஏற்பட்டுக்கொண்டே வருகிற காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டு வருகிறோம். உலகமே ஒரு பெரிய மாறுதலை அடைந்து வருகிறது. எல்லாத் துறைகளிலும் புதிய கருத்துக்கள், புதிய செயல்கள் தோன்றியிருக்கின்றன. ஆகவே, நாம் எடுத்துக்கொள்கின்ற எந்தப் பிரச்சினையையும் இந்தக் கண்ணோட்டத்துடன் தான் நாம் கவனிக்கவேண்டும்.

## சமதர்மத்தின் நோக்கம்

சமதர்மம் என்ருல் ஏழ்மையைச் சமமாகப் பகிர்ந்து கொடுப்பது என்பது அர்த்தமல்ல. மேலும் மேலும் உற்பத்தி செய்தல், அதே சமயத்தில் அதனுல் ஏற்படுகின்ற செல்வம் ஒரு சிலருடைய இரும்புப் பெட்டிகளில் சென்று ஐக்கியமாகி விடாமல் பலருக்கும் பயன்படும் விதத்தில் பரவலாகும்படி பார்த்துக் கொள்ளுதல், இவைதான் சமதர்மத்தின் நோக்கங்கள்.

நமது நாடு இன்னும் வறுமையில் ஆழ்ந்திருக்கிறது. நாம் இந்த வறுமைப்பேயை ஓட்டியாக வேண்டும். இந்த ஏழ்மைப் பிடியிலிருந்து நம்மை நாமே மீட்டுக் கொண்டாக வேண்டும்.

தொழில் துறையில் மட்டுமல்ல; விவசாயத் துறையிலும் மகத்தான முன்னேற்றங்கள் ஏற்படவேண்டும். பார்க்கப்போனுல், விவசாய அபிவிருத்திதான் மிகவும் முக்கியம். விவசாய வளம் கொழிக்கும் நாட்டில்தான் பெருந்தொழில்கள் பெருகுவது சுலபம். உடனடிப் பலனும் கிடைக்கும்.

## புரட்சிக்கு வழி

**கால**ஓட்டத்தோடு சமுதாயம் மாறிக் கொண்டே வரவேண்டும். இதை மறந்து விட்டால், ஒரு சமயத்தில் மக்களது உணர்ச்சி பொங்கும். கட்டுக்கு மீறிப் பீறிட்டுக்கொண்டு கிளம்பிப் பலாத்காரப் புரட்சியில் கொண்டு விட்டுவிடும்! திட்டமே கூடாது என்பதும், அமைதியைக் குலைத்து ஆக்கவேலைகளைக் கெடுப்பதும் சமுதாய மாறுதலைத் தடுக்காதா? புரட்சிக்கு வழி செய்யாதா? யோசியுங்கள்!



## நானும் ஒருவன்...

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மகத்தான மாறுதலை நம்நாடு இப்பொழுது அடைந்து வருகிறது. இந்த நாட்டை ஒரு இலட்சியத் திருநாடாக மாற்றியமைக்கும் மகத்தான பணியில் நாமும் நம்முடைய பங்கைச் செய்கின்ற வாய்ப்பு நமக்குக் கிடைத்திருப்பது நாம் செய்த அதிர்ஷ்டமேயாகும். எதிர்காலத்திலே சரித்திராசிரியர்கள் இந்தியாவின் மகத்தான சாதனையைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதிப் புகழ்மாலை சூட்டப் போகிருர்கள். ஆகவே, இந்த மிக முக்கியமான கட்டத்தில் சிறுசிறு பொல்லாங்குகளும் பூசல்களும் மனக்கிலேசங்களும் நம்முடைய வேகத்தைத் தடுத்து நிறுத்திவிடாமல் நாம் பார்த்துக் கொள்ளவேண்டும்.

மகத்தான எதிர்கால வாழ்வை உருவாக்கும் திருப்பணியிலே தோளோடு தோள் நின்று முன்னேற்றப் பாதையில் ஏறு நடைபோடும்

நாற்பத்தைந்து கோடி மக்களிலே நானும் ஒருவன் என்ற பெருமிதமும் உள்ளுணர்வும் ஒவ்வொரு பிரஜையின் இதயத்தினுள்ளும் ஏற் படும்படியான நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டும். சிறுசிறு பூசல்கள், தேவையற்ற விதண்டாவாதங்கள் பலனளிக்காது. மகாத்மா காந்தி அடிகள் சொன்ன மாதிரி, எவ்விதமான நயவஞ்சகமோ களங்கமோ இல் லாமல், எந்தப் பிரச்சினையையும் திறந்த மனத் துடன் நாம் சீர்தூக்கிப் பார்த்துச் செயலாற்ற வேண்டும். புதிய சமுதாயம் தானே அமையும். "மக்களாட்சி"யின் மாண்பு மலரும்.

## கேட்கும் தைரியம்

மக்கள் என்ன சொல்லுகிறார்கள்? திட் டம் எதற்காகப் போடுகிறீர்கள் என்று கேட் கிறார்கள்? எந்த ஊரிலும், யாரும் அப்படிக் கேட்பதில்லை. அதற்குப் பதிலாக என்ன கேட் கிறார்கள் தெரியுமா? எங்கள் ஊருக்குப் பள் ளிக்கூடம் வேண்டும் என்று கேட்கிறார்கள்; பள்ளிக்கூடம் இருந்தால் கட்டிடம் வேண்டும் என்று கேட்கிறார்கள்; மின்சார வசதி எங்கள் கிராமத்திற்குக் கொடுங்கள் என்று கேட் கிறார்கள்.

யாருமே, 'வேண்டாம்' என்று சொல்லுவ தில்லை. மக்களுக்கு எதுவும் வேண்டாம் என் றால் தாராளமாகச் சொல்லலாம். வேண்டுமா, வேண்டாமா, என்று முடிவு பண்ணும் அதிகா ரம் மக்களிடத்தில்தான் இருக்கிறது.



சர்க்காரை எதிர்ப்பவர்கள் இன்னொன்றும் சொல்லுகிறார்கள். "மின்சாரம் கொடுத்தார், பள்ளிக்கூடம் கட்டினார் என்கிறீர்களே! மந் திரியென்ன அவருடைய வீட்டுப்பணத்திலி ருந்தா கொண்டுவந்து செய்கிறார்", என்கிறார் கள்! என்னிடத்தில் எங்கேயிருக்கிறது? முன்பு மந்திரியாக இருந்தவர் ஏன் சம்பாதிக்க வில்லை? அதாவது நிறைய வருமானத்தை ஏன் செய்துகாட்டவில்லை? இப்போது நிறைய வருமானம் காட்டுகிறோம். முன்பு நம் ராஜ்ஜிய வருமானம் ரூ. 16 கோடி; இப்போது ரூ. 100 கோடி. மக்களிடம் உள்ள பணத்திற்கு வரி போட்டோம். நிறைய வருமானம் கிடைக் கிறது. இதிலிருந்து பள்ளிக்கூடம் கட்டுகி றோம். மின்சாரம் தருகிறோம். இலவசமாகக் கல்வி தருகிறோம்!

முன்பு இருந்தது அந்நிய சர்க்கார்! இன் றைக்கு மக்களாட்சி நடைபெறுகிறது. அன் றைக்கு ஆட்சி நடத்தினவர்களைப் பார்த்து, ரோடு போடுங்கள், பள்ளிக்கூடம் கட்டுங்கள், என்று கேட்டோமா, கேட்க முடிந்ததா? ஆனால், இப்போது கேட்கின்றோம். ஏன்? இப் போது நடப்பது நம்முடைய ஆட்சி—மக்க ளுடைய ஆட்சி—ஆகவே தைரியமாக, அது வேண்டும் இது வேண்டும்என்று கேட்கிறோம்.

இந்த உண்மையைப் புரிந்துகொள்ளாமல், 'வெள்ளைக்காரன் ஆட்சி மேல்' என்கிருர்களே, அவர்களை என்னவென்பது ?

## அப்பாவிக் கட்சியினர்

என்னவானுலும் சரி; காங்கிரஸ் ஆட்சியை அழிப்பதே என் வேலை, வாருங்கள், என்று பெரியவர் (ராஜாஜி) கூப்பிடுகிருர். இந்த தி. மு. க. அப்பாவிகள் இருக்கிருர்களே, உடனே அவர் பின்னுல் ஓடுகிருர்கள். 'அப்பாவி' என்று ஏன் சொல்கிறேன் தெரியுமா? இவர்கள் தான் 'சுதந்திர சோஷலிஸ திராவிடம்' அமைக்கப் போகிருேம் என்றவர்கள். இவர்கள் எப்படி முதலாளிகள் கட்சியோடு கூட்டு சேர முடியும்? அதனுல்தான் விஷயம் புரியாதவர்கள் என்கிறேன்!

எப்படியாவது கூட்டு சேரவேண்டும் என்கிருர்கள். ஏன் என்று கேட்டால் காங்கிரஸ் ஆட்சியை அழிக்க என்கிருர்கள். காங்கிரசை அழிப்பது என்ருல் என்ன? மக்கள் தலையில் தலையில் பலமாகக் குட்டி, ஏழைகளை என்றென்றும் எழுந்திருக்க முடியாமல் உட்கார வைப்பதுதான். பொதுமக்கள் இதை நன்ருக உணர்ந்து எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும்.



## நம்மை நாமே...

இந்திய மண்ணில் பிறந்து வாழ்பவர் அனைவரும் பிறப்பால் ஒன்றுதான். அவர்கள் அனைவரும் மனித சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். எல்லோரும் ஒன்றுபோல் வாழ உரிமை பெற்றவர்கள். இதை நமது அரசியல் சட்டம் பகிரங்கமாக அறிவித்து ஒப்புக்கொண்டுள்ளது.

இந்த நிலையில் மொழி, மதம், இனம் ஜாதி ஆகியவற்றின் அடிப்படையில் சிறுசிறுவேறுபாடுகளும், வித்தியாசங்களும் இருந்தாலும் எல்லோரும் ஒரு நாட்டில் பிறந்தவர்கள் என்ற ஒரு மனத்துடன் நாம் வாழ்ந்து வருகிருேம். நமக்குள் பேதமில்லை. ஒருவீர் வாழ்வை மற்றவர் பறித்துக் கொள்ளும் முறையுமில்லை. அதனை அனுமதிக்கும் அரசாங்கமும் இல்லை.

எவரோ சிலர், தங்களது சொந்த், சுயநல ஆதிக்கத்திற்காக வேற்றுமை உணர்ச்சிகளை ஊட்டுவதைக் கேட்டு ஜாதி, மத, இன பேதங்களை முன்வைத்துப் பிளவுபட்டால் நாட்டின் பொது வாழ்வும், வளமும் குன்றும்—குலைந்து விடும். அமைதி கெடும்; ஆக்க வேலைக்குத் தடை ஏற்படும். அப்படிப்பட்ட உணர்ச்சிகளுக்கு இடம் கொடுப்பது நம்மை நாமே மாய்த்துக் கொள்வதாகும். நமது வாழ்வை மட்டும் அல்ல; நமது பிற்கால சந்ததிகளின் நல்வாழ்வையும் நாசமாக்குவதாகும்.

## மீண்டும் உயிர்ப் பலி !

இன, மதவெறிக்குக் காந்திஜியின் உயிரையே பலி கொடுத்தோம். நாட்டின் பிதாவை இழந்தோம். மீண்டும் அப்படிப்பட்ட வெறி உணர்ச்சிக்கு நாம் ஆளாவதா ?

மகாத்மா காந்தி எந்த இலட்சியத்திற்காகப் பாடுபட்டாரோ, அந்த இலட்சியம் நிறைவேற நாம் பாடுபட வேண்டும். உலகம் முழுவதும் ஒன்ருக இருக்க வேண்டும் என்று காந்திஜி ஆசைப்பட்டார். உலக மக்கள் அனைவரும் ஓரினம் என்ருர்.

மதம், ஜாதி, மொழி காரணமாக வேற்றுமை மனப்பான்மை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதானே காந்திஜியின் ஆசை! ஒரு மதத்திற்கு ஒரு கட்சி; ஒரு ஜாதிக்கு ஒரு கட்சி; ஒரு மொழிக்கு ஒரு கட்சி என்று ஏற்பட்டுக் கொண்டே போனல் நாடு மிகுந்த கஷ்டத்துக்கு உள்ளாகும்.

## சுரண்டல்காரர்களுக்கு இடம்

எங்கெல்லாம் மொழி, ஜாதி, மத வித்தியாசங்கள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் பலவீனம் ஏற்படுகிறது. எங்கு பலவீனம் இருக்கிறதோ, அதைக் கம்யூனிஸ்டுகளும் சுரண்டல்காரர்களும் பயன்படுத்தப் பார்ப்பார்



கள். நமக்குள்ளே வித்தியாசங்கள் பல இருக்கின்றன. அவற்றைக் கம்யூனிஸ்டுகளும் சுரண்டல்காரர்களும் பயன்படுத்த முயற்சிக்கிருர்கள். அதனுல்தான் ஜாதி, மத வித்தியாசங்களுக்கு இடங்கொடுக்கக் கூடாதென்று மகாத்மா காந்திஜி சொன்னுர்.

உலகத்தில், இப்போது யாரும் பிரிய வேண்டுமென்று சொல்லவில்லை, கூடி வாழ வேண்டும் என்றுதான் சொல்லுகிருர்கள். பிரியவேண்டும் என்று எண்ணுகிற கட்சி தமிழ் நாட்டில்தான் உள்ளது. அவர்களுக்கு வேறு எதுவும் தெரியாது, இதையே கிளிப்பிள்ளை மாதிரி திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். தமிழ் மக்கள் அறிவாளிகள். அவர்களிடம் நல்லது எது என்று பார்த்துக் கொள்ளக்கூடிய சக்தி உண்டு. இந்தக் கட்சியை அவர்கள் வளரவிடமாட்டார்கள் !

## இன்று விதைத்து, நாளை அறுவடை !

இப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டது சுதந்தரா கட்சி. அது என்ன சொல்லுகிறது? 'என்னுல் காத்திருக்க முடியாது; இப்பொழுதே பதவியில் உட்கார வேண்டும்' என்று விரும்புகிறது. அது எப்படி முடியும்? நெல் இன்றைக்கு விதைத்து விட்டு, நாளை அறுவடை செய்ய அறிவாளை எடுத்துக் கொண்டு

போனுல் நெல் வருமா? விதைத்த நெல் கூடக் கிடைக்காது, சேறுதான் இருக்கும்!

காங்கிரசுக்கு இப்போது 75 வருஷங்கள் ஆகிவிட்டன. 75 வருஷங்களுக்கு முன்பாக அதை ஆரம்பித்தார்களே, அப்போதே சுய ராஜ்யம் கிடைத்து விட்டதா? காங்கிரசை, 75 வயதுக் கிழவன் என்று கேலி பேசுபவர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கடந்த 75 ஆண்டுகளில் அதற்கு எவ்வளவோ அனுபவங்கள் ஏற்பட்டுள்ளன.

காங்கிரசுக்கு இருக்கக் கூடிய தலைமை பலமும் சிறப்பும் கொண்டது. காங்கிரஸ் முன்பு மகாத்மா காந்தி தலைமையில் நடந்து வந்தது; உலகத்தில் எல்லோரும் போற்றும் நேருஜீ அவர்கள் தலைமையில் இயங்கி வந்தது. அவர் நல்ல முறையில் நமது வாழ்வுக்கு வழி காட்டிஞர். அதனுல் நமக்கு நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. அந்த வழியில் தொடர்ந்து நடப்போம்.

## சூழலில் சிக்குவதா?

முஸ்லிம்களுக்காக பாகிஸ்தான் ஏற்பட்டதுபோல் ஹிந்துக்களுக்காக இந்தியா இருக்கவேண்டும்என்று எண்ணுகிறவர்களும் இங்கு இருக்கிருர்கள். இங்கு தி.மு.க. போல் அவர்கள் வட இந்தியாவில் வெற்றி பெற்றிருக்கிருர்கள்.



மொழி வேறுபாடு, இன வேறுபாடு ஆகியவற்றைக்கிளறி விட்டால் நாம் நல்வாழ்வு வாழவே முடியாது. நல்வாழ்வுக்கு இடையூருக இருக்கும் போக்கைத் தடுத்து நிறுத்தியே ஆக வேண்டும் என்ற உணர்ச்சி நமக்கு ஏற்படவேண்டும். நாட்டில் தீயசக்தி வளராமல், அந்தச் சுழலில் சிக்காமல் நம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

மகாத்மா காந்திக்குத் தன்னாடு, பிறநாடு என்ற வித்தியாசம் கிடையாது. எல்லா மக்களும் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதுதான் அவரது ஆசை. இதற்கு நம் நாட்டை ஒன்றுபடுத்திஞல், நம் நாடு ஒன்று பட்டால், பிற நாடுகளும் ஒன்றுபட்டு வாழும் என்பதே அவரது கருத்து. மகாத்மா காந்திஜியை மனத்தில் இறுத்தி வேற்றுமை மனப்பான்மைகளை மறக்க வேண்டும்.

## பக்தர் பிரார்த்தனை

மகாத்மா காந்தியிடம் நாம் கற்றுக் கொண்ட பாடம் அமைதியாக இருந்து ஒற்றுமையாக வாழ்வோம் என்பதே. அதைச் சிலர் மறந்து விட்டு, மக்களை ஒன்று சேர்ப்பதை விட்டு விட்டுப் பிரித்துப் பேசி அழிவுப் பாதையில் செல்லுகிருர்களே.

காந்திஜியிடத்தில் நமக்குப் பக்தி அதிகம். ஆனுல் அவரது கொள்கைகளை மறந்து விட்

டோம். கடவுளை நினைக்கப் பக்தர்கள் பிரார்த்தனை செய்வதுபோல் நாம் மகாத்மா காந்தி ஜெயந்தி கொண்டாடி அவரை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவரது கொள்கைகள், மனத்தில் பதிந்து விட்டால் மனித குலம் வாழும்.

மகாத்மா காந்தி நாம் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்றார், கூடி வாழ வேண்டும் என்றார். அதற்காகவே உயிர் விட்டார். அவரது இலட்சியத்தை நாம் கடைப்பிடிக்கவேண்டும்.

இதில் சிக்கல் இருக்கிறது. சிரமம் இருக்கிறது. நாம் தைரியமாக இருந்துதான் சிரமத்தைச் சமாளிக்க வேண்டும். மகாத்மா காந்தியை மனத்தில் நினைத்து நாம் தைரியமாகப் பணியாற்ற வேண்டும். அப்படிச் செய்தால் எவ்வளவு பெரிய பிரச்சினையையும், சிக்கல்களையும் எளிதில் சமாளித்து விடுவோம்.

## சுரண்டலற்ற சமூகம்

இந்த நேரத்தில் மக்களுக்கு நல்ல விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த விழிப்புணர்ச்சியை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். அவர்களது விழிப்புணர்ச்சியை ஒழுங்குபடுத்த அவர்களுடன் தொடர்பை அதிகப்படுத்த வேண்டும். கிராமங்களில் உள்ள



வர்களையும் படித்தவர்களையும் நாம் அணுகி அவர்கள் கருத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

மக்களின் ஆர்வமும், முயற்சியும் ஆக்கபூர்வமான வழிகளில் செலுத்தப்பட வேண்டும். தேச செல்வத்தை அபிவிருத்தி செய்ய ஐந்தாண்டுத் திட்டங்கள் மக்களுக்கு நல்ல வாய்ப்பை அளித்திருக்கின்றன.

கட்சிப் பாகுபாடின்றி சகல மக்களும் பங்குபெறக் கூடிய தன்மையில்தான் திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

தேசம், பல பிரச்சினைகளை எதிர் நோக்கி இருக்கும்போது சில சங்கடங்களை அனுபவிக்க வேண்டி ஏற்படுவது தவிர்க்க முடியாதது. காந்திஜி வகுத்துத் தந்த பாதையில் செல்லும் வரையில் எதிர் காலத்தைப் பற்றி நமக்குப் பயமே கிடையாது.

உற்பத்தியையும், தேச செல்வத்தையும் அதிகரிக்கும் நோக்கத்தில்தான் திட்டமிட்ட பொருளாதார அமைப்பை உருவாக்க நாம் முயல்கிறோம். மனிதனை மனிதன் சுரண்டி வாழாத ஒரு சமூகத்தை உருவாக்குவதே காந்தீய இலட்சியம். இதை நிறைவேற்ற, இரண்டு காரியங்கள் பூர்த்தியாக வேண்டும். ஒன்று தேசத்தின் செல்வத்தைப் பெருக்குவது. மற்றொன்று பெருக்கிய செல்வம் மக்களிடம் பங்கிடப் பெறுவதில் இருக்கும் ஏற்றத் தாழ்

வுகள் அகற்றப்பட வேண்டும் என்பது. இதைத்தான் நாம் இப்போது செய்துகொண்டு வருகிறோம்.

## வலுவூட்டும் தைரியம்

புதிய சமுதாயத்தை அமைக்க நாம் திட்டங்கள் நிறைவேற்றி வருகிறோம். நாம் இப்போது போகும் பாதை சரிதானா? இன்னும் வேகமாகச் செல்ல வேண்டுமா? அல்லது வேகத்தைக் குறைக்க வேண்டுமா என்பதை அறிய வேண்டும். காங்கிரசின் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் நம் திட்டங்களை மாற்றுவதற்கும், இலட்சியங்களை மாற்றுவதற்கும் எத்தனையோ முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்திருப்பது தெரியும். அதுபோல் இன்னும் முயற்சி ஏடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் இந்த விஷயத்தில் கட்டுப்பாடு வேண்டும். கட்சிக் கோட்பாடுகளுக்குப் புறம்பாகச் செல்லக் கூடாது; அதே சமயத்தில் நாம் ஆராய்ந்து கண்டறிந்ததை தைரியமாகச் சொல்லவும் தயங்கவேண்டியதில்லை.

காங்கிரசுக்கு வலுவூட்ட என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி நாம் சிந்தித்தாக வேண்டும். இப்போது இருப்பது போதாது. இது சரி என்றால் ஒன்றும் உங்களுக்குப் புரியவில்லை; அல்லது பயப்படுகிறீர்கள் என்று



தான் அர்த்தம்! ஸ்தாபன வளர்ச்சிக்காக யோசனை கூறுவதில் பயப்பட வேண்டிய அவசியமில்லை. அத்தகைய மனப்பான்மை இல்லை என்றால் ஸ்தாபனம் வளர்ச்சி அடையாது. எனவே அத்தகைய மனப்பான்மை ஏற்பட வேண்டியது அவசியம்.

## மகாத்மா என்றதும்...

ஒற்றுமையாக இருந்தால்தான் வாழ முடியும். ஒரு மொழிக்காரர்களாக இருப்பதால் ஒரு நாட்டுக்காரர்களாகவோ, ஒரு மதக்காரர்களாக இருப்பதால் ஒரு நாட்டுக்காரர்களாகவோ இருந்துவிட முடியுமா? அப்படியிருந்தால் அமெரிக்காவும் பிரிட்டனும் ஏன் ஒரே நாடாக இல்லை? தமிழ்நாடு மாத்திரம் என்று ஒன்றாக இருந்தது? ஏன் ஒன்றாக இருக்கவில்லை? சிறிய சிறிய நாடாக இருந்தால் ஒற்றுமை இருக்க முடியுமா? அமைதி இருக்க் முடியுமா? எத்தனையோ ஆண்டுகளாக ராஜாக்கள் சண்டை போட்டு வந்தார்கள். இப்போது ஒன்று சேர்ந்திருக்கும் போது ஏன் வரலாற்றைப் புரட்டிப் பார்க்க வேண்டும்? ஏன் வடநாடு தென்னாடு என்று பிரித்துப் பேசவேண்டும்?

இந்தியாவெங்கும் ஒரே நாகரிகம்தான். ஒரே பழக்க வழக்கம்தான். நாம் ஒன்றாகச் சேர்ந்து ஒழுங்காக முன்னேற நினைக்கும்

போது நாட்டைப் பிரிக்கவேண்டும் என்கிறார்கள். மகாத்மா காந்தி தம் உயிரையே கொடுத்து இந்தநாட்டின் ஐக்கியத்தை உண்டு பண்ணப் பாடுபட்டார். இதற்கு வழிகாட்டி உயிர் விட்டார். இதை மறந்து விட்டோமா? மகாத்மா காந்தி என்கிறபோது இது நம் நினைவுக்கு வரவேண்டாமா? யாரும் தனித்து வாழ முடியாது. ஒன்றாக இருந்தால்தான் வாழ முடியும்.

மகாத்மா காந்தியின் கருத்துக்களை நாம் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம். அவரது வாழ்க்கைச் சரிதம் பற்றிப் பல்வேறு புத்தகங்கள் போட்டுக்கொண்டு வருகிறார்கள். அவற்றைப் படிக்கவேண்டும்.

மகாத்மா காந்தியின் ஆசைப்படி இந்த நாட்டில் யாரும் பட்டினியாக இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும். இதற்கு அனைவரும் பொறுமையாகப்பணியாற்ற வேண்டும்.

## முறியடிக்க முடியுமா!

**பொது** மக்களுக்கு ஏராளமான தேவைகள் இருக்கின்றன. இந்தத் தேவைகளை நிறைவேற்றப் பணம் தேவைப்படுகிறது. இதற்கு வரி போட்டுத்தான் ஆகவேண்டும். மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்றால் அரசாங்கம் எதற்கு? இல்லாவிட்டால் எல்லோரும் நல்வாழ்வு பெறும் புதிய சமுதாயம் வேண்டாம் என்று சுதந்திரக் கட்சியினர் கூறுவதுபோல் சொல்லட்டும்; அப்போது எல்லோருக்கும் அவரவர்கள் தலையெழுத்துப் போல் நடக்கும்.

சுதந்திரக் கட்சியைத் தவிர மற்றவர்கள் எல்லாம் சமதர்ம சமுதாயம் அமையவேண்டும் என்றுதான் சொல்கிறார்கள். சுதந்திரக் கட்சியினர் மாத்திரம் தி. மு. க. வை முடுக்கி விட்டு சமதர்ம சமுதாயத்தை, சமுதாய இலட்சியத்தை முறியடிக்க முடியுமா என்று பார்க்கிறார்கள். அது நடக்குமா?

## சமமாக வாழ்வோம்

கம்யூனிஸ்டுகள் இன்னும் வேகமாக முன்னேறவேண்டும் என்கிறார்கள். இங்கு கம்யூனிஸ்டு நாடுகளைப் போல் அரசாங்கம் இல்லை. ஜனநாயக முறைப்படி நம் இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டி யிருக்கிறது.

மனிதர்கள் ஒருவருக்கொருவர் வெறுப்பு மனப்பான்மையோடு நடக்கக்கூடாது. எல்லோரையும் சகோதரர்களாகப் பாவித்து நடக்க வேண்டும் என்பதுதான் மகாத்மா காந்தியின் உயர்ந்த இலட்சியம். யாரும் யாருக்கும் தாழவும் வேண்டாம். யாரும் யாரையும் விட உயரவும் வேண்டாம். சமமாக வாழ்வோம் என்கி

றோம். அப்போது பொறாமை, போட்டி, வெறுப்பு மனப்பான்மை இராது.

## பட்டாளம் வரவில்லை !

வெள்ளையர் இங்கு வந்த காலத்தில் மொழி, ஜாதி காரணமாக வேற்றுமை உணர்ச்சிகள் இருந்தன. அதனால்தான் அவர்கள் வேரூன்ற முடிந்தது.

இங்கு படையெடுத்து வந்தவர்கள் எல்லாம் பட்டாளம் கொண்டு வரவில்லை. சம்பளம் கொடுத்தால் ஆள் கிடைத்தான். இதனால் நாடு அடிமையானது. அடிமைத்தனத்திலிருந்து மீள 100 ஆண்டுகளுக்கு மேல் முயற்சி செய்ய வேண்டியதாயிற்று.

வெள்ளைக்காரர்கள் வளர்த்த ஜாதி வேற்றுமை, மத வேற்றுமை அவர்களோடு போய் விடும் என்று நினைத்தோம். ஆனால் அவை முழுதும் போகவில்லை. அந்த ஆட்கள் இன்னும் இருக்கிறார்கள். வெள்ளையர்கள் போனாலும் அவர்களை விட மாட்டோம் என்கிறார்கள். இவர்கள் பழையபடியாக இந்த வேலையை ஆரம்பித்து வேற்றுமை மனப்பான்மையை வளர்த்து வருகிறார்கள். இது நல்லதா ?



## துரிதகதியில் முன்னேற...

நாடு முன்னேற, வறுமையும் அறியாமையும் போக வேண்டும். ஏழை, பாமரன் என்ற வார்த்தைகளே இல்லாமல் போகவேண்டும். இவை இரண்டும் போனாலன்றி நாடுமுன்னேறியதாகச் சொல்ல முடியாது.

பட்டினியால் வாடுகிறேன்; பசி தாளவில்லை என்று யாரும் சொல்லக்கூடாது. படிக்க வசதியில்லை என்று யாரும் சொல்லக்கூடாது. இந்த இரண்டையுமே முக்கியமாகக் கருதித் திட்டம் போட்டு வேலை செய்து வருகிறோம்.

நாடு பல்வேறு துறைகளில் முன்னேற திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. திட்டத்தின் மூலம் நாடு முன்னேற்றம் கண்டு வருகிறது. சகலருக்கும் உணவு, உடை, வீடு, தொழில், படிப்பு கிடைப்பதுதான் முன்னேற்றம்.

நாட்டில் ஏராளமானவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை; உணவில்லை—குழந்தைகளுக்குக் கல்வியளிக்க பெற்றோர்களால் முடியவில்லை. இந்த நிலைகளைப் போக்கவே திட்டங்கள். அவை நிறைவேற சர்க்காரோடு மக்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும். மக்கள் நல்வாழ்வு வாழ சர்க்கார் ஊக்கமும், ஆக்கமும் கொடுத்து உற்சாகமளிக்கிறது. அதற்கேற்

ளுற் போல் மக்களும் முயலவேண்டும். அவ்வாறு முயன்ருல் நம் வளர்ச்சி துரிதகதியில் இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## பாகற்காய் என்றதும்...

ஒவ்வொருவரும் தங்கள் மனத்தில் தோன்றுவதைச் சொல்லுவார்கள். முரண்பட்ட கருத்துக்களைக் கூடச் சொல்லுவார்கள். அதையெல்லாம் பொறுமையோடு கேட்டுக் கொள்ள வேண்டும்.

நாட்டில் எவ்வளவோ முரண்பட்ட கருத்துக்களை எல்லாம் சொல்லுகிருர்கள். அதற்காக யாரும் கோபித்துக் கொள்ளக் கூடாது. தமிழ்தான் வேண்டும், இந்திதான் வேண்டும் என்று சொல்லக் கூடியவர்களும் இருக்கிருர்கள். இதைப்பற்றி நாம் இப்போதே ஏன் பயப்பட வேண்டும்?

பாகற்காயை சுவைத்துப் பார்த்தால்தான் கசக்கும். பாகற்காய் என்று சொன்னவுடனேயே ஏன் நாம் பயப்பட வேண்டும்? யாரும் எதையும் சொன்னவுடனேயே பயந்து விட வேண்டாம்.

எதற்காகவும் நாம் பயப்பட வேண்டிய தேவையில்லை; நாம் யாருக்கும் பயந்து வாழ்க்கை நடத்தவில்லை. எந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும் இரண்டு



விதமான கருத்துக்கள் வரலாம். ஒருவர் தமிழ்தான் இருக்க வேண்டும் என்று சொல்லுவார்; இன்னொருவர் இந்திதான் இருக்க வேண்டும் என்று சொல்லுவார்; இன்னொருவர் மலையாளம்தான் இருக்க வேண்டும் என்று சொல்லுவார்; நாம் எவ்வளவோ பிரச்சினைகளை விவாதித்துக் கொண்டிருக்கிறோம். பள்ளிக்கூடங்களைப் பற்றி விவாதிக்கிறோம்; குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றி விவாதிக்கிறோம். எல்லாவற்றையும் தீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவதுதான் நல்லது.

## நியாயம் பார்த்து

ஜனநாயக முறையில், "நாடு முன்னேற வேண்டுமானுல் உணவு உற்பத்தியும் பெருக வேண்டும்; அதே சமயத்தில் கட்டுப்பாடும் ஓரளவு இருக்க வேண்டும். ஏதோ தடபுடலாகச் செய்து ஏதாவது சங்கடங்கள் வந்து விடக் கூடாது என்பதைத்தான் சிலர் தெரிவிக்கிருர்கள். பொறுப்புள்ள தலைவர்கள் அப்படித் தப்பாக நடந்து கொள்ளவே மாட்டார்கள். எதைச் சொன்னுலும் அதில் நியாயமிருக்கிறதா, இல்லையா என்பதைப் பார்த்து, அதற்குத் தகுந்தபடிதான் செயலில் ஈடுபடுவார்கள். குடும்பக்கட்டுப்பாடு வேண்டாம் என்று ஒருவர் சொல்லலாம், வேண்டும்என்று ஒருவர் சொல்லலாம். இதில் எது நியாயம்

என்பதைப் பார்த்து அதை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

## பழைய கல்லாக இருந்தாலும்...

புதிய முறைகளை எல்லாம் கைக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறோம். புதிய முறைகள் என்று சொல்லும் போது, பழைய முறைகளை அப்படியே கைவிட்டு விட முடியாது. இவ்விதம் எத்தனையோ பிரச்சினைகளைப் பற்றிப் பேசலாம். அவைகளைக் கண்டு நாம் பயந்துவிட முடியாது. பல முரண்பட்ட கருத்துக்களை யார் சொன்னாலும் அதை நாம் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. நல்ல எண்ணத்தோடு தான் அவர்களும் சொல்லுவார்கள். அவர்கள் மனத்தில் என்ன இருந்தாலும், அதை நாம் நல்ல எண்ணத்தோடு எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் சொல்வதில் நியாயமிருக்கிறதா என்பதை நாம் பார்க்க வேண்டும். அதுதான் முக்கியம். இப்படியெல்லாம் சொல்லுகிறார்களே என்று யாரும் கவலைப்பட வேண்டியதில்லை.

புதிய புதிய கருத்துக்கள் வரும்போது அவற்றையெல்லாம் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்காக நாம் பழமைகளை, பழமையான கருத்துக்களை அப்படியே விட்டு விட முடியாது. வீடு கட்டுகிறோம், பழைய



கல்லாக இருந்தாலும் நல்ல கற்களை எடுத்துக் கொள்ளும்போது பழமையான கற்கள் என்று எண்ணித் தள்ளி விடுவதில்லை. பழைய கற்களில் நல்லவற்றை எடுத்து உபயோகிக்கிறோம். ஆகவே, புதிய கருத்துக்களை எடுத்துக் கொள்ளும்போது பழமையான கருத்துக்களிலுள்ள நல்ல அம்சங்களையும் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நல்ல விதத்தில் ஒரு புதிய சமுதாயத்தை அமைக்க முடியும்.

## பிரேக் போடும் பாட்டு

குறுகிய உணர்ச்சிகளில் மனத்தைப் பறிகொடுத்துச் சண்டை போடக்கூடாது. வசதியாக இருப்பவர்கள் வேண்டுமானால் தாராளமாகச் சண்டை போடட்டும்; பணக்காரர்களுக்கு வேறு வேலையில்லையென்றால், அவர்கள் சண்டையிட்டுக் கொள்ளட்டும். எங்களை விட்டு விடுங்கள், நாங்கள் எல்லோரும் ஒரே இனம், அதாவது பட்டினிப் பட்டாளம்; எங்களைச் சண்டைக்குக் கூப்பிடாதீர்கள். வடக்கிலிருந்தாலும், தெற்கிலிருந்தாலும், தமிழன் என்றாலும் வங்காளி என்றாலும் ஏழைகள் எல்லோரும் ஒரே இனம்தான். நமக்குச் சண்டை போட நேரமில்லை. நாம் முன்னேற விரும்புகிறோம்.

ஆனால், இந்தச் சமயத்தில், காங்கிரஸ் சர்க்காரின் வண்டி வேகமாகப் போகிறது. அதற்கு முட்டுக்கட்டை போடவேண்டும். "உள்ளதையும் அது கெடுக்கிறது" என்றெல்லாம் பாட்டுப் பாடுகிறார்களே! அவர்களை என்ன சொல்வது?

அரசாங்கம் செய்து வருவதை வேகம் என்று சொல்லிக் கொண்டு, அதற்காக "பிரேக்" போடவே "கட்சி" கட்டுவது நன்றாக இருக்கிறதா?

சர்க்கார், திட்டமே போடவேண்டாம் என்று சுதந்திராகட்சி சொல்லுகிறது. அப்படியானால் எல்லாம் கடவுள் விட்ட வழி என்று சும்மா எதையுமே கட்டுப்படுத்தாமல் இருந்து விடுவதா? அப்போது என்ன ஆகும்?

தோட்டத்தில் ஆட்டை அவிழ்த்து விடுவதாக வைத்துக் கொள்வோம். அப்போது என்ன ஆகும்? அந்த ஆடு இஷ்டப்படி கண்ட இடத்தில் வாயை வைக்காதா? தோட்டத்தில் உள்ள செடி, கொடிகளைக் கண்டபடி கடித்து வீணாக்கி நாசம் செய்துவிடுமே! அப்படிவிட யாராவது சம்மதிப்பார்களா? அதேபோல் அளவில்லாமல் பணம் இருப்பதும் நல்லதா? அளவுக்கு மீறிய பணக்காரன் மனம்போன போக்குப்படி நடக்கத் தோன்றி வீண் செலவு செய்யலாமே! பிறர் வாழ்வைக் கூடப்பறித்து நாசப்படுத்திவிட முடியுமே!



## மதிப்பு உயர்ந்தது

ஓரிடத்தில் காலி மனை ஒன்று 100 ரூபாய் வீதம் பல மனைகளை வாங்கிப் போடுகிறார்கள். அந்த இடத்திற்கு அருகாமையில் ஒரு தொழிற்சாலை அல்லது நகர விஸ்தரிப்பு ஏற்படுகிறது! சர்க்கார் ரோடு, விளக்கு, தண்ணீர் வசதிகளைச் செய்து கொடுக்கிறது! புதிதாக மக்கள் வீடுகள் கட்டிக் குடியேறும் நிலை ஏற்படுகிறது. அப்போது நிலத்தின் விலை, மதிப்பு உயருகிறது. நிலத்தை விற்பதினால் லட்சம் ரூபாய் லாபம் வருகிறதா, இல்லையா? அரசாங்கம் இந்த அதிக லாபத்திற்கு வரி கொடு என்று கேட்கக் கூடாதா? "என்னுடைய புத்திசாலித்தனத்தில் சம்பாதித்ததற்கு வரியா?" என்று கேட்கச் சொல்லிக் கொடுக்க ஒரு கட்சியா?

சர்க்கார் ரோடு, விளக்கு, குடிதண்ணீர், சுகாதார வசதிகளைச் செய்யாவிட்டால், மனையின் மதிப்பு எப்படிஉயரும்? இதை அடியோடு மறந்துவிட்டு, புத்திசாலித்தனம் என்று நினைத்துக்கொண்டு 'வரிஅதிகம்' கேட்பதாகக் குறை சொல்வதா?

இந்த மாதிரி சம்பாதித்து லட்சாதிபதி ஆனவர்கள், அவர்களுக்கு வரி போட்டால், ஏன் வரி போடுகிறீர்கள் என்று கேட்கிறார்களே! கோடிக் கணக்கில் பணம் போட்டுச் செய்யும் சொந்தவியாபாரத்தில் தலையிடலாமா

என்றுகூடக் கட்சி சேர்த்துக் கேட்கிறார்களே! நியாயமா இது ?

## பத்துக்குப் பதில் நூறு

சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தக் கூடாது என்று கூப்பாடு போடுகிறார்களே! இதில் அர்த்தம் இருக்கிறதா? சுதந்திரத்தை அரசாங்கம் எந்த விதத்தில் கட்டுப்படுத்துகிறது. நாட்டில் சட்டம், அமைதியை அரசாங்கம் நிலை நாட்ட வேண்டாமா? நாடு முன்னேற திட்டம் போட்டு வேலை செய்யக் கூடாதா? சட்டத்தையும் திட்டத்தையும் அமுல் நடத்த நடவடிக்கை எடுத்துத்தானே ஆகவேண்டும்?

ஒரு தொழிற்சாலையில் வேலை காலியாக இருக்கிறது. பத்து பேருக்குத்தான் வேலை தரும் நிலை உள்ளது. ஆனால் அந்த வேலைக்கு ஐந்து பேர் மட்டுமே போனால் என்ன ஆகும்? வேலைக்கு வருகிறவர்கள் கேட்கும் அளவுக்கு கூலியைக் கொடுக்க வேண்டிய கட்டாயம் வரலாம் அல்லவா? அதே மாதிரி, பத்து பேருக்கே உள்ள வேலைக்கு நூறு பேர்கள் போய் நின்றால் என்ன ஆகும்? கூலியை இஷ்டப்படி குறைத்துக் கொடுப்பேன் என்று முதலாளி சொல்லலாம் அல்லவா?

இந்தச் சங்கடம் எல்லாம் கூடாது. தொழில் நல்லபடி நடக்கவேண்டும் என்பதற்காக சர்க்கார் கூலி நிர்ணயம் செய்திருக்கிறது. இதைக்கூட அரசாங்கம் செய்யவேண்டாமா? இதற்காக அரசாங்கத்தைக் கோபித்துக் கொள்வதா? தொழிலில் தலையிடுவதாக அர்த்தமற்றுப் பேசுவதா?



நாட்டில் எல்லோரும் மொத்தத்தில் நல்லவர்களாக இருந்தால், நியாயத்துக்கும் தர்மத்துக்கும் கட்டுப்பட்டவர்களாக இருந்தால், அரசாங்கமே வேண்டாம். சட்டமே தேவையில்லை. இது என்றாவது நடக்க முடியுமா? அப்படி விட்டு விடலாமா?

வசதியாக வாழ்கிறவன், இல்லாதவனுக்கு வசதி செய்து கொடுத்து விடுவானா? ஏதோ ஒரு சில வேளைகளுக்குச் சோறு போடலாம். ஆனால் வாழ்க்கையை வளமாக்குவானா? உழைப்பவன், காலமெல்லாம், மற்றவன் செய்யும் தர்மத்தையே எதிர்பார்த்து, ஏங்கிச் சீரழிந்தபடியேதான் கிடக்க வேண்டுமா? இதுதான் தர்மமா?

இல்லாதவர்களுக்கு நாங்களே வாழ வழியும் வசதியும் செய்து தருகிறோம் என்று பொறுப்பைத் தூக்கிப் போட்டுக் கொண்டு விட யாராவது தயாரா? அதற்கு அவர்களுக்கு நேரம், ஓய்வு இருக்கிறதா? தொழிலும், வியாபாரமும் என்ன ஆகும் என்று யோசிக்க மாட்டார்களா?

தர்மம், தர்மகர்த்தா முறை என்று "சும்மா" இருப்பவர்கள் அழகாகப் பேசலாம்! ஆனால் வேலை வைத்துக் கொண்டு இருப்பவர்களுக்கு இது சரிப்பட்டு வருமா? தர்மம் செய்கிறேன் என்றாலும்கூட, எத்தனை பேருக்கு எத்தனை நாளைக்குச் சோறும், வீடும், துணியும் கொடுத்துக்கொண்டே இருக்க முடியும்? சத்திரம் வைத்துச் சாப்பாடு போட்டால் அதற்கு முடிவு இருக்குமா? இதை எல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டா?

## உலகம் தெரியாதா!

கம்யூனிஸ்டுகள் செல்கிற வழியில் காங்கிரஸ் சர்க்கார் போகிறது என்று சொல்கிறார்கள். அப்படியா போகிறது? கம்யூனிஸ்ட் வழி நமக்கு என்றைக்கும் ஒத்துவராது. அது பலாத்காரத்தில் தான் கொண்டுபோய்விடும். அந்த வழி நமக்கு வேண்டவே வேண்டாம் என்று தானே சொல்லி வருகிறோம். இது மக்களுக்குத் தெரியாதா என்ன? கம்யூனிஸ்ட் வழி என்றால் முதலில் ஜனநாயக முறையில் அரசாங்கம் இருக்காதே! சர்க்கார் அப்படியா சொல்கிறது? வோட்டு முறை வேண்டாம் என்று காங்கிரஸ் கட்சி சொல்கிறதா? இல்லையே!

பொறுப்பற்று கம்யூனிஸ்ட் வழியில் சர்க்கார் போகிறது என்றால் என்ன அர்த்தம்?



சும்மா பீதி கிளப்பிவிடுவது தவிர, வேறு என்ன?

ஏழைகளுக்கு வாழ்வு வேண்டும் என்று 'தர்மம்' பேசினால் மட்டும் போதுமா? நாட்டில் 'சமதர்மம்' ஏற்படவேண்டும் என்று சொல்வதும், அதற்காகப் பாடுபடுவதும் கம்யூனிஸ்ட் வழியா? மக்களுக்கு நல்வாழ்வு ஏற்பட வேண்டும். இதைத் தவிர வேறு எதற்கு அரசாங்கம் இருக்கிறது?

கம்யூனிஸ்ட் வழி என்று பூச்சாண்டி காட்டினால், படித்தவர்களும், பணக்காரர்களும் பயந்து சுதந்திராகட்சிக்கு ஓடி வந்து விடுவார்கள் என்று எண்ணுகிறார்கள் போலும்! பயம் காட்டியதும், பயந்துவிட அவர்கள் "உலகம்" தெரியாதவர்களா, என்ன? இல்லையே!

## தர்மமும் சமதர்மமும்

தர்ம குணத்தைப் பற்றி சுதந்திரக்கட்சிக்காரர்கள் பிரமாதமாகப் பேசுகிறார்கள். அதிகம் சம்பாதிப்பவர்களை அப்படியே விட்டு விட்டால், ஏழைகளுக்கு தர்மகர்த்தா மாதிரி இருந்து அவர்களைக் கவனித்துக், கொள்வதாகப் பேசுகிறார்கள். இது நடக்குமா? அப்படியே தர்மம் செய்வதானாலும் தர்மகர்த்தாக்கள் யார்? ஊர் சீர்பட எப்படித் தர்ம கர்த்தாக்

களாக இருப்பார்கள்? அத்தகைய தர்மகுணம் படைத்த தர்மகர்த்தாக்கள் எங்கிருக்கிறார்கள்?

தர்மம் என்றால் ஏழைகள் வாழவேண்டும் என்றுதானே அர்த்தம்? அப்படியானால் அதையே எல்லோருக்கும் பாகுபாடு இன்றிச் செய்யும் சமதர்மம் கண்டு பயந்து ஓடுவானேன்? பீதி கிளப்புவானேன்? சுதந்திரக் கட்சியினர் பேசுகின்ற 'தர்மம்' தனி அர்த்தம் கொண்டதா? சமமாகத் தர்மம் கூடாது என்பதும் ஒரு தேவபாஷையா? "மறை பொருள்" கொண்டது என்று பேசி ஏமாற்ற முடியுமா, என்ன?

## அறிவாளிகள் பார்க்கவேண்டியது

**ஊ**ரெல்லாம் பட்டினி கிடக்க, ஒரு சிலர் மட்டும் உல்லாச வாழ்வு நடத்த முடியுமா? நாட்டில் ஏற்றத் தாழ்வுகள் கொஞ்சமாகவா இருக்கின்றன? இதே நிலை நீடித்தால் என்ன ஆகும்? சுதந்திரக் கட்சியில் இருப்பவர்கள் மிகவும் அறிவாளிகள் என்கிறார்கள்! அவர்கள் உலக சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்கட்டுமே! இந்த மாதிரி நிலைமை நீடித்தால் அது எங்கே கொண்டுபோய் விடும்? இதே மாதிரி இருந்த நாடுகளில் தலை கீழாக மாறும் புரட்சிகள் ஏற்படவில்லையா?



## கொக்கு தலையில் வெண்ணெய்!

**ப**லமும் பணமும் உள்ளவர்களுக்கு அரசாங்க உதவி தேவையில்லை. ஏழைகளுக்கும் பலமற்றவர்களுக்குந்தான் அரசாங்கப் பாதுகாப்புத் தேவைப்படுகிறது. நிலையற்று அலை போலச் சஞ்சலப்படும் படித்தவர்களையும் நடுத்தரப் பணக்காரர்களையும், வீணாகக் குழப்புகிறார்கள். அவர்களைக் குழப்பி விட்டால் போதும். படிக்காத பாமர மக்களையும் தொடர்ந்து ஜாலவித்தை செய்து ஏமாற்றி விடலாம் என்று நினைக்கிறார்களாம்! இது கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கிற மாதிரிதானே இருக்கிறது? பாமர மக்கள் இதில் ஏமாந்து விட மாட்டார்கள். சுதந்திரக் கட்சிக்காரர்கள் இதில் வெற்றி அடைய மாட்டார்கள் என்பது நிச்சயம்.

## படிப்பு வேண்டாமா?

**ஒ**ரு வரியும் போடவேண்டாம். புதிதாக ஒன்றும் செய்ய வேண்டாம் என்கிறார்கள். புதிதாக ஒன்றும் செய்ய வேண்டாம் என்றால் என்ன அர்த்தம்? இவர்கள் சொற்படி கேட்டால் புதிதாகப் பள்ளிக்கூடம் ஒன்றும் வைக்க முடியாது. 5-வது வரை பள்ளிக்கூடம் இருந்தால் அதற்கு மேலே படிக்க முடியாது. 8-வது வரை பள்ளிக்கூடம் இருந்தால் புதிதாக 8-ம்

வகுப்புக்கு மேலே படிக்க புதுப்பள்ளி ஒன்றும் வைக்க முடியாது. இனிமேல் புதிதாகப் பிறக்கிற குழந்தைகளும் படிக்க முடியாது. அவர்கள் மாடு மேய்க்கத்தான் போக வேண்டும். கோடிக்கணக்கான ஏழைக் குழந்தைகள் கஞ்சியும், கல்வியும் இன்றிக் கிடக்கும்.

அதுமாதிரி நிலைமைக்குப் போகக் கூடாது. நல்ல முறையிலே வாழ வேண்டும் என்ருல் சிறுவயதிலேயே நல்ல முறையிலே படிக்க வேண்டாமா? அவனைத் தொழில் பண்ணச் சொல்லி, விவசாயம் பண்ணச் சொல்லி, உத்தியோகத்திற்குப் போகச் சொல்லி, வியாபாரம் பண்ணச் சொல்லிச் செய்தால்தான் நடக்கும். மகாத்மா காந்தி என்ன சொன்னுர். "ஏழை மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும்" என்று சொன்னுர். இதற்கான வழிகளைத் தானே நாங்கள் செய்கிருேம். இதில் என்ன தப்பு இருக்கிறது?

## அது பிரிவினையாகிவிடுமா?

நாட்டு மக்களைச் சிந்திக்க வைப்பது மிகவும் முக்கியம். அதற்குத் தெளிவளிக்கும் கருத்தரங்குகள் அவசியம் தேவை. நாட்டு மக்களுக்குச் சிந்தனை இருக்கிறதா? "யாரோ சொன்னுர்கள். யாரோ கண்டு பிடித்தார்கள்"



என்று இளைஞர்கள் சும்மா இருக்கக்கூடாது. இளைஞர்களும் சிந்திக்க வேண்டும்.

இந்தியாவில் 45 கோடி மக்கள் இருக்கிருர்கள். பல மொழி, பல ஜாதி, இன வேறுபாடுகள் இருக்கின்றன. இவைகளினுல் நம் நாட்டு மக்கள் பிற்போக்கு நிலைமையில் இல்லை. இப்படி இருப்பதேகூட உயர்வுதான்.

வேற்றுமைகள் பல இருந்தும் நாம் ஒன்றுபட்டு வாழ்கிருேம். இதுபோல உலகில் எங்கும் இல்லை. அதுவே நமக்குப் பெருமை.

ஜனநாயகத்தில் பல கட்சி, ஜாதி, இன வேறுபாடுகளைத் தவிர்க்க முடியாது.

அரசியல் தலைவர்களாக ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டுத் தங்களின் முக்கியத்துவத்தைக் காக்கத் தலைவராக ஆக சிலர் முயற்சிக்கிருர்கள்.

அத்தகைய எண்ணத்தால் எதைப் பிடித்தேனும் கரை ஏறலாம் என்று பார்க்கிருர்கள்.

தமிழகத்தில் 10, 14 மாவட்டங்கள் இருக்கின்றன. சட்ட மன்றத்தில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மாவட்டங்கள் சரியாகக் கவனிக்கப்படவில்லை என்றுதான் சொல்லுகிருர்கள். அதனுல் அது பிரிவினையாகி விடுமா? வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு என்று இருந்தாலும் தமிழகம் ஒன்றுதானே!

நிர்வாக வசதிக்காக மாவட்டங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்தை ஒன்ருக வைத்து நிர்வாகம் செய்ய முடியாது. பல ஜில்லா, தாலுக்காக்கள் என்று பிரித்து வைத்திருக்கிருேம்.

அது போலத்தான் தெலுங்கு, மலேயாள மொழி ராஜ்யங்களும் இருக்கின்றன. இதைப் பார்த்துப் பிரிந்து இருப்பதாகப்பேசுகிருர்கள். இதை வைத்துப் பிரிவினே என்று நம்பும் பைத்தியங்களும் இருக்கின்றனவே !

இப்படிப் பேசினுல்தான் மக்கள் பின்பற்றுவார்கள் என்று கருதியும் பேசுகிருர்கள். நல்ல லட்சியத்தை வைத்துத் தலேவர்களாக வரும் திறமை அவர்களுக்கு இல்லே. ஆகவே இப்படிச் செய்கிருர்கள் போலும்!

## ஏமாற்றமடைந்தோர் புகலிடம்

மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியாதவர்கள் - அரசியலில் ஏமாற்றம் அடைந்தவர்கள் குறுக்கு வழிக்குப் போகிருர்கள்.

இதுபோல தன் ஜாதிக்கு ஜட்ஜ் வேலே, மந்திரி வேலே கொடு என்று கேட்கிருர்கள். இப்படிக் கேட்டால்தான் அந்த மக்கள் தன்னேப் பின்பற்றுவார்கள் என்று நினேக்கிருர்கள்.



இப்படிப்பட்டவர்கள் மொழி, மதம், ஜாதி இவைகளில் புகலிடம் தேடுகிருர்கள். இதன் காரணமாக சுயராஜ்ரம் கூட வேண்டாம் என்று என்ருர்கள். அதற்குப் பிறகும் இந்த மனப்பான்மைதான்.

இப்படிப்பட்ட முயற்சிகளால் நாடு சிதறுண்டு, துண்டு துண்டாகப் போய்விட்டால் சமதர்ம சமுதாயம் அமைப்பதைப் பின்னுல் இழுக்கும்.

இது சரியானதா? என்று மக்கள் சிந்திக்கவேண்டும். இது நாட்டுக்கு நல்லதா? இவைகள் நாட்டு முன்னேற்றத்தைத்தடுக்கும். இளைஞர்கள் இவைகளேப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

## சுட்டுக்கொல்லும் எண்ணம்

பாகிஸ்தான் பிரிவினேக்கும் முஸ்லிம்கள் பெரும் பான்மையாக இருந்த இடங்களில் இருந்து கோஷம் கிளம்பவில்லே. முஸ்லிம்கள் மைனுரிட்டிகளாக உள்ள இடங்களில் இருந்துதான் கோஷம் கிளம்பியது. அந்த நேரத்தில் வங்காளத்திலோ, பஞ்சாபிலோ முஸ்லிம் லீக் ஆட்சி நடக்கவில்லே. ஆனுல் அந்த உணர்ச்சி இங்கேதான் இருந்தது. பாகிஸ்தான் பிரிந்த போது அவர்கள் இவர்களே விட்டு, விட்டுப் போய் விட்டார்கள். இதுபற்றி யோசித்தார்களா ?

அதுபோல இங்கே இந்துக்களுக்கு ஆபத்து என்று சொல்கிறார்கள். இந்த நாடு மதச் சார்பற்ற நாடு. ஆகவே, இந்து மதத்திற்குப் பாதுகாப்பு இல்லை; சிறுபான்மையினரைத்தான் பாதுகாக்கிறது; நம் கடவுளுக்கு ஆபத்து! மதத்திற்கு ஆபத்து என்ற பீதியை உண்டாக்குகிறார்கள். இது பொல்லாத பீதி.

இத்தகைய எண்ணத்தால்தான் காந்தி அடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார். அத்தகைய மத, மொழி, ஜாதி வெறி கூடாது. இவைகளில் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இவைகளைப் பற்றி நாம் சிந்தித்தால் பீதியைக் கிளப்புகிறவர்களுக்கு ஆதரவு இருக்காது.

## தும்பை விட்டு...

ஜாதி, மத, இன அடிப்படையில் வெறியைக் கிளப்புகிறவர்கள் விஷயத்தில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

மக்கள் விழித்துக் கொண்டிருந்தால் யாரும் குறும்பு செய்ய முடியாது. ஏமாந்திருக்கும்போதுதான் குறும்பு செய்வார்கள். இது மனித இயற்கை.

கிராமங்களில் சண்டையைக் கிளப்பிவிட அரிஜன சமூகத்தினரைக் கிளப்பி விடுவார்கள். அவர்கள் மீது அனுதாபப்பட்டு அல்ல; அப்படிக் கிளப்பி விட்டால்தான் தமக்குத்



தலைமை உருவாகும் என்று சண்டையைக் கிளப்பி விடுகிறார்கள்.

ஜாதி, மத, இன மோதல்கள் கூடாது. தலைமைப் பதவிக்காகத் தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் முயற்சி கூடாது. எல்லோரும் கூடி வாழவேண்டும். காந்தி அடிகளும், நேருஜியும் கட்டிக் காத்த அமைதியை நாம் உடைக்கக் கூடாது.

## முயற்சி எளிதாக...

எல்லோருக்கும் வீடு, வேலை, சோறு, படிப்பு கிடைக்க வேண்டும். அதற்கான புதிய அமைப்பை உருவாக்க வேண்டும். அதற்கான திட்டத்தை உருவாக்க வேண்டும். அழிவுக்கு வழி செய்யாமல் ஆக்க வழிசொல்ல முன்வரவேண்டும். நம்முடைய எதிர்காலம் என்ன என்பதைப்பற்றி நாம் நன்கு சிந்திக்க வேண்டும்.

நேருஜி காட்டிய வழிப்படி நாம் நடக்க வேண்டும். அதற்கு இப்போது இருக்கும் தலைவர்களால் மட்டும் முடியாது. பிறந்தவர்கள் இறப்பார்கள். பொறுப்புள்ள தலைவர்கள் காட்டும் வழியில் இளைஞர்கள் சிந்தித்துச் செயல்பட முன்வர வேண்டும். அப்போதுதான் புதிய சமுதாயம் அமைக்கும் முயற்சி எளிதாகும்.

மனித இனத்துக்குத் தலைவர்கள் நல்வழி காட்ட வேண்டும். மனிதர்கள் சுபாவத்தில் பயந்தவர்கள். ஆபத்து என்றால் பயப்படு வார்கள். ஆபத்தைப் போக்கிக் கொள்ள ஒரு தலைவரைப் பின்பற்றுவது இயற்கை. இளை ஞர்கள் சிந்தித்து உண்மையான ஆபத்து ரோமல் பாதுகாக்க வேண்டும்.

## ரெடிமேடு சிந்தனை

**ப**ல துறைகளிலும் நாடு வளர்ச்சி பெற்று வருகிறது. ஏற்கெனவே ஏற்பட்டு விட்ட அமைப்பைக் குலைத்தால் முன்னேற்றம் காண முடியாது. அதைக் காப்பாற்ற வேண்டும். ஆனால் அமைப்பை உடைக்க சிலர் வழி காட்டு கிறார்கள். யோசனைகளெல்லாம் அழிவை நோக்கியே இருக்கின்றன. ஆக்கத்திற்கு வழி கூறுவாரில்லை. "யாரோ சிந்தித்து" ரெடி மேடாக அளிக்கும் சிந்தனைகளில் திருப்தி அடைந்து விடாமல், பல்வேறு மதங்களும், மாறுபட்ட தத்துவங்களும் இருப்பினும் ஒன்று பட்டு வாழ்கிறோமே, இதை நீடித்துக் காப்பது எப்படி என்பதில் இளைஞர் உலகம் சிந்தனை செலுத்தல் வேண்டும்.



## குறும்புப் புத்தி

**ந**ல்ல இலட்சியம் இல்லாததால் மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியாதவர்களுக்கும் அரசியலில் ஏமாற்றம் அடைந்தவர்களுக்கும் ஜாதியும், மதமும், இனமும், மொழியும் புகலிட மாக உள்ளன. பாகிஸ்தான் அமைவதில் தமிழ்நாட்டு முஸ்லிம்கள் தீவிரம் காட்டினர். பிற சிறுபான்மை மாநிலங்களும் அப்படியே. அதன் பின்னரே முஸ்லிம் பெரும்பான்மை மாநிலங்கள் முயன்றன. அவர்கள் பிரிந்து போவதில் இவர்களுக்கு அவ்வளவு அக்கறை! நீங்கள் இங்கேதானே இருக்கப் போகிறீர்கள் என்றோம்; கேட்டார்களா? ஒரே உணர்ச்சி மயம். தலைவர் சொன்னார், கேட்டோம் என்றார் கள். அவ்வளவுதான். இந்த மனோபாவம் இன் னும் நீடிப்பது சரிதானா என்பதை இளைஞர் கள் சிந்திக்க ஆரம்பித்து விட்டால் அது அவர் களுக்குக் கிடைக்கும் வெற்றியாகும். எதிர் காலம் சிந்திக்கும் இளைஞர்கள் கையில்தான்.

தலைமையை உருவாக்கிக் கொள்ளும் ஆசையில் யாரையாவது முடுக்கிக்கொண்டு, தூண்டிவிட்டு, தகராறு பண்ணும் குறும்புப் புத்தி எந்த நாளிலும், எந்த நாட்டிலும் உண்டு; இது மனித சுபாவம். ஆனாலும் எதிர்காலத் தில் நாட்டுப் பொறுப்பை ஏற்கவிருக்கும் இளை ஞர்கள் இவ்வுணர்ச்சிகளுக்கு இலக்காகக்

கூடாது. இளைஞர்கள் சிந்திக்கா விட்டால் நாடு முன்னேற வழியில்லை.

## கஷ்டம் யாருக்கு!

**பி**ளவுச் சக்திகளால் ஜாதி, மொழி, இனம் போன்ற பல பிரச்சினைகள் எழுப்பப் பட்டிருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளுக்குக் காரணம் என்ன? யாருக்கு இவைகள் தேவைப்படுகின்றன? வசதியாக வாழ்பவர்களுக்குத்தான் இவைகள் தேவைப்படுகின்றன. சாதாரண மக்களுக்குச் சாப்பாடுதான் பிரச்சினை.

நாடு வாழ்ந்தால்தான் நாம் வாழ்வோம் என்ற உணர்வு இருக்க வேண்டும். ஜாதி, மொழி, இனம் போன்ற வேற்றுமைகளைக் கைவிட வேண்டும். வயதானவர்கள் இந்த வேற்றுமைகளை விடமாட்டார்கள். வயதானவர்கள் விடுவார்கள் என்ற நம்பிக்கையும் இல்லை. ஆனால் இதுபற்றி இளைஞர்கள் சிந்திக்க வேண்டும். நாட்டின் எதிர்காலம் இளைஞர்களிடத்தில்தான் இருக்கிறது. இதுபற்றி இளைஞர்கள் சிந்திக்கவில்லை என்றால் கஷ்டம் யாருக்கு என்பதை உணர வேண்டும்.

## திடீர்ப் பணக்காரர்கள்

**கொ**ள்கையையும், லட்சியத்தையும் வைத்துக் கூட்டம் சேர்ப்பதில் தப்பில்லை. இதனை விட்டுவிட்டு மொழி, ஜாதி, சமயத்தின் பேரால்



கூட்டத்தைச் சேர்ப்பது எதற்காக? லட்சியத்தைப் பரப்பி மக்களைத் திரட்டவேண்டும் என்ற எண்ணம் சில தலைவர்களிடம் ஏன் இல்லை? லட்சியத்தைச் சொல்லிக் கட்சியை வளர்க்கலாமே! குறுக்கு வழியில் செல்பவரா தலைவர்?

ஜாதி, மொழி, மத வேற்றுமைகளை வளர்த்து, எதையாவது செய்து திடீர்த்தலைவராக ஆகவேண்டுமென்று நினைக்கிறார்களே! அது நல்லதா?

யாரையும் குற்றம் சொல்ல வேண்டுமென்று இதனை நான் சொல்லவில்லை. எப்படியாவது திடீர்ப் பணக்காரன் ஆக வேண்டும் என்று நினைப்பதுபோல் இந்த எண்ணம் வருகிறது. மனித சுபாவத்திலேயே தப்பாக இந்த எண்ணம் உள்ளது. அது நீங்கவேண்டும்.

## துன்பத்தையும் இன்பமாக...

**வே**ற்றுமை இன்றி எல்லோரும் சமமாக வாழ வேண்டும். சமமாக வாழ உரிமை உண்டு என்ற தத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நம்ப வேண்டும். இந்தக் கூட்டு மனப்பான்மை மக்களிடையே வளர்ந்து கொண்டே இருக்க வேண்டும். அதுதான் நல்லது.

சமவாழ்வை எல்லா மக்களும் பெறவேண்டும் என்று அதற்கான வழிவகைகளைச்செய்து

காட்டியுள்ளார் நேருஜி. இதுதான் நேருஜி காட்டிய வழி. இதை உணராமல் மந்திரியாகவோ, பிரதம மந்திரியாகவோ ஆகத்தான் நேருஜி வழி காட்டிவிட்டார் என்று சிலர் நினைக்கிறார்கள். துன்பத்தையும் இன்பமாக ஏற்க வேண்டும் என்பதனைத்தான் நேருஜி காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் நமது சந்ததியார் நன்றாக வாழ வேண்டும் என்றால் நாம் துன்பத்தை ஏற்றுத்தான் ஆகவேண்டும். இந்தப் பொறுப்பினை உணர்ந்து செயலாற்ற வேண்டும். இதில் இளைஞர்களுக்குப் பொறுப்பு அதிகம்!

## சுயரூபத்தைக் காட்டி...

சுதந்திரப் போராட்டக் காலத்திலேயே, நாட்டில் நெளியும் ஜாதி, சமய, மொழி, இன வெறிக் கொடுமைகளைக் களைந்தெறிய வேண்டும் என்று காங்கிரஸ் செயல்பட்டு வந்திருக்கிறது. நாட்டு விடுதலைக்காக மட்டுமின்றி சமுதாயக் கொடுமைகளைக் களைந்தெறிவதற்காகவும் காந்திஜியும் மற்ற தலைவர்களும் பாடுபட்டு வந்தார்கள். அன்றையத் தினமே இந்தக் கொள்கைகளில் நம்பிக்கை வைக்காதவர்கள் மேற்போக்காக, சுதந்திரம் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக்கொண்டு ஆதரவளித்து வந்தனர். சுதந்திரம் கிடைத்ததும் தங்கள் சுயரூபத்தைக் காட்டி வெளியேறி விட்டார்கள்.



காங்கிரசின் சோஷலிஸக் கொள்கையில் நம்பிக்கையுள்ளவர்கள் இப்போது காங்கிரஸிற்குள் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## வடநாட்டிலும்...

மொழிப்பிரச்சினையை வைத்துக்கொண்டு தங்கள் கட்சியை வளர்க்கலாம், பலத்தைப் பெருக்கலாம் என்ற எண்ணம் இங்கு மட்டுமல்ல, வடநாட்டிலும் இருக்கிறது. உ. பி. யில் எதிர்க்கட்சிக்காரர்கள், ஏதோ ஹிந்திக்கே ஆபத்து வந்துவிட்டதாக ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அதற்குக் காரணம் என்ன? அடுத்த பொதுத் தேர்தலில் பொதுமக்களைப் பார்த்து, "காங்கிரஸ்காரர்கள் உங்கள் தாய்மொழிக்கே துரோகம் செய்து விட்டார்கள்" எனப்பொய்ப் பிரச்சாரம் செய்ய இப்போதே ஆதாரம் திரட்டுகிறார்கள்.

அதே போன்றுதான் இங்கு "தமிழுக்கு ஆபத்து" என்ற கூக்குரல் கேட்கிறது. "தமிழுக்கு ஆபத்து இல்லை" என ராஜாஜியே கூறிவிட்டார். ஒரு மொழியோடு மற்றொரு மொழி கலப்பதால் எந்த மொழியும் அழியாது. பழக்கத்தில் வேற்று மொழிச் சொற்கள் கலக்கும். சுத்தத் தமிழில் பேசுவதற்கும், எழுதுவதற்கும் யார் தடையாக நிற்கிறார்கள்? ஹிந்தி எதிர்ப்பு எப்படி ஏற்பட்டது? 1937-ம் வருஷம்

ராஜாஜி ஹிந்தியின் பெயரால் சமஸ்கிருதத்தைக் கொண்டு வருகிருர் என்ற பயம், சந்தேகம் தோன்றியது. அது வடநாட்டுக்காரர்கள் மீது வெறுப்பாக உருப்பெற்றது. அதைப் பல ஹீனமான அரசியல்வாதிகள் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிருர்களே!

## ஆபத்தானவர்கள்

பாமர மக்களிடம் ஜாதி, சமய, மொழி வேறுபாடுகள் கிடையாது. தங்கள் வேலையைக் கவனிக்கவே நேரமில்லாதிருக்கும் சாதாரண மக்களிடம் "ஆபத்து, ஆபத்து!" என அரசியல்வாதிகள் கூச்சல் போடுகிருர்கள். ஆபத்துதான் போலிருக்கிறது என எண்ணி அவர்களும் 4 அணு 8 அணு என்று அரசியல்வாதிகளுக்கு நிதி கொடுக்கிருர்கள். ஹிந்திக்கும் ஆபத்தில்லை; தமிழுக்கும் ஆபத்தில்லை. மொழியைக் குழப்பும் அரசியல்வாதிகளுக்குத்தான் ஆபத்து. சமுதாயத்தில் மேல் தட்டில் உள்ளவர்கள், அரசியல்வாதிகள் தேர்தல் காலத்திலும் மற்ற சமயங்களிலும் இடைவிடாது ஜாதி, சமய, மொழிப் பிரச்சினையைக் கிளறிக் கொண்டிருக்கிருர்கள். பிரிவினை எண்ணம் கொண்ட அரசியல்வாதிகளே ஆபத்தானவர்கள்.



## நின்று, பாருங்கள்

நாட்டில் இப்போது எவ்வளவு மோட்டார் கார்கள் இருக்கின்றன; சுயராஜ்யம் வருவதற்கு முன்பு இவ்வளவு மோட்டார்கார்கள் இருந்தனவா? அந்தக் காலத்தில் ஒரு மோட்டாரின் விலை மூவாயிரம் அல்லது நாலாயிரம் ரூபாய்தான். அதில் ஊற்றுகிற பெட்ரோல் எண்ணெயின் விலை காலன் 14 அணு. ஆனுல் இப்போது? ஒரு காரின் விலை குறைந்தது பத்தாயிரம், இருபதாயிரம் ரூபாய் என்று மேலேயே போகிறதே! பெட்ரோல் எண்ணெயின் விலை காலன் ரூ. 3,4. இவ்வளவு விலை ஏறியும் எத்தனை கார்கள் இருக்கின்றன?

சென்னை மவுண்ட்ரோட்டில் எந்த வேளையிலும் நின்று, பாருங்கள்! உங்களுக்குத் தெரியும். மக்கள் ரோட்டைக் கடந்து குறுக்கே போக முடிகிறதா? அவ்வளவு கார்கள் இல்லையா? இதனுல் என்ன தெரிகிறது? சுயராஜ்யம் வந்த பிறகு, எவ்வளவு சம்பாதித்து இருக்கிருர்கள்? நாட்டில் செல்வம் பெருகித்தானே இருக்கிறது? இப்படிப் பட்டவர்களுக்கு வரி போடுகிருேம் என்ருல், அதைத் தடுக்க ஒரு கட்சியா?

முன்பெல்லாம் கார் விற்பனை செய்யும் ஏஜெண்டுகள், கார் வாங்குகிறவர்களை வீடு தேடி வந்தார்கள். ஆனுல் இப்போது கார் வேண்டும் என்ருல் ரிஜிஸ்தர் (பதிவு) செய்து

வைத்துக்கொண்டு வருடக் கணக்கில் காத்துக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதே! அப்படியும் எவ்வளவு பேர் புதிதாகக் கார்வாங்கக் காத்திருக்கிறார்கள்! இப்படி மிகவும் அதிகம் சம்பாதிக்கும் பணக்காரர்களுக்கு ஏன் வரி போடக்கூடாது? ஏதோ புரியாதது மாதிரி பேசுகிறார்களே! வீணே குழப்புவது நல்லதா?

## துவேஷத்தைத் தூண்டி விடுவதா?

**வ**சதி உள்ளவருக்கு வரி போடக்கூடாது என்பதற்காகவே ஒரு கட்சியை ஆரம்பித்து இருக்கிறார்களே! காங்கிரஸ் போகிற வேகத்தை முட்டுக் கட்டைபோட்டு நிறுத்தப் போகிறார்களாம். இதனால் என்ன ஆகும்? வீணாகப் பணக்காரர்மீது ஏழைக்குக் கோபத்தை உண்டுபண்ணும் வேலை எதற்கு? இப்படி ஏழை—பணக்காரன் துவேஷத்தை இவர்களே தூண்டி விடுகிறார்கள்! பிறகு சர்க்கார்தான் அந்தத் துவேஷத்தை வளர்ப்பதாகப் பழி சுமத்துகிறார்களே! இது ஒரு சாமர்த்தியமா? இதற்காகவே ஒரு கட்சியா?

## ஆள் விமரிசனம்

**மா**றுபட்ட கருத்து ஜனநாயகத்திற்கு அவசியம்தான்! தம் கட்சியினரே தமது குறைகளைக் காணமுடியாது.



பல நாடுகளில் அப்படி உண்டு. சர்க்காரின் கொள்கையைத்தான் எல்லோரும் ஏற்கவேண்டும் என்று நாம் சொல்லவில்லை. தவறு செய்வது இயல்பு. நாமும் மனிதர்கள் தானே!

குறைகளைத் தெரிவிப்பதற்கு மாறுபட்ட கருத்துள்ளவர் வேண்டியதுதான். ஆனால் அவர்களுக்குத் திட்டம் வேண்டும்; கொள்கை வேண்டும். அவற்றை மக்கள் முன் வைக்கவேண்டும். அதற்குப் பதிலாக ஆளைப் பற்றியே விமரிசனம் செய்கிறார்கள். ஏனென்றால் அவர்களிடம் நல்ல கருத்துக்கள் இல்லை. நல்ல சரக்காக இருந்தால் விலை போகும். இந்த ஆடம்பரமும் ஆர்ப்பாட்டமும் ரொம்ப நாட்களுக்குச் செல்லாது.

## மதிப்பு ஏது?

**ப**டிப்பற்றவர்கள்தான் பெரும்பான்மை மக்கள். அவர்களுக்கு வாக்குரிமை அளித்தால் எப்படி அரசாங்கம் நடக்கும் என்று சிலர் கூறினர். ஆனால், பத்து சதவிகிதத்தினரே படித்தவர்கள். அவர்களுக்கு மட்டும் வாக்குரிமை என்று இருந்தால் பெரும்பான்மையோருக்கு ஏது மதிப்பு?

மக்கள் நலனுக்காகப் பத்தாயிரம் கோடி ரூபாயில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்

உருவாகியிருக்கிறது. இது அவசரப்பட்ட செய்கை என்று சிலர் கூறுகிறார்கள். மக்களிடமிருந்து வரிப்பணம் மூலம்தானே வசூலிக்க வேண்டும். அதற்கு என்ன அவசியம் என்கிறார்கள். இப்படிச் சொல்வதற்குப் பதில் பகிரங்கமாகவே நல்ல திட்டங்கள் வேண்டாம் என்று சொல்லி விடலாம். ஆனால் அப்படிச் சொல்ல அவர்களுக்குப் பயம்.

## வம்புக்காரர் கூட்டு

**வ**டக்கையும், தெற்கையும் நான் பார்த்துக் கொண்டிருந்தால் பட்டினி கிடக்கும் மக்களைப் பார்ப்பது எப்படி? நமது அடிப்படை பிரச்சினை மாடி வீடா?, மோட்டாரா? சைக்கிளா? இல்லையே! உணவுப் பிரச்னைதான்.

சண்டை போட்டுக்கொண்டே இருந்தால் வாழ்வது எப்போது? உயிரைக்கொடுக்க வேண்டுமாம்! எதற்கு? போராட்டம் என்கிறார்கள். என்ன போராட்டம்? அவர்களுக்குப் போராட்டம் நடத்தத் தெரியாதே. அவர்களால் ஆகப்போவதும் ஒன்று இல்லை.

ஏதோ ஒன்றரைநாள், இரண்டரைநாள் ஜெயிலில் வாசம் செய்வது போராட்டமாம். வேறு வேலை இல்லையா?

ஊருக்கு ஒன்று இரண்டு வம்புக்காரர்கள் இருப்பார்கள். எந்த நல்ல காரியத்தையும்



எதிர்ப்பது அவர்களுடைய வழக்கம். அது பழைய காலம். அப்போது பத்திரிகைகள் கிடையாது. இப்போது அந்த வசதி இருக்கிறது. எல்லா வம்புக்காரர்களும் சேர்ந்து கொள்கிறார்கள். கட்சி அமைக்கிறார்கள். ஐக்கிய முன்னணி என்று பெயர் வைத்துக் கொண்டு காங்கிரசை எதிர்க்கத் தலைப்படுகிறார்கள். தி. மு. க., சுதந்திராக் கட்சிகளுக்கிடையேதான் அடிப்படை ஒற்றுமை உண்டா? கிடையாதே!

## பலன் எப்போது?

**நா**ட்டை அபிவிருத்தி செய்ய இப்பொழுது ஏராளமான பணம் செலவு செய்யப்படுகிறது. மின்சார உற்பத்தி, நீர்த்தேக்கங்கள், ஆஸ்பத்திரிகள், பள்ளிகள் முதலியவைகள் ஏற்படுத்தப்படுகின்றன. இதெல்லாம் நமக்குத் தற்பொழுது பெருஞ் செலவுதான். ஆனால் 10 ஆண்டிற்குள் இவைகளினால் நல்ல பலன் அடைய முடியும்.

சாதாரணமாக, ஒரு குடும்பத்தில் ஐந்து பிள்ளைகள் இருந்தால், படிக்க வைக்கும் போது பணச் செலவு ஏற்பட்டு கஷ்டப்படுகிறோம். ஆனால் அப் பையன்கள் நன்றாகப் படித்து வயது வந்த காலத்தில் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டால் நல்ல பலனை அடைய

முடிகிறது. அதே மாதிரிதான் இன்றைய அரசாங்கத்திட்டமும் இருக்கிறது.

## பணத்தைக் கட்டுப்படுத்துவதா ?

விலையைக் குறைக்க கண்ட்ரோல் வேண்டுமென்கிருர்கள் ஒருசிலர். பணத்தைக் கட்டுப்படுத்திஞல் விலை தாஞகக் குறையும் என்றும் சிலர் கூறுகிருர்கள். பணத்தைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று சொல்பவர்கள் ஏராளமாக பணம் வைத்திருப்பவர்கள். பணத்தைக் கட்டுப்படுத்திவிட்டால் நாட்டின் முன்னேற்றத்திற்கு வேண்டிய பல நல்ல காரியங்கள் செய்யப் பணம் வேண்டுமல்லவா? பணத்தைக் கட்டுப்படுத்திஞல் நல்ல திட்டங்களை நிறைவேற்ற முடியாது. இம்மாதிரியான கட்டுப்பாடு செய்தால் ஏழைகளுக்குத்தான் கஷ்டம். பணத்தைக் கட்டுப்படுத்து என்று கூறுபவர்களிடம் பணம் எப்பொழுதும் இருக்கும். ஆனல் ஏழைகள் கையில் பணம் இல்லாமல் தவிக்க நேரிடும்.

## செல்லாத பேச்சு

இப்பொழுது சர்க்கார் பணக்காரர்களுக்கு பலவகைகளிலும் வரிபோட்டு வசூலிக்கிருர்கள். இதைக் கண்டு பணக்காரர்களுக்கு சர்க்கார்மீது கோபந்தான். காங்கிரஸ்காரர்கள்



கம்யூனிஸ்டுகளாக ஆகிவிட்டார்கள் என்று பணக்காரர்கள் கூறுகிருர்கள். இதற்காகத்தான் சுதந்திராக் கட்சி வந்தது. சர்க்காரின் பணத்தை விரயமாக்குகிரேம் என்றும் ஊழல் அதிகமாகிவிட்டது என்றும் கூறுகிருர்கள். ஏழைகளுக்கு உதவ சர்க்கார் திட்டமிட்டு செய்துவருவதைக் கண்டு ஊழல் அதிகமாகிவிட்டது என்கிருர்கள். ஊழல் எங்கே இருக்கிறது? சுதந்திரா கட்சிக்கு இச் செய்கை ஊழலாகத் தெரியலாம். ஏழைகள் வாழத்தான் வழி செய்து வருகிரேம். மக்களிடத்தில் சென்று சர்க்காரில் ஊழல் நிறைந்துவிட்டது என்று பூச்சாண்டி காட்டி ஏய்க்கப் பார்க்கிருர்கள். அது செல்லுமா?

## பேய், பிசாசு பயம்

மொழிப் பிரச்சினையை வீணுகக் கிளப்பிவிடுகிருர்கள். பல மொழிகள் கொண்டது நம் நாடு. மொழிப் பிரச்சினையில் நாம் குடுமி பிடித்துக் கொண்டிருந்தால் ஏழைப் பிள்ளைகளைப் படிக்வைக்க முடியுமா? அடிக்கடி நாங்கள் (காங்கிரஸ் மந்திரிகள்) டெல்லியைப் பார்த்து பயப்படுகிரேம் என் கி ரு ர் க ள். டெல்லி பேயா? பிசாசா? டெல்லியைப் பார்த்து நான் ஏன் பயப்படவேண்டும்? எனக்கு டெல்லிக்காரன் தயவு என்னத்திற்கு? உங்கள் (மக்கள்) தயவு இருந்தால்தான் நல்லது. ஓட்டுப் பெற்று

அரசாங்கம் அமைத்து உழைக்க முடியும். டெல்லியைப் பார்த்து பயப்படுவது மற்றவர்கள் தான்; நாங்கள் அல்லவே அல்ல.

## இரண்டு வருடம் கழித்து

சுதந்திரம் தினம் கொண்டாட ராஷ்டிரபதி அவர்கள் சென்னை விஜயம் செய்தபொழுது (1960) கறுப்புக் கொடி காண்பிக்க வேண்டும் என்று தி. மு. கவினர் முடிவெடுத்தனர். பின்பு புத்திசாலித்தனமாக வாபஸ் வாங்கிவிட்டனர். ஏன் வாபஸ் வாங்கிவிட்டீர்கள் என்று கேட்டவர்களுக்கு 'ஜனநாயகவாதி நேரு கூறிய வாக்குறுதியால் வாபஸ் வாங்கினேம்' என்ருர்கள். நாங்கள் (மந்திரிகள்) கறுப்புக் கொடி வேண்டாம் என்று சொன்னபொழுது கேட்கவில்லை. தங்களை (தி. மு. க.) 'நான் சென்ஸ்' என்று நேரு சொன்னதாக 2 வருடத்திற்கு முன்பு (1958) தமிழ் நாட்டிற்கு வந்த நேருஜிக்கு கறுப்புக் கொடி காண்பித்தார்கள். அதே நேரு 2 வருடம் கழித்த பிறகு ஜனநாயகவாதி என்று அவர்களுக்கு (தி. மு. க.) தெரிந்தது! 2 வருடம் கழித்தாவது ஜனநாயகவாதி என்று ஒப்புக் கொண்டார்களே! நாங்கள் (காங்கிரஸ்) சொல்வதையெல்லாம் கேட்க 2 வருடம் கழியும். அப்படித்தானே!



## கழுதைமேல் ஏறி

எங்களுக்கு உரிமை இருக்கிறது. எதை வேண்டுமானுலும் பேசுவோம், செய்வோம் என்று தி. மு. க. வினர் கூறுகிருர்கள். செய்யட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை. மக்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடும் கொண்டாட்டத்தில் நீங்கள் ஏன் (தி. மு. க.) கறுப்புக் கொடி காண்பிக்க வேண்டும்? இதெப்படி இருக்கிறதென்ருல், கலியாணம் செய்யும் வீட்டின் முன் கழுதைமேல் ஏறி ஒப்பாரிவைப்பதுதான் என் உரிமை என்று கூறுவதைப் போல்த்தான் இருக்கிறது! ஒப்பாரி வைப்பதென்ருல் எங்கேயாவது காடுமேடு செல்வது தானே?

## திராவிடப் பூச்சாண்டி

திராவிடநாடு என்பது, நான் பலமுறை குறிப்பிட்டபடி உண்மையிலேயே இல்லாத, வெறும் கற்பனை நாடுதான். இதைக்காட்ட முடியாதே! தாயார், குழந்தைக்கு இல்லாத ஒன்றைப் 'பூச்சாண்டி' என்று சொல்லிக் குழந்தையைப் பயமுறுத்தியோ, ஆசை காட்டியோ சரிப்படுத்துவது போலத்தானே இந்தக் கற்பனை நாடும்? வேறு என்ன, சொல்லுங்கள்!

'பூச்சாண்டி'யைப் பற்றிப் பலமுறை கேட்டுக் கேட்டுச் சலித்துப் போய்விட்ட

குழந்தை, அம்மாவைப் பார்த்து ஒருநாள், 'பூச்சாண்டி, எங்கே ? காட்டு அம்மா ?' என்று கேட்டால், காட்ட முடியுமா ? அப்போது முதல், 'பூச்சாண்டி' காட்டுவதைத் தாயார் விட்டுவிடுகிறார்கள் அல்லவா ?

இதே போலத்தான் இப்போது தி. மு. கழகம் காட்டிவந்த 'திராவிடநாடு' என்ற கற்பனைப் 'பூச்சாண்டி'யின் நிலையும் இருக்கிறது. அதைக் காட்ட முடியாது, வேறு என்ன செய்வது எனத் திண்டாடுகிறார்கள்! பதவி நாற்காலிப் பேச்சுத்தான் இப்போது.

## கைவைத்த உடன்...

**ம**ண்ணைத் தோண்டினால், கருப்புத் தங்கம் —இரும்பு என்று சொல்கிறார்கள். அதைக் கேட்கும்போது சந்தோஷமாகத்தான் இருக்கிறது. ஆனால் மண்ணில் கைவைத்த உடனேயே கிடைத்துவிடுமா? அதைத் தோண்டி எடுக்க எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றனவே!

வெளி நாடுகளிலிருந்து இயந்திரங்களைக் கொண்டுவர வேண்டும். பல வருடங்கள் முயற்சித்த பிறகு, கஷ்டப்பட்டு உழைத்தால் தான் நிலக்கரி வரும். இரும்பு கிடைக்கும். கனரகத் தொழில்கள் ஏற்பட முடியும்.

பல வருடங்களாக, இதற்காகச் சர்க்கார் திட்டம்போட்டு, ஆராய்ச்சி நடத்தி வருகிறது.



சர்க்கார் போடும் திட்டங்களையும் சர்க்காரின் ஆலோசனையில் இருந்துவரும் திட்டங்களையும் படித்துவிட்டு, அந்தத் திட்டம் என்ன ஆயிற்று? என்று கேள்வி கேட்கிறார்களே! இதற்காகச் சத்தம் போடக் கற்றுக்கொண்டிருக்கிறார்களே!

## சுடச்சுடப் போட்டால்...

**நா**ங்கள் போடும் திட்டங்களை வைத்துக்கொண்டு, எங்களையே விரட்டுகிறார்களே! கொஞ்சம் பொறுத்து இருங்கள். இப்போது தான் சமையல் ஆகிறது. ஆக்கப்பொறுத்தவன், ஆறப் பொறுக்கவேண்டாமா? சுடச்சுடப் போட்டால் நாக்கு வெந்துவிடாதா ? அரிசி, பருப்பு இருந்தால் மட்டும் சமையல் ஆகிவிடுமா? அதற்கு விறகும், மற்ற சாமான்களும் வேண்டும். அப்போதுதான் சாப்பாடு தயாரிக்க முடியும். அதேபோலத்தான் இரும்பு, உருக்கு போன்ற கனரகத் தொழிலுக்கு நிலக்கரி, இயந்திரம் போன்றவைகள் வேண்டும். அது தவிர நிபுணர்கள் வேண்டும். இவையெல்லாம் தயாராகி வருகின்றன.

பெரும் தொழில்கள் ஏற்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு இருக்கிற அக்கறை யாருக்கும் குறைந்து விடவில்லை. முடிந்ததை எல்லாம் செய்துதானே வருகிறோம். நாடு தொழில் வளமாக வேண்டும் என்பதே எங்கள் ஆசை.

## முள்ளில் சிக்கிய துணி

சிக்கலான விலைவாசிப் பிரச்சினையைத் தீர்க்க சர்க்காரில் முயற்சி எடுத்துக்கொள்ளுகிறார்கள். உணவுப் பிரச்சினையில் மாத்திரம் சிக்கல் இல்லை. எல்லாவற்றிலும் இருக்கிறது. முள்ளில் சிக்கிய துணியை ஜாக்கிரதையாக எடுப்பது போல் சிக்கல்களைத் தீர்க்க வேண்டும்.

## உலகத்தார் மரியாதை

நாடு சுதந்திரம் அடைந்து நேருஜி தலைமையில் 17 ஆண்டுகள் முன்னேறியிருக்கிறோம். இப்போது நாம் மனிதராக வாழ்கிறோம். உலகத்தார் நம்மை மதிக்கிறார்கள். மனிதனுக்கு மரியாதைதான் முக்கியம். மரியாதை இல்லை என்றால் சோற்றுக்கு இருந்தும் என்ன புண்ணியம்? காங்கிரஸ் கட்சி இல்லாதிருந்தால் சுதந்திரம் கொடுத்திருப்பார்களா? ஏழைகள் கட்சி இருப்பதால்தான் இது முடிந்தது. இல்லாவிட்டால் ஒரு அடி மண்ணையாவது விட்டு விடுவார்களா என்ன?

நேருஜி நமக்குப் புதுவாழ்வை அமைக்க வேண்டும் என்றார். அதை சோஷலிசம் என்று வேண்டுமானாலும் சொல்லட்டும், வேறு என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். நமக்கு வேண்டியது வேலை, வீடு, துணி, சோறு, படிப்பு. நாம் இதுபற்றிக் கவலைப்படும்போது எதிர்க்கட்சியினர் தாங்கள் ஆட்சியைக் கைப்பற்றப் போவதாகச் சொல்லிச் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு வேலையே இல்லை. நாம் ஒற்றுமையாக இருந்து பணிபுரிய வேண்டும். உலகத்தார் மதிக்கும் நிலைமையை, மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.



## கள்ள மார்க்கெட் ஆசை

சர்க்கரைதான் நமது நாட்டில் தாரளமாக உற்பத்தியாகிறதே; அப்படி இருந்தும் ஏன் பற்றுக்குறை ஏற்படுகிறது? கிடைக்கவில்லை, என்று சொல்லுகிறார்களே" என்று நான் விசாரித்தேன்.

அப்போது சர்க்கரையைக் கள்ள மார்க்கெட்டில் விற்பதாகவும், இதனால் மூட்டைக்கு 100 ரூபாய் லாபம் வருவதாகவும் சொன்னார்கள்.

ஒரு மூட்டைக்கு நூறு ரூபாய் இலாபம் என்றால் இது என்ன அநியாயம்?"

இந்தக் கள்ள மார்க்கெட்டை ஒழிக்க வேண்டியது அவசியம்.

ஆனால் இது சர்க்காரின் பொறுப்பு மட்டுமல்ல. இதில் மக்களுக்கும் பொறுப்பும் இருக்கிறது.

எல்லா வியாபாரிகளுமா இப்படிச் செய்கிருர்கள்? இல்லே. ஒரு நாணயமான வியாபாரி 'க்யூ' வரிசையில் மக்களே நிற்க வைத்து நியாய விலேக்குச் சர்க்கரை கொடுக்கிருர்.

ஆனுல், அதைக் கூடச் சிலபேர் என்ன செய்கிருர்கள்? 'க்யூ' வரிசையில் நின்று சர்க்கரையை வாங்கிக் கொண்டுபோய் பலகாரமா செய்கிருர்கள்? இல்லே. 'டீ' கடையில் அதிக விலேக்கு விற்று விடுகிருர்கள்.

உடனே அந்த நாணயமான வியாபாரி இதைப் பார்த்ததும் என்ன நினைக்கிருர்? நாமே கள்ள மார்க்கெட்டில் விற்றிருக்கலாமே என்றுதான் நினைக்கிருர்.

எனவே, குற்றங்களே யார் மீதாவது பழியாகப் போட்டு விட்டுத் தப்பக் கூடாது. நாமும் ஒழுங்காக நடக்க வேண்டும்.

## சினிமா வசனம் போல...

**நா**டு சுதந்திரம் பெற்ற பிறகு கொஞ்சம், கொஞ்சமாக முன்னேறி வருகிருேம். இதை எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. அடுத்து நாம் மேலும் செய்ய வேண்டியது என்ன? மேலும் தீவிரமாக முன்னேற வேண்டும், அதற்காக நாம் கவனத்தைச் செலுத்த வேண்டும். நாம் போகிற வேகம் குறைவாக இருக்கிறது. இதை அதிகரிக்க



வேண்டும் என்று கிராமங்களில் உள்ள மக்கள் கருதுகிருர்கள்.

ஆகவே, மக்களுக்காகச் செலவிடுவதை அடுத்த ஐந்தாண்டுகளில் இரட்டிப்பாக்க விரும்புகிருேம். முதலிரண்டு திட்டத்தில் ஆருயிரம் கோடி செலவிட்டு இருக்கிருேம். மூன்ருவது திட்டத்தில் பத்து ஆயிரம் கோடி ரூபாய் செலவாகி வருகிறது. அடுத்து, நான்காவது திட்டத்தில் இருபதாயிரம் கோடிக்கு மேல் செலவு செய்ய உத்தேசம்.

எதற்காகஇவ்வளவு பெரிய திட்டம் போடுகிருர்கள்? இதனுல் என்ன பலன் கிடைக்கப் போகிறது? திட்டம் நிறைவேற என்ன செய்ய வேண்டும்? இதெல்லாம் குறித்து மக்கள் சிந்திக்க வேண்டும்.

ஏராளமானபேர் சினிமாவுக்குப் போகிருர்கள். சினிமாவிலிருந்து திரும்பிய பிறகும், சினிமா வசனங்களேயும் பாட்டுக்களேயும் பேசுகிருர்கள், உரக்கப் பாடுகிருர்கள். இதெல்லாம் வேண்டாம் என்று சொல்லவில்லே. அதைப் போலவே சிறிது நேரம் நாட்டின் நல்வாழ்வுத் திட்டங்கள் பற்றியும் சற்று சிந்திக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

## குறை கூறுபவன் குரல்

**வா**ழ்க்கையில் நல்ல வசதியாக உள்ளவர் வர்கள் திட்டங்களை நன்ருகப் படித்து, தங் களைப் பாதிப்பதைத் தெரிந்து கொண்டு எதிர்க்கிருர்களே! அதே சமயத்தில் திட்டத் திஞல் பயனடையக் கூடிய சாதாரண ஏழை மக்கள் சும்மா இருப்பது சரியா? குறை கூறு பவன் குரல்தானே ஓங்கி இருப்பதாகத் தோன் றும். ஏழைகளும் திட்டங்களை நன்ருகப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். அப் போது குறை கூறுபவர்களுக்கு நல்ல பதிலை அவர்களால் சொல்ல முடியுமே!

நாங்கள் போடும் திட்டங்களைக் குறை சொல்பவர்கள் வேறு வழி இருந்தால் சொல் லட்டும். எங்களை விட நல்ல திட்டம் போடத் தெரிந்தால் போட்டுக் காட்டட்டும். அதில் அவர்களுடைய கெட்டிக்காரத்தனத்தைக்காட் டலாம். அதற்குப் பதிலாக சும்மா குறை கூறிக் கொண்டு, சத்தம் போடுவதால் எந்த வித பிரயோஜனமும் ஏற்படாது. அதற்குப் பதிலாக, ஏற்கெனவே நடந்து வருகிற ஒரு சில அபிவிருத்தி வேலைகளில் கூட மக்களுக்கு அக்கறை இல்லாமல் செய்து விடாதா?



## கட்சிப் போட்டிகள்

**ஏ**ழை மக்களின் நல்வாழ்வுக்கான வேலை களில் எல்லாக் கட்சியினரும் ஈடுபட வேண் டிய நிலைமையில் நாம் இப்போது இருக்கி ரேம். அதை விட்டு விட்டு, அவர் வடநாட் டார், இவர் தென்ஞட்டார் என்றும், அவன் பணக்காரன், இவன் ஏழை, அவன் மேல்சாதி இவன் கீழ்சாதி என்றெல்லாம் கட்சி, சாதிமத சண்டைகள் போடுவதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? இதனுல் யாருக்கும் பிரயோஜ னம் இல்லையே. சண்டை போடுவதற்காகவே கட்சிகள் இருக்க வேண்டுமா? நம்மிடையே உள்ள பூசல்களையும் வித்தியாசங்களையும் கைவிட்டு நாம் அனைவரும் ஒன்றுபட வேண் டாமா?

இன்று நாட்டிலே நாம் என்ன பார்க்கி ரேம்? கட்சிகளுக்கும், கழகங்களுக்கும் இடையே போட்டி! நீ ஒரு பெரிய சுவரொட்டி 'நோட்டிஸ்' ஒட்டிஞல், அதை விட பெரிய சுவரொட்டியை நான் ஒட்டுவேன். நீ ஒரு பெரிய ஊர்வலம் நடத்திஞல், உன்னை விட பெரிய ஊர்வலம் நடத்துவேன். உன் கூட் டத்துக்கு நிறைய ஆட்கள் சேர்த்தால், என் கூட்டத்துக்கு அதை விடச் சேர்ப்பேன். இப் படி எல்லாம் போட்டி போட்டுச் சண்டை போடுகிருர்களே! எப்படியாவது மக்களு டைய மனத்தைக் கவரவேண்டும் என்பது

அவர்களுடைய எண்ணம். மக்களை அவரவர்கள் பக்கத்தில் திருப்ப வேண்டும் என்று ஆசை.

இப்படிக் கட்சிகளிடையே போட்டி ஏற்படுவதினுல், மக்களிடையே ஒருவித மனக் குழப்பம் உண்டாகிறது. இந்த மனக் குழப்பத்தில், நம்முன் நோக்கியுள்ள அடிப்படையான பிரச்சினைகளை மறந்து விட நேரிடுகிறது. இதற்குத்தானே கட்சிகளின் போட்டிச் சண்டைகள் உதவுகின்றன.

## ஆட்டுக்கிடா சண்டை

**வ**றுமையை ஒழிக்கப் போராடும் இந்தச் சமயத்திலா கட்சிப் போட்டிகள் நடத்தவேண்டும். எல்லோருக்கும் வாழ வசதியும், நாட்டில் ஒரு நிம்மதியும் ஏற்படட்டும். அப்போது ஒரு கை பார்த்துக் கொள்ளலாமே! யாருடைய ஊர்வலம் பெரிசு! எந்தக் கூட்டம் பெரிசு! யாருடைய கொடி பெரியதாக, அதிக உயரத்தில் பறக்கிறது என்பதெல்லாமா இப்போது முக்கியம்? இதெல்லாம் பிறகு வைத்துக் கொள்ளலாமே!

நமக்குள் பல வித்தியாசங்களைக் காட்டிச் சண்டை போட்டுக் கொண்டிருந்தால் நாட்டின் வளர்ச்சி தடைபடும். முன்னேற்றம் ஏற்படாது. நாட்டில் ஏழை மக்களின் வறுமையை விரைவில் போக்க முடியாது



கட்சிகள் ஒருவருக்கு ஒருவர் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருந்தால், ஏதோ ஆட்டுக்கிடா சண்டை போல, மக்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவசியமற்ற வெறியும், உணர்ச்சியும் ஏற்படுமே ஒழிய, எந்தப் பிரச்சினையும் தீராது. முடிவில் முன்னேற்றம் தடைப்படும்.

## ஒன்று சேரலாம்

**ம**க்கள் அர்த்தமில்லாத சண்டைகளில் கவனம் செலுத்துவதால், அடிப்படைப் பிரச்சினைகளை மறக்கநேரிடும்! அனுவசியமானதை உதறித்தள்ள வேண்டும். கட்சிகள் ஒன்றையொன்று திட்டிக்கொள்வதைக் கேட்டு ஏமாற வேண்டாம். மக்களது உண்மைப் பிரச்சினைகளை அவை மறைத்து விடும்.

எல்லாக் கட்சிகளும் ஏழைகளின் கஷ்டம் தீர்க்க வேண்டும் என்று பேசுகின்றன. இதே வேலையில் ஒன்று சேரலாமே! அனைவரும் ஒன்ருக உழைக்கலாமே! சுதந்திரம் வாங்குவதற்காக அனைவரும், ஒன்ருகச் சேர்ந்து போராடவில்லையா?

## குறைபாடே மூலதனம்

**எ**ந்த நாடானுலும் சரி! எந்தக் கட்சியானுலும் என்ன! மக்கள் கஷ்டங்களைத் தீர்க்க நல்ல திட்டத்துடன் வேலை செய்தால் நல்லது

தான்! அப்படிப்பட்ட எதிர்க்கட்சி ஒன்றுகூட இல்லையே! எல்லாம் ஆளுங்கட்சியை 'எப்படியாவது' பதவியிலிருந்து விரட்ட வேண்டும் என்று மட்டுந்தானே வெறுங் கூச்சலும் கூப்பாடும் போடுகின்றன!

அதிருப்தி, குறைபாடு, இல்லாமை, போதாமை இவைகளைப் போக்கப் பாடுபட வேண்டியதை விட்டு விடுகிறார்களே! அதை விட, இவைகளையே பெரிய "முதலாக" வைத்துக் கட்சிக் கொள்கை என்று சாமர்த்தியம் வேறு பேசுகிறார்களே! இந்த வார்த்தை ஜாலமும், குயுக்தியும் பார்த்து மக்கள் ஏமாந்து, நடக்கும் நல்ல காரியங்களையும் நடக்காதபடி கெடுத்துவிடுவார்களா, என்ன?

## பாட்டன் சொத்தா?

பதவியை விட்டுவிட யாரும், ஒருசிறிதும் பயப்படவே இல்லையே! இது என்ன பாட்டன் சொத்தா? அல்லது பரம்பரை ராஜ்ய பாரமா, என்ன? ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை நடக்கும் பொதுத் தேர்தலில் வயது வந்தோரிடம் வோட்டுகள் பெற்று, யார் மெஜாரிட்டியாக வருகிறார்களோ, அவர்கள்தானே பதவி வகிக்க முடியும்? இஷ்டப்பட்டவன், யாராக இருந்தாலும், நேராகப் போய் 'பதவி' பெற முடியுமா, என்ன? அர்த்தமில்லாமல் 'பதவி' பற்றிப் பேசுவது எதற்கு? வீணாக மக்களைக் குழப்புவதுதானே நோக்கம்? சொல்லுங்கள்!



யார் எப்படிக் குழப்பினாலும், நடைமுறையில் காரியங்களை எப்படியும் செய்து வருவது ஆளுங் கட்சியான காங்கிரஸ்தானே! எங்களை விட உருப்படியான திட்டத்துடன் எந்தக் கட்சியாவது முன்வந்து காரியத்தை மேற்கொண்டு நடத்தட்டுமே!

## தமாஷ் பார்ப்பது

கட்சிகள் நடத்தும் போட்டி, வேடிக்கைகளைக் கண்டு, மக்கள் அதன்பின்னாலேயே 'தமாஷ்' பார்த்துக் கொண்டிருப்பது நல்லதல்ல! கருத்து வேற்றுமைகள் நாட்டில்இருக்கத்தான் இருக்கும்! அவைகளைக் கவனித்து, யோசித்துப் பார்க்கவேண்டும். நல்லது கெட்டது தெரிந்து பின்பற்ற வேண்டும்.

இதை விட்டு, யார் 'சத்தம்' போட்டாலும் வேடிக்கை பார்ப்பதா? இவனை அவன் எப்படித் திட்டினான், 'இவன், அவனை எப்படி வெளுத்துக் கட்டிப் பேசுகிறான்' என்று கும்பல் கூடி நின்று கேட்பது நல்லதா? மக்கள் பார்க்க நிற்பதை, தங்களுக்குப் பெருத்த ஆதரவு என்று அவர்கள் தப்பாக எண்ணிக்கொள்வார்களே!

## எப்போதுதான் முன்னேறுவது

கடவுளுக்கு விடப்பட்ட யானைக்கு எந்த நாமம் போடுவது? யார் முதலில் தீர்த்தம் பெறுவது? யாருக்கு முதலில் பிரசாதம் தரு

வது? யார் வீடு உயரம்? யாருடைய வண்டி அழகு? பெரிசு! என்பன போன்ற சண்டைகள் எப்போதும் இருந்துதானே வருகின்றன. எந்தச் சண்டைக்கும் வேடிக்கைப்பார்க்க யாராவது நாலு, பத்து, நூறு என்று ஆட்கள் கூடத்தான் செய்யும். ஆனால், இதையே பெரிதாக நடத்திக் கொண்டே இருந்தால், நாம் எப்போதுதான் முன்னேறுவது? யோசிக்க வேண்டாமா!

## தப்பான நம்பிக்கை

அர்த்தமற்ற கூப்பாடுகளும், கோஷங்களும், கட்சிப் போட்டிகளும், பத்திரிகைகளிலும், மேடைப் பேச்சுக்களிலுந்தான் பெரிதாகக் காணப்படுகின்றன. சாதாரண மக்களிடம் இல்லை. ஆனால், இப்படி பத்திரிகை, மேடைகளில் காணப்படுவதுதான் 'ஊர்' முழுவதும் இருப்பதாகத் தப்பாக நம்பி ஏமாறக்கூடாது. யார் எந்தச் சண்டை போட்டாலும், எந்தக் கட்சி எதைத் தூற்றினாலும் சரி, போற்றிப் புகழ்ந்தாலும் சரி, நமக்கு நல்லவழி அதில் இருக்கிறதா, என்பதைத்தான் நாம் கருத்தோடு கவனிக்க வேண்டும்.

## அறியாதவன் வாயில்

நமது நாட்டில் 'அரி' பெரியவனா? 'சிவன்' பெரியவனா? என்றெல்லாம் கூடப் பெரிய போட்டியும், சண்டையும் நடக்கவில்லையா,



என்ன! அதற்கே "அரியும் சிவனும் ஒன்று, இதை அறியாதவன் வாயில் மண்ணு," என்று சாதாரண மக்கள் கூறுவார்களே! கட்சி வேடிக்கைகளையும் கூப்பாடுகளைப் பற்றியும் இதைத்தான் சொல்லவேண்டியிருக்கிறது! இதையெல்லாம் மக்கள் நன்றாக யோசித்து நல்ல முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## அனுதாப குணம்

காந்திஜி கேட்ட சுதந்திரம் வந்தாகிவிட்டது. காந்திஜியின் எண்ணத்தை நிறைவேற்றிச் செயல்படுத்த சுயராஜ்ஜியத்தைப் பயன் படுத்தத்தானே வேண்டும். இந்த அரசாங்கத்தின் வேலை அதுதானே! இதைச் செய்யாமல் வேறு போக்கில் செல்வது நல்லதா? சொல்லுங்கள்?

எதற்கும் காந்திஜி பெயரா என்று கூடக் கேட்கிறார்கள். காந்திஜியின் பெயரை யார் உபயோகிக்கவில்லை; எதற்காக உபயோகிக்கவில்லையென்று கேட்கிறேன்?

தி. மு. க. தலைவர்கள் உட்பட எல்லாக் கட்சிக்காரர்களும் ஒவ்வொரு சமயம் காந்திஜியையும், அவரது கொள்கைகளையும் திட்டிய திட்டு கொஞ்ச நஞ்சமா என்ன? மக்களுக்குத் தெரியாதா, என்ன? எல்லாம் தெரியுமே!

ஆனுல், காந்திஜி மாண்டார் என்றதும் காந்திஜியைப் போற்றவும், அவரை உத்தமர் என்று கூறவும் போட்டியிட்டுக்கொண்டு வந்தார்களா, இல்லையா! எப்படியோ காந்திஜி மாண்ட நேரத்திலாவது அவரைப் போற்றும் குணம் வந்ததே! அது பாராட்டப்பட வேண்டியதுதான்.

ஆனுல், அவரது மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்ததோடு இந்தக் குணம் மாறிவிட்டது போலத்தானே நடந்து கொள்கிருர்கள்! அப்படியில்லையென்ருல், காந்திஜியின் கொள்கைகளை நிறைவேற்றும் அரசாங்கத்தையும் அதன் திட்டங்களையும் நிறைவேற்ற ஏன் தகுந்தபடி ஒத்துழைக்காமல் இருக்கிருர்கள்? யோசிக்க வேண்டாமா?

## பூஜை மட்டும் போதாது

காந்திஜியின் பெயரைப் போற்றுவதும் அவருக்கு விழா கொண்டாடுவதும் போதுமா? போதாது. அவரது திட்டப்படி நடந்தாக வேண்டும். திட்டங்கள் நடக்க உதவியாக இருக்க வேண்டும்; அல்லது குறுக்கே நின்று தடுக்காமலாவது இருக்க வேண்டும். காந்திஜியின் நினைவால் நமக்கெல்லாம் கிடைக்கும் முதல் பாடம் இதுவாகத்தான் இருக்க வேண்டும்.



கடவுளுக்குத்தேங்காய்உடைத்துபூமாலை சாத்திப் பூஜை செய்தால் மட்டும் போதும். சும்மா இருந்துவிடுவார். நாம் நினைத்ததைச் செய்துகொண்டே போகலாம் என்று கூடச் சில பக்தர்கள் இருக்கிருர்கள் இல்லையா?

இதைப் போலவே காந்திஜி படத்தை வீட்டில் மாட்டிப் பூஜை செய்தால் போதும். அவரைப்பற்றிப் பேசினுலே எல்லாம் தீர்ந்து விட்டது என்று கருதி நடக்கும் போக்கு வந்து விடக்கூடாது.

காந்திஜியிடம் மரியாதையும் பக்தியும் காட்டுவது நல்லதுதான். ஆனுல், அதோடு நிற்காமல் நம்மால் முடிந்த அளவுக்காவது அவர் போதித்த கொள்கைப்படி நடக்கவேண்டாமா? அவர் காண விரும்பிய 'புதிய சமுதாயம்' அமைக்கத் திட்டமிட்டு உழைக்கத்தானே வேண்டும்? அதைத்தானே சர்க்கார் செய்து வருகிறது.

## இந்தியைக் காட்டி...

மாணவர்களைத் தூண்டி, உணர்ச்சிவசப்பட்டு ஆத்திரச் செயல்களில் ஈடுபடும்படிச் செய்து அரசியல் கட்சிகளை வளர்க்கும் போக்குக்கூடாது. அரசியல் கட்சி எதுவானுலும் இதனைக் கைவிட்டு, மாணவர்களது நல்ல எதிர்காலத்திற்கு வழிகாட்டிகளாக இருக்க வேண்டுகிறேன்.

இந்தி மொழி, தமிழின் இடத்தை ஒரு நாளும் பிடிக்கவே முடியாது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை தமிழ்தான் ஆட்சிமொழி, போதனு மொழி என்பது உறுதியாகி, நடைமுறையில் வந்து கொண்டிருக்கிறது. இந்திக்கும் ஆங்கிலத்திற்கும் நடக்கும் போட்டியைக் கண்டு அவசியமற்றுப் பயப்படத் தேவையில்லை. இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் இருந்தே தீரும். மத்திய சர்க்காரும் ஒப்புக் கொண்டுள்ளனர். இதை மாநில சர்க்கார் கவனித்துக் கொள்ளும். இந்தியைக் காட்டி மாணவர்களைக் கட்சி அரசியலில் இழுத்துக் குழப்ப வேண்டாம்.

## அமைதிக்குப் பொறுப்பு

மாணவர்கள் நாட்டின் அமைதியைக் குலைக்கும் வகையான செயலில் ஈடுபடக் கூடாது. இவர்களை இம்முறைக்கு எக்கட்சியும் பயன்படுத்துவது சிறிதும் நல்லதல்ல. அமைதியான சூழ்நிலையில்தான் திட்டமிட்டு முன்னேற முடியும். அமைதிக்குச் சர்க்காரும் போலீசும் மட்டுமே பொறுப்பாளிகள் என்று நினைத்துக்கொண்டு மற்றவர் பொறுப்பற்று இருக்கக் கூடாது. எல்லோரும் அமைதிக்குப் பொறுப்பாளிகள் என்ற பொறுப்பு உணர்ச்சி ஏற்பட்டால்தான் நாடு முன்னேற முடியும்.



## மாணவரும் அரசியலும்

சுதந்திரப் போராட்டத்தில் மாணவர்களை காந்திஜியும் காங்கிரசும் ஈடுபடுத்தவில்லையா என்று கேட்கலாம். உண்மைதான், ஈடுபடுத்தினோம். ஆனால், அத்தகைய சூழ்நிலையா இன்று உள்ளது? அதிர்ஷ்டவசமாக நாம் சுதந்திர நாட்டில் வாழ்கிறோம். பேச்சுரிமை, எழுத்துரிமை, தேர்தல், வயது வந்தோருக்கு வாக்குரிமை, ஜனநாயக மூலம் அரசாங்கத்தை மாற்றியமைக்கும் உரிமை முதலிய பலவேறு அடிப்படை உரிமைகளும், வழிகளும் வாய்ப்புகளும் உள்ளனவே! இந்த முறைகளில் எந்தப் பிரச்சினையையும் அமைதியாகத் தீர்த்துக் கொள்ளலாமே! கிளர்ச்சி, புரட்சி நடக்கத் தேவையில்லையே! அதிலும் மாணவர்களை ஈடுபடுத்தித்தான் ஆகவேண்டுமா? இல்லையே!

## மாணவர் கடமை

அபிப்பிராய பேதங்கள் பல இருக்கலாம். இதைப் பெரிதாக்கி ஆத்திரமும் உணர்ச்சியூட்டுவதும் சுலபம். ஆனால், காரியமாற்றுவது தான் கஷ்டம். பல ஆண்டு காலம் அந்நிய ஆட்சியில் மிகவும் பின் தங்கிக் கிடந்த நம் நாடு முன்னேறப் பொறுமையோடு பல காலம் பாடுபட்டுத்தான் ஆகவேண்டும்.

நமது நாடு பல மொழி பேசும் மக்களைக் கொண்டது. மாகாணங்களிலுங் கூடப் பல

மொழி பேசும் மக்கள் உள்ளனர். ஆகவே, மொழி ஜாதி, மதவேற்றுமைகளைப் பெரிதாக்கி பிரிவினை, பேத உணர்ச்சிகளுக்கு ஆளாவது சுலபம். இதற்கு இரையாகாது, பரஸ்பரம் ஒருவரை ஒருவர் மதித்து விட்டுக் கொடுத்து அமைதியோடு வாழ்ந்து காரியமாற்ற வேண்டும். இதனை மாணவர்கள் கவனித்து நல்ல முறையில் படித்து முன்னேற வேண்டும். மாணவர்கள் திறமையாகப் படித்து முடித்து தமது குடும்பத்திற்கும், வருங்கால சமுதாயத்திற்கும் பலவிமான நல்ல தொண்டுகளையும் பணிகளையும் செய்யத் தயாராகவேண்டும்.

## விளையாட்டும் விபரீதமும்

மாணவர்களுக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்தக் காரணத்திற்காகவும், எந்தச் சூழ்நிலையிலும் உணர்ச்சி வசப்பட்டுக்கூட அரசியலில் ஈடுபட்டு விடாதீர்கள். நீங்கள் உங்கள் வேலையைக் கவனியுங்கள். கவனமாகப் படியுங்கள். படித்து முன்னேறுங்கள். பல்கலைகளிலும் மேதைகளாகுங்கள். நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யும் நிலை, உங்கள் காலத்திலாவது பூரணமாக ஏற்பட்டாகவேண்டும். படிப்பை இடையில் கெடுக்கும் எந்தக் காரியத்திலும் தலையிடாதீர்கள். சின்னப் பிரச்சினை தானே என்று விளையாட்டாகத் துவங்கும் வேடிக்கைகளும் விளையாட்டுகளும்கூட பல



சமயம் சமுதாயத்தையே பாழ்படுத்தும் அளவுக்கு விபரீதமாகத் திரும்பிவிடலாம். கவனமாகப் படியுங்கள்.

## திரைமறைவு வேலை

எல்லா அரசியல் கட்சிகளுக்கும் வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறேன். தயவு செய்து மாணவர்களை அரசியல் காரியங்களுக்கும் கிளர்ச்சிகளுக்கும் இழுக்க வேண்டாம். மாணவர்களது உணர்ச்சியைத் தூண்டி அவர்களே கூடக் கிளர்ச்சி நடத்தும் திரைமறைவு வேலைகளிலும்கூட எந்தக் கட்சியும் ஈடுபடவேண்டாம்.

ஊர்ப் பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் அதனைப் பெரியவர்களுக்குள்ளேயே பேசித் தீர்த்து நல்ல முறையில் தீர்த்துக் கொள்ளலாம். படிப்பில் கவனம் செலுத்த வேண்டிய மாணவர்களை வீணாக எதற்கு இழுத்துக் கெடுக்க வேண்டும் என்று கேட்கிறேன். மாணவர்களைப் படிக்க விட்டுவிடுவோம். சிக்கல்களை நாமே தீர்த்துக் கொள்வோம்.

## அரட்டை அடிக்காமல்...

நமது கடமைகளை நிறைவேற்ற இளைஞர்கள் முன்வர வேண்டும். 20 வயதில் இருந்து 30 வயது வரை உள்ள இளைஞர்கள் முன்வர

வேண்டும். வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது.

இளைஞர்கள் அரட்டை அடித்துக் கொண்டு காலத்தை வீணாக்கக்கூடாது. நல்ல காரியங்களைச் செய்ய முன்வர வேண்டும். சுதந்திரப் போராட்டத்தின்போது ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் முன்வந்து போராட்டத்தில் குதித்தார்களே!

வயதானவர்கள் இன்னும் சிறிது காலத்தில் போய் விடுவார்கள். எத்தனை நாட்களுக்கு இருக்க முடியும்? இப்போதே பொறுப்பை உணர்ந்து, பொறுப்பை ஏற்க இளைஞர்கள் முன் வரவேண்டும்.

## தியாகம் எது ?

நான் இளைஞர்களைச் சிறைக்குப்போக அழைக்கவில்லை. சிறைக்குப் போகவும் தேவை இல்லை. சிலர் சிறைக்குப் போக ஆசைப்படுகிறார்கள். சிறைக்குப் போவது தான் தியாகம் என்று நினைக்கிறார்கள்.

சிறைக்குப் போவது தியாகமே அல்ல. கஷ்டத்தையும், துன்பத்தையும் ஏற்பதுதான் தியாகம். அந்தக் காலத்தில் நாங்கள் சிறை போனதும் தியாகம் அல்ல.

தமிழகத்தில் உள்ள இளைஞர்கள் எந்த விஷயத்தையும் எளிதில் புரிந்து கொள்வார்கள். அவர்களைச் சுலபமாக ஏமாற்றுவது



நடக்காது. நாட்டின் தேவையை உணர்ந்து ஆதரவு காட்ட இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வசதி உள்ள இளைஞர்கள் நல்ல காரியம் செய்ய முன்வர வேண்டும். பொறுப்பை உணரவேண்டும்.

## சந்தேகம் இருந்தால்...

மக்களுக்குச் சேவை செய்ய, புதிய சமுதாயத்தை அமைக்க இளைஞர்கள் கஷ்டப்பட்டு உழைக்க முன் வர வேண்டும். அதுவும் சற்று வசதி படைத்த இளைஞர்கள்தான் தைரியமாக முன் வந்து கோடானு கோடி மக்களுக்காக நடைபெறும் சோஷலிசப் போராட்டத்தில் பங்கு கொள்ள முன்வர வேண்டும்.

சோஷலிச இலட்சியத்தை அடைய, தலைவர்கள் காட்டுகிற வழியில் சந்தேகம் இருந்தால், இளைஞர்கள் முன்வந்து அதைப்பற்றித் தலைவர்களுடன் விவாதித்துத் தெளிவு அடையவேண்டும். அதை விட்டு விட்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பதும், வீண் பொழுது போக்குவதும் நல்லதல்ல. பெரிய பொறுப்புகளை ஏற்கவேண்டி இளைஞர்கள் இன்றே முன்வந்து மக்களுக்குச் சேவை செய்யவேண்டும்.

பொதுவாக நம் நாட்டு மக்கள் மிக நேர்மையானவர்கள், நாணயமானவர்கள், நல்லது

கெட்டதைத் தெரிந்து கொள்ளக் கூடியவர்கள். அவர்களுக்குத் தேவையானதெல்லாம் சரியான வழி காட்ட, நம்பிக்கையானவாகள் வேண்டுமென்பதுதான்.

அதற்கு இளைஞர்கள் ஏற்றவர்கள். எனவே, மக்களுக்கு நல்வழி காட்டக்கூடிய வகையில் உழைக்க இளைஞர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## பொறுப்பான உழைப்பு

சுதந்திரப் போராட்ட காலத்தில் எத்தனையோ இளைஞர்கள் பெரும் தியாகங்களைச் செய்தார்கள். அத்தகு தியாக உணர்வு மீண்டும் ஏற்பட வேண்டும். அந்த அளவிற்குக் கூட இப்போது தியாகம் செய்ய வேண்டியதில்லை. பொறுப்புடன் உழைத்தால் போதும்.

இன்றையத் தினம் சில இளைஞர்கள் ஜெயிலுக்குப் போவதுதான் தியாகம் என்று நினைக்கிறார்கள். சுதந்திரப் போராட்ட காலத்தில் கூட, ஜெயிலுக்குப் போவதுதான் தியாகம் என்று நாங்கள் கூறவில்லை. இப்போது ஜெயிலுக்குப் போவதில் எந்த விதமான கஷ்டமும் இல்லை. இப்படித் தவறான வழிகளில் செல்லாமல் நாட்டின் நிர்மாணப் பணிகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க இளைஞர்கள் முன்வர வேண்டும்.



## பழைய வரலாறு

சோஷலிசத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் காங்கிரசில்தான் இருக்க வேண்டும். சோஷலிசத்தில் எங்களுக்கும் நம்பிக்கை இருக்கிறது என்று கூறிக் கொண்டே காங்கிரசைப் பலவீனப்படுத்த முயலுபவர்கள், சோஷலிசம் நடைமுறைக்கு வருவதைத் தடுப்பவர்கள் தானே!

சுதந்திரப் போராட்ட காலத்தில் எங்களுக்கும் சுதந்திரம் வேண்டும் என்று கூறிக் கொண்டே சுதந்திர இயக்கத்தைப் பலவீனப்படுத்திய நீதிக்கட்சியைப் போன்று, இன்றையத் தினம், காங்கிரஸ் செய்த-செய்யும் சிறு தவறுகளை எல்லாம் பூதமர்க்கிக் காட்டி சோஷலிச சக்திகளைப் பலவீனப்படுத்தப் பார்க்கிறார்கள். எனவே, பழைய வரலாற்றை மறந்து விடாமல் எச்சரிக்கையுடனிருந்து சோஷலிசத்தை அமுல்படுத்த வேண்டும்.

## முடிவற்ற கடமை

சுதந்திரம் கிடைத்ததும் காங்கிரசைக் கலைத்திருக்க வேண்டும் எனச் சிலர் கூறுகிறார்கள். குழந்தை பிறந்ததும் கடமை முடிந்தது என்று அதைத் தெருவிலே வீசி எறிந்து விட முடியுமா? குழந்தையை வளர்க்க வேண்டும்; படிக்கவைக்க வேண்டும்; வாழவழிசெய்ய வேண்டும். திருமணமும் செய்து வைக்க வேண்டும்.

குழந்தை பிறந்ததும் அதை வீசி எறியும் பொறுப்பற்ற பெற்றோர்களும் இருக்கிறார்கள். ஆனால், காங்கிரஸ் அப்படிச் செய்ய முடியுமா? முடியாது. மக்கள் அனைவரும் நல்வாழ்வு பெறும்வரை காங்கிரசின் பணி ஓயாது, தொடர்ந்தே தீரும்.

இன்றையத் தினமும் கோடிக்கணக்கான மக்கள் வறுமையில் வாடுகிறார்கள். அவர்கள் வாழ்வை உயர்த்தக் காங்கிரஸ் பாடுபடுகிறது. அத்தகைய காங்கிரசுக்குத் தொடர்ந்து பொது மக்கள் ஆதரவு அளிக்கவேண்டும்.

## ஐம்பதாண்டு முயற்சி

நாட்டில் பல கட்சிகள் இருக்கின்றன. அவர்கள் பல்வேறு காரணங்களைக் காட்டிச் சமதர்ம சமுதாயம் அமைப்பதைத் தடுக்க முயல்கிறார்கள். சிறு தவற்றையும் பெரிதாகக் காட்டிக் காங்கிரசைப் பலவீனப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

காங்கிரஸ் பலவீனப்பட்டால் 17 ஆண்டு கால முயற்சி என்ன ஆகும்? அதற்கு முன்பு சுதந்திரம்பெற 50 ஆண்டு பாடுபட்ட முயற்சி என்ன ஆவது?—50 ஆண்டு முயற்சி வீணாகப் போவதா?

நமக்குப்பின், நமது சந்ததிகள் கஷ்டப்படாமல் இருக்க வறுமையையும் ஏழ்மையையும் ஒழித்துப் புதிய சமுதாயத்தை அமைக்க



வேண்டும். அந்தப் பெரும் பொறுப்பை நாம் ஏற்க வேண்டும்.

## வெளியில் இருக்கமுடியாது

நமக்குள் இருக்கும் சின்ன அபிப்பிராய பேதங்களை விட்டு விட்டு பரஸ்பரம் ஒன்றுசேர வேண்டும். யாருக்குச் சமதர்ம சமுதாயம் அமைப்பதில் நம்பிக்கை இருக்கிறதோ அவர்கள் அனைவரும் ஒன்றாக இருக்கவேண்டும்.

சமதர்ம சமுதாயம் என்று சொல்லிக் கொண்டே எதிர்த்துக் காரியம் செய்யக் கூடாது. அதனால் நமது சக்தியும் வீணாகும். காங்கிரசும் பலவீனப்படும்.

உண்மையில் சமதர்மத்தை நம்புகிறவர்கள் காங்கிரசில் இருப்பார்கள். அவர்கள் காங்கிரசுக்கு வெளியே எப்படி இருக்க முடியும்?

நாம் சுதந்திரம் கேட்டுப் போராடிய போதும் நாட்டில் இருந்த பல கட்சிகளும் தாங்களும் சுயராஜ்யம்தான் கேட்கிறோம் என்று சொல்லிக்கொண்டே, வெள்ளைக்காரர்களுக்கு ஆதரவாக இருந்தார்கள். சுயராஜ்யம் பெறத் தடையாக இருந்தார்கள். இது வரலாறு. இதை யாரும் மறைக்க முடியாது—நடந்த நிகழ்ச்சியைச் சொல்கிறேன்.

சமதர்ம சமுதாயம் அமைக்க முயற்சிக்கும் காங்கிரசைப் பலவீனப்படுத்தினால் புதிய சமுதாயம் அமைப்பது தடைப்படும். இதை

உணர்ந்து சமதர்மத்தில் நம்பிக்கைக் கொண்டவர்கள் காங்கிரசில் ஒன்று சேர்ந்து விரைவில் புதிய சமுதாயம் அமைக்க முன்வர வேண்டும்.

## தியாக மனப்பாங்கு

**பொ**றுமையை இழக்காமல் அடக்கமாகப் பெண்கள்தான் காரியம் செய்வார்கள். அரசியலிலும் அவர்களுக்கு அந்தக் குணம் உண்டு. அவர்கள்தான் அதற்குத் தகுதியானவர்கள். மந்திரி பதவி கொடுக்கவில்லை என்றாலும் கோபித்துக்கொள்ளமாட்டார்கள்; சண்டைக்கு வரமாட்டார்கள். ஏதோ சிலர் வரக்கூடும்.

நம்முடைய பெண்கள் பொறுப்போடும், அடக்கத்தோடும் பணியாற்றக் கூடியவர்கள்; பொறுமை இழந்து, காரியத்தை முடிக்காமல் பாதியிலேயே விட்டுவிட்டுப் போய்விடமாட்டார்கள்.

மேலும், குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு அவர்களுடையது அல்லவா?

நம்மால் முடியுமா குழந்தைகளை வளர்க்க? இரண்டு தடவை அழுதால் பொறுமை இழந்து போய் விடுவோம். ஆனால் பெண்கள் அப்படி அல்ல; பொறுமையாகக் கவனிப்பார்கள்.

குழந்தைகளைத் தியாக மனப்பாங்கு பெறுமாறு வளர்க்கத் தாய்மார்கள் முற்பட வேண்டும்.



இளைஞர்களைப் போலவே தாய்மார்களும் நாட்டுப் பணிபுரிய முன்வர வேண்டும். அவர்களுக்குச் சமதர்ம இலட்சியம் பற்றி நாம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

## கடைசிவரை உறுதி

**பெண்கள்** சமதர்ம இலட்சியத்தைப் புரிந்துகொண்டுவிட்டால், அவர்களைப் பின்னர் யாராலும் மாற்ற முடியாது. எப்போதுமே பெண்கள் ஒரு விஷயம் தங்களுக்குச் சரி என்று பட்டு ஏற்றுக்கொண்டால், அதில் கடைசிவரை உறுதியாக இருப்பார்கள். இதில் சந்தேகம் வேண்டியதில்லை. வீட்டில் உள்ள ஆண்கள் மாறினால்கூட "உங்களுக்கு வேறு வேலை இல்லை" என்று சொல்லிவிட்டு உறுதியாக இருப்பார்கள்.

எனவே, தாய்மார்களுக்குச் சமதர்ம இலட்சியத்தைப் புரியவைக்க ஏராளமான பெண்கள் முன்வர வேண்டும்.

சமீபகாலமாக இளைஞர்கள், தாய்மார்கள் ஆகியோரின் உள்ளத்தில் ஒரு மனமாறுதல் ஏற்பட்டு வருவதை நான் போகிற இடங்களிலெல்லாம் பார்த்து வருகிறேன். இந்த மாறுதல் வரவேற்கத் தக்கது.

## எதையும் தாங்கும் இதயம்

எதையும் தாங்கும் இதயம் 'எனக்கு' என்கிறார்கள் அல்லவா? அவர்களுக்கும் இல்லை; யாருக்கும் இல்லை; ஆனால், தாய்மார்களுக்குத்தான் எதையும் தாங்கும் இதயம் இருக்கிறது.

குடும்பத்தில் ஒருவனுக்கு அவ்ரைக்காய் பிடிக்கும். ஒருவருக்குச் சுண்டைக்காய் பிடிக்கும். ஒருவருக்கு வெண்டைக்காய் பிடிக்கும். அவரவர்களுக்கு வேண்டியதைச் செய்து கொடுத்து குடும்பத்தை இணைத்து நடத்திச் செல்கிறார்கள் அல்லவா? அப்படித்தான் அரசியலும். எனவே, அவர்கள் அரசியலை நடத்தத் தகுந்தவர்கள்.

## செலுத்தவேண்டிய பங்கு

சமதர்ம சமுதாயத்தை அமைக்க இளைஞர்கள்தான் துன்பத்தை ஏற்றுக்கொண்டு தியாகம் புரிய முன்வரவேண்டும். இந்தத் தியாக சுபாவம் இருந்தால்தான் நாடு முன்னேற முடியும்.

துன்பத்தை ஏற்றுக்கொண்டு தியாகம் செய்யும் மனப்பான்மை இல்லாதிருந்தால் நமக்குச் சுதந்திரம் கிடைத்திருக்குமா? சுதந்திரப் போராட்டத்தின் போதும் அதற்குப்பின், இன்றைக்குக்கூட எண்ணற்ற தியாகிகள் கட்ட வேட்டிகூட இன்றிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மகளுக்குக் கல்யாணம் செய்து கொடுக்கக்கூட சிலரிடத்திலே பணம் இன்றிக் கஷ்டப்படுகிறார்கள். இது எனக்குத் தெரியும்.



அப்படிப் பலர் கஷ்ட நஷ்டப்பட்டு, துன்பங்களை ஏற்றுக்கொண்டு தியாகம் புரிந்தததினால்தான் நமக்குச் சுயராஜ்யம் கிடைத்தது. அந்தத் தியாக மனப்பான்மை இந்தக்கால இளைஞர்களுக்கு வேண்டாமா? சமுதாயத்துக்குத் தாங்கள் செலுத்தவேண்டிய பங்கை— செய்யவேண்டிய கடமையைச் செய்ய அவர்கள் முன்வர வேண்டாமா? இந்தப் பொறுப்புணர்ச்சி இன்றைய இளைஞர்களுக்கு ஏற்பட வேண்டும்.

## எத்தனை நாளைக்கு முடியும்!

ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த இளைஞர்களை நான் அழைக்கவில்லை. அவர்கள் சம்பாதித்துத் தங்களது குடும்பத்தை, ஏழைப் பெற்றோர்களைக் காப்பாற்ற வேண்டியிருக்கும். ஆனால், வசதி படைத்த இளைஞர்கள் என்ன செய்கிறார்கள்? பெரியவர்கள் சம்பாதித்த பணத்தைச் செலவு செய்துகொண்டு பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது நாட்டிற்கு நல்லதா? அப்படிப்பட்டவர்களெல்லாம் சிந்திக்க வேண்டும். நாட்டுக்குப் பணியாற்ற முன்வரவேண்டும்.

வயது வந்த பெரியவர்கள் கஷ்டப்பட்டு உழைக்க முடியுமா? அப்படியே உழைத்தாலும் எத்தனை நாளைக்கு உழைக்க முடியும்?

இளைஞர்கள்தானே பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியவர்கள்?

உண்மையில், இளைஞர்கள் நாட்டுப் பணி புரிய ஏராளமாக முன்வரவேண்டும். துன்பத்தையும் கஷ்ட நஷ்டத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். கடுமையாக உழைத்துத் தியாகம் புரியவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## கதம்ப சர்க்கார்

ஏதோ சில கட்சிகள் கூடிக் கூட்டணி அமைத்துத் தேர்தலில் வெற்றி பெற்றால், நிலையான அரசாங்கம் எப்படி அமையும்!

சர்க்கசில் சிங்கம், புலி, குரங்கு, நரி ஆகியவை கூண்டில் அடைபட்டு, அடங்குவது போல, ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கைகளையுடைய கட்சிகளது கதம்ப சர்க்கார் தானே நடக்கும்?

நாட்டில் அமைதியும் ஒழுங்கும் இருக்குமா? மக்களது பிரச்சினையைக் கவனிக்க முடியுமா? பொது மக்கள் யோசிக்க வேண்டும்!

## தாலியறுத்தால் போதும்!

காங்கிரசையும், அரசாங்கத்தையும் எப்படியாவது கவிழ்க்க நினைப்பது ஏழைகளை அழிப்பதாகும். இதனை உணர்ந்து நடக்க வேண்டும்.



"மகன் செத்தாலும் பரவாயில்லை, மருமகள் தாலியறுத்தால் போதும்" என்றுகூடச் சில மாமியார்கள் இருப்பதுண்டாம். இதைப் போல மக்கள் எக்கேடு கெட்டால் என்ன? காங்கிரஸ் கவிழ வேண்டும். அரசாங்கம் மாற வேண்டும் என்று கட்சிகள் நடக்கின்றனவே! அது நல்லதா?

## நாம்தான் சுமைதாங்கி

யாரோ சொல்வதற்காகப் பயந்துகொண்டு கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட மாட்டோம். ஆதரவு கொடுத்துப் பதவியில் அமர்த்திய மக்களுக்குத் தொண்டு செய்யத் தயங்க மாட்டோம். நாடுதான் எங்கள் குடும்பம். இக் குடும்பத்தைக் கட்டிக் காத்து நல்லபடி வாழ வைத்தே தீருவோம். நமக்கென்ன என்று இருப்பதா? முடியாது! நம் காலத்தில் சொந்த அரசாங்கம் இருக்கிறது. வாழ்வளிக்கும் பொறுப்பை—நாமேதான் சுமக்கவேண்டும். அந்தச் சுமையை நமது சந்ததிகள் தலையில் வைத்துவிட்டுப் பொழுது போக்கமாட்டோம். நாம்தான் சுமைதாங்கி ஆவோம். இதுஉறுதி.

## கோழைகள் அல்லர்

ஏழைகள் நல்வாழ்வு பெறுவதற்காகத்தான் சுதந்திரம் வாங்கினோம். அவர்கள் வாழ்வு சிறக்கச் சோஷலிஸ சமுதாயத்தை அமைக்கும் பரிசோதனை நடக்கிறது. சாத்வீக முறை

யில், உலகிலேயே எந்த நாடும் காணுத முறையில் சுதந்திரம் வாங்கிய நாம், சோஷலிஸத்தையும் ஜனநாயக முறையிலேயே அடைவோம். சோஷலிஸ லட்சியத்தை அடையும் வரை காங்கிரஸ் அழியாது. காங்கிரஸ் அழிந்துவிட்டால் ஏழை மக்களைக் காப்பாற்றுவது யார்? நாங்கள் கோழைகள் அல்லர். எனவே இடையிலேயே கொள்கைய விட்டு விட்டு ஓடமாட்டோம்.

## இலட்சிய முகடு

யாரோ சாப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் விறகுக் கட்டை எரிந்து போவதைப் போல், எதிர்கால மக்களது நல்வாழ்விற்காகச் சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்கிவிட்டுத் தான் காங்கிரஸ் அழியும். கதிர் முற்றித் தலை சாயும்போது நெல்மணிகள் உதிருவதைப் போல் இலட்சிய முகட்டை அடைந்த பின் அழிந்துவிடுவதைப் பற்றிக் கவலை இல்லை.

## கதவைமூடிக் கொண்டு

தவறுகளைத் தயவு தாட்சண்யமின்றிக் கண்டித்து வருகிறோம். யாரேனும் பணம் வாங்கியதாகப் புகார் வந்தால் கணக்குக் கேட்கிறோம். இதை வைத்துக் கொண்டு, காங்கிரஸ்காரர்களே ஒத்துக்கொள்கிறார்கள். ஊழல்! ஊழல்! என்று எதிர்க்கட்சிக்காரர்கள் கிண்டல் கேலிப் பேச்சில் இறங்கி விடுகிறார்கள். நாங்கள் மற்ற கட்சிக்காரர்களைப்போல் குற்றம் குறைகளை மூடி மறைக்கவில்லை. வெளிப்படையாகவே பேசுகிறோம். நாங்கள் கதவை மூடிக்கொண்டு ரகசியம் பேசவில்லை. இந்தப் போக்கைப் பாராட்டுவதை விட்டுக் கண்டிக்க முன் வந்துவிடுகிறார்களே!



## சோதனையும் சாதனையும்

சமதர்ம சமுதாயத்தை ஜனநாயக முறையிலேயே அமைப்போம்—அமைத்தே தீருவோம். அதைப்பற்றி யாருக்கும் சந்தேகம் வேண்டாம்.

ஜனநாயக முறை நமது நாட்டில் சோதனைக் கட்டத்தில் உள்ளது. அதன் மூலம் நமது சோஷலிஸக் கொள்கையைச் சாதிக்க முடியுமா? என்று சிலர் சந்தேகப்படுகிறார்கள். அந்தச் சோதனையில் நாம் வெற்றி பெறவேண்டும். சோதனையில் வெற்றி காண்போம். சாதித்தே தீருவோம்.

உலகத்தில் பல்வேறு நாடுகள் சுதந்திரம் அடைந்தன. ஆனால் நமது சுதந்திர பாரம்பரியம் தனித்தன்மை வாய்ந்தது. 45 ஆண்டுகளுக்கு முன்பு காந்திஜி சத்தியாக்கிரக மூலம் சுதந்திரம் பெறுவோம் என்று குறிப்பிட்ட போது உலகில் மட்டுமல்லாது நமது தேசிய காங்கிரஸ் ஸ்தாபனத்திலும் இருந்த தீவிர வாதிகளும் நம்பவில்லை. 'நடக்காது' என்று அவநம்பிக்கை தெரிவித்தனர். ஆனால் நடந்தது என்ன?

உலகம் இதுவரை கண்டும், கேட்டுமிராத வகையில் நம்மை நாமே வருத்திக்கொண்டு, துன்பச் சுமைகளைத் தாங்கி, எண்ணற்ற தியாகங்களைப் புரிந்தோம். அதன் பயனாகக் கத்தியின்றி, ரத்தமின்றி, காந்திஜி உபதேசித்த சத்தியாக்கிரகம் என்ற அஹிம்சை நெறியில் போர் தொடுத்தோம். அன்னியன் அகன்றான்; சுதந்திர வாழ்வு பெற்றோம். சம வாழ்வு இலட்சியத்தையும் அதேமாதிரி அடைந்தே தீருவோம்.

## தியாகச் சுடர்

காந்திஜி, நேருஜி, படேல் முதலிய நமக்கு முந்திய தலைமுறையைச் சேர்ந்தவர்களின் தியாகங்களும், இன்றுள்ள தலைமுறையினர் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டுச் செய்த எண்ணற்ற தியாகங்களும், ஏற்ற கஷ்டங்களுந் தான் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தன. அதன் பலனை நாம்-இன்றைய தலைமுறையினரான நாம் அநுபவித்து வருகிறோம்.

நாம் பெற்ற சுதந்திரத்தைக் கட்டிக் காப்போம். அதோடு நமக்கு அடுத்த தலைமுறையினரின் நல்வாழ்வுக்காக நாம் தியாகம் செய்ய வேண்டாமா? செய்து தான் ஆக வேண்டும்.

தியாகம் செய்வதிலும், சமதர்மக் கொள்கையில் நமக்கு அழுத்தமான நம்பிக்கையும் உறுதியும் இருந்தால் போதும். காரியத்தைச் சாதித்துத் தீருவோம்.



காங்கிரஸ் ஸ்தாபனம் ஒரு தியாகச் சுடர். தன்னைத் தானே உருக்கிக்கொண்டு, கரைந்து பிறருக்கு வெளிச்சம் தரும் மெழுகுவர்த்தியைப் போன்றது.

## நக்கீரர் பரம்பரை

காங்கிரஸில் ஏதோ ஊழல், குழப்பம் என்று பேசுகிறார்களே! ஊழலை காங்கிரஸ் மூடி மறைத்தா வைத்திருக்கிறது? எந்த ஊழலானாலும், வெளியிடவில்லையா? யார் செய்தாலும் குற்றம் குற்றமே என்று விசாரித்துச் செய்ய வேண்டியதைச் செய்யவில்லையா? இந்த விஷயத்தில் காங்கிரஸ் நக்கீரர் பரம்பரையைச் சார்ந்தது.

நக்கீரர் பரம்பரையைச் சேர்ந்த காங்கிரஸிலிருந்து ஊழல் காரணமாக வெளியேற்றப்பட்டவர்களுக்குப் புகலிடம் தந்து, வாழ்த்தி வரவேற்கும் கட்சிகள்தான் ஊழலின் உறைவிடமாக உள்ளன! அதனை அவை மூடி மறைக்கின்றனவே!

## அழியும் விதை நெல்

நமக்கெல்லாம் உணவாகப் பயன்படும் நெல் எப்படி விளைகிறது? விதை நெல் தன்னைத் தானே அழித்துக்கொள்வதால் தானே நெற்பயிர் தொடர்ந்து விளைகிறது; மனிதர்களுக்கு உணவாகிறது? அதோடு

தனது சந்ததி தழைத்துத் தொடரவும் வழி செய்கிறது. அதைப்போல், விதை நெல்லைப் போல் நமது தலைமுறைக்காக, வருங்கால சமுதாயத்திற்காகத் நாமெல்லாம் தொண்டு செய்யவேண்டும்.

## வெள்ளப் பெருக்கு

மழை பெய்யாவிடில் பயிர் விளைவிக்க முடியாதே என்று கவலைப்படுகிறோம். ஆனால் மழை பெய்து, வெள்ளப் பெருக்கு ஏற்படும் போது நதியின் கரை உடையுமோ? பயிர் அழியுமோ? ஊருக்குக் கேடு வருமோ என்று கவலைப்படுகிறோம். அதுபோலத்தான் நாட்டின் வளம் பெருக்க உதவும் செல்வமும் அளவுக்குமேல் ஒரு இடத்தில் குவியும்போது அதனால் தொந்தரவும் தொல்லையும் ஏற்படுகிறது. கறுப்புப் பணமாகி விலையேற்றத்தை உண்டு பண்ணுகிறது. அப்போது அதனைக் கட்டுப் படுத்த வேண்டாமா?

## தீ பரவட்டும்!

சிலருக்கு உயிர் போகுமுன் பதவி நாற்காலி வேண்டும் என்பதே பேச்சு, வாழ்வு. ஆனால், காங்கிரஸாருக்கு உயிர் போகுமுன் சமதர்ம சமுதாய லட்சியம் ஈடேறவேண்டும் என்பதே மூச்சு. அந்த லட்சியத்திற்காக உயிர் போகட்டுமே!



சமையல் செய்யும்போது அடுப்பில் விறகு எரிகிறது. சாம்பலாகிறது. விறகு எரிவதால் ஆகும் சமையலை யாரோ சாப்பிடப் போகிறார்கள் என்று விறகு எரியாவிட்டால் என்ன ஆகும்? பதவிக்குச் சிலர்தான் போக முடியும். ஏனைய காங்கிரஸார் அனைவரும் சமதர்ம சமுதாயம் என்ற சமையலுக்கான விறகுக் கட்டைகளாவோம். தியாகத் தீயில் குதிப்போம். தியாகத் தீ பரவட்டும்!

V2''.2127 N63
1N65
LIBRARY
107995